2956

T.N.L.A. Debates

Official Report

Vol 32 No 1&2

28th February & 2nd March
1987

D
211.31 N87
N87.32.1&2
136509

வெளியீடு 25-6-1987 Issued 25-6-1987

(50)

2956

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை பிப்ரவரி 28, 1987—தொகுதி 32 எண் 1

Saturday the 28th February 1987—Volume 32 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009

Legislative Assembly Secretariat, Fort St. George, Madras-600009.

விலை ரூ. 3] [Price Rs. 3

V211,31 N87
N87. 32-1-87
136502
600 008

## உள்ளடக்கம்.

28-2-1987


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் .. | |
| Personnel of the Government of Tamil Nadu .. | ii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | iii—iv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்கள் பட்டியல் .. .. .. | v—ziii |
| 1 இரங்கல் குறிப்புகள்— | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு .. | 1—2 |
| 2 இரங்கல் தீர்மானம்— | |
| முன்னாள் முதல் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் மறைவு .. | 3—28 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.. | 3—7 |
| திருமதி டி. யசோதா .. .. | 7—10 |
| திரு. கி. மனோகரன் .. .. .. | 10—12 |
| திரு. கு. ரமணி .. .. .. | 12—14 |
| திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. .. | 14—15 |
| திரு, பொ, உத்திராபதி .. .. | 15—17 |
| திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் .. .. | 17—91 |
| திரு. குமரி அனந்தன் .. .. | 19—25 |
| திரு. கே. முத்துவேல் .. .. | 25—26 |
| திரு. கு. தமிழரசன் .. .. | 26—27 |
| திரு. வை. பாலசந்திரன் .. | 27 |
| 3 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 28—32 |

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் — திரு. சுந்தர்லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1 | முதலமைச்சர் | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் |
| 2 | நிதி அமைச்சர் | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் |
| 3 | உணவு அமைச்சர் | மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் |
| 4 | உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி |
| 5 | தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. க. இராசாராம் |
| 6 | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் |
| 7 | கல்வி மற்றும் சட்ட அமைச்சர் | மாண்புமிகு திரு. சி. பொன்னையன் |
| 8 | போக்குவரத்துத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி |
| 9 | வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு |
| 10 | சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் |
| 11 | மதிய உணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் |
| 12 | ஊரகத் தொழில் அமைச்சர் | மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் |
| 13 | வணிக வரித் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. த. இராமசாமி |
| 14 | ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. எ. அருணாசலம் |
| 15 | பொதுப் பணித் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன |

2956

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—THIRU SUNDAR LAL KHURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. *The Chief Minister* | HON. DR. M. G. RAMACHANDRAN |
| 2. *The Minister for Finance* | HON. DR. V. R. NEDUNCHEZHIYAN |
| 3. *The Minister for Food* | HON. THIRU S. RAMACHANDRAN |
| 4. *The Minister for Local Administration and Labour* | HON. THIRU K. A. KRISHNASAMY |
| 5. *The Minister for Industries and Agriculture* | HON. THIRU K. RAJARAM |
| 6. *The Minister for Health* | HON. THIRU P. U. SHANMUGAM |
| 7. *The Minister for Education and Law* | HON. THIRU C. PONNAIYAN |
| 8. *The Minister for Transport* | HON. THIRU S. MUTHUSAMY |
| 9. *The Minister for Housing and Handlooms* | HON. THIRU S. THIRUNAVUKKARASU |
| 10. *The Minister for Tourism, Prohibition and Electricity* | HON. THIRU V. V. SWAMINATHAN |
| 11. *The Minister for Noon Meal, Social Welfare and Khadi* | HON. THIRU R. SOUNDARARAJAN |
| 12. *The Minister for Rural Industries* | HON. THIRU ANOOR P. G. JAGADEESAN |
| 13. *The Minister for Commercial Taxes* | HON. THIRU T. RAMASAMY |
| 14. *The Minister for Adi Dravidar Welfare* | HON. THIRU A. ARUNACHALAM |
| 15. *The Minister for Public Works* | HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு.

திரு. செ. செம்மலை.

திரு. சைதை சா. துரைசாமி.

திரு. பு. ஆர். வெங்கடரமணன்.

திரு. பொ. சே. ராமலிங்கம்.

### செயலாளர்.

திரு. ரி. கு. இராமசாமி

### பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

| | |
|---|---|
| பள்ளிகொண்டா பெருமாள், திரு. பெ., பி.ஏ., பி.எல். | கூடுதல் செயலாளர் |
| பத்மநாப நம்பியார், திரு. பி. எம்., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| ஸ்ரீனிவாசன், திரு. சா., பி.எஸ்சி. | முதுநிலை குழு அலுவலர் |
| சீதாராமன், திரு. வை., பி.காம்., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| டில்லிதுரை, திரு. ந. ப., பி.எஸ்சி., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| கோதண்டராமன். திரு. நா., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |

| | |
|---|---|
| சினிவாசன், திரு. கு. அ., பி. ஏ. | குழு அலுவலர் |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி. ஏ. | சார்புச் செயலாளர் |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| கேசவராம், திரு., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்சி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல் | சார்புச் செயலாளர் |
| தியாகராஜன், திரு. கே., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| பாலகிருஷ்ணன், திரு. ப., பி.காம். | சார்புச் செயலாளர் |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| ஜான், திரு. வ. சா., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. பு., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ., | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| சுவாமிநாதன், திரு. ச, எம். ஏ. | தலைமை நிருபர் (குழுக்கள்) |
| நம்பி ஐயங்கார், திரு. எஸ்., | தலைமை நிருபர் (பேரவை) |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **அ** | |
| 1 அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 2 அப்துல் சமத், திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி. |
| 3 அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி. |
| 4 அரங்கநாயகம், திரு. செ. .. | தொண்டாமுத்தூர். |
| 5 அரிக்குமார், திரு. இரா. .. | பெரணமல்லூர். |
| 6 அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.). |
| 7 அருணாசலம், திரு. எ. .. | வரகூர் (செ.வ.). |
| 8 அன்பழகன், திரு. கே. .. | ஓமலூர். |
| 9 அன்பழகன், திரு. தி. .. | நாட்றாம்பள்ளி |
| 10 அன்பழகன், திரு. பொ. .. | இளையான்குடி. |
| **ஆ** | |
| 11 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 12 ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி, திரு. | ஆண்டிமடம். |
| 13 ஆறுமுகம், திரு. அ. .. | வந்தவாசி. |
| 14 ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பெண்ணாகரம். |
| 15 ஆறுமுகம், திரு. ஆர். எஸ். .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.). |
| 16 ஆறுமுகம், திரு. எ.எஸ்.ஏ. .. | விருதுநகர். |
| 17 ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2. |
| 18 ஆனந்தகிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி. |
| 19 ஆனந்தன், திரு. மு. .. | உளுந்தூர்ப்பேட்டை. |
| **இ** | |
| 20 இரகுபதி, திரு. கோ. .. | காட்பாடி. |
| 21 இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி. |
| 22 இரத்தினவேலு, திரு. சே. .. | முசிறி. |
| 23 இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ.வ.). |
| 24 இராசமாணிக்கம், திரு. எல். | தாம்பரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| இ—தொடர்ச்சி. | | |
| 25 | இராசரத்தினம், திரு. எப்.எம். | கொளச்சல். |
| 26 | இராசரத்தினம், திரு. எம். | விழுப்புரம். |
| 27 | இராசாங்கம், திரு. மு. .. | திருவிடைமருதூர். |
| 28 | இராசாம்பாள், திருமதி. த. | தலைவாசல் (செ.வ.). |
| 29 | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி. |
| 30 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம். |
| 31 | இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி. |
| 32 | இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி. |
| 33 | இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். .. | பொதுநாயக்கனூர். |
| 34 | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. | சாத்தூர். |
| 35 | இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி. |
| 36 | இராமச்சந்திரன், திரு. சோ.மா. | அண்ணா நகர். |
| 37 | இராமச்சந்திரன், திரு. ப. ந. | பட்டுக்கோட்டை. |
| 38 | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம். |
| 39 | இராமசாமி, திரு. ந. .. | இராமநாதபுரம். |
| 40 | இராமலிங்கம் டாக்டர், கே.பி. | இராசிபுரம். |
| 41 | இளங்கோவன், திரு. ஈ.வெ.கி.ச. | சத்தியமங்கலம். |
| ஈ | | |
| 42 | ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| உ | | |
| 43 | உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 44 | உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| எ | | |
| 45 | எத்திராசன், திரு. இ. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| க | | |
| 46 | கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம். |
| 47 | கதிர்வேலு, திரு. மா. .. | இராணிப்பேட்டை. |
| 48 | கந்தசாமி, திரு. கா. வே. .. | இணைத்துக்கடவு. |
| 49 | கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர். |
| 50 | கல்லன், திரு. கே. .. .. | உதகமண்டலம். |
| 51 | கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம். |
| 52 | காளிமுத்து டாக்டர், கா. .. | மதுரை கிழக்கு. |
| 53 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு. |
| 54 | கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | அணைக்கட்டு. |
| 55 | கிருஷ்ணமூர்த்தி, திரு. இ. .. | கும்பகோணம். |
| 56 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1. |
| 57 | குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம். |
| 58 | குப்புசாமி, திரு. வே. .. | செய்யாறு |
| 59 | குமர குருபர இராமநாதன், திரு. ச. .. | விளாத்திக்குளம். |
| 60 | குமரி அனந்தன், திரு. .. | இராதாபுரம். |
| 61 | குமாரதாஸ் டாக்டர், தே. .. | கிள்ளியூர். |
| 62 | கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கைமான் (செ.வ.) |
| 63 | கோவிந்தசாமி, திரு. ஆர். .. | குடியாத்தம். |
| 64 | கோவிந்தசாமி, திரு. ச. .. | எடப்பாடி. |
| 65 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி. |
| ச | | |
| 66 | சங்கரலிங்கம், திரு. ச. .. | சங்கரநாயனார் கோவி (செ.வ.) |
| | | திருத்தணி. |
| 67 | சண்முகம், திரு. இரா. .. | சோளிங்கர். |
| 68 | சண்முகம், திரு. என். .. | மேல் மலையனூர். |
| 69 | சண்முகம், திரு. ப.உ. .. | ஆலங்குளம். |
| 70 | சண்முகையா பாண்டியன், திரு. எம். | சோழவந்தான். |
| 71 | சந்திரசேகரன், திரு. ஆ. .. | முகையூர். |
| 72 | சந்திரசேகர், திரு. மு. .. | பாளையங்கோட்டை. |
| 73 | சம்கல் ஆலம், திரு. வி.எஸ்.டி. | |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (8) |
| ச—தொடர்ச்சி. | | |
| 74 சமரசம் டாக்டர், கே. | .. | காவேரிப்பட்டிணம். |
| 75 சரோஜா, திருமதி. இரா. | .. | உப்பிலியாபுரம், (ஆ.வா.). |
| 76 சாமிக்கண்ணு, திரு. தா. | .. | செங்கம் (செ.வ.) |
| 77 சித்தன், திரு. என்.எஸ்.வி. | .. | திருமங்கலம். |
| 78 சித்தன், திரு. வி.பி. | .. | வில்லிவாக்கம். |
| 79 சிவக்குமார், திரு. ஆர். | .. | சமயநல்லூர், (செ.வ.) |
| 80 சிவக்குமார், திரு. எம். | .. | சூலூர் (செ.வ.) |
| 81 சிவஞானம், திரு. ந. | .. | திருவோணம். |
| 82 சிவப்பிரகாசம், திரு. சீ. | .. | சேந்தமங்கலம். (ஆ.வா.) |
| 83 சிவராமன், திரு. எஸ். | .. | சின்னசேலம். |
| 84 சிவராஜ், திரு. சு. | .. | ரிஷிவந்தியம். |
| 85 சின்னக்குழந்தை, திரு. மு. | .. | ஆரணி. |
| 86 சின்னசாமி, திரு. வே.கு. | .. | பவானிசாகர். |
| 87 சின்னராசு, திரு. க. இரா. | .. | கிருஷ்ணகிரி. |
| 88 சின்னராசு, திரு. மா. | .. | மேட்டுப்பாளையம். |
| 89 சுந்தரதாஸ், திரு. மா. | .. | விளவங்கோடு. |
| 90 சுப்பராயன், திரு. கு. | .. | திருப்பூர். |
| 91 சுப்பிரமணிய ஆதித்தன் திரு. எஸ். ஆர். | | திருச்செந்தூர். |
| 92 சுப்பிரமணியன், திரு. உ. | .. | சிவகங்கை. |
| 93 சுப்பிரமணியன், திரு. [illegible] | .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 94 சுப்புராயர், திரு. இ. | .. | கம்பம். |
| 95 சுவாமிநாதன், திரு. வி.வி. | .. | புவனகிரி. |
| 96 செங்காளியப்பன், திரு. ஆர். | .. | சிங்காநல்லூர். |
| 97 செங்கோட்டையன், திரு. கு.அ. | | கோபிச்செட்டிப் பாளையம். |
| 98 செங்கோட்டையன், திரு. பெ. | | கபிலர்மலை. |
| 99 செம்மலை, திரு. செ. | | தாரமங்கலம். |
| 100 செல்லமுத்து, திரு. எம். | .. | திருவாரூர் (செ.வ.) |
| 101 செல்லையா, திரு. வி.கோ. | .. | கடலூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| ச—தொடர்ச்சி | | |
| 102 சேகர் திரு. கே. பி. கே. | .. | பொன்னேரி (செ.வ). |
| 103 சொர்ணலிங்கம், திரு. கா. | .. | திருவாடானை. |
| 104 சோலைராசு, திரு. க. | .. | மருங்காபுரி. |
| 105 சௌந்திரராசன், திரு. ஆர். | .. | ஸ்ரீரங்கம். |
| 106 சௌரிராஜன், டாக்டர் கே. | .. | தியாகராயநகர். |
| ஞ | | |
| 107 ஞானசுந்தரம், திரு சா. | .. | மன்னார்குடி. |
| ட | | |
| 108 டேனியல்ராஜ், திரு. எஸ். | .. | ஸ்ரீவைகுண்டம் |
| த | | |
| 109 தங்கமணி, திரு. மு. .. | .. | மாயூரம். |
| 110 தங்கமணி, திரு. கே.எம். | .. | திண்டிவனம். |
| 111 தங்கராசு, திரு. ஏ. .. | .. | குறிஞ்சிப்பாடி. |
| 112 தங்கராசு, திரு. செ. | .. | மங்களூர் (செ.வ.). |
| 113 தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 114 தங்கவேலு, திரு. வி. .. | .. | வால்பாறை (செ.வ.). |
| 115 தமிழ்மணி, திரு. .. | .. | திருப்போரூர் (செ.வ.). |
| 116 தமிழரசன், திரு. கு. | .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 117 தனபால், திரு. ப. .. | .. | சங்கரி (செ.வ.). |
| 118 தாமரைக்கனி, திரு. இரா. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 119 தியாகராசன், திரு. ஆர. | .. | விருத்தாசலம். |
| 120 திருஞானம், திரு. பி. ஆர். | | ஆற்காடு (ஆ.வ.) |
| 121 திருநாவுக்கரசு, திரு. எஸ். | .. | அறந்தாங்கி. |
| 122 திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | | உடுமலைப்பேட்டை. |
| 123 தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | | மொரப்பூர். |
| 124 தீர்த்தராமன், திரு. ப. | .. | பாலக்கோடு. |
| 125 துரை அன்பரசன் திரு | .. | நெல்லிக்குப்பம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **த—தொடர்ச்சி** | |
| 126 துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர். |
| 127 துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு. |
| 128 துரைசாமி, திரு. சைதை சா. | சைதாப்பேட்டை. |
| 129 துரைராசு, திரு. எஸ். பி. .. | காரைக்குடி. |
| 130 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 131 தெய்வநாயகம், திரு. எ. .. | மதுரை சென்ட்ரல். |
| 132 தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |
| **ந** | |
| 133 நடராசன், திரு. ஆ. .. | பேரூர். |
| 134 நரசிம்மபல்லவன், திரு. க. | உத்திரமேரூர். |
| 135 நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு. |
| 136 நல்லமுத்து, டாக்டர் க. .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 137 நல்லுச்சாமி, திரு. என். .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 138 நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர். |
| 139 நாராயணன், திரு. பு. கோ. .. | பவானி. |
| 140 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர். |
| **ப** | |
| 141 பஞ்சவர்ணம், திரு. வி. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 142 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 143 பரமசிவம், திரு. பா. ந. .. | பல்லடம். |
| 144 பழனி, திரு. த. .. .. | ஆற்காடு. |
| 145 பழனிச்சாமி, திரு. கா. செ. .. | காங்கேயம். |
| 146 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 147 பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி. |
| 148 பாண்டுரங்கன், திரு. மு. .. | கலசபாக்கம். |
| 149 பாப்பா சுப்பிரமணியம், திரு. | குத்தாலம். |
| 150 பாரதி, திரு. ஜி. கே. ஜெ. .. | திருவொற்றியூர். |
| 151 பாரமலை, திரு. க. .. .. | மானாமதுரை (செ.வ.) |
| 152 பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி. |
| 153 பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ப—தொடர்ச்சி** | |
| 154 பாலச்சந்திரன், திரு. வை. .. | பத்மநாபபுரம். |
| 155 பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.). |
| 156 பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம். |
| 157 பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி. பி. .. | வேடசந்தூர். |
| 158 பாலாஜி, திரு. கே. .. .. | காஞ்சீபுரம். |
| 159 பாலுச்சாமி, திரு. ஏ. .. | பரமக்குடி (செ.வ.) |
| 160 பாலுசாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை (செ.வ) |
| 161 பிரணவநாதன், திரு. அ. .. | கடலாடி |
| 162 பிரேம்குமார், திரு. ஆ. .. | திண்டுக்கல் |
| 163 புருசோத்தமன், திரு. எஸ். .. | அரியலூர் |
| 164 புஷ்பராசு, திரு. த. .. .. | திருமயம் |
| 165 பெரியசாமி, திரு. அ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 166 பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் |
| 167 பெருமாள், திரு. தெ. .. | கடையநல்லூர் |
| 168 பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி |
| 169 பொன் முத்துராமலிங்கம், திரு. | மதுரை (மேற்கு) |
| 170 பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | பழனி (செ.வ.) |
| 171 பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை |
| 172 பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| **ம** | |
| 173 மணவாளன், திரு. எஸ். பி. .. | திருப்பத்தூர் |
| 174 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ. |
| 175 மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி—1 |
| 176 மனோகரன், திரு. கி. .. | புரசைவாக்கம் |
| 177 மனோகரன், திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர் |
| 178 மாசிலாமணி, டாக்டர் ந. .. | ஜெயங்கொண்டான் |
| 179 மாதவன், திரு. செ. .. | திருப்பத்தூர் |
| 180 மாதையன், திரு. யு. பி. .. | அந்தியூர் (செ.வ.) |
| 181 மாரிமுத்து, திரு. த. .. .. | குளத்தூர் (செ.வ.) |
| 182 மாரிமுத்து, திரு. மு. .. | திருப்பரங்குன்றம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | **ம—தொடர்ச்சி** | |
| 183 | மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 184 | முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 185 | முகம்மது சலீம், டாக்டர் த. | பெரியகுளம் |
| 186 | முசிறிபுத்தன், திரு. பி. | குளித்தலை |
| 187 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 188 | முத்துராமலிங்கம், திரு. பி.கே.எம். | உசிலம்பட்டி |
| 189 | முத்துவேல், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 190 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 191 | முருகானந்தம், திரு. டி.என். | செஞ்சி |
| 192 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| | **ய** | |
| 193 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| | **ர** | |
| 194 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 195 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 196 | ரவீந்திரன், திரு. ஏ.எஸ். | திருவண்ணாமலை |
| 197 | ராமஜெயம், திரு. ம.நா. | வானூர் (செ.வ.) |
| 198 | ராமன், திரு. கி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 199 | ராஜாபாபு, திரு. ஜெ. | போளூர் |
| 200 | ரெங்கசாமி, திரு. ஆர். | கோவில்பட்டி |
| 201 | ரெத்தினராஜ், திரு. எஸ். | நாகர்கோவில் |
| | **ல** | |
| 202 | லட்சுமி, திருமதி பி. | அவினாசி (செ.வ.) |
| | **வ** | |
| 203 | வடிவேல், திரு. கு. | கரூர் |
| 204 | வளர்மதி, திருமதி பா. | மயிலாப்பூர் |
| 205 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 206 | விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | வீரபாண்டி |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | **வ—தொடர்ச்சி** | |
| 207 | வீராணம்பலம், திரு. க.வெ. | மேலூர் |
| 208 | வீரய்யன், திரு. கோ. | நாகப்பட்டினம் |
| 209 | வீரப்பன், திரு. ஆர். எம். | திருநெல்வேலி. |
| 210 | வீராசாமி, திரு. தா. | ஒரத்தநாடு |
| 211 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 212 | வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி |
| 213 | வெங்கடாசலம், திரு. கி. | லால்குடி |
| 214 | வெங்கடாசலம், திரு. டி. எம். | பரகூர் |
| 215 | வேங்கடரமணன், திரு. டி. ஆர். | தென்காசி |
| 216 | வேணுகோபால், திரு. எஸ். | டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் |
| 217 | வேணுகோபால், திரு. கே. வி. | தல்லி |
| 218 | வேலு, திரு. கூடலூர் இ. வி. | தண்டராம்பட்டு |
| | **ஜ** | |
| 219 | ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. | செங்கல்பட்டு |
| 220 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 221 | ஜெகதீசன், திரு. சு. | அரவக்குறிச்சி |
| 222 | ஜெயச்சந்திரன், திரு. சா. | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 223 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| | **ஹ** | |
| 224 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 225 | பிரான்சிஸ், திரு. ஜி. கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி— தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, பிப்ரவரி 28, சனிக்கிழமை.

மாசி 16, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

> "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
> ஊதியம் இல்லை உயிர்க்கு."

வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.

[குறிப்பு: ஓர் உரையில் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கல் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. டி. கே. ராஜு 23-12-1986 ஆம் தேதியன்றும், திரு. கே. என். நடராஜ கவுண்டர் 14-1-1987 ஆம் தேதியன்றும், திரு. பூ. எட்டியப்பன் 25-1-1987 ஆம் தேதியன்றும், திரு. ஏ. காமேஸ்வர ராவ் 30-1-1987 ஆம் தேதியன்றும், திரு. ஆர். பாபு கோவிந்தராசன் 3-2-1987 ஆம் தேதியன்றும், திரு. ஆர். ஏ. நடராஜ முதலியார் 8-2-1987 ஆம் தேதியன்றும், திரு. ஜி. வாகீசம் பிள்ளை 21-2-1987 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. கே. ராஜு அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை காமராஜர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் பொது தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. எஸ். நடராஜ கவுண்டர் அவர்கள் 1950 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டுவரை கோயம்புத்தூர் மாவட்டம் தாராபுரம் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த

சென்னை சட்டமன்றப் பேரவைக்கும் மற்றும் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை கோயம்புத்தூர் மாவட் டம் காங்கேயம் தொகுதியிலிருந்தும் இருமுறை தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. பு. எட்டியப்பன் அவர்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை வடாற்காடு மாவட்டம் பேரண மல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஏ. காமேஸ்வர ராவ் அவர்கள் 1946 ஆம் ஆண்டி லிருந்து 1952 ஆம் ஆண்டு வரை குண்டூர் மற்றும் தெனாலி நகரப் பொது தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஆர். பாபு கோவிந்தராசன் அவர்கள் 1971 ஆம் ஆண்டி லிருந்து 1976 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1980 ஆம் ஆண்டி லிருந்து 1984 ஆம் ஆண்டு வரையும் தென்னாற்காடு மாவட்டம் கடலூர் தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி யுள்ளார்.

திரு. ஆர். ஏ. நடராஜ முதலியார் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை வடாற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி யுள்ளார்.

திரு. ஜி. வாகீசம் பிள்ளை அவர்கள் 1952 ஆம் ஆண்டி லிருந்து 1957 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையும் தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் பொது தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலை யும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகை யில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌன மாக எழுந்து நின்றனர்.)



## 2. இரங்கல் தீர்மானம்.

### முன்னாள் முதல் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் மறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முன்னாள் முதல்வர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் இயற்கை எய்தியதை இந்தப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை மொழிவார்கள்:

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாட்டில் முன்னாள் முதல் அமைச்சரும், இந்திய சுதந்திரப் போரில் பங்குகொண்ட மூத்த முதுபெரும் தலைவர் களில் ஒருவருமான திரு. எம். பக்தவத்சலம் அவர்கள், தமது 90-வது வயதில், 13-2-1987 ஆம் நாளன்று மறைவுற்ற துயரச் செய்தி கேட்டு இப்பேரவை வருந்துகிறது. அவர் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரை பாராளுமன்றச் செயலாள ராகவும், 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை யிலும் மீண்டும் 1954 ஆம் ஆண்டு முதல் 1963 ஆம் ஆண்டு வரையிலும் அமைச்சராகவும், 1963 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை முதல் அமைச்சராகவும் தமிழகத்தில் திறமையாகப் பணியாற்றியுள்ளார்.

அவரது மறைவால் தமிழகம் ஒரு தலைசிறந்த ஆட்சி யாளரையும், பாரம்பரியம் மிக்க நாட்டின் தலைவரையும், முதுபெரும் அரசியல்வாதியையும், நல்ல பண்பாளரையும், திடமான மனவுறுதி கொண்டவரையும் இழந்துவிட்டது. அவரது மறைவு தமிழக மக்களுக்கும், இந்திய நாட்டிற்கும் பேரிழப் பாகும்.

அவரது மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், பரிவையும் தெரி வித்துக் கொள்கிறது."

முதியவரும், முதுபெரும் அரசியல் தலைவரும், முன்னாள் முதலமைச்சரும், பெரியவரும் ஆகிய பக்தவத்சலனார் அவர்கள் இயற்கை எய்தியது எல்லோருக்கும் மிக்க துக்கத்தையும், துயரத்தையும் அளிக்கிற ஒரு செய்தியாகும். எவ்வளவு காலம் ஒருவர் வாழ்ந்தாலும் அவர்களுடைய பணி, அவர்கள் ஆற்றிய செயல்கள் மற்றும் அவர்கள் எந்த அளவுக்கு மக்களு டைய உள்ளத்தில் இடம் பெற்றிருந்தார்கள் என்பதைப்

பொறுத்து அவர்கள் இன்னும் சில ஆண்டுக் காலம் இருந்
திருக்கக்கூடாதா என எண்ணுகின்ற அத்தகைய நிலை உலகத்
திலே காணப்படுவது ஒரு இயற்கைத் தன்மையாகும். எனவே
அந்த வகையில் அவர்கள் 90 ஆண்டுக் காலம் நிலை வாழ்வு
வாழ்ந்தார்கள் என்றாலும் கூட இன்னும் சில ஆண்டுகள்
வாழ்ந்து இருக்கலாமே என்று எண்ணுகின்ற எண்ணம்தான்
பலருடைய உள்ளத்திலும் ஏற்பட்டது. அதற்குக் காரணம்
அந்த அளவுக்கு அவர்கள் அரசியல்வாதிகளோடும், பொது
மக்களோடும், பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கிற பலரோடும்
மிக நெருங்கிய தொடர்பு கொண்டு எல்லோருடைய உள்ளத்
திலும் நீக்கமற நிற்கிற வகையில் ஒரு இடத்தைப் பெற்றவர்
களாவார்கள்.

அந்த அளவுக்கு எல்லோருடைய நம்பிக்கையையும், ஆதர
வையும் பெற்றவர் என்பது மட்டுமல்லாமல் எல்லோராலும்
பாராட்டத்தக்க அளவுக்கும், போற்றத்தக்க அளவுக்கும் நல்ல
பண்பாடுகள் பலவற்றுக்கும் உறைவிடமாக விளங்கி மிகச்
சிறப்பான ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர்கள் அவர்கள்.

ஆரம்பக் காலத்திலிருந்து மிக முனைப்புள்ளத்தோடும்,
கட்டுப்பாட்டோடும், விடாமுயற்சியோடும் தன்னை வளர்த்துக்
கொண்டவர்கள் அவர்கள். ஆரவாரத்திற்கு இடம் இல்லாமல்,
படோடோபத்திற்கும் பகட்டிற்கும் இடம் இல்லாமல்—ஒரு
புரட்சிகரமான மாறுதலைச் செய்தார்கள் என்று கூட நாம்
சொல்வதற்கு இல்லை, ஒரு புரட்சிகரமான தன்மையில் அவர்கள்
இருந்தார்கள் என்று கூட நாம் சொல்வதற்கு இல்லை—எதையும்
நிதானமாகவும், அழுத்தந்திருத்தமாகவும் அதே நேரத்தில்
உறுதியாகவும் கடைப்பிடிக்கிற தன்மையில்தான் அவர்கள் தம்
முடைய வாழ்க்கையை ஈடேற்றி வந்திருக்கிறார்கள் என்பதை
மிகச் சிறப்பாகக் காணலாம். அவர்கள் உயர்நிலைக் கல்வியை
சென்னை மயிலையிலே உள்ள பி.எஸ். உயர்நிலைப் பள்ளியில்
முடித்து, மாநிலக் கல்லூரியில் கல்லூரிப் படிப்பை முடித்து,
சென்னை சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பை முடித்து 1927
ஆம் ஆண்டு வரையில் வழக்கறிஞராகத் தொழில் நடத்தினார்
கள்.

வழக்கறிஞராக அவர்கள் தொழில் நடத்திய காலத்தில்
அவர்களுடைய மாமனாராக இருந்தவரும், தமிழகத்திலே
காங்கிரஸ் இயக்கத்திலே சிறந்த பெருந்தலைவராக விளங்கிய
வரும், அந்த இயக்கத்திலே ஈடுபாடு கொண்டவருமாகிய உயர்
பெரும் முத்துரங்கம் முதலியார் அவர்களுடைய செல்வாக்கின்
காரணமாகவும், அவர்களிடத்திலே ஈடுபாடு கொண்டிருந்த தன்
காரணமாகவும் அரசியலில் ஈர்க்கப்பட்டு, வழக்கறிஞர்
தொழிலை விட்டுவிட்டு 1927-லே நேரடியாக அரசியலில்
ஈடுபாடு கொண்டார். அரசியல் போராட்டங்கள் பலவற்றில்
தன்னை ஈடுபடுத்திக்கொண்டு பலமுறை சிறை வாழ்வை
ஏற்றுக்கொண்டவர்கள் அவர்கள்.





(முற்பகல் 10–10)

ஆகையினால் அரசியலிலே படிப்படியாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் என்பது மட்டும் அல்லாமல், தமிழ்நாடு காங்கிரசினுடைய பல்வேறு பொறுப்புகளையும் ஏற்று, பல்வேறு பதவிகளையும் ஏற்று, அந்தப் பதவிகளிலே நிதானமாகவும், அமைதியாகவும், அழுத்தந்திருத்தமாகவும் பணியாற்றி வந்திருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

1937-லிருந்து 1939 ஆம் ஆண்டு வரையில்— அப்போது பார்லிமெண்டரி செக்ரட்டரி என்று சொல்லுவார்கள் —அமைச்சரவையில் பார்லிமெண்டரி செக்ரட்டரியாக இருந்து பணிபுரிந்து வந்திருக்கிறார்கள். 1946 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்று முதல் 1952 ஆம் ஆண்டு வரையில் அமைச்சராகவே பொறுப்பேற்றிருந்து, பிறகு ஓராண்டு காலத்திற்கு மேலாக அமைச்சர் பதவியில் இல்லாமல் இருந்து, மீண்டும் அமைச்சர் பொறுப்பை ஏற்று 1963 ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ந்து பல்வேறு இலாக்காக்களையும் பொறுப்பு ஏற்று தாங்குகின்ற அளவிற்குப் பணிகள் பல புரிந்து, 1963-லிருந்து 1967 ஆம் ஆண்டு வரையில் முதலமைச்சர் பொறுப்பையும் ஏற்றவர்கள் ஆவார்கள்.

ஆகவே நீண்ட பெருங்காலம் அவர்கள் மக்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருந்தார்கள் என்பது மட்டும் அல்லாமல், இந்த மாநிலத்தினுடைய ஆட்சிப் பொறுப்பையும் ஏற்று, பல்வேறு துறைகளினுடைய பொறுப்பையும் ஏற்று அவற்றை மிகச் சிறப்பாக நடத்தி வந்தவர்களாவார்கள். வேளாண்மைத் துறை, தொழில் துறை, தொழிலாளர் நலத் துறை, அறநிலையப் பாதுகாப்புத் துறை, காவல் துறை, கல்வித்துறை, நிதித் துறை, பொதுப்பணித் துறை, பொதுத் துறை, திட்டத் துறை போன்ற பல்வேறு முக்கியமான துறைகளில் எல்லாம் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு பல ஆண்டுக் காலம் அந்தத் துறைகளினுடைய பொறுப்புகளையெல்லாம் ஏற்று, அவற்றையெல்லாம் செம்மையுற நடத்தி, பலருடைய பாராட்டுகளையும் மிகச் சிறப்பாக பெற்றவர்கள் ஆவார்கள்.

அப்படி அவர்கள் எந்த ஒரு பணியினை ஏற்றுக் கொண்டாலும், அதை செம்மையுறச் செய்யவேண்டும் என்பதிலே முனைப்பு உள்ளம் கொண்டு அவற்றில் அயராமல் இருந்து, சோர்வு அடையாமல் இருந்து, அந்தப் பணிகளை முடிப்பதிலே நல்ல ஆர்வமும் ஊக்கமும் காட்டி வந்தார்கள் என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். ஆகவே, சிறந்த பண்புகளுக்கு உறைவிடமாக இருந்தார்கள் என்பது மட்டும் அல்லாமல், மற்றவர்களை மதிக்கும் சிறந்த கொள்கையையும் அவர்கள் பெற்றிருந்தார்கள். கருத்து வேறுபாடு கொண்டவர்களிடத்திலேயும் அவர்கள் மாச்சரியம் கொள்ளாமல் யாராக இருந்தாலும், எல்லோரையும் மதிக்கின்ற சிறந்த பண்பைக்

1987 பிப்ரவரி 28] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கொண்டிருந்து, அவர்களுக்கெல்லாம் உரிய மதிப்பைக் கொடுத்து அந்த வகையிலே அரசியலிலே ஜனநாயகப் பண்புகளுக்கு ஏற்ப தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வந்த ஒரு நல்லவர் ஆவார்கள். ஆகவேதான் அரசியலிலே உள்ள எல்லாக் கட்சித் தரப்பினர் களாலும் மிக மிக பாராட்டத் தக்க அளவுக்கு, மிகச் சிறந்து விளங்கியவர்களாவார்கள்.

யாரையும் அவர்கள் குற்றம் சொல்லுகிறார்கள் என்பது அல்ல; கொண்ட கொள்கையில் உறுதிப்பாட்டோடுதான் விளங்கவேண்டும் என்று விளங்கினார்கள். எந்த ஒரு இடத்திலும் தன்னுடைய கட்சிக் கொள்கையையோ, தன்னுடைய கொள்கை யையோ விட்டுவிடவும் மாட்டார்கள். இங்கேயும், அவர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதும் சரி, பல்வேறு வகையிலே பணி களைப் புரிந்து வந்த போதிலும் சரி, எந்த சந்தர்ப்பத்திலும், எந்த ஒரு கட்டத்திலேயும், தன்னுடைய கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். அதை யார் எப்படி எதிர்த்தாலும் கூட, அவற்றையெல்லாம் சமாளித்து நடத்திச் செல்லுகின்ற அளவுக்குத் திடமான உறுதியைப் பெற்று, தளராமல் இருந்து எடுத்துச் சொல்வார்கள். அதுதான் அவரிடத்திலே, எல்லோரும் பாராட்டத்தக்க அளவிற்கு, ஒரு சிறந்த பண்பாக இருந்து வந்ததை சிறப்பாகக் காணலாம். கடைசி வரையிலும் அதை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

அவர் முதலமைச்சராக இருந்தபோது ஒரு ஆபத்திலே சிக்கி கையே முறிகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இந்தச் சட்டமன்றத்திலேயே அவர்கள் கீழே விழுந்து காயமுற்றார்கள். அதற்குப் பிறகு வடநாட்டுக்கு ஒரு மகாநாட்டிற்காகச் செல்லும் போது அங்கேயும் காயமுற்றார்கள். மதுரையிலே ஒரு விழா விற்குச் செல்லும்போது அவருடைய எலும்பே நொறுங்கிற்று. இப்படிப் பல்வேறு வகையிலே தன்னுடைய உடல் உறுப்புகளே முறிந்த காலத்திலும் கூட, கண் பார்வை மங்கிய காலத்திலும் கூட, பலருடைய அழைப்பையும் ஏற்று, அந்நிகழ்ச்சிகளுக் கெல்லாம் செல்ல அவர் தவறியதே இல்லை. அப்படி மற்ற வர்களை மதிக்க வேண்டும் என்பதிலே கொள்கை ஈடுபாடு கொண்டவர்கள் அவர்கள். நீங்கள் வர வேண்டாம் என்று பலபேர்கள் பல முறைகளில் எடுத்துச் சொன்னாலும் கூட, அது மரியாதை அல்ல, தாம் நேரில் போவதுதான் மரியாதை என்று, கடைசி வரையில் அதைக் கடைபிடித்தார்கள். கடைசி காலம் வரையிலும் அந்தக் கொள்கையில் உறுதியோடு கடைபிடித்து வந்ததற்குக் காரணம், ஆங்கிலத்திலே 'will power' என்று எடுத்துச் சொல்வார்கள், அந்த அளவில் அந்த உள்ள உறுதி தான் அவருடைய உடல் நலிவையெல்லாம் பொருட்படுத்தாத அளவிற்கு இறுதி வரையில் கொண்டு வந்தது. இவை எல்லாம் எதிர்காலத்தில் அரசியலில் சிறந்து விளங்க வேண்டுமென்று எண்ணுகின்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற நல்ல



1987 பிப்ரவரி 28] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பண்புகளாகும். இப்படிச் சிறந்த பண்புகளுக்கும், சிறந்த அறிவுத் திறனுக்கும், ஆற்றல் திறனுக்கும், செயல்பாட்டுத் திறனுக்கும், செய்து முடிக்கின்ற திறனுக்கும் எடுத்துக் காட்டாக விளங்கிய அவர்கள் என்றென்றும் மக்களுடைய உள்ளங்களில் நீங்காத நிலைத்த இடத்தைப் பெறவேண்டு மென்று கருதித்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறந்த தொரு இடத்தில் வைத்து எரியூட்டவேண்டுமென்று நினைத்து, அதற்கான இடத்தையும் ஒதுக்கி வைத்தார்கள். அவருடைய குடும்பத்தினர் அவர்களை வழக்கமாக மற்றவர்களை எரியூட்டுகிற இடத்தில் வைத்து எரியூட்ட வேண்டுமென்று நினைத்தாலும், அவர்களுக்கு ஒரு தனிச் சிறப்பு அளிக்கவேண்டுமென்று கருதித் தான், ஒரு தனி இடத்தில் வைத்து அவருடைய உடலை எரியூட்டவேண்டுமென்று கருதியது மட்டுமல்லாமல், எரியூட்டிய இடத்தில் ஒரு நினைவு மண்டபம் தக்க முறையில், தக்க விதத்தில் கட்டி, அவரைப் பற்றிய நினைவுகள் என்றென்றும் பதியவேண்டுமென்றும் கருதி, ஒரு நினைவு மண்டபம் கட்ட வேண்டுமென்ற கருத்தினையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள்.

அப்படிச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிய அவர்கள் மறைந்தது நமக்கெல்லாம் பேரிழப்பாகும். இந்தியாவிற்கு, பொதுவாக அரசியல் உலகத்திற்கு குறிப்பாக தமிழகத்திற்கு பேரிழப்பாக அமைந்திருந்தாலும் கூட அவர்கள் காட்டிய நெறி முறைகளும், வழிமுறைகளும் பலருக்கு எடுத்துக்காட்டாக விளங்குமென்ற முறையில் அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாக நாம் இருக்கிறோம். அந்த முறையில் இந்த அவையின் சார்பாக பொதுவாகவும், ஆளும் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக குறிப்பாகவும், அவருடைய குடும்பத்ினருக்கும், அவரைப் பிரிந்து வருந்துகின்ற உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் முதல்வர் திரு. எம். பக்தவச்சலம் அவர்களுடைய மறைவு குறித்து முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து எங்களது கருத்துக்களை இங்கே சமர்ப்பிக்க விரும்புகிறோம். மறைந்த முன்னாள் முதல்வர் அவர்கள் ஒரு சுதந்திரப் போராட்ட கால வீரர் ஆவார்கள், அவரைப் பற்றி நம்முடைய பாரதத்தின் ஜனாதிபதி அவர்கள் தம்முடைய இரங்கலில் குறிப்பிடுகிறபோது விடுதலைப் போராட்டத்தின் ஒழுக்கமான சிப்பாய் மறைந்தது மிகப்பெரிய இழப்பு என்று சுட்டிக் காட்டியதை நினைவு கூறவேண்டியிருக்கிறது. அதே போல இன்றைய துணை ஜனாதிபதியாக இருக்கின்ற மாண்புமிகு

[திருமதி டி. யசோதா] [1987 பிப்ரவரி 28

திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் குறிப்பிடுகிறபோது 40
ஆண்டுக்காலம் தமிழகத்தினுடைய மேன்மைக்காகப் பாடுபட்ட
மிகச் சிறந்த சுதந்திரப் போராட்ட வீரரைத் தமிழகம் இழந்
தது என்று குறிப்பிட்டதையும் நாம் நினைவு கூறவேண்டியவர்
களாக இருக்கிறோம். அதேபோல, நமது பாரதப் பிரதமர்
திரு. ராஜீவ் காந்தி அவர்கள் குறிப்பிடுகிறபோது தமிழகம்
ஒரு தலைசிறந்த நிர்வாகியையும், ஒரு தலைசிறந்த தேசிய
வாதியையும் இழந்தது என்பது மட்டுமல்ல, அந்த இழப்பு
காங்கிரஸ் பேரியக்கத்திற்கும் உரிய ஒன்று என்பதை தமது
இரங்கலில் சுட்டிக்காட்டிய சூழ்நிலையை வைத்துப் பார்க்கிற
போது மறைந்த முன்னாள் முதல்வர் அவர்கள் தமிழகத்
தினுடைய உயர்விற்காக எப்படியெல்லாம் பாடுபட்டார் என்
பதையும் இந்த நேரத்தில் நினைவு கூற வேண்டியவர்களாக
இருக்கிறோம்.

மேலும் முதன்முதலாக மதுரையில் பல்கலைக் கழகத்தை
அவர் நிறுவிய போது அப்பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்த
ராக முழுக்க முழுக்க தமிழ் மட்டும் அறிந்திருந்த ஒரு
பேராசிரியரை, ஒரு பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த
திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரம் அவர்களை நியமித்ததை
நாம் மறக்க முடியாது. (குறுக்கீடு)

[முற்பகல் 10-20]

அவர் பன்மொழிப் புலவர். இருப்பினும் தமிழை முழுக்க
முழுக்க அறிந்த ஒரு பேராசியராக அவர் விளங்கியதை நான்
இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் கல்வி மந்திரியாக இருந்தபோது அவர் செய்த
சேவைகளை நாம் பாராட்டத்தான் வேண்டும். பாரதியாருடைய
இறந்த நாளை கொண்டாடிக் கொண்டிருந்த நாம்,
அவருடைய பிறந்த நாளை டிசம்பர் மாதம் பெரிய விழாவாகக்
கொண்டாடக் கூடிய ஒரு நிலையை உருவாக்கி, அதைத் தானே
முன் நின்று நடத்தி கடற்கரையிலே பாரதியார்
களுடைய தலைமையிலே மிகச் சிறந்த விழாவாக நடத்தியதை
நினைவு கூறவேண்டியவர்களாக இருக்கிறோம்.

1967-லே சர்வதேச தமிழ்ச் சங்கம் உருவாக அதற்கு
முன்னால் தமிழக முதல்வராக இருந்த இவர் மிகவும் ஆர்வம்
காட்டி ஊக்குவித்தார். 1966-ஆம் ஆண்டு மலேயாவில்
கோலாலம்பூரிலே தமிழ்ச் சங்கத்தினர் மூலமாக உலகத் தமிழ்
மாநாடு நடைபெற்றது, அப்படி நடைபெறுவதற்கு மிகவும்
உறுதுணையாக இருந்தவர் மறைந்த பெரியவர்
திரு. பக்தவத்சலனார் என்பதை நாம் மறக்க முடியாது. அந்த
மாநாட்டிலே ஒரு குழுவாகச் சென்று கலந்துகொண்ட அவர்,
அடுத்த மாநாடு தமிழகத்திலேதான் நடைபெற வேண்டும்
என்று அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 1967-லே ஆட்சி



1987 பிப்ரவரி 28] [திருமதி. டி. யசோதா]

மாற்றத்திற்குப் பிறகு, மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள்
தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது, அந்த உலகத்
தமிழ் மாநாட்டை தமிழகத்திலே நடத்தி முடித்தார்கள்
என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் ஐ. நா. கலாச்சார சமூக நிறுவனத்தினர்
மூலமாக குழந்தைகள் கலைக் களஞ்சியம் வெளியிடும் அமைப்
பினை தோற்றுவித்து, அதிலே 10 நூல் தொகுப்பினை பெரிய
சாமி தூரன் அவர்களை ஆசிரியராக நியமித்து, விஞ்ஞானச்
சொற்கள் தமிழில் முதன்முதலாக வெளிவரக் காரணமாக
இருந்தவர் நம்முடைய முன்னாள் முதல்வர் அவர்கள் என்பதை
மறக்க முடியாது.

பாகிஸ்தான் யுத்தம் ஏற்பட்ட நேரத்திலே அனைத்துக்
கட்சியினரையும் ஒன்றாகத் திரட்டி, தமிழகத்தினுடைய ஒரே
குரலாக எதிரொலிக்கச் செய்து, மிகப் பெரிய ஒரு ஊர்வலத்
தையும் நடத்தி, அதிலே எல்லோரையும் பங்கு கொள்கிற
நிலைமையை ஏற்படுத்தி தமிழக மக்கள் மூலமாக நகைகளையும்
பணத்தையும் இனாமாக எந்தவித எதிர்பார்ப்புகளும் இல்லாமல்
கொடுக்கக்கூடிய நிலைமையை, ஒரு எழுச்சியை உருவாக்கிக்
கொடுத்த காரணத்தால், அன்றைய பிரதமராக இருந்த
திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் நாடாளுமன்றத்திலே
குறிப்பிடுகின்ற போது இந்தியாவிலே மிகப் பெரிய தேசிய
எழுச்சியை தமிழகத்திலேதான் காண முடிந்தது என்று
சொல்லக் கூடிய ஒரு சிறப்பினை நம்முடைய தமிழகத்திற்கு
உருவாக்கித் தந்த தலைவர், தலைசிறந்த நிர்வாகியாவார்கள்.
அவர்கள் நேரம் கடத்தாது, ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிக்கு வரக்
கூடியவர். நல்லவர், ஒழுக்கசீலர். சட்டமன்ற நடவடிக்கை
களிலே பங்கேற்று, அவர் தலைமைச் செயலகத்திலே இருந்து
செல்லுகின்ற போது, மற்றவர்கள் தங்களுடைய கடிகாரத்தை
சரிபார்த்துக் கொள்ளக்கூடிய அளவிற்குக் காலம் கடத்தாத
வாழ்க்கையை வாழ்ந்து மறைந்தவர்.

வயதான சூழ்நிலையிலே கூட ஒப்புக்கொண்ட நிகழ்ச்சி
களுக்குத் தன்னால் முடியவில்லை என்றாலும் கூட, மற்றவர்
கள் துணையோடு அந்த நிகழ்ச்சிகளுக்கு வந்து, கலந்து
கொண்டு, மற்றவர்களுடைய சுகதுக்கங்களிலே பங்கு கொள்ளக்
கூடிய ஒரு நல்லவர் எவ்வளவு பெரிய திட்டங்களாக இருந்
தாலும், அந்தத் திட்டங்கள் லாபகரமான திட்டங்களாக
இல்லாது இருந்தாலும், பொதுமக்களுக்கு அதனாலே நன்மைகள்
விளையக்கூடியது என்று இருந்தால் அந்தத் திட்டங்களை
உடனுக்குடனே நிறைவேற்றி, தமிழக மக்களுக்கு நன்மைகளைச்
செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை இந்தத் தமிழகத்திற்கு
உருவாக்கித் தந்தவர்.

[திருமதி. டி. யசோதா] [1987 பிப்ரவரி 28

கோயில் நிர்வாகம் என்று சொன்னால், அது தூய்மையாக இருக்க வேண்டும் என்பதற்காக நடவடிக்கை எடுத்து, அந்தச் சூழ்நிலையை கட்டிக் காத்தவர் அப்படிப்பட்ட ஒரு நல்லவர். மாற்றார் சொல்லுக்கு மரியாதை கொடுக்கின்ற வகையிலே, அவர்கள் கருத்துக்களிலே உண்மை இருக்குமானால், அதை ஏற்று அதற்கு ஒரு செம்மையான வடிவம் கொடுக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய சுதந்திர போராட்ட வீரரைத் தமிழகம் இழந்து தவிக்கின்ற நேரத்திலே அவருடைய குடும்பத்தாருக்கும், தமிழக மக்களுக்கும் நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

திரு. கி. மனோகரன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவை முன்னவர் அவர்கள் காலஞ்சென்ற பெரியவர் திரு. பக்தவத்சலனார் அவர்களின் மறைவு குறித்து அனுதாபத்தைத் தெரிவிக்கின்ற வகையிலேயும் அஞ்சலியை செலுத்துகின்ற முறையிலேயும் கொண்டு வந்த தீர்மானத்தை நான் சார்ந்திருக்கின்ற [illegible] முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், உறுப்பினர்களின் சார்பிலும் வழிமொழிந்து ஒரு சில வார்த்தைகளை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

நமது அவை முன்னவர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, ஏறத்தாழ 32 [illegible] அரசியலில் இடம்பெற்று, [illegible] இடம்பெற்று, தன்னை நிலைநாட்டிய வரலாற்று வீரர்களில் பெரியவர் காலஞ்சென்ற திரு. பக்தவத்சலனார் அவர்களும் ஒருவர் என்பதை இந்த நாடு அறியும். பழம்பெரும் போராட்டத் தலைவராகவும், தலைசிறந்த நிர்வாகியாகவும், பழுத்த அரசியல்வாதியாகவும், பல பொறுப்புகளைத் திறமையோடு ஏற்று சமாளித்து வெற்றி கண்டவராகவும், குறிப்பாக கோப்புகளைப் பார்ப்பதில் அவருக்கு இணை அவரேதான் என்று சொல்லத்தக்க வகையில், யாரும் அவரை திசை திருப்ப முடியாது என்று கூறத்தக்க வகையிலே, தன் வல்லமையைக் காட்டி புகழைச் சேர்த்தவர் காலஞ்சென்ற பெரியவர் திரு. பக்தவத்சலனார் அவர்கள். அவர் கோபதாபங்களுக்கு அப்பாற்பட்டவர். ஆவார்கள். பொறுத்த வரையில், தலைவர் அவர்களே, என்னைப் விக்க விரும்புகிறேன். பொது மேடைகளிலே [illegible] உங்களுக்குத் தெரி நேரங்களிலேயும், பாராளுமன்றத்திலே நான் பேசுகின்ற களிலேயும், காலஞ்சென்ற திரு. பக்தவத்சலனார் [illegible] பேசுகின்ற நேரங் கடுமையாக விமர்சித்திருக்கிறேன். [illegible] அவர்களைப் பற்றி சித்தாலும், அந்த விமர்சனங்கள் ஜனநாயகத் [illegible] [illegible] யாக விமர் என்ற அடிப்படையில் அவர்கள் அதை எடுத்துக் [illegible] தேவை களே தவிர. ஜனநாயகத்திற்கு மாறுபட்ட முரண்பட்ட கொண்டார் எண்ணங்கள் இருக்கத்தான் செய்யும் என்ற உணர்வை வேறுபட்ட திலே ஏந்தி அப்படி இருக்கின்ற காரணத்தினால் உள்ளத் அவற்றை



1987 பிப்ரவரி 28] [திரு. கி. மனோகரன்]

[illegible]யெல்லாம் காழ்ப்புணர்ச்சிக்கு கதவுகளாகத் திறந்து விடக் கூடாது என்று திரு. பக்தவத்சலனார் அவர்கள் பெரிதும் துணிவோடு இருந்து, காரியங்களைச் சாதித்தார்கள் என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள்.

இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். பாளை சிறைச்சாலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் Preventive D tention என்ற சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருந்த நேரத்தில், நாகர்கோவில் செல்லுகின்ற வழியில் நான் அவரைப் பார்க்க வேண்டும் என்று காலஞ்சென்ற திரு. பக்தவத்சலனார் அவர்களிடம் கேட்டேன். முதலில் மறுத்தார். மறுத்ததற்குப் பிறகு, ஆழ்ந்து யோசித்ததற்குப் பின்னால் அவசியம் பார்க்க வேண்டுமா என்று கேட்டார். ஆம் என்றேன். அப்படியானால் நீங்கள் தாராளமாகப் பார்க்கலாம் என்று சொல்லுகின்ற தாராள மனப்பான்மையை அவர்கள் பெற்றிருந்தார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும்—தனிப்பட்ட வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றைச்—சுட்டிக் காட்டுவதற்கு மன்றம் என்னை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய திருமகள் திருமணத்திற்கு நீங்கள் வரவேண்டும், ஆசிர்வாதம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்ட நேரத்தில், நிச்சயம் தான் வருகிறேன், வாழ்த்துகிறேன் என்று சொல்லி நடக்க முடியாத அந்த நேரத்திலே, தள்ளாடிக் கொண்டிருந்த அந்த நேரத்திலே, நடந்து வந்து வாழ்த்தைத் தெரிவிக்க முடியாத அந்த நேரத்திலே சிலபேர் அவரைத் தூக்கி வந்து நாற்காலியில் உட்கார வைக்க, அவர் அங்கிருந்து கொண்டு மணமக்களை, என்னுடைய செல்வியைப் பாராட்டி, வாழ்த்திய அந்த நிகழ்ச்சியை எண்ணி நான் மெய் சிலிர்த்துப் போனேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிப்பதோடு, அவை முன்னவர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல், 'அத்தகைய பெருந்தன்மைக்கு தன்னை ஆளாக்கிக் கொண்டு வாழ்ந்தார் என்பது மற்றவர்களுக்கு ஒரு நல்ல உதாரணமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

(முற்பகல் 10—30)

இங்கே காங்கிரஸ் கட்சியின் சார்பாக பேசிய அதன் துணைத் தலைவர் அவர்கள் பக்தவத்சலம் அவர்களின் நிர்வாகத் திறன் பற்றி சிறப்பாக எடுத்துப் பேசினார்கள். [illegible]ன் ஒரு வேண்டுகோளை மட்டும் இந்த நேரத்திலே வைக்க விரும்புகிறேன். ஏற்புடைத்தான எனது வேண்டுகோள் அடிப்படை உண்மையை நிச்சயம் பிரதிபலிக்கும் என்று அரசு நம்புமேயானால் 32 ஆண்டுக்காலம் பொது வாழ்க்கையில் தொடர்ந்து இருந்து தனது திறமையை உலகிற்குக் காட்டிய

நாட்டுப்பற்று மிக்க தலைசிறந்த நிர்வாகி என்ற பெயர் எய்திய திரு. பக்தவத்சலனார் அவர்களின் திருவுருவப் படத்தை இந்த மன்றத்திலே வைக்கவேண்டும் என்று நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பாக இங்கே அமர்ந்திருக்கிற மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய முதலமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. பக்தவத்சலனார் அவர்கள் 90 ஆண்டுக்காலம் வாழ்ந்தார்கள். நாவலர், அவை முன்னவர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல் 90 ஆண்டுக்காலம் அவர்கள் வாழ்ந்தார்கள் என்றாலும் என்னைப் போன்றவர்கள் எல்லாம் 100 ஆண்டுக்காலம் அவர்கள் வாழ்வார்கள் என்று எண்ணியதற்குக் காரணம் அவர்கள் இறுதி நேரத்திலே மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டிருந்த நேரத்திலே நான் சென்று பார்த்த நேரத்திலே அவர்கள் தெளிவான சிந்தனையோடு நினைவாற்றலோடு அழுத்தந்திருத்தமாகக் கருத்துக்களைப் பேசியதை இன்றைக்கும் எண்ணிப் பார்க்கிறேன். அப்படிப்பட்டவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து இருக்கக்கூடாதா என்று எண்ணத்தக்க அளவுக்கு ஒரு வரலாற்றை உருவாக்கிச் சென்று இருக்கிறார்கள். அப்படிப்பட்டவரின் மறைவுக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் அதன் தலைவர் கலைஞர் அவர்கள் சார்பாகவும் இங்கே வீற்றிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களின் சார்பாகவும் இங்கே இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்து உணர்வை வெளிப்படுத்தி இரங்கலைத் தெரிவித்த அவை முன்னவரின் உணர்வோடு என்னை ஒன்றிவைத்துக் கொள்கிறேன், இணைத்துக் கொள்கிறேன் என்று கூறி அமைகிறேன், வணக்கம்.

**திரு. கு. ரமணி :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 90 ஆண்டுக்காலம் வாழ்ந்திருந்து தமிழ்நாட்டின் அரசியல் நடவடிக்கைகளில் ஒரு ஆழமான முத்திரையைப் பதித்துச் சென்றுள்ள திரு. பக்தவத்சலம் அவர்களுடைய மரணம் நம் தமிழ்நாட்டிற்கு ஒரு பெரும் நட்டம் என்பதில் யாருக்கும் கருத்து வித்தியாசம் இருக்கமுடியாது.

தன்னுடைய வாழ்நாளில் 20 ஆண்டுகளுக்கு மேல், ஒரு கட்டத்தில் முதல் அமைச்சராகவும் மற்ற சந்தர்ப்பங்களில் அமைச்சரவையில் ஒரு உறுப்பினராகவும், அமைச்சராகவும் பணியாற்றி இருக்கிறார்கள். இங்கே இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்த அவை முன்னவர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல் அநேகமாக அவர் பங்குபெறாத எந்த இலாகாவும் அரசாங்கத்தில் இருந்திருக்காது என்று கருதுகிறேன். அதனுடைய அர்த்தம் என்ன? எந்த இலாகாவை நிர்வகிப்பதற்கும் தன்னுடைய திறமைக்கேற்ப அந்த இலாகாக்களை நடத்திச் செல்வதற்கும் அவர்களுக்கு ஞானமும் திறமையும் இருந்தது என்பதைத்தான் அது வெளிப்படுத்துகிறது.



அதைப் போன்று அவர்கள் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியினுடைய முக்கியமான தலைவர்களிலே ஒருவராக விளங்கி தமிழ்நாட்டில் தன்னுடைய கட்சியின் முன்னேற்றத்திற்காக 1947 ஆம் ஆண்டு சுதந்திரப் பிரகடனத்திற்கு முன்பிருந்து ஆட்சியை ஸ்தாபித்து நடத்திக்கொண்டு வந்த காங்கிரஸ் கட்சி அரசாட்சியைத் தொடர்ந்து கொண்டுசெல்வதற்காக பிடிவாதமாக நின்று தன்னுடைய கொள்கையை வலியுறுத்தி நடத்தி வந்தவர்கள். என்ன எதிர்ப்புகள் வந்தாலும் தன்னுடைய நிலையிலிருந்து ஒரு துளியும் வழுவாமல் அந்த எதிர்ப்புக்களையெல்லாம் சமாளிக்கக் கூடிய தன்மையில் அவர்களுடைய அரசியல் வாழ்வு இருந்தது.

அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே என்னுடைய கட்சிக்கும் பலவிதமான அனுபவங்கள் இருந்தன. தன்னுடைய கொள்கையை அவர்கள் வலியுறுத்தி எந்த எதிர்ப்பையும் சமாளிக்கக் கூடிய தன்மையிலே சில சந்தர்ப்பங்களிலே மிகுந்த நயத்தோடும் மனிதாபிமானத்தோடும் செயல்பட்டு செய்த செயல்கள் பல உண்டு. இன்றைக்கும் தமிழ்நாட்டில் இருக்கும்படியான பஞ்சாலைத் தொழிலாளர்கள் இயக்கத்தைப் பற்றி நாங்கள் விவாதிக்கும்போது, போராடும்போது, ஒப்பந்தங்கள் உருவாக்கும்போது 'பக்தவத்சலம் அவார்டு' என்று ஒன்றைக் கூட நாங்கள் எங்கள் கட்சியின் சார்பில் வைத்து அதிலே எடுத்துச் சொல்லுவது உண்டு. புதிதாக வளர்ந்து வரும் பஞ்சாலைகளுக்கு எப்படி வேலைப்பளுவை நிர்ணயிப்பது, எப்படி சம்பளத்தை நிர்ணயிப்பது என்று பெரும் தகராறு வந்த காலத்தில் அதிலே தலையிட்டு அவரே நடுவராக இருந்து ஒரு தீர்ப்பைக் கொடுத்தவர். தீர்ப்பினுடைய சாதகபாதகங்களைப் பற்றி சொல்லவேண்டிய சமயம் அல்ல இது. ஆனால் அந்த செயலைச் செய்து அது தொடர்ந்து சரித்திரத்தில் இடம் பெறும்படியான காரியத்தை செய்தவர். அவருடைய ஆட்சியில் நாங்கள் எல்லாம் சிறைக்கூடத்தில் பல காலம் இருந்து இருக்கிறோம். ஒரு தரம் கடலூரில் உள்ள சிறையில் இருந்து 15 நாட்கள் பரோல் பெற்றுக் கொண்டு நான் என் வீட்டிற்கு வந்தேன். அப்போது என்னுடைய மனைவி நோய்வாய்ப்பட்டிருந்தார். அதற்காக 15 நாள் பரோல் எனக்குக் கொடுக்குமாறு நான் அதிகாரிகளிடம் கேட்டதற்கு, அவர்கள் சொன்னதற்கு இணங்க அவருக்கு விண்ணப்பம் அனுப்பி அவரும் பரோலை அனுமதித்து 15 நாட்கள் பரோல் முடிந்து கடலூர் ஜெயிலுக்கும் போவதற்குப் பதிலாக நேராக நான் அவருடைய அறைக்கு இங்கே சென்னைக்கு வந்தேன். அவரைப் பார்க்க வேண்டும் என்று ஒரு சீட்டைக் கொடுத்தேன். உடனே உள்ளே அழைத்தார். உட்கார வைத்தார் வீட்டில் எப்படி இருக்கிறார்கள் என்று கேட்டார். உடல் நலம் சரியில்லை என்னுடைய மனைவிக்கு அறுவை சிகிச்சை நடந்த நேரத்தில் என்னை வெளியே

அனுப்ப மறுத்து விட்டார்கள். இப்போது 15 நாட்கள் பரோ
லில் வந்து இருக்கிறேன். என் மனைவி இன்னும் சரியான
முறையில் நடமாட முடியாமல் இருக்கிறார்கள் என்று சொல்லி
எனக்கு பரோலை நீட்டிக்க வேண்டும் என்று நான் அரசாங்
கத்தைக் கேட்டேன், ஆனால் அரசாங்கச் செயலாளர் நீட்டிக்க
முடியாது என்று பதில் கொடுத்து விட்டார், உங்களிடத்
தில் சொல்லிவிட்டு நான் சிறைக்குச் செல்கிறேன் என்று
சொன்னேன். அதற்கு அவர் நீங்கள் சிறைக்குப் போக வேண்
டாம், நீங்கள் வீட்டுக்கு திரும்பிச் செல்லுங்கள், நான் உங்
கள் பரோலை நீட்டிக்கிறேன் என்றும், ஏன் இப்படிச் செய்
தார்கள் என்று எனக்குப் புரியவில்லை என்றும் எனக்கு பதில்
சொன்னார்கள், எதற்காகச் சொல்கிறேன் என்றால் கொள்கை
அளவில் கடுமையானவர், அவருடைய அரசாங்கத்தின் நட
வடிக்கைகளை நாங்கள் எதிர்த்தாலும், தொடர்ந்து விமர்
சித்தாலும், எதிர்த்துப் போராடி வந்தாலும் அப்படிப்பட்ட
நிலைமை இருந்தாலும் அரசியலில் என்ன வித்தியாசங்கள்,
என்ன மாறுபாடுகள் இருந்தாலும் ஒரு மனிதாபிமானத்தோடு
செய்ய வேண்டிய காரியங்களைச் செய்வதில் சில சந்தர்ப்பங்
களில் அதி தீவிரமான நிலையைத்தான் கைக்கொண்டு இருந்
தவர் என்பதை சில அனுபவங்கள் நமக்கு எடுத்துக் காட்டு
கின்றன, அப்படிப்பட்டவர் நீண்ட நெடும் காலம், 90 ஆண்டு
காலம் வாழ்ந்து இருக்கிறார், இந்தத் தமிழ்நாடு அரசினு
டைய பணியில் அவரைப் போன்று இத்தனை ஆண்டுகள்
அமைச்சராக இருந்தவர் யாரும் இப்போது இல்லை என்பது
என்னுடைய கருத்து, அனேகமாக அதுதான் உண்மை, அப்
படிப்பட்ட ஒருவர் தன்னுடைய இயக்கத்திற்காகவும், தன்னு
டைய கட்சியின் கொள்கைக்காகவும் பிடிவாதமாக நின்று
போராடி தன்னுடைய முத்திரையைத் தமிழ்நாட்டு சரித்திரத்
தில் பதித்தவர், அன்னாருடைய மறைவு நிச்சயமாக ஒரு
பெரிய இழப்புதான், அந்த முறையில் நமது முன்னவர் அவர்
கள் முன்மொழிந்த தீர்மானத்தோடு மார்க்சிஸ்டு கட்சி தன்னை
யும் ஒன்றிணைத்துக் கொண்டு அன்னாருடைய மறைவால்
வருந்துகின்ற அவருடைய குடும்பத்தாருக்கும், உற்றார் உற
வினர் அத்தனை பேருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்
கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு எ.எஸ்.ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவச்சலம்
அவர்களுடைய மறைவுக்கு இரங்கல் தெரிவித்து மாண்புமிகு
நிதி அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை ஜனதா
கட்சியின் சார்பாக வழி மொழிந்து பேசுகிறேன், மறைந்த
முன்னாள் முதல்வர் அவர்கள், அவருடைய அரசியல் வாழ்க்கை
யின் 60 ஆண்டுக் காலத்தில் சுதந்திரப் போராட்ட வீரராகத்
திகழ்ந்தார், காங்கிரஸ் கட்சியினுடைய வளர்ச்சிக்காகப் பாடு



பட்டார், 1927 ஆம் ஆண்டு வழக்கறிஞர் தொழிலை விட்டு
விட்டு கட்சியினுடைய வளர்ச்சிக்காகப் பாடுபட்ட அவர், 1937
ஆம் ஆண்டு செங்கற்பட்டு ஜில்லாவின் துணைத் தலைவராக
வும், சென்னையினுடைய துணை மேயராகவும், பார்லி
மெண்டரி காரியதரிசியாகவும் பணியாற்றினார். 1946 முதல்
1962 வரை விவசாய அமைச்சர், கல்வியமைச்சர்' தொழில்
மைச்சர், தொழிலாளர் நல அமைச்சர், உள் துறை அமைச்சர்
நிதியமைச்சர் என்று பணியாற்றும் வகையில் பல்வேறு
இலாக்காக்களை மிக நல்லமுறையிலே நிர்வகித்து வந்தார்.
நம்முடைய இரங்கல் தீர்மானத்தில் கூட 1952
வரை என்று போட்டுவிட்டு, பிறகு 1954 என்
றிருக்கிறது. அப்படி என்று சொன்னால், முன்னாள்
முதல்வர் இராஜகோபாலாச்சாரி அவர்களுடைய மந்திரி சபை
யில் இல்லாதது போலாகிறது. அதைத் திருத்தவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் இராசகோபாலாச்சாரி
மந்திரி சபையில் இருந்திருக்கிறார் என்பதை இந்த நேரத்தில்
நான் கவனப்படுத்த விரும்புகிறேன். 1953–ல் அமைச்சராக
இருந்திருக்கிறார். அதன் பிறகு பெருந்தலைவர் காமராசர்
அன்புக்குப் பாத்திரமாகியிருந்த காலத்திலே 1963 முதல் 1967
வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக அவர் இருந்திருக்கிறார்.
அவருடைய குண நலன்களைப்பற்றி ஆளுங்கட்சியில் நிதி
யமைச்சர் அவர்களும். மற்றும் சக கரப்பு, எதிர்தரப்புக்
கட்சியிலர்கள் எல்லாம் மிக அதிகமாக சொன்னாலும் கூட,
நானும் அதிலே என்னை ஈடுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.
மற்றவர்களை மதிக்கும் தன்மை உள்ளவர். கருத்து வேறுபாடு
உள்ளவர்களையும் வரவேற்பார்.

அதே போன்று கேள்விகளுக்கு நகைச்சுவையாகப் பதிலளிப்
பார். 1967–லே காங்கிரஸ் வெற்றி வாய்ப்பை இழந்தபோது
பெருந்தலைவர் காமராசர் அவர்கள் புதிய ஆட்சியினர்
ஆட்சியினுடைய அனுபவத்தை பழகிக் கொள்ள வேண்டுமென்று
ஆறு மாத காலத்திற்கு எதுவும் பேச மாட்டேன் என்று
அறிவித்த பிறகும்கூட பக்தவச்சலம் அவர்கள் தமிழ்நாட்டிலே
விஷக்கிருமிகள் பரவியிருக்கின்றன. இது எதில் கொண்டுபோய்
முடியுமோ என்று அறிக்கை விட்டார். எதற்கும் அவர் அஞ்ச
மாட்டார். மனதில் பட்டதைச் சொல்வார் என்பதற்காகச்
சொல்கிறேன். மறைகின்ற காலம் வரை 90 ஆண்டுக்காலம்
வாழ்ந்த அந்த முதியவர் அனைத்து நிகழ்ச்சிகளிலேயும் பங்கு
கொண்டு சிறப்பித்தார் என்பதை இந்த நேரத்திலே சிறப்பாக
சொல்லி அவருடைய மறைவுக்கு, அவருடைய குடும்பத்தின
ருக்கும், அவர் சார்ந்திருக்கின்ற கட்சிக்கும், ஆழ்ந்த அனுதாபத்
தினை ஜனதா கட்சியின் சார்பாகவும், சக சட்டமன்ற உறுப்
பினர்கள் சார்பாகவும் தெரிவித்து என்னுடைய உரையை
நிறைவு செய்கிறேன்.

திரு. பொ, உக்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பெரியவர் முன்னாள் முதலமைச்சர் திரு. பக்த
வத்சலத்தினுடைய மறைவுக்கு முன்னவர் அவர்கள் கொண்டு

[திரு பொ. உத்திரபதி] [1987 பிப்ரவரி 28

வந்த தீர்மானத்தோடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து கொண்டு, இந்த நாடு விடுதலை பெறுவதற்காக சுதந்திரப் போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்து, இந்த நாடு விடுதலை பெற்றதற்கு பிறகு தமிழகத்தில் நீண்ட காலம் அமைச்சர் பொறுப்பை ஏற்று, 5 ஆண்டுகாலம் தமிழக முதலமைச்சராகவும் இருந்து பணியாற்றுகின்றபோது, மன உறுதியுடன் மற்றவர்கள் தன் நிர்வாகத்தில் தலையிடாத அளவிற்கும் நிர்வாகத்தை தூய்மையாக நடத்தக் கூடிய அளவிற்கும் தலைசிறந்த நிர்வாகத்தை நடத்திக் காட்டிய பெருமை மறைந்த பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்களுக்கு உண்டு.

அமைச்சராவும், முதலமைச்சராகவும் இருந்த காலத்தில், தமிழகத்திலே எங்கள் கட்சிகள் போராடுகின்ற காலங்களில் எல்லாம் கடுமையாக நடவடிக்கை எடுத்தால்கூட, இறுதியில் இந்தப் போராட்டத்தில் போராடக் கூடிய மக்களுடைய உணர்வுகள், அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதையெல்லாம் நினைத்து, அப்போதைக்கப்போது தீர்வு கண்டு அந்தப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த பெருமை மறைந்த பெரியவருக்கு உண்டு. அந்த அடிப்படையில்தான் 90 வயதிலும்கூட, இறுதி வரையிலும்கூட, மன உறுதியோடு தன் மனதில் என்ன கருத்து தோன்றியதோ, அந்தக் கருத்தை தொய்வு இல்லாமல், தயக்கம் இல்லாமல் மற்றவர்களுக்கு வளைந்து கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்திற்கு கூட இடம் கொடுக்காமல், பளிச்சென்று சொல்லி வந்த அந்த அடிப்படையில் மறைந்த பெரியவர் அவர்களுக்கு, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தனித் தன்மை அளித்து அவரைத் தனி இடத்தில் அடக்கம் செய்து, அங்கு நினைவு மண்டபமும் கட்டப்போவதாக அறிவித்திருக்கிறார்கள் இப்படி தேச பக்தர்களுக்கு சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மக்கள் அவையில் அமைச்சராக இருந்து, மக்களுக்காக நற்பணி ஆற்றுகிறவர்களுக்கு, இப்படி ஒரு பொறுப்பு வாய்ந்த பாராட்டு அளிப்பது என்பதுதான் நம்முடைய தமிழகப் பண்பாட்டிற்கும், மரபுக்கும் ஒரு நல்ல இலக்கணமாக அமைவதாக இருக்கும்.

அதைப்போலவே தமிழகத்தில் ஆதிதிராவிடர் வகுப்பில் பிறந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, அமைச்சரவையில் நீண்ட காலம் பணியாற்றி ஏய்வாக இருந்த மறைந்த திரு. கக்கன் அவர்கள் தனக்கு எந்தப் பாதுகாப்பும் அற்ற நிலையில் இருந்தபோது, நமது தமிழக அரசு, அப்படி நிலையற்று இருந்த அந்தப் பெரியவர் திரு. கக்கன் அவர்களுக்கு பென்ஷன் அளித்தது. தமிழ்நாட்டில் இப்படி தேசப் போராட்டக்காரர்களுக்கெல்லாம் ஒரு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய அளவிற்குச் செய்த அந்த வரலாற்றின் அடிப்படையில்தான் நமது பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கும் தமிழக அரசு நினைவு மண்டபம் எழுப்பவிருக்கிறது.



1987 பிப்ரவரி 28] [திரு. பொ. உத்திராபதி]

இந்த நேரத்தில் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் பல்வேறு துறைகள் வைத்திருந்தாலும், அறநிலையத் துறையை வைத்திருக்கின்றபொழுது, எல்லா கோவில்களிலும் நிர்வாகம் சிறப்பாக நடத்தப்படவேண்டுமென்று செயல்பட்டவர்கள். அவர் மறைவிற்குச் சில மாதங்களுக்கு முன்னால் கூட, தமிழ்நாட்டு மக்களுக்கும், தமிழக அரசுக்கும் ஒரு வேண்டுகோள் விட்டார். தமிழகத்தில் இருக்கக்கூடிய கோவில்களுக்கெல்லாம், மடங்களுக்கெல்லாம் நிலங்கள் அதிகமாக இருக்கின்றன; அந்த நிலங்களை விவசாயிகளிடம் விட்டால், இயற்கைச் சீற்றத்தினால் அவர்களுக்கும் பலன் அளிக்கவில்லை. கோவில்களுக்கும் பலன் அளிக்கவில்லை, அந்தக் கோவில் நிர்வாகம் சீரும் சிறப்புமாக நடக்க வேண்டுமானால், அந்தக் குத்தகை விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்கி, அதில் வரக்கூடிய பணத்தை வங்கியில் போட்டு வட்டி எடுத்து நிர்வாகத்தைச் சிறப்பாக செய்யலாம் என்று திரு. பக்தவச்சலம் அவர்கள் தன்னுடைய கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே, மறைந்த பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்களுடைய அந்தக் கருத்தை எதிர்காலத்தில் அரசு நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டுகோளாக விட்டு, அவருடைய குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையினுடைய முன்னவர் அவர்கள் முன்மொழிந்து இருக்கக்கூடிய இரங்கல் உரையோடு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக நான் என்னையும் இணைத்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே ஆரம் பிறை கண்டு வாழ்ந்த முதறிஞர்களில் ஒருவராக விளங்கிய பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்கள் இந்த நாட்டினுடைய அரசியலில் தன்னுடைய செயல் திறத்தினாலும், ஒழுக்கத்தினாலும், திறமையினாலும், ஒரு ஆழமான முத்திரையைப் பதிப்பித்துச்சென்ற பெரியாராக இடம் பெற்றிருக்கிறார்கள். தமிழக சட்டமன்றத்தினுடைய விவாதங்களுக்கு வலிமை சேர்ப்பதிலும், எதிர்க்கட்சியினர் கூறிய சொற்களினால் விமர்சனம் செய்த போதும்கூட, அமைதியாக இருந்து அவற்றையெல்லாம் கேட்டு, அதற்குரிய பதில்களை அவருக்கே உரிய பணிவான முறையிலும், தெளிவான முறையிலும், ஆற்றொழுக்கு போன்ற அருமையான தமிழிலும் அளித்திருக்கிறார்கள் அந்தப் பதில்கள் நம்முடைய சட்டமன்றத்தினுடைய குறிப்பேடுகளில் பதியப்பெற்றிருக்கின்றன. அவர் பெற்றிருந்த சட்ட ஞானம், அவர் காலத்திலே இயற்றப்பட்ட சட்டங்கள் எந்தக் காலத்திலும் நீதிமன்றத்திலே விவாதத்திற்கு உரியவையாக ஆக்கமுடியாத அளவுக்கு, திறம்பட. இந்தியாவில் மற்ற மாநிலங்கள் எல்லாம் பின்பற்றத்தக்க அளவுக்கு விளங்கி

எந்தத்தையும் நாம் காண்கின்றோம். பெரியவர், திரு. பக்தவத்சலம் அவர்கள் தன்னுடைய முதுமை காலத்திலே கூட, தமிழகத்தினுடைய அரசியல் வாழ்வு பற்றிய கருத்துக்களை தீட்சண்யத்தோடு. அரசியல் நுணுக்கத்தோடு பட்டவர்த்தனமாகச் சொல்லி, ஒரு மூதறிஞரிடமிருந்து வரக்கூடிய கருத்துக்கள் என்று அந்தக் கருத்துக்களுக்கு மாறுபட்டவர்கள் கூட ஒப்புக்கொண்டு பாராட்டக்கூடிய அளவுக்கு அவர் தமிழகத்தினுடைய ஒரு களஞ்சியமாக விளங்கினார் என்பதையெல்லாம் நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். அவருக்கு இருந்த அந்த அரசியல் ஞானம் நமக்கு மேலும் வழிகாட்டக்கூடிய அளவுக்குப் பயன்படவேண்டும் என்ற ஆதங்கம் நமக்கு இருந்தாலும்கூட, இறைவனுடைய ஒரு கட்டளைக்கிணங்க, அவரும் இந்த முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறார்.

[முற்பகல் 10-50]

அவர்களோடு நெருங்கிப் பழகிய சில நாட்கள் எனக்கு இன்னும் நினைவில் இருக்கின்றன. நான் நாடாளுமன்றத் தொகுதியிலே போட்டியிட்டபோது எனக்கு ஆதரவு தேடி வேலூர் தொகுதிக்கு அவர்கள் வந்து, மூன்று நாட்கள் பல்வேறு கூட்டங்களிலே பேசினார்கள். ஒரு குழந்தையைப் போல, அவருடைய சொந்த மகனைப் போல என்னை அவர்கள் ஏற்றுக்கொண்டு, அவர் சென்ற எல்லா இடங்களுக்கும் என்னை அழைத்துச் சென்று, என்னை அறிமுகப்படுத்தி, நானே பல இடங்களிலே சிலிர்த்துப் போகக்கூடிய அளவுக்கு என்னைப் பற்றிப் பெருமையாகப் பேசி ஆதரவு தேடிய அந்தப் பெருந்தன்மையை என்றுமே மறக்க முடியாது.

ஒரு சமயம் ஒரு பெரியவர் என்னைப் பற்றி மாறுபட்ட ஒரு கருத்து, ஏற்கனவே நான் தொடர்பு கொள்ளாத காரணத்தினாலே— கொண்டு இருக்கிறார்கள் என்று அறிந்துவிட்ட பெரியவர் அவர்கள் அவர்களிடத்திலே என்னை அழைத்துச் செல்லும்போது, என்னை வெளியிலேயே அமரச் செய்துவிட்டு, உள்ளே அவர் சென்று, பிறகு அவர் கொண்டு இருந்த கருத்துக்களை மாற்றுவதற்குரிய கருத்துக்களை எல்லாம் என்னைப் பற்றிப் பேசி, பிறகு அழைத்து என்னை அறிமுகம் படுத்தியபோது, அந்தப் பெரியவருடைய ஆசியும், ஆதரவும் எனக்குக் கிடைத்தது. பிறகு, வெளியே காரிலே சென்று கொண்டிருக்கும்போது நான் அதைப்பற்றி என்ன நினைப்பேனோ என்று அவர் கருதினாரோ, என்னவோ, அவர் சொல்லிக் காட்டினார்; 'ஏற்கனவே உங்களைப்பற்றி வேறு விதமான கருத்து கொண்ட காரணத்தினாலே திடீரென்று அழைத்துச் சென்றால், உங்கள் நேருக்கு நேராக அவர் வாயிலிருந்து சில கருத்துக்கள் வந்து, உங்கள் மனம் நோவினை அடையுமே என்பதற்காகத்தான் நானே முதலிலே சென்று,





பிறகு உங்களை அழைத்தேன், தவறாக எண்ணாதீர்கள்' என்று சொன்னார்கள். ஆக, மற்றவர்களுடைய மனம் புண்பட்டுவிடக் கூடாது என்பதிலே எத்தனை கவனம் அவர்கள் கொண்டு இருந்தார்கள் என்பதை அந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டியது.

அவர் உடல் தளர்ந்து இருந்த நேரத்தில், பகல் உணவு அருந்திவிட்டு, அவருக்கு படுக்கைக்கு ஓய்வு பெறுவதற்காக ஏற்பாடு செய்யும்போது, நானும் அப்படி ஓய்வு பெறவேண்டும் என்று வற்புறுத்தி, எனக்கும் அந்த வசதிகளை எல்லாம் தேடித் தந்து, அந்த மூன்று நாட்களும் அவர்கள் நடந்துகொண்ட முறை எனது வாழ்நாளிலே மறக்க முடியாத, பெரியவர்கள் என்றால் எப்படி இருப்பார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டான ஒரு பட்டறிவை எனக்குத் தந்தது என்று சொல்லவேண்டும்.

அவர்கள் முதலாவதாக அமைச்சராக இருந்த 1946-52 கால கட்டத்தில் இந்த அவையில் பிரதான எதிர்க்கட்சியாக என்னுடைய அரசியல் கட்சி, முஸ்லீம் லீக் விளங்கி வந்தது. அதைப்பற்றி பத்தாண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தினுடைய பிரபல வாரப் பத்திரிகை ஒன்றில் கட்டுரை எழுதிய அந்த மூதறிஞர் அவர்கள் ஒரு சிறந்த எதிர்க்கட்சிக்கு இருக்க வேண்டிய எல்லாவிதமான இலக்கணத்தோடு, கண்ணியமாக செயல்பட்டது முஸ்லீம் லீக் கட்சி என்று குறித்துக் காட்டினார்கள். ஆக, கருத்து மாற்றம் கொண்டவர்களையும் மதிப்பதிலே அவர்கள் எவ்வளவு சிறந்த பேருள்ளம் கொண்டவர்களாக இருந்தவர்கள் என்பதை அந்த எழுத்துக்கள் நமக்கு நிரூபிக்கின்றன. அப்படிப்பட்ட அனுபவம் பெற்ற ஒரு பெருந்தலைவரை தமிழகம் இழந்துவிட்டிருக்கிறது. முன்னவர் முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தோடு நம்முடைய இந்த உணர்வை அவர்கள் குடும்பத்தினருக்கு எடுத்துரைக்க வேண்டும் என்ற அந்தக் கருத்தோடு நான் ஒன்றுபட்டு அமைகிறேன்.

திரு குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அவை முன்னவர், முன்னாள் முதலமைச்சர் மறைவிற்குக் கொண்டு வந்திருக்கிற இரங்கல் தீர்மானத்தில் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸினுடைய உணர்வையும் இணைத்துக்கொள்வதற்காக நான் எழுந்து நிற்கின்றேன்.

திரு. பக்தவத்சலம் என்று சொல்லுகின்ற பெயருக்கு ஏற்பவே, அதில் முன் பகுதி சுட்டிக்காட்டுகின்ற 'பக்த' என்று சொல்கின்ற வகையில் சிறந்த பக்தராகவே இருந்து கொண்டிருந்தார். பெயருக்கு ஏற்ப செயல் முறைகள் சிலருக்குத்தான் அமையும். அப்படிப் பெயரும், வாழ்க்கையிலே நடந்த சம்பவங்களும் இணைந்து, பின்னிப் பிணைந்த ஒருமைப்பட்ட ஒரு வாழ்வை பெருமையோடு நடத்திய ஒரு பெருமகனார் திரு. பக்தவத்சலனார் அவர்கள். அவர் சிறந்த தேச பக்தராகவும்,

தெய்வ பக்தராகவும் இருந்தார். தேச பக்தர் என்று சொல்லுகின்ற நேரத்தில், ஒரு காலத்திலே அவருடைய குடும்பம் எப்படி இருந்தது என்பதைப்பற்றி, அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படிக்கின்ற போது, மிகச் சீரும், சிறப்புமாக, செல்வம் கொழிக்கின்ற ஒரு சீமான் குடும்பமாக இருந்து கொண்டிருந்தது என்பதுதான் வரலாறு.

மீஞ்சூரிலே அவர் குடும்பம் இருந்த காரணத்தினாலே மீஞ்சூர் பக்தவத்சலனார் என்று அழைக்கப்பட்டாலும் அவர் பிறந்தது நசரத்பேட்டைதான். நசரத்பேட்டையிலே இருந்த அந்தக் குடும்பமும் செல்வம் மிக்க குடும்பமாக இருந்த காரணத்தினாலே அவர்கள் நசரத்பேட்டையிலிருந்து சென்னைக்கு வந்தால் அந்தக் காலத்திலே இருந்த கிழக்கிந்தியக் கம்பெனியார், மரியாதை செய்யும் பொருட்டு, குண்டுகளை வெடிப்பார்களாம். குண்டுகளைப் போட்டு நசரத்பேட்டை முதலியார் குடும்பம்' வருகிறது என்று சொல்லுகின்ற அளவுக்கு வரவேற்பு குண்டுகளை வெடித்த, அந்த வெள்ளை கிழக்கிந்தியக் கம்பெனியினுடைய தொடர்ச்சியாக வந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்தே ஒரு காலத்திலே போராட முன் வந்தார். ஆக குண்டு போட்டு வரவேற்றதாயிற்றே என்று எண்ணாமல் குண்டு வெடித்தாலும் நான் அதை எதிர்த்துப் போரிடுவேன் என்று சொல்லுகின்ற ஒரு பெரிய போராட்ட தளபதியாக இருந்ததற்குக் காரணம் அவருடைய தேச பக்தி. அந்தத் தேச பக்தியின் காரணத்தினாலே எத்தனையோ சிறை வாசங்களை அவர் அனுபவித்து இருக்கின்றார். 'அம்ரோட்டி' என்று சொல்லுகின்ற அமராவதி சிறைச்சாலையிலே எல்லாம் அவர் இருந்தபோது எழுதுகிறார். இரவு 8 மணி நேரத்திற்குக்கூட வெப்பம் 110 டிகிரி இருக்குமாம். கட்டில் கால்களைச் சுற்றி துணிகளைக் கட்டிக்கொண்டு, ஈரக் காற்று கொஞ்சமாவது வரட்டுமே என்று சொல்லுகின்ற அளவுக்கு அந்தக் கடுமையான வெப்பம் வீசுகின்ற இடத்திலே கூட அவர் சிறை வாசத்தை அனுபவித்தவர்.

தன்னுடைய குடும்பத்திலே பிறக்கின்ற குழந்தைகள், தன் குழந்தைகள் எல்லோருக்கும், தேச பக்தியை நினைவூட்டுகின்ற வகையிலே பெயர்களைச் சூட்டுவது அவர்களுடைய வழக்கம். 'சித்தரஞ்சன்' என்று முதல் குழந்தைக்கு ஆண் குழந்தைக்கு— பெயர்; 'சித்தரஞ்சன் தாஸ்' என்று சொல்லுகின்ற மிகப் பெரிய தேச பக்தன் நினைவாக சூட்டப்பட்ட பெயர். 'சரோஜினி' என்று சொல்லுகின்ற சரோஜினி வரதப்பன் அவர்களை எல்லோரும் கேள்விப்பட்டிருக்கிறோம். அந்த சரோஜினி எப்படி காஞ்சி மாநாட்டிற்கு கவிக்குயில் சரோஜினி தேவி வந்ததோடு மட்டும் அல்லாமல் பக்தவத்சலனார் வீட்டிற்கே வந்திருந்த நினைவாக, கவிக்குயில் சரோஜினி தேவியினுடைய நினைவாக தனது மகளுக்கு சரோஜினி என்ற பெயரை வைத்திருக்கின்றார். அடுத்த பெண்ணினுடைய பெயராக ருக்மணி என்று இருப்பதைப்



பற்றி நான் சரோஜினி வரதப்பனிடம் கேட்டேன்; அதுகூட தேச பக்தி நினைவாக வைத்ததுதானா என்று கேட்ட நேரத்தில், அதற்கு மட்டும் ஒரு விதிவிலக்கு சொன்னார். என்ன விதிவிலக்கு என்றால், பக்தவத்சலனாரும் அவருடைய மாமா முத்துலிங்க முதலியாரும் வேலூரில், சிறைச்சாலையில் இருக்கின்ற நேரத்தில் முத்துலிங்க முதலியாருடைய மனைவியார் காலமாகி விட்டார் என்ற செய்தி போனதாம். அந்தச் செய்தி போய் நீங்கள் இரண்டு பேரும் பரோலில் வரலாம் என்று சொன்ன நேரத்தில்கூட வரமாட்டேன் என்று மறுத்து உள்ளேயே இருந்தாராம்; 'அது காந்திய சித்தாந்தத்துக்கு மாறுபட்டது. எனவே வரமாட்டேன்' என்று சிறையிலேயே இருந்தாராம். காலையிலே சாவு செய்தி வந்த நேரத்தில் வரமாட்டேன் என்று இருந்தவர்களுக்கு மாலையிலே இன்னொரு செய்தி வந்ததாம், பக்தவத்சலத்துக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறதென்று. உடனே காலையிலே இறந்த அந்த முத்துலிங்க முதலியாருடைய மனைவியின் பெயரை வைப்போம் என்று சொல்லி ருக்மணி என்ற பெயரை வைத்தார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆக, ஒரு பெயர் வைப்பதற்கும்கூட நன்றி உணர்வோடு செய்து இருக்கிறார்கள்; தேச பக்தியோடும் செய்திருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கின்றோம்.

பக்தவத்சலனார் வாழ்க்கையிலே நடந்த சம்பவங்களையெல்லாம் எடுத்துச் சொல்வதற்காக இந்த நேரத்தை நான் எடுத்துக்கொள்ளக்கூடாது என்றாலும், சில செய்திகளை நாம் இங்கே நினைவுபடுத்துவதற்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அவரைப் பொறுத்தவரையிலே எனக்கு நீண்ட நெடுங்காலமாக பழக்கம் என்று சொல்லமுடியவில்லை என்றாலும் ஒன்றுபட்டிருந்த காங்கிரஸ் இளைஞர் பிரிவின் தலைவனாக வந்த நேரத்திலிருந்து அவரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது அவர் முதலமைச்சராக இருந்தார். ஊர்வலம் என்று போய்க் கொண்டிருந்ததை மாற்றி இளைஞர் காங்கிரஸினுடைய சார்பிலே அதனை நடத்துகின்றபோது இளைஞர் பேரணி என்றும் ''துடிக்கும் இரத்தமே தோள் தட்டி வா'' என்றும் சொல்லுகின்ற புதிய சொற்களோடு நாங்கள் ஆரம்பித்த நேரத்தில் அவர்கள் எந்தெந்த வகையில் எல்லாம் பாராட்டினார்கள் என்பது எனக்கு இன்றும் பசுமையாக நினைவு இருக்கிறது.

திரு. பக்தவத்சலனார் அவர்களைப் பாராட்டுகின்றபோது இன்னொன்றையும் நாம் மனதிலே வைத்துக்கொள்ளவேண்டும். அவர் பழைய செய்திகளையெல்லாம் சில நேரங்களிலே, கூட்டங்களிலே சொல்லுகின்றபோது ஏதோ வரலாற்றைப் படிப்பதுபோல் இருக்கும். ''மியூசிக் அகாடமி''-யினுடைய வரலாற்றைப்பற்றி ஒரு கூட்டத்திலே அவர் பேசுகிறபோது சொன்னார். ''30 ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர்

[திரு. குமரி அனந்தன்] [1987 பிப்ரவரி 28

அன்சாரி அவர்களுடைய தலைமையிலே ஒரு பெரிய அகில
இந்திய காங்கிரஸ் மகாநாடு சென்னையிலே நடந்தது. அப்
பொழுதெல்லாம் காங்கிரஸ் மகாநாடு நடக்கின்றபோது இன்னும்
பிற மகாநாடுகளையும் சேர்த்து நடத்துவோம். அப்படி
நடத்துகின்ற நேரத்தில் அகில இந்திய இசை மகாநாடு ஒன்று
நடத்தினோம். அந்த அகில இந்திய இசை மகாநாடு நடத்து
கின்ற நேரத்திலே கூடி இருந்தவர்கள் எடுத்த முடிவுதான்
'மியூசிக் அகாடமி' ஆரம்பிப்பதற்கு மூல காரணமாக இருந்தது''
என்று அவர்கள் சொன்னதை நான் இப்பொழுதும் மனதிலே
வைத்துக்கொண்டிருக்கிறேன். எனவே மியூசிக் அகாடமி பக்கத்
திலே போகிறபொழுது இது காங்கிரஸ் மகா சபைக் கூட்டம்
நடந்த நேரத்திலே தோற்றுவிக்கப்பட்ட ஒன்று என்று
சொல்லுகின்ற நினைவு இன்று பலருக்குத் தெரியாத நிலை
யிருந்தாலும்கூட அவரைப் போன்றவர்களுடைய பேச்சைக்
கேட்பதன்மூலம் நாம் இந்த வரலாற்றைத் தெரிந்துகொள்கின்ற
வாய்ப்பு கிடைத்திருக்கின்றது.

இன்னும், அவருடைய வாழ்க்கையைப் பார்க்கின்றபோது
அவர் எத்தனை தடவை அமைச்சராக இருந்தார் என்பதைவிட
அவர் எப்படி அமைச்சர் ஆனார் என்பதையும் நாம் பார்க்க
வேண்டியிருக்கிறது. 1949 ஆவது ஆண்டு ஓமந்தூரார் போன
தற்குப் பின்னால் அடுத்த முதலமைச்சர் அவர் என்றே ஒரு
சிந்தனை இருந்தது. மாலை நேரத்திலே அவர் என்ற சிந்தனை
இருந்து, மறுநாள் காலை நேரத்திலே குமாரசாமி ராஜா என்று
வந்தபோதுகூட வெறுத்து ஒதுக்கி அவர் எந்தவிதமான சொற்
களையும் சொல்லாமல், விரக்தி அடையாமல் அமைதியாக
இருந்தார்.

அதைப் போலவே, இராஜாஜி அவர்களுடைய மந்திரி
சபையிலே கோபால் ரெட்டி என்று சொல்லுகின்ற மிக இளைஞர்
ஒருவர் மந்திரியாக இருந்தபோது அவருக்கு பார்லிமெண்டரி
செக்ரட்டரியாக இருந்ததை இவர் வெறுத்து ஒதுக்கவில்லை.
இவர் அனுபவசாலியாக இருந்தாலும்கூட,
இளைஞராக இருக்கிறாரே அமைச்சர், நாம் மேலானவர்
அல்லவோ இருக்கிறோம் என்று நினைக்காமல், அவருக்குக் கீழே
கட்டுப்பாட்டை கருதி இவர் அப்படியே கட்சியினுடைய
பார்க்கின்றோம். இருந்ததை நாம்

இன்னும் ஒன்றைப் பார்க்கின்றபோது
ஜனநாயகம் நிலவிக்கொண்டிருந்த மிகப் பெரிய
என்னென்ன வகையிலே செயல்பட்டார் என்பதை நாம் காரணத்தினாலே அவர்
கிறோம். யார், யார் முதலமைச்சர்களாக வருவதற்குப் போட்டி பார்க்
யிடுகிறார்களோ அவர்களையெல்லாம் எதிர்த்தே, வாக்களித்
திருக்கிறார் திரு. பக்தவத்சலனார். முதலமைச்சராகப் போட்டி
யிட்டவர் யாரையும் அவர் ஆதரித்து அவர்கள் ஜெயித்ததில்லை.



1987 பிப்ரவரி 28] [திரு. குமரி அனந்தன்]

முதலமைச்சர்களாக போட்டியிடுபவர்களையெல்லாம் எதிர்த்து
தான் அவர் வாக்கு அளிப்பார். இருந்தாலும் அவர்கள்
முதலமைச்சர்களாக வந்த பிறகும் திரு. பக்தவத்சலனார்
அவர்களை மந்திரி சபையிலே சேர்த்துக்கொள்வார்கள்.
அதற்குக் காரணம் என்னவென்றால் அவருடைய நிர்வாகத்
திறமை. இதுதான் அவருடைய வாழ்க்கையின் மிக முக்கியமான
ஒன்றாகக் கருதப்பட வேண்டும். கான்ட்ரவர்சி இல்லாமல் ஒரு
வருடைய ஆற்றலை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்
என்பதற்கு இது ஒரு அடையாளம்.

(முற்பகல் 11-00)

அதைப் போலவே அவர் தமிழகத்தில் கோயில்களை
யெல்லாம் சீர்திருத்தி செப்பனிட்டு பெரிய பெரிய திருவிழாக்
களையும் நடத்தினார், கும்பாபிஷேகங்களையும் நடத்தினார்
என்பதையும் நாம் பார்க்கிறோம். அதிலும் ஒன்று—பழனி
திருக்கோயிலில் உபரியாக இருந்த பணத்தை எடுத்து
கல்லூரிகளைத் தொடங்கியது மட்டுமல்லாமல் நாதஸ்வரக்
கல்லூரி ஒன்றையும் தொடங்கினார். அந்த அளவுக்கு, கலைக்கு
அவர் முக்கியத்துவம் கொடுத்தார். அப்போது ஒரு பெரிய
பிரச்சினையேகூட எழுந்தது. இந்துக் கோயில்களிலிருந்து நிதி
எடுத்துத் தொடங்கப்படுகிற ஆஸ்பத்திரிகளிலும், அனாதை
ஆஸ்ரமங்களிலும் பிற மதத்தைச் சார்ந்தவர்களை அனுமதிக்
கலாமா என்ற கேள்வி எழுந்தபோது அவர் அதற்கும் ஆணித்தர
மாகப் பதில சொன்னார் ஆண்டவன் மதம் பார்ப்பதில்லை.
அவனுக்கு மத பேதம் இல்லை என்று சொல்லி இந்துக் கோயில்
களிலிருந்து பணத்தை எடுத்து ஆஸ்பத்திரிகள் தொடங்கினாலும்,
ஒருவன் நோய் என்று வந்தால் அவன் எந்த மதத்தைச்
சேர்ந்தவன் என்பதைப் பார்க்காமல் நோய்க்கு மருந்து அளிப்
பதுதான் நம்முடைய கடமை, இதன் காரணமாகத்தான்
ஆண்டவனே கூட வைத்தீஸ்வரன் என்று பெயர் வைத்துக்
கொண்டு எல்லோருக்கும் வைத்தியம் பார்க்க வேண்டியவனாக
இருக்கிறான் என்று ஆணித்தரமாகப் பதில் சொன்னார், அந்த
அளவுக்கு. சமயத்தில் சமரச நோக்கம் அவரிடம் இருந்தது
என்பதற்கு இது அடையாளமாக இருந்தது.

அவர் 90 வயது வாழ்ந்தார் என்று சொல்லுகிறோம். அவர்
பிறந்தபோது காங்கிரசுக்கு 12 வயது. அவர் பிறந்த நேரத்தில்
நேரு பெருமகனாருக்கு 8 வயது. அவர் பிறந்த நேரத்தில்
காங்கிரசுக்கு 12 வயது என்றால் ஏறத்தாழ அவருடைய
வாழ்க்கை காங்கிரஸ் வாழ்க்கையோடு ஒன்றி இருந்தது என்ற
காரணத்தால் நான் அதை இங்கே குறிப்பிடுகிறேன். அப்படிப்
பட்ட பெருமகனார் எதையெல்லாம் சாதாரணமாக எடுத்துக்
கொள்வார் என்பதற்குப் பலவற்றை இங்கே குறிப்பிட்டார்கள்.

[திரு. குமரி அனந்தன்] [1987 பிப்ரவரி 28

பரிதாபாத் காங்கிரஸ் மாநாட்டிற்கு நான் சென்றிருந்தேன்.
அங்கே மாநாட்டில் நான் நின்றுகொண்டிருந்தேன். திடீரென்று
மாநாட்டுப் பந்தலில் தீப்பிடித்துக்கொண்டது. கூடியிருந்தவர்கள்
அங்குமிங்குமாக விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்கள். அதில்
யாரோ சிலர் இவரை இடித்துக் கீழே தள்ளிவிட்டார்கள்.
அதன் காரணமாக திரு. பக்தவத்சலம் அவர்களின் கை முறிந்து
விட்டது. நாங்கள், கூடி இருந்தவர்கள் அதைப் பார்த்துவிட்டு,
அவரை எழுப்பிவிட்டு, தூக்கினோம். அப்போதும்கூட அதை
அவர் மிக மிகச் சாதாரணமாக எடுத்துக் கொண்டார். "வலி,
வலி" என்றோ "ஐயோ, ஐயோ" என்றோ எந்தவிதமான
சொல்லையும் அவர் சொல்லவில்லை. அந்த அளவுக்கு மிக
அமைதியாக அதை எடுத்துக் கொண்டார். அதைத் தாங்குகிற
உடல் வலிமையும், உள்ள வலிமையும் அவருக்கு இருந்தது.

அதைப் போலவே இன்னொன்றையும் நாம் அவரிடம்
பார்க்க முடியும். எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் கண்டிப்பாக
வந்துவிடுவார். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. கடந்த
குடியரசு தினத்தன்று குடியரசு தின விழா நிகழ்ச்சியை
முடித்துக் கொண்டு நான் அவரைப் பார்க்க அவருடைய
வீட்டிற்குச் சென்றிருந்தேன். முக்கியமான ஒன்றைக் குறித்து
அவருடைய ஆலோசனையைப் பெற அவரிடம் சென்றிருந்
தேன். "நான் வந்திருக்கிறேன், இது சம்பந்தமாக ஆலோசனை
பெற வந்திருக்கிறேன்" என்று சொல்லியனுப்பிய உடனே
படுத்துக் கொண்டிருந்தவர் எழுந்து உட்கார்ந்து கொண்டார்.
அப்போது அவர் என்னிடம் காட்டிய அன்பும் அவர் கொடுத்த
ஊக்கமும் இன்றும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றன.
அதோடு மட்டும் அவர் நிற்கவில்லை. "நான் மிகப் பெரிய
தலைவர் ஒருவருக்குக் கடிதம் எழுதப் போகிறேன், அதில்
உன்னைப்பற்றி இன்னின்ன வாசகம் எழுதப் போகிறேன்"
என்றும் என்னிடம் சொன்னார். பிறகு "நாளைக்கு வா"
என்றார். நான் "மாலையில் வரட்டுமா" என்றேன். "இல்லை,
மாலையில் நான் குடியரசு தின விழாவிற்குப் போகிறேன்" என்று
சொன்னார். நான் அங்கே போய்ப் பார்க்கிறேன். அவர்
விழாவில் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். ஆக அவர் முற்றிய
முதிர்ந்த கனியாக இருந்தாலும் தளிர் போன்ற ஒருவரையும்
கூடத் தழுவி ஆசீர்வதிக்கிற மனப்பான்மை கொண்டிருந்தார்
என்பதை எண்ணிப் பார்க்கிறபோது மனது நெகிழ்கிறது.

அவர் இன்னும் கொஞ்ச நாட்கள் நம்மிடம் இருந்திருக்
கலாம். காரணம் ஏதாவது ஐயப்பாடு என்று இருந்தால் ஓடிப்
போய் அவரிடம் அந்த ஐயப்பாட்டைப் பற்றிக் கேட்கிற
அளவுக்கு, ஒரு லெக்சிகனாக, ஒரு ரெஃபரன்ஸ் லைப்ரரியைப்
போல் இருந்து கொண்டிருந்தார் அந்தப் பெருமகனார்
என்பதையும் நாம் இன்றைக்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.
அவரை இன்றைக்கு இழந்திருக்கின்றோம் என்று எண்ணும்
போது வேதனை தருவதாக இருக்கிறது. அவருடைய நினை
வைப் போற்றுகிற வகையில் சட்டப் பேரவையில் அவருடைய



1987 பிப்ரவரி 28] [திரு. குமரி அனந்தன்]

திருவுருவப்படத்தை வைக்க வேண்டும் என்பதும் அவருக்கு
நினைவு மண்டபம் கட்ட வேண்டும் என்பதும் நல்ல செய்தி
களாக இருக்கின்றன. இந்த அரசு அவரைப் போற்றும்,
அவருடைய நினைவைப் போற்றும் என்பதில் எந்தவித ஐயமும்
எனக்கில்லை.

அவர் எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டு செய்தாலும்
அந்தக் காரியத்தைத் தேச பக்தியோடும், தெய்வ பக்தியோடும்
செய்து முடித்தார். 1962-ஆம் ஆண்டு திரு. காமராஜர்
அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது முதன் முதலாக
பாரதியாருக்கு விழா நடத்த வேண்டும், அதையும் அரசு
சார்பில் நடத்த வேண்டும் என்று ஒரு குழு அமைக்கப்பட்ட
போது அதற்கு திரு. பக்தவத்சலம் அவர்களே பொறுப்பேற்றுக்
கொண்டு செய்து முடித்தார்கள். அந்த அளவிற்கு எல்லா
வற்றிலும், தமிழ் பக்தராக, தேச பக்தராக, தெய்வ பக்தராக
திகழ்ந்த ஒரு திருமகனார் இன்று நம்மிடையே இல்லை; அவரை
நம் மத்தியில் வைத்துக் கொள்ள முடியவில்லை. இறைவன்
அவரை அழைத்துக் கொண்டான் என்றாலும், அவர் விட்டுச்
சென்ற இலட்சியங்களைப் பின்பற்றிச் செல்லும் வாய்ப்பு இருக்
கிறது. எனவே அவருடைய நினைவைப் போற்றி அவருடைய
ஆத்மா சாந்தியடைய அவருக்கு அஞ்சலி செலுத்தக் கடமைப்
பட்டிருக்கிறோம் என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய அவையின் முன்னவர் டாக்டர் நாவலர்
அவர்களால் கொண்டு வரப்பட்ட தமிழ்த் திருநாட்டினுடைய
முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களுடைய
மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தோடு நான் சார்ந்திருக்கிற
அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில்
என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பக்தவத்சலனார் அவர்கள் தனது இளம் வயதிலேயே
பெரிய போராட்ட வீரராகவும், பின்பு தேசியவாதியாகவும்
திகழ்ந்தார். அவர் செல்வக் குடும்பத்தில் பிறந்தாலும்,
தன்னுடைய பட்டப் படிப்புக் காலத்திலேயே காங்கிரஸ்
பேரியக்கத்துடன் தன்னை இணைத்துக்கொண்டு தேசியத்
தலைவராகத் திகழ்ந்தார். அவர் எடுக்கிற முடிவுகளில் சாதக,
பாதகம் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் தைரியமாகச்
சந்திக்கக்கூடியவர் திரு. பக்தவத்சலனார் அவர்கள்.

குறிப்பாக நான் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்
கிறேன். என்னுடைய தொகுதியான முதுகுளத்தூரில் ஒரு இனக்
கலவரம் நடந்தபோது எங்களுடைய இயக்கத் தலைவர்
திரு. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மீது கொலைக்
குற்றத்தைச் சாட்டினார் என்பதைச் சொல்லாமல் இருக்க
முடியாது. அதே போன்று 1965-ல் இந்தி எதிர்ப்பு போராட்டம்

[திரு. கே. பூத்துவேல்] [1987 பிப்ரவரி 28

நடந்து கொண்டிருந்தபோது, திரு. பக்தவத்சலனார் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே அவர் அதை தன்னுடைய பலத்தால் அடக்க, ஒடுக்க வேண்டும் என்று மிகவும் விருப்பத்தோடு செயல்பட்டார் என்பதை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலனார் அவர்கள் 90 ஆண்டுக் காலம் தமிழகத்திலே வாழ்ந்து தமிழ் நாட்டிற்கும், இந்தியத் திருநாட்டிற்கும் அரிய பல தொண்டு களைச் செய்திருக்கிறார். அவருடைய ஆன்மா சாந்தியடைய நான் சார்ந்துள்ள பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர், பெரியவர் திரு. பக்தவத்சலனார் அவர்களுடைய மறைவுக்காக அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தினை நான் சார்ந்துள்ள இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பாக வழி மொழிந்து, சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மறைந்த பெரியவர், முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலனார் அவர்கள் மிகச் சிறந்த நிர்வாகியாக இருந்து செயல்பட்டவர். தனது கொள்கையில் பிடிவாதமும், தீவிர மனப்போக்கும் கொண்டவர். 90 வயது வரை அரசியலில், பொது வாழ்வில் மிகுந்த அக்கறையோடு இருந்து எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு தனது கருத்துக்களைத் துணிச்சலாகச் சொல்லிக் கொண்டிருந்தவர். எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்தக் கட்டுப்பாட்டுக்கும் தன்னை அடக்கிக் கொள்ளாமல் தன்னுடைய கருத்துக்களைத் துணிச்சலாகச் சொல்லிக் கொண்டிருந்தவர். 1977-ல் தமிழக முதல்வராக புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றபோது "தர்மம் வெல்லும்" என்று சொல்லி துணிந்து தன்னுடைய வாழ்த்துச் செய்தியை அனுப்பியவர் அவர்.

அவர் முதல்வராக இருந்தபோது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சென்னையிலும், சென்னையின் சுற்றுப்புறங்களிலும் மற்றும் பல்வேறு பகுதிகளிலும் அரசு புறம்போக்கு நிலங்களை இலவச மாக வீட்டுமனைப் பட்டாவாகவும், பயிர் செய்வதற்காகவும் வழங்கியவர் ஆவார். அம்பத்தூர், மீஞ்சூர், எண்ணூர் போன்ற சென்னையைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் எல்லாம் பெருமளவிற்குத் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளை உருவாக்க அன்றைக்கு வழிவகுத்தவர் அவர்.

எங்களுடைய இயக்கத்தின் மறைந்த பெருந்தலைவர், இந்திய குடியரசுக் கட்சியின் தலைவர் தந்தை திரு. சிவராஜ் அவர்களின் மிக நெருங்கிய நண்பராக விளங்கியவர். அவருடைய



1987 பிப்ரவரி 28] [திரு. கு. தமிழரசன்]

குடும்பத்தோடு எந்த அளவிற்கு நெருக்கமாக இருந்தார் என்பதைக் காட்ட ஒன்றைக் குறிப்பிடுகிறேன். எங்கள் தலைவர் திரு. சிவராஜ் அவர்களின் மனைவியார் அன்னை மீனாம்பாள் அவர்களை காங்கிரஸ் கட்சியிலே இணைத்துக்கொள்கிற அளவிற்கு நெருக்கமாக இருந்தார், திரு. பக்தவத்சலனார் அவர்கள். காங்கிரஸ் கட்சியிலே முதன் முறையாக தாழ்த்தப்பட்ட ஒருவரைப் பொதுத் தொகுதியிலே நிற்க வைக்கும் அளவிற்குச் செய்தார். ஆயிரம் விளக்குத் தொகுதியில் எங்கள் தலைவருடைய மனைவியார் அன்னை மீனாம்பாள் சிவராஜ் அவர்களைப் போட்டியிடச் செய்தார். அந்த அளவிற்கு திரு. சிவராஜ் அவர்களின் குடும்பத்தோடு மிக நெருங்கியிருந்தவர். அவருடைய மறைவுக்காக, அவருடைய குடும்பத்திற்கு எங்களுடைய பேரியக்கத்தின் சார்பாக, இந்திய குடியரசுக் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. கை. பாலசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய முன்னாள் முதலமைச்சர், பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்கள் மறைவு குறித்து பரிவும் தெரிவித்து பேரவையில் முன்னவர் இரங்கலும், அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை வழிமொழிந்து சில கருத்துக்களைச் சொல்ல நிற்கிறேன்.

பாரத மாதாவின் கைகளிலும், கால்களிலும் பூட்டப் பட்டிருந்த அடிமை விலங்குகளை அடித்து உடைத்து அகற்ற அணி திரண்டு வந்த பாரத மாதாவின் சுதந்திர போராட்டப் படையின் வீரரும், பல்லாண்டு அரசியல் அனுபவம் பெற்றவரும், பல்வேறு பொறுப்புகளில் இருந்து இந்த நாட்டு மக்களுக்குச் சிரும, சிறப்புமாகப் பணியாற்றியவருமான பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்களுடைய மறைவுக்கு எங்களுடைய இந்து தேச இயக்கத்தின் சார்பாக பரிவையும், இரங்கலையும் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மற்ற கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு என்னுடைய இரங்கலையும் இணைத்துக்கொள்கிறேன். இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப் பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

[1987 பிப்ரவரி 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த பெரியவர் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் ஒத்திவைக்கப்பெறுகின்றன.

நாளை மறுநாள் (2–3–1987) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 11–11 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

### 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29–9–1986 ஆம் நாளிட்ட 984 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

2. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 18–10–1986 ஆம் நாளிட்ட 1042 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

3. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு தமிழக அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தலைவர்கள் (அரசு இல்லங்களுக்கு அறை லன்கள் கொடுத்தல், ஏனைய வசதிகள் செய்து கொடுத்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொது (பணியாள ரமைப்பு-I) துறையின் 21–7–1986 ஆம் நாளிட்ட 14(8 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

4. சென்னை, இந்திய தொழில் மறு அமைப்புக் கழகத்தை வங்கியாக அறிவிப்பது குறித்து கூட்டுறவுத் துறையின் 24–10–1986 ஆம் நாளிட்ட 693 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1957) 22(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



987 பிப்ரவரி 28]

5. மைசூரில் நடைபெறும் தசரா பண்டிகையை முன்னிட்டு கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்திற்கு தற்காலிக அனுமதி வழங்குவது குறித்து உள் துறையின் 7–10–1986 ஆம் நாளிட்ட 2813 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

6. வறட்சிப் பகுதி திட்டத்தினை பாசனப் பகுதி திட்டமாக அறிவிப்பது குறித்து பொதுப் பணித்துறையின் 27–5–1985 ஆம் நாளிட்ட 795 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பாசன வேலைகள் (கண்ணி வாய்க்கால்கள் கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1959) 9(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

7. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 8–10–1986 ஆம் நாளிட்ட 1027 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

8. ராயல் பூடான் அரசினால் வெளியிடப்படும் பரிசுச் சீட்டுக்கு செலுத்தக்கூடிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 26–9–1986 ஆம் நாளிட்ட 966 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

9. திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொண்ட மதுரையைச் சேர்ந்த செயின்ட் பால் சுகாதார மையத்திற்குச் சொந்தமான TDY 5183 பதிவெண்ணுள்ள ஜீப் ஆம்புலென்ஸ் வண்டிக்கு சலுகை முறையில் வரி விதிப்பது மற்றும் TNY 6349 பதிவெண்ணுள்ள ஜீப்பிற்கு அளிக்கப்பட்டு வந்த சலுகை முறை வரிவிதிப் பினை ரத்து செய்வது குறித்து உள் துறையின் 27–9–1986 ஆம் நாளிட்ட 2717 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

10. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கிறித்துவ சமய வழி பாட்டு மது விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 17–10–1986 ஆம் நாளிட்ட 1317 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1987 பிப்ரவரி 28

11. சமையல் எண்ணெய்யல்லாத தயாரிப்புகளுக்கு சர்க்கரைப்பாகு கழிவு உபயோகப்படுத்துவதற்கான வரையறைகளை நீக்குவது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 28—10—1986 ஆம் நாளிட்ட 1377 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

12. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (அனுமதியின்றி குடியிருப்போரை வெளியேற்றல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 7—5—1986 ஆம் நாளிட்ட 619 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (அனுமதியின்று குடியிருப்போரை வெளியேற்றல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

13. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 10—11—1986 ஆம் நாளிட்ட 1125 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

14. தர்மபுரி மாவட்டத்திலுள்ள தர்மபுரி மாவட்ட கூழ் உற்பத்தியாளர்கள் பணிம தொழில் கூட்டுறவுச் சங்கத்தினரால் தயாரிக்கப்படும் ஜவ்வரிசி மற்றும் மரவள்ளிக் கிழங்கு கூழ்ற்கு விதிக்கக்கூடிய வரிகளை குறைப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 30—1—1986 ஆம் நாளிட்ட 1112 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

15. ரூபாய் 2 இலட்சத்திற்கு மிகாத விற்பனை அளவுள்ள விற்பனையாளர்களை மதிப்பீடு செய்ய உதவி வணிகவரி அலுவலர்களுக்கு அதிகாரமளிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 17—11—1986 ஆம் நாளிட்ட 1158 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].



1987 பிப்ரவரி 28]

16. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)]

17. தமிழ்நாடு மொபெட்ஸ் நிறுவனத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

18. தமிழ்நாடு மொபெட்ஸ் நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது. தமிழ், ஆங்கிலம்)]

19. தமிழ்நாடு மொபெட்ஸ் நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)]

20. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான மூன்றாம் ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

21. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கை. [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

1. 1987 ஆம் ஆண்டு பச்சையப்பன் அறக்கட்டளை (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 1/1987).

2. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 2/1987)

3. 1987 ஆம் ஆண்டு பகளைரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்ட (நிலங்களை கையகப்படுத்துதல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1987).

4. 1987 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 27 ஆம் தே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

## AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tinnelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11


© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

வெளியீடு 12-10-1987

Issued 12-10-1987

2956

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை மார்ச் 2, 1987—தொகுதி 32 எண்

Monday the 2nd March 1987—Volume 32 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3]

[Price R

## உள்ளடக்கம்.

2—3-1987


| | பக்கங்கள் |
|---|---|
| வினாக்கள்—விடைகள் : | 33—78 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | |
| 2. விதி 110-ன் கீழ் தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் அறிக்கை — சென்னையிலும் பிற மாவட்டங்களிலும் குடிநீர் விநியோகம் குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள். .. .. | 78—83 |
| 3. அறிவிப்புகள் : | |
| (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. | 94 |
| (ஆ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு 1987 .. .. | 86 |
| (இ) பேரவைக் கூட்ட நேரம் .. .. | 150 |
| 4. தகவல் கோரல் : | |
| (அ) கட்சியிலிருந்து நீக்கப்பெற்ற உறுப்பினர்கள் குறித்து .. .. .. | 84, 95 |
| (ஆ) விவசாயக் கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் குறித்து .. .. | 85 |
| 5. அறிக்கை அளித்தல் : | |
| பொது நிறுவனங்கள் குழு .. .. | 85 |
| 6. அரசினர் சட்ட முன் வடிவுகள் : | |
| (அ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன் வடிவு, 1987 .. .. | 96 |
| (ஆ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1987 .. | 86, 87 |

| | | |
|---|---|---|
| 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம் —விவாதம் : | | பக்கங்கள். |
| | டாக்டர் கே. சமரசம் | 87—163 |
| | திரு. கே. எம். தங்கமணி | 87—104 |
| | திரு. அ. ரகுமான்கான் | 104—111 |
| | திரு. செ. செம்மலை | 111—[illegible] |
| | திரு. கி. வெங்கடாசலம் | 131—143 |
| | டாக்டர் கே. பி. இராமலிங்கம் | 143—150 |
| | திரு. அ. ஆறுமுகம் | 151—158 |
| | | 159—163 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | | 163, 164 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, மார்ச் 2, திங்கட்கிழமை,

மாசி 18, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும் "

மனத்தின் தூய்மை, செய்யும் செயலின் தூய்மை ஆகிய இவ்விரண்டும் சேர்ந்த இனத்தின் தூய்மையைப் பொறுத்தே ஏற்படும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வினாக்கள் 15, 16, 17 மற்றும் 18 முதலில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

### சென்ற ஆண்டு தயாரித்த செய்திப் படங்கள்.

15—(*வினா எண். 3056)—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டில் தயாரிக்கப்பட்ட செய்திப் படங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) செலவான தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1984–85 நிதியாண்டில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 17 செய்திப் படங்களையும் 2 ரீல்கள் கொண்ட ஒரு செய்தி விளக்கப் படமும் தயாரித்துள்ளது.

(ஆ) இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 17,95,962.90 ஆகும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவை சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே திரைப்படங்கள் நாட்டின் வரலாற்றைக் காட்டுவதாகவும், சாதனைகளை விளக்குவதாகவும் அமைந்திருப்பது பாராட்டுதற்குரியதாக இருந்தாலும், விவசாயத் தொழிலாளர்களும் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களும் மற்றும் பொதுமக்களும் நன்மை பெறுகின்ற விதத்தில் இருக்கவேண்டும். இப்போது ஒரு விதையை வெளியிடுகின்ற விழாவைக் காட்டுகின்றார்களே தவிர அந்த விதையினுடைய நன்மை என்ன? அது எந்த வகையிலே பூச்சிகளையெல்லாம் தடுக்கிறது? எந்தெந்த வகையிலே அது வளர்க்கப்படவேண்டும் என்பது போன்ற செய்திப் படங்களை எடுத்து விவசாயப் பொதுமக்கள் மத்தியிலே காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் சம்பந்தப்பட்ட செய்திகளே வெளிவந்துகொண்டிருக்கின்ற நேரத்தில் அரசாங்கத்திடம் சில கோரிக்கைகளை வைத்து மற்ற கட்சியினரும் பொது அமைப்பினரும் நடத்துகின்ற நிகழ்ச்சிகளையும் செய்திப்படங்களாக எடுத்து வெளியிடுவதற்கு அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு நிச்சயம் ஆய்வு செய்து முடிவெடுக்கும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை செய்திப் படமாக தயாரிக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் இருந்ததா? அதனுடைய நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்குறிப்பு இருக்கின்றது. நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சே. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்திப்படங்கள் எடுத்து வெளியிடுவதே மக்களுக்கு செய்தி போய்ச் சேரவேண்டுமென்பதற்காகத்தான். ஆனால் இப்போது எடுக்கப்படுகின்ற செய்திப்படங்கள் திரைப்பட





அரங்குகளிலே மட்டுமே காட்டப்பட்டு வருகின்றன. மக்களுக்குச் செய்திகளைக் கொண்டுபோய் சேர்ப்பதற்கு டி.வி., அதாவது தொலைக்காட்சி ஒரு மீடியாவாக இருப்பதால், அப்படி எடுக்கப்படுகின்ற செய்திப்படங்களை தொலைக்காட்சியிலே வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசிடம் தொடர்பு கொண்டு அதைப்பற்றி பேசப்படும்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள திருக்கோயில்களுடைய பெருமைகளையும், சிறப்புகளையும் நாட்டு மக்களுக்கு விளக்குகின்ற வகையில் திரைப்படங்கள் எடுத்துக் காட்டப்படுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி சுற்றுலாத்துறை ஒவ்வொரு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் படம் பிடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர்கள் தங்கள் தங்கள் இலாக்காக்களைப் பற்றி பொதுமக்களுக்கு பேட்டி கொடுப்பதை தொலைக்காட்சியின் மூலமாக காணுகின்றோம்; மத்திய செய்தித் துறை நிகழ்ச்சியாக காணுகின்றோம். அதே போன்ற வாய்ப்பினை, தமிழக அமைச்சர், பொதுமக்கலைச் சந்தித்து மக்களுடைய குறைகளைக் கேட்கும் பேட்டிகளைக் காணுகின்ற வாய்ப்பினை அளிக்க இத்துறை முயற்சி செய்யுமா? அதைச் செய்துகொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பொதுமக்கள் அமைச்சர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்தக் கருத்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் பல்வேறு செய்திப்படங்கள் தயாரிக்கப்பட்டு ரூ. 18 லட்சம் வரையில் செலவிட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தீண்டாமை ஒழிப்பதற்காகவும், மதுவிலக்குக்காகவும், குடும்பக் கட்டுப்பாட்டுக்காகவும் படங்கள் தயாரிக்கப்படுகின்றனவா? அப்படியென்றால் அதன் மொத்த செலவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனியாக வினா போட்டால் ..தில் அளிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரை அரங்குகளில் செய்திப் படங்களைக் கட்டாயம் காட்ட வேண்டுமென அரசு உத்தரவு இருந்தும் சில தியேட்டர்களில் செய்திப் படங்களைக் காட்டுவது கிடையாது. அப்படி காட்டாத எத்தனை தியேட்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனி வினா போட வேண்டுமென தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞானக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்கிற முறையில், மூட நம்பிக்கைகளை எதிர்த்து படங்களைத் தயாரிக்க இந்த இலாகா முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி கருத்தரங்குகள் மற்றும் வேறு பேட்டிகள் இருந்தால், அதை அரசு செய்தி இலாகா ..டம் எடுத்து வெளியிடும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பொங்கல் தினத்தன்று துவக்கப்பட்ட கொடைக்கானல் டி. வி. நிலைய காட்சிகளைப் பொறுத்த வரையில் குறிப்பாக எங்களுடைய கீழத் தஞ்சை மாவட்டம் பூராவிலும் தெரியாத வகையில் ஓர் இருட்டடிப்பு நிலை இருக்கிறது. எனவே அதைப்போக்குவதற்காக கொடைக்கானலில் முன்னால் இருந்த துணை நிலையத்தை திருவாரூரில் துணை நிலையமாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கேட்கப்பட்ட வினாவுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் தெரிவிக்கிறேன். கொடைக்கானல் தொடர்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டபொழுதே தமிழ்நாட்டில் இது 70 சத விகிதம் இடம்தான் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. ஏற்கனவே இது தெரியாத இடங்களுக்கு தொலைக்காட்சி நிலையம் ஆய்வு செய்து தேவையான ஒளிபரப்பு நிலையங்களை ஏற்படுத்தும்.





தஞ்சை மாவட்டம் நாகையில் அனல்மின் நிலையம் அமைத்தல்.

16—(*வினா எண். 3907)—திரு. ப. ந. இராமச்சந்திரன் : திரு. இ. கிருஷ்ணமூர்த்தி; திரு. க. சோலைராசு: திரு. எஸ். இராசாராமன்; திரு. பொ. உத்திராபதி, மற்றும் திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் நாகையில் அனல்மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம். எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) மற்றும் (ஆ) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகளையும், பிற்பாடு 210 மெகாவாட் என்கின்ற ஐந்து பிரிவுகளையும், இறுதியில் 500 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு பிரிவுகளையும் கொண்ட ஒரு அனல் மின் நிலையத்தை நாகப்பட்டினத்தில் அமைப்பதற்கு அரசு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டிருக்கிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகப்பட்டினத்தில் 210, 210 மற்றும் 500 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையப் பணிகள் 3 கட்டத்தில் துவங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தக் கால கட்டத்தில் இந்தப் பணி முடிவடையும் ? இதனுடைய திட்ட மதிப்பீடுகள் எவ்வளவு ? விரைந்து தஞ்சை மாவட்டத்து விவசாயிகள் பலனடைவதற்காக இந்த அனல் மின் நிலையத்தைச் செயல்பட வைக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு ஆரம்பத்தில் 210 மெகாவாட் திறன் கொண்ட 3 பிரிவுகளுக்கும் ரூ. 630 கோடியாகவும், இறுதி கட்டமாக 210 மெகாவாட் திறன் கொண்ட 5 நிலையங்களுக்கும் மொத்தம் ரூ. 2,050 கோடியாகவும் செலவு மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு

[1987 மார்ச் 2

யூனிட் மின் உற்பத்திச் செலவு 75.2 காசு ஆகும். ரூபாய் 16.75 இலட்சம் செலவில் விரிவான ஆய்வு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 10 மாதங்களில் இந்த ஆய்வு முடிவடையும்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக உள்ளது. தஞ்சை மாவட்ட விவசாயிகள் முன்பு காவிரி நீரை நம்பிக் கொண்டிருந்தார்கள். இன்று வானத்தை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. நிலத்தடி நீரை எடுப்பதற்கு மின்சாரத்திற்காக மனு கொடுத்து ஆண்டுக் கணக்கிலே காத்துக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டம் ஓரளவுக்காவது தொழில் துறையில் முன்னேறு வதற்கும், விவசாயிகள் நிம்மதியாக வாழ்வதற்கும் அரசு தக்க நடவடிக்கை எடுக்கின்ற பொழுதிலே இந்த 10 மாதங் களிலே ஆய்வு முடிவடையும் என்று தெரிவித்துள்ளதைப் பொறுத்தவரையில் கடந்த 1984 ஆம் ஆண்டிலிருந்தே நாகையில் மின் நிலையம் அமைப்பது பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்களே. இன்னும் 10 மாதம் என்று சொல் வதற்கு மாறாக விரைவாக நடவடிக்கை எடுத்து அடுத்த ஆண்டிலாவது விவசாயிகளுக்கு உதவிகரமாக இந்தத் திட் டத்தை முடித்துத் தருவார்களா? ஆரம்பிக்க வேண்டாம். முடித்து வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆய்வு முடிக்கப் பட்டாலும் கூட நிலக்கரி அடிப்படையில் மின் நிலையம் துவக்கப்படுவதற்கு 48 மாதங்கள் ஆகும். அடுத்த நிதி யாண்டில் ஆய்வு செய்யப்பட்டு துவக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9—10)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுப் பணி 10 மாதங்களில் முடிவடைந்தாலும் அதற்குப்பிறகு மின் நிலையம் துவக்கப்படுவதற்கு 48 மாதங்கள் ஆகும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, 1984 ஆம் ஆண்டிலே சொல்லப்பட்டு, இப்பொழுது இந்தக் கேள்வி வந்திருக்கிறது. நான் கேட்டுக்கொள்வதெல் லாம், இப்பொழுது நாகப்பட்டினத்தில் அனல் மின்சார நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசாங்கத்திடம் அனுமதி கேட்கப்பட்டு, மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டு உள்ளதா? இந்த அனல் மின் நிலையத்திற்கு ஆகின்ற செலவுத் தொகையாக இப்பொழுது சொல்லப்பட்டிருக்கும் தொகையில் மத்திய அரசாங்கத்தின் பங்குத் தொகை



1987 மார்ச் 2]

எவ்வளவு அல்லது மத்திய சர்க்கார் முழுப் பங்குத் தொகை யையும் வழங்குகிறதா அல்லது மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் கூட்டாக இந்த மின் நிலையத்தைத் தொடங்கு வதற்கான ஆய்வு வேலைகள் நடைபெறுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்யப்பட்ட பிறகு இந்தத் திட்டம் மத்திய மின் துறை அதிகார நிலையத்திற்கு அனுப்பப்பட வேண்டும். அதன் அனுமதியைப் பெற்ற பிறகு தான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன மற்ற விவரங் களைப்பற்றிப் பேச்சு நடக்கும்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற அனல் மின் நிலையங்கள் தமிழகத்திலே எத்தனை இடங்களில் அமைப்பதற்கு மையப் பேரரசிடம் அனுமதி கோரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்ச ரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனியாக வினா போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையில் ஆய்வு செய்து கொண்டிருக்கும் அனல் மின் நிலையம் நடப்பு நிதியாண்டில் ஒப்புதல் பெறப்பட்ட திட்டமா? இல்லையென்றால் நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? அல்லது இந்தத் திட்டத்தை மாநில அரசின் நிதி ஆதாரத்தில் தொடங்கு வதற்கு அரசு பரிசீலிக்குமா? இதில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைத் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மட்டுமே பயன்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு இந்த ஆய்வை முடிப்பதற் காக நடப்பாண்டு 16.75 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அதற்கான அதிகாரிகளையும் அந்தக் களப் பணிக்கு அனுப்பும்.

திரு. சோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையில் அமையவிருக்கும் அனல் மின் நிலையம் பற்றிய ஆய்வுப் பணிகள் நடந்து கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மிக்க நன்றி. ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டு, அது தற்காலிகமாக இப்பொழுது நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன். அது உண்மையா?

அந்த ஆய்வுப் பணிகள் தொடர்ந்து முடிந்து இந்த ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துவக்கப் பணிகள் தொடங்கி விடுமா ? ஆய்வுப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா ? அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுத்தப்பட்டதாகச் சொல்வது பொய். ஏற்கனவே அது சம்பந்தமான அதிகாரிகள் நியமிக்கப் பட்டு அங்கே செல்ல இருக்கிறார்கள். அவர்கள் ஆய்வு செய்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உண்மைக்கு மாறானது என்று சொல்ல வேண்டும்.

காமராசர் மாவட்டம் புல்வாய்க்கரையில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்.

17—(*வினா எண். 6452)—திரு. க. பாரமலை : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காமராசர் மாவட்டம் புல்வாய்க்கரை கிராமத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டம், புல் வாய்க்கரை கிராமத்தில் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் அமைப் பது குறித்து பிரேரணை எதுவும் பெறப்படாத காரணத்தால் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படவில்லை.

நெல்லை மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டை சீர்திருத்தம்.

18—(*வினா எண்.7096)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையை சீர்திருத்தம் செய் வதற்கான திட்டங்கள் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?





மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கட்டபொம்மன் வீர வரலாற்றைச் சித்தரிக்கும் புதிய வண்ண விளக்கப் படங்கள் கொண்ட சித்திரக் கூடம் அங்கு அமைக்கப்பெறும். கட்டபொம்மன் கோட்டைக்கும், ஜக்கம் மாள் கோயிலுக்கும் நடுவே தடுப்புச் சுவர் கட்டும் பணியும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 3 முதல் 5 வரை உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச் சரின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து மின் வாரியத்திற்கு தரவேண்டிய தொகை.

3—(*வினா எண். 1329)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மின் வாரியத்திற்கு கட்ட வேண்டிய பாக்கி முழுவதும் கட்டாததால் தமிழகம் முழுவதும் ஏராளமான மேல்நிலைத் தொட்டிகளுக்கும், தெரு விளக்கு களுக்கும் இணைப்பு கொடுக்கப்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்திக்க அரசு மேற்கொண் டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மின் கட்டண பாக்கி வைத்திருந் தாலும், ஊராட்சி மேல்நிலைத் தொட்டிகள் கட்டி தயாராக இருந்தால் மின் இணைப்பு வழங்கப்படுகிறது. ஆனால் பாக்கி வைத்திருக்கும் ஊராட்சிகளில் புதிய தெரு விளக்கு களுக்கு அவை பாக்கியைச் செலுத்திய பிறகே மின் இணைப்பு

வழங்கப்படுகிறது. 1–4–84 முதல் மின் கட்டணம் செலுத்துதல்
1+1 என்ற முறையில் செயல் படுத்தப்பட்டு பாக்கித் தொகை
குறைக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :**
(பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிக்க பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிகள் 1 பிளஸ் 1 என்ற
முறையில் கட்ட வேண்டுமென்று சலுகை கொடுத்திருந்தாலும்
கூட, சிறு தவறு ஏற்பட்டால் கூட உடனே மின் விளக்குகளுக்
கான இணைப்பைத் துண்டிப்பது போன்ற நடவடிக்கைகளில்
மின்சார வாரியம் ஈடுபடுகிறது. எனவே, பேரூராட்சி பகுதி
என்பதால் அதற்கு விதிவிலக்கு அளிப்பதற்கு மின்சாரத் துறை
யிடம் இந்தத் துறை கோருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்
களின் உணர்வுகளை வைத்துக் கொண்டு ஊராட்சிகளுக்கு எந்த
விதமான நன்மைகளைச் செய்ய முடியுமோ அவற்றை அரசு
செய்யும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :**
(பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சில பேரூராட்சிகள் தொடந்து பெரும் தொகை
யைக் கட்ட முடியாத காரணத்தால், மின் வாரியம் துண்டித்து,
6 மாதம், 1 வருடம் அங்கே தெரு விளக்குகளே இல்லாத சூழ்
நிலை கூட இருக்கிறது. அரசாங்கத்திடம் Ways and
Means Advance பெற வேண்டுமென்றால் கூட கால
தாமதம் ஏற்படுகிறது. மாநிலம் முழுவதும் பஞ்சாயத்துக்களி
டம் இருக்கிற குவாரிகளை ஏலம் விடுவதன் மூலம் கிடைக்கின்ற
தொகையை, நலிந்த பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்க வேண்டு
மென்று அரசாங்கம் 1980 ஆம் ஆண்டே உத்தரவு போட்டிருந்
தாலும்கூட, அந்தப் பணத்தைப் பெறுவதற்கான நடைமுறை
களை தொழில் துறை வகுக்காத காரணத்தால் அந்தத் தொகை
யை நலிந்த பஞ்சாயத்துக்கள் தமிழ்நாடு முழுவதும் பெற முடி
யாத இக்கட்டான தவிர்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.
எனவே, அதை விரைவுபடுத்த அரசு துரித நடவடிக்கைகள்
எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் இங்கே தெரிவித்த கருத்துரு அரசினுடைய ஆய்விலே இருக்
கிறது. விரைவிலே முடித்து, நிதி அதிகாரங்கள் பெற ஆவன
செய்யப்படும்.



**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே.
பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்பாக பல
பஞ்சாயத்துக்களிலே ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பாக்கி இருந்
திருக்கின்றன. அந்தப் பாக்கியைச் செலுத்தாததற்காக இப்
பொழுது மின் துண்டிப்பு நடைபெறுகிறது. அதை வஜா
செய்வதற்கோ அல்லது அப்படிச் செய்யாமல் நிறுத்துவதற்கோ
சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை நான்
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித் துண்டிக்கக் கூடாது,
அப்படிச் சிரமம் வரக்கூடாது, மக்களுக்குக் கஷ்டங்கள் வரக்
கூடாது என்பதற்காகத்தான் 1—4—1984 முதல் 1 பிளஸ் 1
என்ற பார்முலா அமுல் செய்யப்பட்டு வருகிறது. ஏற்கெனவே
இந்த முடிவை அரசு எடுத்த நேரத்தில், அதாவது 31—3—1984
அன்று வரையில் ஏறத்தாழ ரூபாய் 6 கோடி நிலுவை பஞ்சாயத்து
யூனியன்களில் இருந்து வந்தது. ஆனால், படிப்படியாக, 1
பிளஸ் 1 பார்முலா அமுல் செய்யப்படுகின்ற காரணத்தால்,
அது குறைந்திருக்கிறது, வருவாயும் பெற்றிருக்கின்றன. இடை
யில் ஏதாவது சங்கடங்கள் இருக்குமானால் அவற்றை அனுதாபத்
தோடு அரசாங்கம் கவனிக்கும்.

**திரு. மு. ரமணி :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களில்
பணம் இல்லாமல் வறண்டு போய் இருக்கிற பஞ்சாயத்துக்கள்
பல இருக்கின்றன. இனிமேல் வரி வசூல் செய்துதான், பணம்
சேர்த்துதான், ஏதாவது சேவை செய்ய முடியும். ஆனால்,
ஜனங்களுக்குக் குடிநீரும் அதே மாதிரி விளக்கும் மிக
அத்தியாவசியமானவை—Most Essential Services என்று
சொல்லக்கூடியவை கிடைக்கவேண்டும். இப்படிப் பணமே
இல்லாமல் இருக்கிற பஞ்சாயத்துக்களுக்கு ஒரு குறிப்பிட்ட
தொகையை அரசு கடனாகக் கொடுத்து, அந்தச்
சேவையை நிறுத்தாமல் தொடர்ந்து செய்வதற்கு வேண்டிய
ஏற்பாடு செய்யப்படுமா? கொடுத்த கடனை தவணையிலே
திரும்பப் பெற ஏற்பாடு செய்யலாம். அப்படிப்பட்ட காரியத்தை
அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன
கருத்துக்களை எல்லாம் மையமாகக் கொண்டு ஒரு நல்ல முடிவை
அரசாங்கம் விரைவிலே எடுக்கும்.

[1987 மார்ச் 2

திரு. மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் ஊராட்சி ஒன்றியத்தில் புதிதாக, இந்தப் பஞ்சாயத்து தேர்தலின்போது தான் ஏற்படுத்தப்பட்ட செட்டிச் சாவடி என்ற பஞ்சாயத்தில் எந்தவித வருமானமும் இல்லை. குவாரி மட்டும்தான்—வெள்ளைக்கல்—மாக்னசைட் எடுக்கக்கூடிய சுரங் கம் மட்டும்தான்—வைத்துள்ளார்கள். ஒரு தனியார் கம்பெனி உச்ச நீதிமன்றத்தில் தடை வாங்கி விட்டதால், பஞ்சாயத்திற்கு சர்சார்ஜும் ராயல்டியும் வருவதில்லை. அதனால் அந்தப் பஞ் சாயத்துக்கு வருமானமே இல்லாமல், இப்போது மின் விளக்குகள் எல்லாம் எரியாத நிலை இருக்கிறது. ஆகவே, வருமானமே இல்லாத அந்தப் பஞ்சாயத்துக்கு ஊராட்சி ஒன்றியப் பொது நிதி யிலிருந்து நிதி உதவி செய்ய அரசு முன்வருமா என்று அமைச் சரைக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து, இன்றைக்கு அரசாங்கத்தில் என்ன செய்ய முடியுமோ அவற்றை அரசு செய்யும்.

**இயந்திர கம்போஸ்ட் உர ஆலைக்கு மத்திய அரசின் மானியம்**

4—(*வினா எண். 9092)—திரு. வி. பி. சிந்தன்: மாண்பு மிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மத்திய அரசின் விவசாய இலாக்கா இயந்திர கம் போஸ்ட் உர ஆலைகள் (மெக்கானிக்கல் காம்போஸ்ட் பெர்டி லைசர் பிளாண்ட்) நிறுவுவதற்காக திட்ட செலவில் 11 சத வீதத்தை மானியமாக நகராட்சிகளுக்கு வழங்குகிறதா?

(ஆ) சென்னை மாநகராட்சி இந்த உதவியைப் பெற்று உள்ளதா?

(இ) மாநில அரசு ஏதும் உதவியுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ):—ஆம். அரசு ஆணை எண் பல்வகை 817, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை, நாள் 20—5—1980-ல் சென்னை மாநகராட்சியில் ரூபாய் 70.64 இலட்சம் மதிப்பீட்டில் இயந்திர உர ஆலை ஒன்றினை அமைப் பதற்காக அனுமதி வழங்கப்பட்டது. இதற்கு மத்திய அரசு ரூபாய் 7,84,888-ம், மாநில அரசு ரூபாய் 15,69,112-ம் மானிய மாக வழங்கியது. மாநில அரசு மேலும் இத்திட்டத்திற்கு ரூபாய் 23.55 இலட்சங்கள் கடனாக மாநகராட்சிக்கு வழங்கி



1987 மார்ச் 2]

உள்ளது. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்த சாத்தியக் கூறுகள் இல்லாதபடியினால் இத்திட்டத்தைக் கைவிடுவதென அரசு தற் போது முடிவு எடுத்துள்ளது.

(முற்பகல் 9-20)

திரு. வி. பி. சிந்தன்: தலைவரவர்களே, மாநகராட்சி யினுடைய திறமை வாய்ந்த சில பொறியாளர்கள். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சாத்திய மானது என்றும் இதை இலாபகரமாக நடத்த முடியும் என்றும் அரசுக்கும் நிர்வாகத்திற்கும் பரிந்துரை அளித்திருப்பதாகக் கூறப் படுவது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே இருக்கின்ற தகவல்படி இது சாத்தியமானது அல்ல. அவர்கள் பரிசீலனை செய்திருக் லாம். ஆனால் அரசு ஒட்டு மொத்தமாக எல்லாத் தகவல்களையும் எடுத்து ஆராய்ந்த பின்னால், இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட முடியாத ஒன்று என்று தீர்க்கமாக முடிவெடுத்திருக்கிறது.

திரு. வி. பி. சிந்தன்: தலைவரவர்களே, இது தனியார் துறைக்கு விடப்படுவதற்கான ஆலோசனை ஏதேனும் அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, ஏற்கெனவே நான் தெரிவித்தபடி இந்தத் திட்டம் இப்போது கைவிடப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்தத் திட்டம் மாநில அரசுக்கு அனுப்பப்பட்டு மத்திய அரசுக்கும் அனுப்பப்பட்டு, இரண்டு அரசுகளும் மானிய மும் கடனும் வழங்கிய பின்னால் சாத்தியக்கூறு இல்லை என்று சொல்வது விந்தையாக இருக்கிறது; வேடிக்கையாக இருக்கிறது. இந்தத் திட்டத்தை ஆராய்வதற்கு முன்னால், உதவிகள் வழங்கப் படுவதற்குமுன்னால் ஏன் இதுபற்றி எண்ணிப்பார்க்கப்படவில்லை? மாநில மத்திய அரசுகள் ஒப்புதல் அளித்த பின்னால் இத்தகைய சூழ்நிலை ஏற்படுவதற்கு என்ன காரணம்? இந்தத் திட்டத்தை மீண்டும் எடுத்து நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே ஒரு கருத்தை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இயந்திர கம்போஸ்ட் உர ஆலைகள் (Mechanical Compost Fertilizer Plants.) நிறுவப்படுவது என்பது இந்த அரசு எடுத்த முடிவல்ல. 1975ஆம்

ஆண்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டு, 5 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே திட்டம் உருவாக்கப்பட்டு, கடந்த 11 ஆண்டுகளாக எண்ணி எண்ணிப் பார்த்து, திருத்தி, திருத்திப்பார்த்து, பல ஆட்சிகள் இதனைக் கண்டிருக்கின்றன. பெற்றெடுத்தக் குழந்தை. எனவே, இது வாழாது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இது அவர்கள் (குறுக்கீடு) 11 ஆண்டுகளாக இதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் மற்ற விவரங்களைச் சேகரித்துத் தரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவரவர்களே, சென்னை மாநகரில் நாள்தோறும் எடுத்துக் கொண்டிருக்கிற குப்பைகளை வைத்து இந்த உரத் தொழிற்சாலையைத் தொடங்க முதலிலே என் தொகுதியில் அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னால், இது வேளச்சேரிக்கு மாற்றப்பட்டது. குப்பையைக் கொட்டக் கூட இடம் இல்லாத நிலையில் அரசு மறுபரிசீலனை செய்து, இந்தத் தொழிற்சாலையைத் தொடங்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அடிப்படையில் குப்பைகள் இன்றைக்குத் தீவிரமாக அழிக்கப்பட வேண்டியவை என்பதிலே இந்த அரசு கண்ணுங்கருத்துமாக இருக்கிறது. இதற்கு வேறு வகையிலே தீவிரமாக அரசு தீர்வு காண இருக்கிறது.

### தஞ்சாவூர் ஓரத்தநாடு ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல்

5—(*வினா எண். 9145)— **திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் உள்ள தஞ்சாவூர், ஓரத்தநாடு போன்ற பெரிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து புதிய ஈச்சங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தஞ்சாவூர், ஓரத்தநாடு ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களையும் பிரித்து ஈச்சங்கோட்டை என்கின்ற புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க கோரிக்கை வந்துள்ளது.

(ஆ) தஞ்சை மாவட்ட ஆட்சியர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆகியோரின் செயற்குறிப்பு பெற்றபின் அரசு தக்க முடிவு எடுக்கும்.



**திரு. துரை கோவிந்தராசன் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டிலேயே அதிகமான ஊராட்சிகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கிற தஞ்சை ஓரத்தநாடு ஒன்றியங்களை—ஏறத்தாழ 61 ஊராட்சிகளை ஒவ்வொரு ஒன்றியமும் உள்ளடக்கியிருப்பதால், புதுக்கோட்டையில் இருக்கிற காவேரி, வெண்ணாறு, புதுக் கால்வாய் பாசனம் பெறாத 40 ஊராட்சிகளை—தனியாக பிரித்து ஒரு ஒன்றியத்தை அமைத்தால், எப்போதுமே வறட்சியாக இருக்கிற பகுதி தனியாக இருக்கும் என்பதால் பலவகைகளில் பயன்பட வழியிருக்கிறது. ஆகவே, துரிதமாக நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைப் பிரித்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை கிடைத்தவுடன் துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பொ. உத்திராபதி :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் இன்றைக்கு மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்படக் கூடிய அளவுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில், தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய, அதிகமான பஞ்சயத்துக்களைக் கொண்டிருக்கிற யூனியன்களை இரண்டாகவோ, மூன்றாகவோ பிரிப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டுமென்று அங்கே இருக்கின்ற மக்கள் கேட்டுக் கொண்டால், அவை பரிசீலிக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தஞ்சை மாவட்டத்திலே உள்ள ஒன்றியங்களைப் பற்றிய கேள்வி. மாநிலத்திலே இப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் இருக்கின்றன. அதேபோல், ஊராட்சிப் பகுதிகள் பிரிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளும் இருக்கின்றன. எனவே, மாநிலம் முழுவதும் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிப் பகுதிகளைப் பற்றிய ஆய்வு நடத்தி, முறையாகப் பிரிப்பதற்கு ஒரு குழுவை நியமிப்பதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல யோசனை. விரைவிலே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

[1987 மார்ச் 2

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சா அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, ஊராட்சி ஒன்றியங்களை பிரிப்பதற்கு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் வேண்டு கோள் விடுத்தால் பரிசீலிக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். எனவே; சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, அரசு அதனை அமுல் படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்லுகின்றபோது, உடன்பாடான பதிலைத் தான் சொன்னேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அரசு பதிவுரு எழுத்தர் மற்றும் ஆய்வக உடனாட்கள் பதவி உயர்வு.**

1.—(*வினா எண். 9726)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத் துறைகளில் பணிபுரிந்து வரும் பதிவுரு எழுத்தர்கள் (Record Clerks) மற்றும் ஆய்வக உடனாட்கள் (Lab Attenders) பதவி உயர்வு கேட்டு அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட பொருள் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அரசுக்கு கோரிக்கை வைத்ததுபோல், அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவிற்கும் கோரிக்கை வைத்திருந்தார்கள். அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு இது குறித்து பரிந்துரை வழங்கியிருக்கிறதா ? அந்தப் பரிந் துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு உள்ளதா ? இந்த விவரங்களை நிதியமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.



1987 மார்ச் 21]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அமைச்சுப் பணி விதி 3 (ஜி)-ன்படி அலுவலக உதவியாளர்கள், பதிவுரு எழுத்தர் மற்றும் அடித்தளப் பணியில் பணிபுரிபவர்கள் 5 ஆண்டுகள் பணி முடித்து, குறுமக் கல்வித் தகுதியும் பெற்றிருந்தால், அத்துறை யின் முதுநிலை வரிசைக் கிரமப்படி நேரடி நியமன முறை மூலம் 9 இளநிலை உதவியாளர்களை பணியமர்த்திய பிறகு 10-வது இடத்தை பணி மாற்றல் முறை மூலம் இளநிலை உதவியாளர் பதவி உயர்வு கொடுக்கலாம். பதிவுரு எழுத்தர்கள் பொது சார்நிலைப் பணி விதியின் கீழ் வருகின்றவர்கள். இளநிலை உதவியாளர் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதியின்கீழ் வருபவர். தமிழ்நாடு அரசின் நான்காம் ஊதியக் குழுவின் பரிந்துரையிலுள்ள சில குறைபாடுகளைக் களையும் பொருட்டு நியமனம் செய்யப் பட்ட ஒரு நபர் குழு, பதிவுரு எழுத்தர்களுக்கு பதவி உயர்வு அளிக்கும் பொருள் பற்றி பரிந்துரைக்கையில் இளநிலை உதவி யாளர்களுக்கான காலிப் பணியிடங்களில் 50 விழுக்காடு பதிவுரு எழுத்தர் மற்றும் பிற இனங்களின் பதவி உயர்வுக்காக ஒதுக்கப் பட வேண்டும் என்றும், இவ்வாறாக ஒதுக்கப்பட்ட 50 விழுக் காடு—பாதியினை குறிப்பாக பதிவுரு எழுத்தர்களின் பதவி உயர் வுக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத் தது. இப்பரிந்துரையினை ஆராய்ந்த உயர் மட்டக் குழு பதிவுரு எழுத்தர்களுக்குப் பதவி உயர்வுக்கான விகிதாச்சாரத்தை 25 விழுக்காடுகளாக உயர்த்தலாமென்றும், தற்பொழுது கடை பிடிக்கப்பட்டு வரும் 10 விழுக்காடு விகிதாச்சாரம் அலுவலக ஊழியர் மற்றும் பிறர் பொருட்டு கடைபிடிக்கப்படலாமென்றும், மேலும் பட்டதாரிகள் பதிவுரு எழுத்தர்கள் இருப்பார்களே யானால் அவர்களை இந்த 25 விழுக்காடு விகிதாச்சார ஒதுக் கீட்டிற்குள் கொண்டு வராமல், இந்த விழுக்காட்டிற்கும் மேலாக பதவி உயர்வு அளிக்கப்படலாமென்றும் பரிந்துரைத் துள்ளது. இப்பொருள் பற்றி தமிழ்நாடு தேர்வாணையத்தின் கருத்து பெறப்பட்டு, அது அரசின் பரிசீலனையில் உள்ளது. அது பற்றி முடிவெடுத்து அரசு அறிவிக்கும்.

**தமிழகத்தில் உள்ள புறம்போக்கு நிலங்கள்.**

2—(*வினா எண். 11557)— திரு. மா. சின்னராசு : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக்குச் சொந்தமான நிலம் தமிழகத்தில் மொத்தம் எவ்வளவு ?

(ஆ) அரசு நிலங்களின் ஆக்கிரமிப்புக்களை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்கள் தமிழகத்தில் 28,17,433.45 ஏக்கர் ஆகும்.

(ஆ) அரசு புறம்போக்கு நிலங்களில், பலதரப்பட்ட மக்களால், அதாவது, நிலமற்ற ஏழைகள், நடுத்தர வகுப்பினர் மற்றும் வசதி படைத்த பெருநிலச் சொந்தக்காரர் போன்றவர்களால் ஆக்கிரமணம் செய்யப்பட்டுள்ளன. ஆக்கிரமணங்களின் தன்மையை பொறுத்தும், புறம்போக்கு நிலங்களின் வகைப்பாட்டைப் பொறுத்தும், ஆக்கிரமணங்கள் முடிவு செய்யப்படுகின்றன.

(முற்பகல் 9–30)

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் புறம்போக்கு நிலங்களில் ஏற்கெனவே அரசாங்கத்தின் உபயோகத்திற்காக என்று பல்வேறு அலுவலங்களும் பள்ளிகள் போன்றவைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. அதுபோன்று அலுவலகங்கள், பள்ளிகள் கட்டப்பட்டிருக்கின்கின்ற இடங்களை—விவசாயிகளுக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுப்பதைப்போன்று—அந்த அந்த அலுவலகங்கள் இருக்கிற இடங்களை சப் டிவிஷன் செய்து அந்தத் துறையின் உபயோகத்திற்காக வரையறுக்கப்பட்ட நிலம் என்று வரன்முறை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய புறம்போக்கு நிலங்கள் பொதுமக்களுக்குப் பயன்படுகிற வகையிலே அரசு அலுவலகங்கள் மற்றும் அரசின் சார்பாக பொது இடங்கள் ஆகியவற்றிற்காகப் பயன்பட வேண்டுமென்ற முறையிலே அவற்றிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. ஏழை எளிய மக்களின் குடியிருப்புகளுக்கு இடங்கள் எங்கு வேண்டுமானாலும் பார்த்துத் தரலாம். ஆனால் பொதுமக்கள் பயன்படுத்துவதற்குரிய அரசுக் கட்டடங்கள் அரசின் சார்பான நிலையங்கள் ஆகியவற்றை ஊரின் நடுவே அல்லது ஊருக்குப் பக்கத்திலே அல்லது ஊரைச் சேர்ந்த இடங்களிலே கட்டுவது தான் பொருத்தமாக இருக்கும். அந்த இடங்களில் அரசுக் கட்டடங்களைக் கட்டுவதற்கு வருவாய்த் துறை அதிகாரிகள் முயன்று வருகிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுக்கு அரசு அறிவுரை கூறி வருகிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அத்தியாவசியமான குளங்கள், நீர்வழிகள் ஆகியவற்றின் மீது ஆக்கிரமிப்பு செய்து அண்மைக்காலங்களில் ஒட்டுமொத்தமாக விவசாயிகளின் நலனைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு நிலைமை உருவாகியிருக்கிறது. ரெவின்யு அதிகாரிகள் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு இடையே அவற்றை அகற்றாமல்



கூட விட்டுவிடுகிறார்கள். ஆகவே, தீவிர நடவடிக்கை எடுப்பதன் மூலம் அதுபோன்ற குளங்கள், நீர்வழிகள் ஆகியவற்றில் ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்கு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிப் புறம்போக்கு, குளத்துப் புறம்போக்கு, ஓடைப் புறம்போக்கு மற்றும் மேய்ச்சல் புறம்போக்கு ஆகியவற்றில் உள்ள இடங்களை எக்காரணம் கொண்டும் யாருக்கும் ஒப்படை செய்யக்கூடாது என்பதும அவற்றில் ஆக்கிரமிப்பு இருக்குமேயானால் அவற்றை அகற்ற வேண்டுமென்பதும்தான் அரசின் கொள்கை, ஆகவே பயன்படாத நிலையில் அமையுமேயானால் நத்தம் புறம்போக்கு என்று மாற்றித்தரவேண்டுமே தவிர ஓடைப் புறம்போக்கு என்ற பெயரிலேயே இருந்து யாருக்கும் ஜாரி செய்யக்கூடாது என்பது அரசினுடைய விதிமுறையாகும். ஆகவே ஓடைப் புறம்போக்கு, குளத்துப் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்குகளில் எல்லாம் ஆக்கிரமிப்புச் செய்யக்கூடாது, செய்திருந்தால் உள்ளபடியே அகற்றவேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். பல இடங்களில் ஆக்கிரமிப்பு செய்து, பொதுமக்களுக்கும் சாதாரண உழவர் பெருங்குடி மக்களுக்கும் பயன்படக்கூடிய ஏரிகளை ஆங்காங்கு அவர்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு நிலை உருவாகி, பிறகு தூர்ந்துபோய் மக்களுக்கே பயன்படாத நிலை மாற்றப்பட வேண்டுமென்று கடுமையாக உத்திரவிடப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் ஒத்துழைப்பு தருவார்களேயானால் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியை நன்றாகச் செய்யலாம். வீடு இல்லாதவர்களுக்கு, ஆதிதிராவிடர் பழங்குடி மக்களுக்கு நிலம், வீட்டுமனைகளை நாம் ஒதுக்கித்தரலாம். வசதிபடைத்தவர்கள் மற்றவர்கள்—தேவைக்கும் ஒரு அளவு உண்டு. பேராசைக்கு அளவே இல்லை—பேராசையை அடிப்படையாகக்கொண்டு ஆக்கிரமித்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்திவருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோன்று அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டியவைதான். ஏரிப் புறம்போக்கு, குளத்துப் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு ஆகியவற்றில் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்பதுதான் சட்டம். ஆகவே அவை அகற்றப்பட வேண்டும். எங்காவது அகற்றப்படாமல் இருக்குமேயானால் அதை—அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று ஓடை, குளத்துப் புறம்போக்குகளில் ஆக்கிரமிப்பு என்பது மிகக் கடுமையாக இருக்கிறது.

ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான சட்டம் 1905ஆம் ஆண்டு
நிறைவேற்றப்பட்டது. அதுவுமல்லாமல் இந்த ஆக்கிரமிப்பு
என்பது ஒரு தொடர்குற்றம். It is a c ntinuing ffence. இன்றைக்கு
அதிகாரிகள் அகற்றினாலும்கூட ஒருவாரம் கழித்து மீண்டும் ஆக்
கிரமிக்ககூடிய நிலை இருக்கிறது. எனவே சமுதாய நலன்
கருதி, இந்த ஆக்கிரமிப்புக் குற்றத்தைக் கிரிமினல் குற்றமாகக்
கருதி, சிறைத் தண்டனை கொடுக்கக்கூடிய முறையிலே 1905
ஆம் ஆண்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு முன்வருமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
உறுப்பினர் கூறுவதைப்போன்று அந்தச் சட்டத்தின் சூழ்
நிலையை ஆராய்ந்து அதிலே ஏதாவது கடுமையான தண்
டனை கொடுக்க வேண்டிய அளவுக்கு மாற்றவேண்டுமென்ற
நிலைமை இருக்குமானால் அதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டு இந்த மன்றத்தில் ஒரு
சட்டம் இயற்றி அதன்மூலமாக தனக்குச் சொந்தமாக வைத்
திருந்த கண்மாய்களை எல்லாம் புறம்போக்காக ஊர் நன்
மைக்காக விட்டுக்கொடுத்திருக்கிறார்கள். அப்படி விட்டுக்
கொடுக்கப்பட்ட நிலங்கள் பல இடங்களில் கண்மாய் புறம்
போக்காக இருந்தது. அவற்றை 1974 ஆம் ஆண்டு சில பேர்
களுக்குப் பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு
பட்டா போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் மக்
களுக்கு மிகவும் இடையூறாக இருக்கிறது. மாடு கன்றுகளை
அவிழ்த்துவிட முடியவில்லை. எனவே எங்கெங்கே இவ்வாறு
பட்டா போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவற்றையெல்லாம்
கேன்சல் செய்து மீண்டும் அவற்றைப் புறம்போக்காக ஆக்கு
வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று புறம்போக்காக இருக்
கிற ஒன்றை விதிமுறைகளுக்கு மாறாக பட்டா செய்து கொடுத்
திருப்பார்களேயானால் அதை ரத்து செய்ய அரசுக்கு உரிமை
இருக்கிறது. எனவே அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால்
அதுபற்றி ஆராயலாம்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கல்வி நிறுவனங்களின் பெயரால் பல நாற்றுக்
கணக்கான, ஆயிரக்கணக்கான ஏக்கர் புறம்போக்கு நிலங்களை
அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் எடுத்துக்கொள்வதும் அவற்
றில் மிகப்பெரிய கட்டிடங்களை எழுப்புவதுமான சூழ்நிலை
இருக்கிறது. அதேபோன்று இன்றைக்கு தனியார்களும் நிறைய





புறம்போக்கு நிலங்களை எடுத்து லே அவுட் போட்டு விற்
பனை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இவற்றை எல்
லாம் தடுக்க அரசாங்கம் ஒரு சர்வே செய்து இது அரசாங்கத்
தினுடைய நிலம், எனவே, இதில் அத்துமீறி நுழைபவர்கள்
தண்டனைக்கு ஆளாக்கப்படுவார்கள் என்கிற நியதியை உரு
வாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் கூறுவது போன்று அரசாங்கத்தினுடைய அனுமதியில்லாமல்
யாரொருவர் ஆக்கிரமிப்பு செய்தாலும் அந்த ஆக்கிரமிப்பை
அகற்றுவதற்கு அரசுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் பொது
வாக கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் போன்ற பொது
மக்களுக்குப் பயன்படுகிற அறக்கட்டளைகள் சார்பாக நிர்
வகிக்கப்படும் நிறுவனங்களுக்காக அரசாகப் பார்த்து சிலபல
இடங்களில் ஒதுக்கீடு செய்கிறது. ஆனால் அரசினுடைய அனு
மதி பெறாமல் யாரும் ஆக்கிரமிப்பதற்கு வழிவகைகள் இல்லை.
சிலசமல நேரங்களில் பள்ளிக்கூடங்களுக்கு, மருத்துவமனை
களுக்கு என்று வாங்கிக்கொண்டு வேறு பல வகைகளில் அவற்றை
துஷ்பிரயோகம் செய்கிறபோது நாம் நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று வேறு
ஒரு காரியத்திற்காக அரசினுடைய நிலத்தை வாங்கிக் கொண்டு
அதனை அவர்கள் லே அவுட் போட்டு வியாபார நோக்கத்தோடு
பயன்படுத்தினால் எந்த ஒரு நேரத்திலும் அதை ரத்து செய்து
மாநில அரசு அவற்றை எடுத்துக் கொள்வதற்கு உரிமை உண்டு.
அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளலாம். ஆனால்
எது, எது அரசினுடைய புறம்போக்கு நிலம் என்று அடையாளம்
காட்டுவதற்கியலாத நிலைமையில் அதாவது தெரியாத அள
வுக்கு ஆங்காங்கே நிலங்கள் இருக்கின்றன. ஆகவேதான் பொது
மக்களுக்கும் தெரிவதில்லை. இது அரசின் நிலமா, சொந்த
நிலமா, மற்றவையா என்பது பற்றித் தெரியாததன் காரணத்
தால் தான் ஆங்காங்கு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்.
எனவே அவற்றிற்கு ஒரு அடையாளம் விதிக்கலாமா என்பது
பற்றிக் கூட நாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம். கற்கள்
போட்டால்கூட அவற்றைத் திருடிக் கொண்டு போய்விடுகிறார்
கள் அல்லது அகற்றி விடுகிறார்கள். எனவே கற்களிலே ஏதே
னும் கலர் வைத்து அந்த கலர் உள்ள கற்கள் வைக்கப்பட்டிருக்கிற
எல்லைகளில் இருக்கும் இடங்கள் அரசாங்கத்தினுடைய புறம்
போக்கு நிலம் என்றோ அல்லது போர்டு வைத்து அவற்றின்
மூலம் இது அரசின் புறம்போக்கு நிலம் என்றோ ஏற்படுத்தினால்
அவற்றிலே இன்னின்னார் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள்
என்று சுட்டிக் காட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே இது
பற்றி ஆலோசிக்குமாறு நான் வருவாய்த் துறையினரைக் கேட்டுக்

கொண்டிருக்கிறேன். இப்படி அமைத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று ஆக்கிரமிப்புகள் ஏதேனும் இருந்தால் அதுபற்றி அடையாளம் கண்டு பொது மக்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்பு ஏற்படும். எனவே இது பற்றி அரசு ஆலோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிலங்களைத் தமிழகம் பூராவும் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களைக் கண்டுபிடிக்க மாவட்ட ரீதியாக ஒரு குழு அமைத்து அதன் மூலமாக அரசினுடைய நிலங்கள், ஃபாரஸ்ட் டிப்பார்ட்மெண்டினுடைய நிலங்கள் போன்றவற்றைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யப்படுமா ? அந்த வகையில் மாவட்ட ரீதியாக குழு அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அது அவசியப்படுமா என்பது தெரியவில்லை. ஏனென்றால் குழுக்களுக்குத் தான் செலவாகுமே தவிர, அதாவது போக்குவரத்துச் செலவு மற்றும் வாகனங்கள் அளிப்பதற்கான செலவு போன்றவைதான் ஏற்படுமே தவிர அதிலே உருப்படியான பலன் ஏற்படும் என்று கருத முடியவில்லை. எனவே வேறு உருப்படியான அளவில் ஏதாவது யோசனை வந்தால் அதுபற்றி ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கலாம். டி. டி. சி. மீட்டிங்கிலோ, ஊராட்சி மன்றத்திலோ, ஊராட்சி ஒன்றியங்களிலோ, சில பல நடவடிக்கைகள் எடுப்பது பற்றி கவனத்திற்குக் கொண்டுவர முயற்சிக்கப்படுமேயானால் அது பற்றி ஆராயலாம். அதாவது அரசாங்க அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சிமன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய வகையிலே இது பற்றி ஆராய்ந்து அரசுக்குச் சிபாரிசு செய்கிற அளவுக்கு வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று சில பல நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளலாம்.

[முற்பகல் 9-40.]

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் ஒரு நல்ல விளம்பரத்தை வெளியிட்டு பொதுமக்கள் எங்கெங்கே ஆக்கிரமிப்பு இருக்கிறது என்று கருதுகிறார்களோ அவற்றைப்பற்றியெல்லாம் அந்தக் குறிப்பிட்ட முகவரிக்கு எழுதி அனுப்பலாம் என்று சொல்லுகிற விளம்பரத்தைப் போட்டாலேயே பொதுமக்கள் எழுதி அனுப்பத் தயாராக இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன், அரசு அதைச் செய்ய முன் வருமா?





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற ஒரு யோசனையை நாம் செய்யலாம். அதன் மூலம் சில பல செய்திக் குறிப்புகள் அரசுக்குக் கிடைக்குமேயானால் அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. கோ. பெருமாள் பிள்ளை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை மக்கள் பட்டாவிற்காக மனு செய்யும் போது அவர்களுக்கு கொடுக்கின்ற பதிலிலே ''அது குளம் புறம் போக்கு அல்லது ஆற்று புறம்போக்கு, ஆகவே பட்டா தர முடியாது'' என்று தெளிவாகச் சொல்லுகிற நேரத்தில், அதே இடங்களுக்கு அரசாங்கத்தின் மூலமாக மின்சார வசதி, ரோடு வசதி, மற்ற ஏனைய வசதிகளையும் செய்திருக்கிற நிலையில், இது போன்ற இடங்களில் குளங்களோ, ஆறுகளோ இனி பயன் தராது என்ற நிலையில் இருக்கும் போது, அப்படிப்பட்ட இடங்களையாவது அந்த ஏழை மக்களுக்கு பட்டா கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கு இருக்கின்ற சூழ்நிலையின்படி ஆங்காங்கு இருக்கிற வருவாய்த்துறை அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாக பட்டா கொடுக்கும் போது தான் இவையெல்லாம் பரிசீலிக்கப்பட முடியும். அதுவும் அல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று ஒரு நியாயத்தின் அடிப்படையிலேதான் நாம் முடிவு கட்ட வேண்டுமே தவிர ஒட்டு மொத்தமாக விதி முறைகளை ஏற்படுத்திக் கொண்டு செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. அல்லது எல்லா இடங்களிலும் ஒட்டு மொத்தமான விதிமுறைகளைக் கடைபிடிக்கவும் இயலாது.

**திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களை அடையாளம் காட்டுவதற்கும், இவ்வளவு ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பில் இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்கும் அமைக்கப்பட இருக்கிற குழுவில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அங்கம் பெறுவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அப்படிக் குழு அமைக்கப்படுமேயானால் சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து எடுக்கப்படும் போது, மாண்புமிகு பொன் முத்துராமலிங்கம் அவர்களையும் சேர்த்துத் தான் செய்யலாமே தவிர நீக்கி விட்டுச் செய்யப்படுவதில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிற நேரத்திலே அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லுகிற சூழ்நிலை இருப்பதாகத் தெரிகிறது. இந்தச் சூழ்நிலை தவிர்க்கப்பட வேண்டும் என்று சொன்னால் தங்களுக்குள்ள வான் அளாவிய அதிகாரத்தைப் பயன்படுத்தி, இப்படி நீதிமன்றத்திற்குச் செல்ல இயலாத சூழ்நிலையை ஏற்படுத்தித் தர முன் வருவீர்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

திரு. மு. ஆறுமுகம் : சபாநாயகர் அவர்களே, அவர் வான் அளாவிய அதிகாரத்தைப் பயன்படுத்தி என்று சொல்லுகிறார் ; அது நீக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யார் யார் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எழுதிக் கொடுப்பார்களேயானால், அவர் சொன்ன அதிகாரத்தைப் பயன்படுத்தி புறம்போக்கு நிலங்களை வைத்திருப்பவர்களை நானே அடையாளம் காட்டுவேன்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் அரசுக்குச் சொந்தமான இடங்கள் குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கோ, வீட்டு வசதி வாரியத்திற்கோ மற்றும் அரசு அலுவலகங்களுக்கோ தான் கொடுக்கப்பட வேண்டும். மற்ற தனியார்களுக்கு பட்டா செய்து கொடுப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ? அத்தோடு வட்டாட்சி அலுவலர்கள், எஃப். சி. ஆர். என்ற முறையில் சிலருக்கு அனுமதி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள், அதுவும் தடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் போன்ற பெரு நகரங்களிலுள்ள அரசுக்குச் சொந்தமான நிலங்களாக இருந்தாலும் சரி, உள்ளாட்சி மன்றங்களுக்குச் சொந்தமான நிலங்களாக இருந்தாலும் சரி, அவை பொது மக்களுக்குப் பயன்படுகின்ற அளவுக்கு அமைக்கப்பட வேண்டுமே தவிர வேறு அல்ல. விளையாட்டு இடங்கள் பூங்காக்கள் போன்றவற்றை அமைக்க அந்த இடங்களைப் பயன்படுத்த வேண்டும் என்றுதான் இப்படிப்பட்ட பொது இடங்கள் உபயோகப்படுத்தப் படுகின்றன. அப்படித்தான் அந்த இடங்கள் அமைய வேண்டிய சூழ்நிலையே தவிர வேறு அல்ல.

சென்னையைப் போன்ற பல இடங்களில் பூங்காக்கள் அழிக்கப்பட்டு, விளையாட்டுக் கூடங்கள் அழிக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டு, பொது இடங்களே இல்லாத அளவுக்கு, பெரும் பெரும்



நகரங்கள் ஆகி விட்டன. எக்காரணம் கொண்டும் தனியார்களுக்கு நகரங்களில், குறிப்பாக எந்த நகரமானாலும் சரி, மாநகராட்சியானாலும் சரி, அவற்றை ஒப்படை செய்யக் கூடாது என்பது தான் அரசினுடைய கொள்கையாகும். ஏனென்றால் வெளி நாடுகளில் இருக்கிற பெரிய நகரங்களில் பொது இடத்தை எக்காரணம் கொண்டும் பாழ்படுத்தாது இருக்கிற சூழ்நிலையைக் கையாளுகின்றார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால் இங்கு நாம் நேரு பார்க் என்று வைத்திருந்தோம். அந்த பார்க்கே இப்போது இல்லை. பிராட்வேயில் ஒரு பார்க்கை வைத்திருந்தோம். அந்த பார்க் இப்போது அடியோடு ஒழிந்து விட்டது. விளையாட்டு இடங்கள் பல இடங்களில் வைத்திருந்தோம். அவை இப்போது மாறிவிட்டன. சென்னை போன்ற பெரிய நகரங்களில் மக்கள் மாலை வேளைகளில் ஆங்காங்கு உட்காருவதற்கும், தங்குவதற்கும், ஓய்வு பெறுவதற்கும் இடமில்லாத அளவிற்கு ஆக்கிரமிப்புகள் வந்து விடுகின்றன. தனியார் ஆக்கிரமிப்புகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று எங்கேயாவது அப்படித் தனியாருக்கு ஜாரி செய்கிற சூழ்நிலை இருக்குமானால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது. அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் க. நல்லமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற ஏழைகளுக்கு அரசு புறம்போக்கு நிலங்களை விவசாயத்திற்கும், குடியிருப்பதற்கும் பட்டா வழங்க வேண்டுமென்று அரசு விதி முறைகள் இருக்கிற போது, அவற்றை நிலமுள்ள பணக்காரர்களுக்கு பட்டா செய்து கொடுப்பதுடன், நிலமற்ற ஏழைகளுக்கு கொடுக்கப்பட்ட பட்டாக்களை ரத்து செய்கிற நிலைமை இருக்கிறது. இதனை அரசு அறியுமா? இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்ற நிலைமையிருந்து அந்த நிகழ்வினைச் சுட்டிக்காட்டுவார்களானால், அதுபற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே,, அரசுக்குச் சொந்தமான ஏரிப் புறம்போக்கு நிலங்கள் குளத்துப் புறம்போக்கு நிலங்கள் போன்ற இடங்களை பெரிய விவசாயிகள் ஆக்கிரமித்துக் கொண்டு, கிராம நிர்வாக அதிகாரிகள் மூலம் தீர்வை கட்டிவிட்டு, அதனாலே வழக்கு மன்றத்திற்குச் சென்று அவர்கள் எல்லாம் தடை வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். இதன் காரணமாக, நாம் அரசாங்க நடவடிக்கைகள் மூலம் அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. மேலும் அவர்கள்

மின்சாரத் துறையின் மூலம் மின் இணைப்பு பெற்று பெரிய அளவில் விவசாயம் செய்கிறார்கள். இதனால் ஏரியில் நிரம்பக்கூடிய தண்ணீர் நிரம்பாமல் போகிற சூழ் நிலை ஏற்படுகிறது. இவற்றில் குடி தண்ணீருக்குப் பயன் படுகிற ஏரிகளும் இருக்கின்றன. அதனால் பெரிய நகரங்கள் எல்லாம் பாழ்படுகிற சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே அவர்களின் மின் இணைப்புகளைத் துண்டிப்பதற்கு அரசு உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றி நான் முதலிலே குறிப்பிட்டேன். ஏரிப் புறம்போக்கு, குளத்துப் புறம்போக்கு போன்றவற்றில் ஆக்கிரமிப்பு இருக்குமானால் அது பற்றி அரசு தக்க நட வடிக்கையெடுக்கும் என்று தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று இராசிபுரம் ஏரியை பாதிக்கு மேல் ஆக்கிரமித்து விட்டார்கள். அதை அகற்று வதற்கு முயற்சி எடுக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் முழு ஒத்துழைப்பையும் தருவார்களானால் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆயத்தமாக இருக்கும்.

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, அரசு புறம்போக்கு நிலத்தை வசதி படைத்தவர்கள் உழுகின்ற பொது கிராம அதிகாரிகள் அவர்களுக்கு அபராத வரி வசூலிக்கிற காரணத்தால், அதை வைத்து அவர்கள் நீதி மன்றம் சென்று தடையாணைப் பெறுகிறார்கள். அபராத வரியை அவர்களுக்கு விதிக்காத அளவிற்கு கிராம அதிகாரி களை அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன். மூன்று ஏக்கர் வரையில் ஒருவருக்குத் தரலாமென்று அரசு அடிப்படை வைத்திருக்கிற காரணத்தால் கிராம அதிகாரிகள் இதுபோன்ற நிலங்களை ஆக்கிரமிப்பு செய்கிறவர்கள் குடும் பத்தில் இருக்கிற நான்கைந்து பேர்களிடம் 'பி' மெமோ சார்ஜை' வசூலிக்கிற காரணத்தால் அவர்கள் அதை வைத்து நீதி மன்றம் செல்கிறார்கள். ஆகவே, அரசு இந்த முறையைத் தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல் லிய கருத்துக்களின் அடிப்படையில், நீதி மன்றங்களுக்கு எந்தெந்த காரணத்தால் செல்கிறார்கள் என்ற கூறுபாடு களை ஆராய்ந்து, அவற்றின் அடிப்படையில் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதை ஆராய்ந்து, அந்த முயற்சிகளில் ஈடுபட்டாலொழிய நமது நோக்கம் நிறை வேறாது. உறுப்பினர் தெரிவிப்பதைப் போன்று அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்வதற்கு எது அடிப்படை காரண





மாக இருந்தாலும், அதையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கும், அதற்கு அதிகாரம் வழங்காமல் இருப்பதற்கும் வழிவகை காணப்பட வேண்டும். சில ஆண்டுகள் கிஸ்தி செலுத்தி விட்டோம், ஆகவே இது எங்களுக்குத் தான் சொந்தம். 40 ஆண்டுக் காலம் ஆக்கிரமித்து விட்டோம். ஆகவே எங்க ளுக்குத்தான் சொந்தம். நாங்கள் அபராதம் கட்டியிருக் கிறோம், ரசீது இருக்கிறது ; ஆகவே எங்களுக்குத்தான் சொந்தம் என ரசீதைக் காட்டி நீதி மன்றங்களுக்குச் சென்று இடத்தைச் சொந்தமாக்க வேண்டும் என்பதைப் போன்றவை காரணமாக அமைந்து விடுமானால், அந்தக் காரணங்கள் இனிமேல் அமையாமல் இருப்பதற்கும், என்ன நடவடிக்கை எடுக்கலாமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதைப் போன்று நடவடிக்கை எடுக்கவும் இந்தத் துறையினர் ஆராய் வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9—50]

திரு. கி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் புறம்போக்கு, ஓடைப் புறம்போக்கு நிலங்களின் ஓரமாக வீடுகளைக் கட்டிக் கொண்டு இருக்கிறார் கள். ஓடைப் புறம்போக்கு என்று சொல்கிற அந்த ஓடை களில் தண்ணீரே வருவது கிடையாது. 20 ஆண்டுகளுக்கு முன்பு ஓடையாக இருந்த அந்த இடங்களிலே எல்லாம் இப் போது அணையைக் கட்டிவிட்டார்கள். அப்படிக் கட்டிய பிறகு தண்ணீரே வருவதில்லை. ஆகவே அந்த ஓடைப் புறம் போக்கு நிலங்களை தற்போது பார்த்தால் அங்கே ஓடை இருந்ததற்கான எந்தவித அறிகுறியும் இல்லை. ஆகவே ஓடைப் புறம்போக்கு நிலங்களில் குறிப்பாக வீடுகளைக் கட்டிக் கொண்டு வாழ்கின்ற ஏழை எளியவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட வேண்டும். அதுவும் இன்றி, இந்த ஓடைப் புறம்போக்கு நிலங்களைப் பற்றிய முன் மொழிவுகளை அனுப்பக் கூடாது என்று அரசாங்கத்திலே உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆகவே தாலுக்கா அதிகாரி களிடத்திலேயும், மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலேயும் இது பற்றிக் கூறினால் ஓடைப் புறம்போக்கு நிலங்களுக்கு புரப்போசல் அனுப்பக்கூடாது என்று கூறுகிறார்கள். ஆகவே ஓடை இல்லாத இடங்களில், இப்போது ஓடை என்று கூறு கிற இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொண்டு இருப்பவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற குறைபாடுகள் சில பல இடங்களில் இருக்கின்றன. ஆனால் இயற்றப்பட்ட சட்டங்களை அடிப்படையாக வைத்துப்

பார்ப்போமானால் எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால், சட்டங்களை நிறைவேற்றுவதிலே ஆங்காங்கே குறைபாடுகளும், குளறுபடிகளும் வேறு பல நிலைமைகளும் ஏற்பட்டுவிட்டன. ஓடையாக இருந்தாலும் ஏரியாக இருந்தாலும், அதனுடைய சுற்றுப் புறத்திலே உள்ள மலைப்பாங்கான பகுதிகளில், வேறு பல இடங்களில் பெய்கின்ற மழை வாய்க்கால் வழியாக வந்து, அந்த ஓடைகளிலே, குளங்களிலே, ஏரிகளிலே நிரம்பவேண்டும். நிரம்பியதற்குப் பிறகு கால்வாய் மூலமாக வயல்களுக்குப் போய் பாய வேண்டும். இப்போது என்ன ஆகியிருக்கிறது என்றால் ஓடைக்கு வருகின்ற, ஏரிக்கு வருகின்ற வாய்க்கால்கள் அடைக்கப் பட்டுவிட்டன. ஏரிகளிலிருந்து வாய்க்கால்களுக்குச் செல்கின்ற கால்வாய்கள் அடைக்கப் பட்டுவிட்டன. இடையிடையே வீடுகள் கட்டப்பட்டுவிட்டன. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டதைத் தடுப்பதற்கு சட்டங்கள் இருக்கின்றன. அதைக் கட்டுப்படுத்தாத அளவிற்கு ஆங்காங்கே சூழ்நிலைகளும், குளறுபடிகளும், குறைபாடுகளும் இருப்பதால், இந்த விளைவுகள் ஏற்படுகின்றன. இதைச் சரியாகக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிர்வாகத் துறையினர் ஆங்காங்கு எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே அந்த முயற்சியிலேதான் கொண்டு வர வேண்டுமே தவிர, சட்டத்தைப் பொறுத்தவரையில் அது தெளிவாக இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த நில ஆக்கிரமிப்பு பற்றிய கேள்விகள், வினாக்கள்—விடைகள் நேரத்தில் அதிகமான நேரத்தை ஆக்கிரமித்து இருக்கின்றன. ஆகவே இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். 15 உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்கிறார்கள். அமைச்சர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

### வெறிநாய்க் கடிக்கு நவீன சிகிச்சை முறை.

6—(*வினா எண். 4456)—திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெறிநாய்க் கடிக்கு நவீன சிகிச்சை முறைகள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.



டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'ஆண்டி ராபிஸ் வேக்சின்' என்கிற வெறி நாய் தடுப்பு ஊசி அரசு மருந்தகங்களிலே வருமானச் சான்றிதழ் பெற்றவர்களுக்கு, வருமானத்தின் அடிப்படையிலே இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த நிலையை மாற்றி ஏழை—பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும் இலவசமாக இந்த ஊசி கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது பற்றி அரசு பரிசீலிக்கும்.

### பொன்னேரி தாலுக்கா மருத்துவமனையை விரிவுபடுத்தல்.

7—(*வினா எண் 5524) திரு. கே. பி.கே. சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம், பொன்னேரியில் உள்ள தாலுக்கா மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே.பி.கே. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரியில் உள்ள அந்த தாலுக்கா மருத்துவமனை, பொன்னேரி கிராமத்திலேயே மிகப் பெரிய மருத்துவமனையாக இருக்கிறது. இதைச் சுற்றி அதிகமான கிராமப் பகுதிகள் இருக்கின்றன. இருந்தாலும் இந்த மருத்துவமனை இன்னும் விரிவுபடுத்தப்படாமல் பாதியிலே நிற்கிறது. ஆகவே இந்த மருத்துவமனையை விரிவுபடுத்தி, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு வசதி செய்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தற்போது இல்லை என்று சொன்னேன். நிதி ஆதாரத்தைப் பொறுத்து இதை அரசு பரிசீலனை செய்யும்.

## தஞ்சை மருத்துவமனைக்கு ''Body Scanner''

8—(*வினா எண். 9442) டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு '' Body Scanner '' அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஒரு '' Body Scanner '' விலை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்சமயம் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ''Body Scanner'' அளிக்கும் செயற் குறிப்பு எதுவும் இல்லை.

(ஆ) ஒரு Body Scanner -ன் விலை சுமார் ரூ. 80 லட்சம் முதல் ரூ. 100 லட்சம் வரையிலும் ஆகும்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் எந்தெந்த மருத்துவமனை களில் இப்படிப்பட்ட 'பாடி ஸ்கேனர்' அமைக்கப்பட்டு இருக்கிறது மேலும் மாவட்டத்தில் உள்ள தாலுக்கா மருத் துவமனைகளிலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த அரசு ஆலோசனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 'புல் பாடி ஸ்கேனர்' தமிழ்நாட்டில் மதுரையில் மட்டும்தான் இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் இதை வைக்கலாமா என் பதை நிதி ஆதாரத்தை வைத்துத்தான் பரிசிலித்துக்கொண்டு இருக்கிறோம்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்த 'பாடி ஸ்கேனர்'-ஐத் தமிழக முதல்வர் அவர்கள் மதுரையில் துவக்கி வைத்தார்கள். அதற்குப் பிறகு 6 மாதங்கள் வரையில் தான் அது இயங்கியது. தற்போது அது மாதக்கணக்காக சரியாக இயங்கவில்லை. இப்படிப்பட்ட உயர் ரக நவீன கருவிகள்-தஞ்சையில் ஹீமோ டயலிசர்' என்ற நவீன கருவி இயங்காமல் இருக்கிறது. இவ்வளவுகோடி ரூபாய் களைச் செலவு செய்தும், அந்தக் கருவிகள்—இயங்காமல் இருப்பதைப் பார்த்து கேட்கும்போது, அதற்கு வேண்டிய நிபுணர்கள் ஜப்பானிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வர வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களை எல்லாம் வர வழைத்து அந்தக் கருவிகளை மீண்டும் இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற கருத்து சரியான கருத்து அல்ல என்று நினைக்கிறேன். நான் மதுரைக்குச் சென்றபோது நானே விசாரித்தேன். பாடி ஸ்கேனர் நன்றாக இயங்குகிறது என்று சொன்னார்கள்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மகளிர் ஆண்டாக இருக்கிற காரணத்தால் தஞ்சையில் இருக்கும் மருத்துவக் கல்லூரிக்கு குந்தவை நாச்சி யார் அவர்கள் பெயரை வைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாடி ஸ்கேனரில் குந்தவை நாச்சியார் அவர்கள் வரமாட்டார்கள். (சிரிப்பு).

திரு. மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த பாடி ஸ்கேனரைப் போலவே சிறு நீரக வியாதியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு டயாலிசஸ் சிகிச்சை அளிக்கக்கூடிய கருவிகள் 3 சேலத்தில் வாங்கப்பட்டு 2 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அவை பொதுமக்களுக்கு உபயோகத் திற்கு வரவில்லை. சாதாரணமாக ஒரு ஏழை ஒரு முறை டயா லிசஸ் சிகிச்சை செய்யவேண்டும் என்றால் தனியார் மருத்துவ மனைகளில் 3 நாட்களுக்கு ஒரு முறை 400 ரூபாய் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே அங்குள்ள மருத்துவர் களே தனியார்களுக்கு வசதி செய்யும் பொருட்டு அரசு தலைமை மருத்துவ மனையில் 3 கருவிகளும் செயல்படாத நிலையில் பாதுகாத்து வருகிறார்கள் என்ற புகார் அரசுக்கு வந்திருக் கிறதா? அதைத் தடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல் கிற புகாரே போதும் என்று கருதுகிறேன். இதைப் பற்றி அரசு பரிசீலிக்கும். ஏற்கனவே இதைப்பற்றி நடவடிக்கை எடுத்து அதற்குண்டான கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய் யப்பட்டு இருக்கின்றன.

டாக்டர் த. மூகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாடி ஸ்கேனர் அரசு மருத்துவ மனைகளில் இருப்பதால் அங்கே இதற்குப் பணம் வசூல் செய் கிறார்கள். இதை எந்த அடிப்படையில் வசூல் செய்கிறார்கள். குறிப்பாக தனியார் மருத்துவமனைகளிலிருந்து அனுப்பும் நோயாளிகளுக்கு ஒரு தொகை வசூல் செய்கிறார்கள். அதற்கு பிரையாரிட்டி கொடுக்கிறார்கள். அப்படி ஏதேனும் சட்டத் தில் இடம் உள்ளதா அல்லது பணம் வசூலிக்கலாமா? என அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 2

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அதற்குண்டான சாதாரண செலவைத்தான்
வசூலிக்கிறார்கள் என்று கருதுகிறேன். வெளியே ஒரு பாடி
ஸ்கேனர் மூலம் எடுக்கவேண்டும் என்று சொன்னால் 2500
ரூபாய் வசூல் செய்கிறார்கள். ஆனால் நாம் வசூல் செய்வது
500 ரூபாய் என்று நினைக்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்
அளிக்கிறபோது ஒவ்வொரு பாடி ஸ்கேனருக்கும் 90 லட்சம்
ரூபாய், 100 லட்சம் ரூபாய் என்று விலை அதிகமாக இருக்கிற
காரணத்தால் பல இடங்களில் வைக்க முடியவில்லை என்று
சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில்
அங்கே மருத்துவமனை மட்டும் அல்லாமல் மிகப் பெரிய மருத்
துவக் கல்லூரியும் இருப்பதால் மதுரைக்கு அடுத்தபடியாக தஞ்சை
யில் இந்த பாடி ஸ்கேனரை அமைப்பதற்கு அரசு விரைவாக
நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சென்னையிலே உள்ள அரசு மருத்துவ
மனையிலேயே இன்னும் அந்த ஃபுல் பாடி ஸ்கேனர் அமைக்கப்
படவில்லை. சென்னைக்கு வாங்கி வைத்ததற்குப் பிறகு
தஞ்சையில் வைக்கலாம்.

இரத்த தானம் செய்பவர்களின் இரத்தத்தை பரிசோதனை செய்தல்.

9—*வினா எண். 9995) திரு கே. அன்பழகன் : மாண்பு
மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழக்கமாக இரத்ததானம் செய்பவர்களின் இரத்
தத்தில் எய்ட்ஸ் மற்றும் தொற்று நோய்கள் இருக்கிறதா என்று
கடுமையாக பரிசோதிக்க அரசு உத்திரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் அடிப்படையில் எடுக்கப்பட்டு
வரும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மஞ்சள் காமாலை ( Hepatitis ) பற்றி பி.
வைரஸ் ( B, Virus ) சோதனைகளை செய்யு
மாறும் குறைந்தபட்சம், 10 சதம் எச்டிஎல்வி 3 (H. T. L.V.
-3) வைரஸ் பற்றி குறுக்கு சரி பார்ப்பு ( cross check )
செய்யுமாறும், மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் செயல்படும்
எல்லா மருத்துவமனையிலுள்ள குருதி வங்கி மருத்துவ அலு
வலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.



1987 மார்ச் 2]

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவ
அவர்களே, மஞ்சள் காமாலை மட்டும் அல்லாமல் மலேரியா,
இரத்த சோகை போன்ற கொடிய நோய் உள்ளவர்களிடம் கூட
அவசியம் செய்ய வேண்டிய சில பரிசோதனைகளை கூடச் செய்
யாமல் ரத்த சேமிப்பு வங்கிகளில் இரத்தம் எடுக்கிறார்கள். இப்
படிப்பட்ட இரத்தத்தை, டெஸ்ட் இல்லாமல் எடுக்கக்கூடிய இரத்
தத்தை, பயன்படுத்தும் அப்பாவிகள் பல கொடிய வியாதி
களுக்கு ஆளாகிறார்கள். இரத்த சேமிப்பு வங்கிகளில் இது போன்ற
தவறுகள் நடக்காமல் அவற்றை அரசு கண்காணித்து நடவடிக்கை
எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் இப்
படி எங்கே நடக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களானால் நிச்ச
யமாக அந்த மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அரசின் அங்கீகாரம் பெறாமல் லேப் வைத்து இருப்
பவர்கள் எல்லாம் சட்ட விரோதமாக இரத்த சேமிப்பு நிலையம்
வைத்து, புரோக்கர்களை வைத்து வியாபாரம் செய்கிறார்கள்
அதைத் தடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அரசின் அங்கீகாரம் இல்லாமல் யாரும்
இரத்த சேமிப்பு நிலையம் ஓப்பன் செய்ய முடியாது. அப்படி
அரசின் அங்கீகாரம் இல்லாமல் திறந்து வைத்து இருப்பார்
களானால் அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க முடியும்.
அந்த இடத்தை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் சொல்ல வேண்
டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இரத்த தானம் செய்ய வரக் கூடியவர்கள் பரம ஏழைகளாக இருக்
கக் கூடியவர்கள். நல்ல உணவு உண்டு வாழ முடியாத பல பேர்
கள் தங்களுக்கு ஒரு நேரம் உணவும் கொஞ்சம் சுருக்கமான வரு
மானமும் கிடைக்கும் என்று அங்கே வருகிறார்கள். அதனால்
அவர்களுடைய இரத்தத்தை கண்காணித்து சரியாகப் பரிசோதிக்க
வேண்டியது அவசியம். இந்த இரத்தம் நல்லதா இல்லையா என்று
பார்க்க வேண்டும்.... (மணியடிக்கப் பெற்றது).

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி
யுடன் வினாக்கள்— விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கு. ரமணி : அது நடக்கிறதுஎன்று நினைக்கிறேன்.
சில தொண்டு ஸ்தாபனங்கள், பொது ஜன சேவா ஸ்தாபனங்கள்
50, 100 பேர்கள் ஒட்டு மொத்தமாக எந்த வெகுமதியும் பெறா
மல் கொடுக்கக் கூடிய ரத்த தானத்தை ஒரே சமயத்தில் எடுத்து
சேமிக்க வசதிகள் இல்லை என்று சொல்கிறார்கள். உதாரணமாக
கோவை சி. எம். சி. மருத்துவமனையில் 15 நாட்களுக்குள்
உபயோகப்படுத்தக் கூடிய அளவில் தான் இரத்தத்தை எடுத்து
வைக்க முடியும் என்ற நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள்.
அதற்கு மேலும் சேமித்து வைக்க வேண்டிய வசதிகளை உடனடி
யாகச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இது போன்ற சிரமம் இருக்கிறது என்பதை
உணர்ந்து முதலமைச்சர் அவர்கள் பொதுவாக சென்னையிலே
ஒரு இரத்த சேமிப்புக் கிடங்கை வைக்கலாம் என்ற யோசனையை
தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கம் அதைப் பரிசீலித்துக்
கொண்டிருக்கிறது. மருத்துவ மனையில் மட்டுமல்லாமல், அர
சாங்கமே பொதுவாக இரத்த சேமிப்பு வங்கி வைக்கலாம் என்று
பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. சென்னையிலே வெற்றி பெற்
றால், கோவையிலே திறப்பதற்கு உத்தேசிக்கலாம்.

தமிழகக் கடலோரச் சாலையை நீரோடி வரையிலும் நீட்டித்தல்.

10—(*வினா எண், 75997) திரு.ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

தமிழகத்தில் நிர்மாணப்பணி ஆரம்பித்துள்ள கடலோரச்
சாலையினை தமிழ் நாட்டின் கடலோர எல்லையான நீரோடி
வரையிலும் அமைக்கும் பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்படும் சாலைப் பணியை
மேற்கொள்ள வேண்டுமாயின் சில இடங்களில் சாலையில் உள்ள
பகுதிகளை உயர்த்தியும், சிறு பாலங்களை அகலப்படுத்தவும்,
புதுப்பிக்கவும் மேலும் புதிய சாலை இணைப்புகளும் புதிய பால
அமைப்பும் ஏற்படுத்தப்படவேண்டும். இதற்கு சுமார் ரூ. 900.00
இலட்சம் தேவைப்படுவதால் அரசின் குறுகிய நிதி வசதி காரண
மாக உடனடியாக மேற்கொள்ள இயலாது.



திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரி
போக்குவரத்து சாலையில் போக்குவரத்து மிகவும் நெருக்கடி
யாக இருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்கு நன்கு தெரியும்
என்று நினைக்கிறேன். ஆகவே அந்தப் பகுதியிலே கடலோரச்
சாலையை மாற்றுப் பாதை என்ற முறையிலே அமைக்க அரசு
நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தெரியாமல் அல்ல.
ஆனால் நிதிப் பிரச்சினை காரணமாக எல்லாவற்றையும் உடனடி
யாக எடுத்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது. ஏற்கனவே
பல வேலைகளை எடுத்துச் செய்து கொண்டிருந்ததால் அந்தப்
பாதையைப் பொறுத்தவரையில், கொஞ்சம் அதிகத் தொகை
யாகும் என்ற காரணத்தினால், ஒரு பகுதியைச் செய்வதனால்
பலன் இருக்காது. முழுவதையும் செய்ய வேண்டுமென்ற நிலை
இருப்பதனால் அந்தப் பாதையை நிறுத்தி வைக்க வேண்டிய
நிலை ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் யோசித்து நடவடிக்கை
எடுக்கலாம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சென்னை
யிலிருந்து திருவனந்தபுரம் வரை ஒரு மாற்றுப் பாதை என்ற
முறையிலே கடலோரச் சாலை அமைப்பது சம்பந்தமாக எல்லா
இடங்களிலேயும் உடனடியாக செய்ய முடியாவிட்டாலும் கூட,
மிக முக்கியமான போக்குவரத்து நெருக்கடி இருக்கக்கூடிய இடங்
களிலாவது பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி தலைவர் அவர்களே,
அது பற்றி தனியாக யோசித்துப் பார்க்கலாம்.

ஆயக்குடி—கொடைக்கானல் சாலையில் சர்வே செய்ய நடவடிக்கை.

11—(*வினா எண். 7825)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயக்குடி - கொடைக்கானல் (வழி) சட்டப்பாறை
ரோடு, மேல் மட்டம், செம்பிரான் குளம் ஆகிய பகுதிகளை
கொடைக்கானலுடன் இணைப்பதற்கு சர்வே செய்யப்பட்டது
உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது இதுவரை எடுத்த நட
வடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கூ. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தப் பகுதிகளிலிருந்து அதாவது மேல்
மட்டம், செம்பிரான்குளம் ஆகிய பகுதிகளிலிருந்து ஆயிரக்
கணக்கான சிறு சிறு விவசாயிகள் வேலை செய்துவிட்டு, அந்தப்
பகுதி வழியாக நடந்தே வந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப்
பகுதியை 20 ஆண்டுகளுக்கு முன்பே மத்திய அரசினுடைய குழு
வந்து சர்வே செய்திருப்பதாக விவசாயிகள் சொல்கிறார்கள்.
இப்போது அமைச்சரவர்கள் இல்லையென்று சொல்கிறார்கள்.
நான் சொன்னது, விவசாயிகள் சொன்னதை வைத்துத்தான்.
அது மட்டுமல்லாமல் 500-க்கும் மேற்பட்ட குடும்பங்கள், ஆதி
வாசிகள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை மறு பரி
சீலனை செய்து அவர்கள் உற்பத்தி செய்கின்ற கிழங்குகள்,
பழங்கள் போன்றவற்றை கீழே கொண்டு வருவதற்கும்,
உணவுப் பொருட்களைக் கொண்டு வருவதற்கும் வழிவகை
செய்யக்கூடிய வகையிலே இதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்
கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கூ. முத்துசாமி: தலைவர் அவர்களே,
பரிசீலித்து, ரூ. 3 கோடியாகும் என்று சொல்லியிருக்கிறார்கள்.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தை அடிப்படை
யாகக் கொண்டு அதனுடைய அவசியத்தைப் புரிந்துகொள்ள
முடிகிறது. ஆனால் நிதிப் பிரச்சினையின் காரணமாக உடனடி
யாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. தனியாக ஆய்வு செய்ய
லாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே,
ஆதிவாசிகள் என்று சொல்வது அங்கே வசிக்கும் மலைவாழ்
மக்கள்தான். அவர்களுக்கு நாமே எதையும் செலவழிக்க வேண்
டிய அவசியமில்லை. மத்திய அரசாங்கம் கொடுக்கத் தயாராக
இருக்கிறது. முழுப் பணத்தைக் கூட மத்திய அரசாங்கத்திட
மிருந்து வாங்கி ரோட்டை அமைப்பதற்கான ஏற்பாட்டை
அமைச்சரவர்கள் விரைவில் செய்வதற்கான முயற்சிகளை எடுத்
துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கூ. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் கொடுக்கிறது என்று
சொன்னால் நாம் பட்டியல் போட்டு அனுப்புகிறோம். அந்தப்
பட்டியலில் அவர்கள் கொடுக்கின்ற பணத்தில் சீனியாரிட்டி
என்று வருகிறது. அதன் பிரகாரம் நாம் வைத்துக் கொண்டிருக்
கிறோம். மத்திய அரசாங்கம் பணம் கொடுத்து நாம் வேண்டாம்



என்று சொல்வதைப்போல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சொல்வது, வெளியிலே தெரிவது சரியாக இருக்காது. இந்தத்
துறையைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கம் ஒதுக்கு
கின்ற முழுப் பணத்தையும் நாம் செலவழித்துக் கொண்டிருக்
கிறோம். எனவே தாங்கள் கூட முயற்சி எடுத்து அதற்காக
தனியாக ஒதுக்கித் தந்தால் அந்த வேலையை எடுத்துக் கொள்
வதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை.
இங்கு இருப்பது நிதி பிரச்சினைதான்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மேற்கு தொடர்ச்சி மலை வளர்ச்சி திட்
டத்தின் கீழ் மலைப் பகுதிகளில் பல சாலைகள் நெடுஞ்சாலைத்
துறையினால் சர்வே செய்யப்படுகின்றன. அப்படி சர்வே செய்
யப்படும்போது வனத் துறை அதிகாரிகளால் சர்வே செய்வதற்
குக் கூட அனுமதி மறுக்கப்படுகிறது. அவ்வாறு வனத் துறை
அதிகாரிகள் அனுமதி மறுக்கப்படுவதால் சர்வே தாமதமாக ஆகி
றது. ஆகவே, அதைத் தடுத்து சர்வே செய்வதற்கு அனுமதி
அளிக்கப்படுமா என அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய ஆசைப்
படுகிறேன்.

மாண்புமிகு திரு. கூ. முத்துசாமி: தலைவர் அவர்களே,
இதற்குச் சம்பந்தம் இல்லாத கேள்வி என்றாலும், மத்திய அர
சாங்கம் வனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இப்படி
ஒரு கடுமையான திட்டத்தை அவர்கள் அமுலாக்கிக் கொண்டி
ருக்கிறார்கள். எனவே தேவை இல்லாத இடங்களில் மரங்களை
வெட்டக் கூடாது என்பதை அவர்கள் கடுமையாக பார்த்துக்
கொண்டு இருப்பதால் இந்த நிலை ஏற்படுகிறது. இருந்தாலும்
எங்கே அவசியம் ஏற்படுகிறதோ அந்த இடத்தில் நாம் மத்திய
அரசாங்கத்தின் அனுமதியோடு அந்தப் பணியை துவக்குவதில்
எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது. சில நேரங்களில்
அனுமதி வருவதற்குக் காலதாமதம் ஏற்படுகின்றபோது இப்படிப்
பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்றன. எனவே மத்திய அரசாங்
கத்திடம் நாம் கேட்டு அந்த அனுமதியைப் பெற்று செய்கின்ற
போது அந்த நிலைமை வராது.

கொடைக்கானலில் பழனி—பள்ளங்கி மலைச்சாலை திட்டம்.

12—(*வினா எண். 8640) திரு. பி. கே. எம். முத்துராம
லிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்
கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் தாலுக்காவில் பழனி-பள்ளங்கி மலைச்
சாலை திட்டம் எந்த நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. கூ. முத்துசாமி: இச்சாலை எந்தத் திட்
டத்தின் கீழும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

டாக்டர் த. முகம்மது சலீம்: தலைவர் அவர்களே, கொடைக்கானல் மெயின் சாலையிலிருந்து கொடைக்கானல் வரை இப்பொழுது சாலை பழுதடைந்திருக்கிறது. வேலைகளை பார்த்து வருகிறார்கள். ஆனால் முக்கியமான இடங்களில் வருடக் கணக்கில் வேலைகள் பார்த்தும் வேலைகள் சுணங்கிக்கிடப்பதால், இப்பொழுது அது ஒரு முக்கிய கோடைவாசஸ்தலமாக இருப்பதால் அந்த வேலைகளை அரசு சீக்கிரம் முடிக்க முடுக்கி விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே என்னிடத்தில் உள்ள குறிப்பில் அது தார் சாலையாக இருக்கிறது. இப்பொழுது பேருந்துகள் எல்லாம் சென்று கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். பழுதடைந்து இருக்குமேயானால் பராமரிப்பிலே அதை எடுத்துக் கொண்டு செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே, பழனி-பள்ளங்கி சாலை என்பது மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சி திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுமா? அதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனியாக பார்க்கின்றபோது அதிலே சேர்ந்திருந்தால் செய்யலாம். சேர்க்க வாய்ப்பு இருந்தாலும் செய்யலாம்.

### போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கு தனியார் மருத்துவமனையில் கண் பரிசோதனை செய்ய அனுமதி.

13—(*வினா எண். 10502)—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு கண் பரிசோதனை செய்ய தனியார் மருத்துவ மனையில் அனுமதி அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 8 அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஓட்டுநர்களுக்கு தனியார் மருத்துவ மனைகளில், கண் பரிசோதனையும் 6 போக்குவரத்துக் கழகங்களின் ஓட்டுநர்களுக்கு கண் பரிசோதனை அரசு மருத்துவ மனைகளிலும் செய்யப்படுகிறது.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனையில் அதிகமாக பீஸ் வாங்குகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது என்றாலும் ஒரு குறிப்பிட்ட சிகிச்சைக்காக என்று மொத்தமாக அந்த ஊழியர்களுக்கு அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்தக் கண் பரிசோதனை சரியாக அவர்களுக்குக் கண் பார்வை இருக்கிறதா என்பது பற்றி பரிசோதனை செய்வதற்காக. அதிலே கூட தனியார் மருத்துவமனையில் சில இடங்களில் இருக்கிறது என்பதற்குக் காரணம் ஏற்கனவே இருந்ததை மாற்றுவது என்பது கொஞ்சம் பிரச்சனையாக இருக்கிறது. தொழிலாளர்கள விரும்பவில்லை என்பதற்காக அதை அப்படியே தொடர்ந்து வைத்திருக்கிறோம். அவர்கள் சிகிச்சைக்கான முறையைக் கேட்கிறார்கள். அதிலே கூட இப்பொழுது தனியார் மருத்துவ மனையில் பல இடங்களில் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை முழுவதுமாக அரசு மருத்துவமனைக்கு மாற்றி அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்யலாம் என்பது பற்றி தொழிற்சங்கத் தலைவர்களிடம் நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். அதிலே ஒரு முடிவு ஏற்படுகின்ற போது இந்த நிலைமைகள் முழுவதும் மாற்றப்படும்.

திரு. க. சோலைராசு: தலைவர் அவர்களே, ஓட்டுநர்களுக்கு 45 வயதிற்குப் பிறகு முழுக்க வேறு பணிகள் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் துறையில்இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, முழுக்க முழுக்க வேறு பணிகள் கொடுப்பது என்பது முடியாத காரியம். நடைமுறையில் அதைச் செய்ய முடியாது. அப்படியே கொடுத்தாலும், ஓட்டுநர்கள் அதை ஏற்றுக் கொள்ள விரும்பாத ஒன்றாக இருக்கும். யாராவது அப்படி கட்டாயமாக அவர்கள் வண்டி ஓட்டக்கூடாது, கண் பார்வை சரியாக இல்லை என்று தெரிந்தால், அல்லது ஏதாவது விபத்துக்களிலே அவர்கள் மாட்டி கொண்டு பிரச்சினைகள் ஏற்பட்டால் அப்படிப்பட்டவர்களுக்கு சில மாற்றங்களை நாங்களே செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எல்லோருக்கும் மாற்றிக் கொடுப்பது என்பது முடியாத காரியம். எனவே நாம் அதைப்பற்றி பேச முடியாது.

(முற்பகல் 10—10)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனைகளிலே ஓட்டுநர்களை அனுப்பக் கூடிய நேரத்தில் சில அதிகாரிகள்-நிர்வாகத்தைச் சேர்ந்த அதிகாரிகள்-அவர்களுக்கு வேண்டாத ஊழியர்களுக்கு கண் பார்வை சரியில்லை என்ற முறையில் சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்வதாக அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா? அப்படிப்பட்ட நடவடிக்கைகளைத். தடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, சில புகார்கள் அவ்வப்போது சொல்லப்படுகின்றன. அதை விசாரிக்கின்றபோது அதிலே உண்மை இருப்பதாக கண்டுபிடிக்கப்பட முடியாமல், இருக்கின்றன. அப்படி அதில் உண்மை இருந்தால் சில இடங்களில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனால் தனியார் மருத்துவமனைகளில் மட்டும் அது வராது. அரசு மருத்துவமனைகளிலேயும் அது வரும். ஒருவேளை, தனியார் மருத்துவமனைகளிலே இப்படி வருகிறது என்று சந்தேகம் இருக்குமேயானால், நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஒப்புக்கொண்டால், அதனை உடனடியாக அரசு மருத்துவ மனைக்கு மாற்றுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆகவே, இந்தப் பிரச்சினை இப்போது உங்களிடத்திலேதான் இருக்கிறது. எனவே, மருத்துவப் பரிசோதனை அல்லது மருத்துவச் சிகிச்சை அத்தனையும் தனியார் துறையிலிருந்து அரசுத் துறைக்கு மாற்றுவதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து நடவடிக்கை எடுத்துவிட்டால் இந்தப் பிரச்சினை வராது என்று நான் கருதுகிறேன். எனவே, இந்தப் புகார்கள் இனிமேல் வந்தால், என்னிடத்திலே நேராகச் சொன்னால் கட்டாயம் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு நடத்துநர் பணிக்கும், ஓட்டுநர் பணிக்கும் ஆட்கள் எடுக்கின்றபோது, குறைந்தபட்சம் 160 செ.மி. உயரம் இருக்கவேண்டும் என்று அரசு கட்டுப்பாடு விதித்து இருக்கிறது. நம்மிடையே பலர் நிச்சயமாக 160 சென்டிமீட்டர் உயரம் இல்லாதவர்களாக இருந்து கொண்டிருக்கிற காரணத்தால் அந்த உயர அளவை 155 சென்டிமீட்டர் என்ற அளவுக்குக் குறைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கண் பார்வை சம்பந்தப்பட்ட கேள்வியாக இருந்தாலும், அதன் தொடர்புடையதாக இக்கேள்வி இல்லையெனிலும், 160 சென்டி மீட்டர் உள்ளவர்கள் கிடைக்காத நேரத்தில் அதைப் பற்றி நாம் பரிசீலிக்கலாம். இப்போது அங்கேயிருந்து 160 சென்டிமீட்டர் கிடைக்கவில்லை என்று புகார் வரவில்லை. ஆனால், நான் 159 சென்டி மீட்டர் இருக்கிறேன், எனக்குக் கிடைக்கவில்லை என்ற புகார் மட்டும் வந்துகொண்டிருக்கிறது. 159 ஐ நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லும்போது, 160 சென்டி மீட்டர் என்ற தேவையான அளவுக்கு நிறையப் பேர் இருக்கிறார்கள் என்று சொல்கின்ற காரணத்தினால், அதை மாற்றவில்லை. எப்போது அவர்கள் எடுக்கப்பட்டு, ஆட்கள் போதவில்லை என்ற நிலை வருகிறதோ, அப்போது அதுபற்றி பரிசீலிக்கலாம்.





நெடுஞ்சாலை கண்காணிப்புப் பொறியாளர்களின் அலுவலகம்.

14—(*வினா எண். 10593) **திருமதி. பா. வளர்மதி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்புப் பொறியாளர்களின் அலுவலகங்களை அந்தந்த பிராந்தியங்களிலேயே அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தைப் பொறுத்தமட்டில், நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்புப் பொறியாளர்களின் அலுவலகங்கள் அந்தந்த பிராந்தியங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் வேலைப்பளுவை கணக்கில்கொண்டு, கண்காணிப்புப் பொறியாளர்களின் எண்ணிக்கையை அரசு அதிகரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, புதிதாக பிரிக்கப்பட்ட காரணத்தினால் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு வேலை அதிகம் வரும் என்று நாம் சொல்ல முடியாது. காரணம், ஏற்கனவே எந்தப் பரப்பளவு மொத்தமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்களோ, அதே பரப்பளவுதான் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது நான்கு வட்டங்களாகப் பிரித்து நான்கு கண்காணிப்புப் பொறியாளர்கள் இருக்கிறார்கள். கோட்டங்கள்—ஒவ்வொரு வட்டத்திற்கும் 6 கோட்டங்கள் வீதம், 24 கோட்டங்கள் மொத்தமாக இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, மாவட்டங்களில் பிரச்சினை ஏற்படுகிறபோது, மாவட்டங்களிலே இருக்கின்ற அதிகாரிகளை அதிகப்படுத்துவதற்கு, தேவையான அளவுக்கு எண்ணிக்கையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு நெடுஞ்சாலைகளைக் கண்காணிக்க தமிழக அரசுக்குக் கொடுக்கும் நிதியுதவி எவ்வளவு என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, வட்டங்களையும், கோட்டங்களையும் கேட்டுவிட்டு, நிதியைப் பற்றிக் கேட்கும்போது, என்னிடத்திலே இங்கே அதற்கான குறிப்பு இல்லை. தனியாகவோ, அல்லது நேராகவோ கேட்டால் அந்தக் குறிப்பை நான் தருகிறேன்.

[1987 மார்ச் 2

திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் தற்போது திருநெல்வேலியில்தான் இருக்கிறது. இராமநாதபுரத்திற்கும், திருநெல்வேலிக்கும் கிட்டத்தட்ட 200 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. எனவே, கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய தலைநகரத்திற்குக் கொண்டு வரப்படுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அது ஏற்கனவே இருந்த இடத்திலே இருந்து இயங்குவதில் ஒரு பிரச்சினையும் இருக்காது. கண்காணிப்புப் பொறியாளர் வரு கின்ற காரணத்தினால் பெரிய முன்னேற்றம் அடைந்துவிடும் என்று சொல்ல முடியாது. கண்காணிக்கக் கூடியவர்தான் அவர். எனவே, அந்தந்தப் பகுதிக்குச் சென்றுதான் அவர் கண் காணிக்க வேண்டும். கோட்டப் பொறியாளர் தேவை என்று கேட்கிறபோது நியாயம் இருக்கிறது. ஆனால், கண்காணிப்புப் பொறியாளர்கள் தனியாக அந்த இடத்திற்கு வருவது என்பது கடினமான காரியம்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாசுதேவநல்லூர் தொகுதியில் சிவகிரி தாலுகா இருக்கிறது. அதில் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் இதுவரை இல்லை. ஆகவே, அங்கு ஒரு உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைப்ப தற்கு அரசிடம் ஆய்வில் இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏதோ ஒரு அலுவலகத்துடன் அது இணைந்து இருக்கும். எனவே, அது தனியாக அந்த இடத்திற்குத் தேவைதானா என் பதைப் பற்றி ஆய்வு செய்யலாம்.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் பொருள்களின் விலை.

19—(*வினா எண். 10310)—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் தயாரிக்கும் பொருள்கள் தனியார் நிறுவனத்தின் உற்பத்தி பொருளைவிட விலை கூடுதலாக உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?



1987 மார்ச் 2]

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : டான்சி நிறுவனம் பலதரப்பட்ட துறைப் பொருட்களை உற்பத்தி செய்து வழங்குகின்றமையால் " ஆம் " அல்லது " இல்லை " என்ற பதிலை கூறமுடியாது. ஆயினும், தனியார் நிறுவனங்களில் தர மிகு பொருட்களின் விலையைக் காட்டிலும் அதே அளவு தர முள்ள டான்சியின் பொருட்களின் விலைகள் குறைந்தவையே.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற டான்சி போன்ற நிறுவனங்களில் உற்பத்திக்கு ஆகின்ற செலவு தனியாருடைய உற்பத்திச் செலவைவிட மிக அதிகமாக இருக் கின்ற காரணத்தினாலே டான்சியில் பொருட்கள் வாங்குவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் அரசாங்கத்தி னுடைய ஒதுக்கீடுகளுக்கெல்லாம் டான்சியிலே வாங்குவதற்கு உத் தரவு இருக்கின்ற காரணத்தினாலும், டான்சியில் விலை அதிக மாக இருக்கின்ற காரணத்தினாலும் அரசாங்கத்திற்குப் பணம் இழப்பு ஏற்படுகிறது. எனவே, இதைப் பரிசீலித்து தனியாரிடம் போட்டி போடுகின்ற அளவுக்கு டான்சியில் உற்பத்திச் செல வைக் குறைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல் வதுபோல உற்பத்திச் செலவு கூடுதலாக இருக்கிற காரணத்தி னாலும், ஆயத் தீர்வை, விற்பனை வரி போன்றவைகளின் பளு அதிகமாக இருக்கிற காரணத்தினாலும் சில பொருட்களின் விலை கூடுதலாக இருக்கிறது. ஆனால், இப்பொழுது 1986–87-ல் நாம் தொடர்ந்து மைய அரசை வற்புறுத்தியதன் காரணமாக ஆயத் தீர்வைச் சலுகைகளை சில பிரிவுகளுக்குக் கொடுத்திருக்கி றார்கள். ஆகவே, விலைகளைக் குறைக்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவலகத்திற்கு ஒரு நாற்காலி வாங்கவேண்டுமென் றால்கூட டான்சியில் 2,500 ரூபாய்க்கு பில் போடுகிறார்கள். டான்சியில் ஒரு நாற்காலி விலை 2,500 ரூபாய் என்றால், தனி யாரிடத்தில் 500 ரூபாய்க்கும் குறைவாக இருக்கிறது. இவ்வளவு விலை வித்தியாசம் இருப்பதற்கு என்ன காரணம் என்பதைப் பரிசீலித்து விலையைக் குறைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதுபோல ஆயத் தீர்வையை நாம் ஒழுங்காகச் செலுத்துகிறோம். விற்பனை வரி

5 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை கட்டுகிறோம். ஆகவே, இப்படிப்பட்ட வரிப் பளுவும் மற்றபடி நல்ல தரமான மூலப் பொருட்களை வாங்கிச் செய்ய வேண்டுமென்ற காரணத்தினாலும் தரமான பொருட்களை வழங்கவேண்டுமென்ற காரணத்தினாலும், தொழிலாளர்கள், பணியாளர்களுக்கு தனியார் நிறுவனங்களைவிடக் கூடுதலான, அரசு நிர்ணயிக்கின்ற சம்பளத்தைத் தரவேண்டிய காரணத்தினாலும் நிதிநிறுவனங்களில் வாங்கிய கடனுக்கு வட்டி ஏராளமாக நாம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். அந்தக் காரணங்களினால் சில இனங்களில் விலை கூடுதலாகக் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆயத் தீர்வை இப்போது குறைந்து இருக்கிறது. அதைப் போல பணியாளர்களுடைய எண்ணிக்கையைக் குறைத்து அந்தச் செலவை ஏறக்குறைய ஆண்டுக்கு 1½ கோடி ரூபாய்க்கு குறைத்து இருக்கிறோம். இந்தக் காரணங்களினாலும் நிச்சயமாக இப்போது இருக்கிற விலையைக் காட்டிலும் குறைத்து விற்பதற்கான வழிவகைகளைக் கண்டறிய முடியும்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்திலே விற்கக்கூடிய பொருட்களுக்கு விலை அதிகம் என்று சொன்னார்கள். அதற்கு ஆயத் தீர்வை தான் காரணம் என்றும் சொன்னார்கள். இருந்தாலும் அவர்களால் உற்பத்திச் செய்ய முடியாத அதே பொருட்களை, தனியார் துறையிடம் குறைந்த விலைக்கு வாங்கி டான்சி என்ற சீல்ப் போட்டு கூடுதலான விலைக்குக் கொடுக்கிறார்கள். முதலமைச்சர் சத்துணவுக் கூடங்களுக்குப் பாத்திரங்கள் வாங்கவேண்டிய நேரத்திலேகூட உடனடியாக வாங்கவேண்டும் என்ற காரணம் சொல்லி, வெளியே பாத்திரங்கள் வாங்கி இருக்கிறார்கள். வெளியிலே இருந்து வாங்கும்போது விலை குறைவு. டான்சியிலே வாங்கக்கூடிய பொருட்களின் விலை அதிகமாக இருக்கிறது. ஆகவே, தனியாரிடத்திலே வாங்கிக்கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்றும் அப்படித் தவறுதலாக வாங்கிக் கூடுதலான விலைக்கு விற்கப்பட்டிருந்தால் அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பாத்திரங்களாக இருந்தாலும் சரி, டான்சி மிக வேகமாக செயல்பட்டு ஓட்டுப் பெட்டிகளைச் செய்து தந்த காலத்திலே இருந்தாலும் சரி, டான்சியினுடைய பொருட்கள் வெளியிலிருந்து வாங்கப்பட்டு முத்திரை போடப்பட்டு விற்கப்படுவதில்லை. முழுக்க முழுக்க டான்சியிலேயே உற்பத்தி செய்து விற்கப்படுகிறது. எங்காவது அப்படி ஒரு தவறு கண்டுபிடித்து மாண்புமிகு உறுப்பினர் சொல்வார்களேயானால் கடும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.



சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலுள்ள உமையாள்புரத்தில் ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டுதல்.

20—(*வினா எண் 9153) திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியிலுள்ள உமையாள்புரம் கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டித்தர அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 10-20)

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியிலுள்ள உமையாள்புரம் கிராமத்தில் 1980 ஆம் ஆண்டிலேயே நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் கொடுக்கப்பட்டன. தாட்கோவின் மூலமாக அந்த இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கனவே மனுவும் கொடுக்கப்பட்டது. எனவே இப்போதாவது உமையாள்புரம் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு தாட்கோ மூலமாக் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உமையாள்புரம் கிராமத்தில் உண்மையாகவே பட்டா கொடுக்கப்பட்டிருந்தால் அந்த இடத்தில் வருகிற ஆண்டில் தாட்கோ மூலமாக வீடுகள் கட்டித்தரப்படும்.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, உண்மையாகவே 1980 ஆம் ஆண்டில் அங்கே பட்டா கொடுக்கப்பட்டு விட்டது. இதில் எந்த விதமான உண்மைக்குப் புறம்பான செய்தியுமில்லை. ஏற்கெனவே என். ஆர்.ஈ.பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்கள் சமபங்கு கொடுப்பதைப் போலவே இந்தத் திட்டத்தின் கீழும் வீடு கட்டும் பணியில் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சம பங்குகொடுத்து கட்டிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1977 மார்ச் 2

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆர். எல். இ. ஜி. பி. மற்றும் என். ஆர் .ஈ. பி. போன்ற திட்டங்கள் மூலமாக நிறைய விடுகளை நாம் ஏற்கெனவே ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கட்டிக் கொடுத்து வருகிறோம். ஆனால் கடந்த ஆண்டைப் பொறுத்த வரையில் தாட்கோ மூலமாக 3,222 விடுகள் தான் ஒதுக்கப்பட்டன. அவை பல இடங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே வருகிற ஆண்டில் உமையாள்புரம் கிராமத்தில் தாட்கோ மூலமாக விடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110 இன் கீழ் தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் அறிக்கை

### சென்னையிலும், பிற மாவட்டங்களிலும் குடி நீர் விநியோகம் குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை நகரிலும் பிற மாவட்டங்களிலும் தற்போதுள்ள குடிநீர் விநியோகம் குறித்த அறிக்கை ஒன்றினைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சென்னை நகரிலும் பிற மாவட்டங்களிலும் தற்போதுள்ள குடி நீர் விநியோகம் குறித்தும் வரும் மாதங்களில் நிலைமையைச் சமாளிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை குறித்தும் ஒரு அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

சென்னை நகரைப் பொறுத்த வரையில், 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தேதியன்று மூன்று நீர்த் தேக்கங்களின் கொள்ளளவு 5,220 மில்லியன் கன அடியாக இருந்தது. ஆகவே சென்ற ஆண்டு மாமூலான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய மொத்தக் கொள்ளளவு 710 மில்லியன் கன அடியாகவே உள்ளது. எனவே மாமூலான நேரத்தில் 55 மில்லியன் காலன்கள் வழங்கப்பட்டதைக் குறைத்து இப்போது



1987 மார்ச் 4] (திரு. க. இராசாராம்)

ஒவ்வொரு நாளும் 41.5 மில்லியன் காலன் குடிநீர் சென்னை மாநகருக்கு வழங்கப்பட்டு வருகிறது. 1983-ல் இதே நாளில் நீர்த் தேக்கங்களின் மொத்த கொள்ளளவு 624 மில்லியன் கன அடியாக இருந்த நேரத்தில் சென்னை நகருக்கு ஒரு நாள்விட்டு ஒரு நாள்தான் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது.

மார்ச் மாதம் இறுதிக்குள் கன்னிகைப்பேர் மற்றும் தாமரைப் பாக்கம் ஆகிய பகுதிகளில் இருந்து நிலத்தடி நீர் ஒரு நாளைக்கு 6 மில்லியன் காலன் அளவிற்குக் கொண்டு வரும் முயற்சிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. மேலும் 16 புதிய ஆழ்துளைக் கிணறுகள் முடிக்கப்பட்டுள்ளன. அங்கு தொடர்ந்து 5 'ரிக்'கள் இப்போது வேலை செய்து கொண்டிருக்கின்றன. தெற்குக் கடலோரப் பகுதியில் 250 லட்சம் ரூபாயில் துவக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் 8 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப் பட்டுள்ளன. இத்திட்டம் மார்ச் இறுதிக்குள் முடிவடைந்து 1 மில்லியன் காலன் கூடுதலாகக் கிடைக்கும்.

ஏற்கெனவே சென்னை நகரில் போடப்பட்டுள்ள குழாய்க் கிணறுகள் மற்றும் ஆழ்துளை இந்தியா மார்க் 2 பம்புகள் பழுது பார்க்கும் வேலை இந்த வாரத்தில் முடிக்கப்படும். தொடர்ந்து 1,500 புதிய குழாய்க் கிணறுகளும் மற்றும் 120 ஆழ்துளை இந்தியா மார்க்-2 பம்புகள் இம்மாத இறுதிக்குள் போட்டு முடிக்கப்பட்டுவிடும். சென்னை நகரின் பல பகுதிகளில் ஏற்கெனவே 5 ஆழ்துளை போடும் ரிக் இயந்திரங்கள் வேலை செய்து வருகின்றன

வறட்சி நிவாரணப் பணிகளுக்காக, தமிழக அரசு சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத்திற்கு 163 லட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது.

தற்போது நீர் வழங்கும் அளவிடு குறைக்கப்பட்டு காரணத்தால் சென்னையின் சில பகுதிகக் அழுத்தக் குறைவினால் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. அதைப் பற்றிய தகவல்களைப் பகுதி செயற் பொறியாளர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப் பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை மாநகரில் தற்போது ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப் பாட்டைச் சமாளிக்க, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் தமிழக அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளாகத் தமிழகத்தில் அடுத்தடுத்து பருவ மழை பொய்த்ததன் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கொண்டு வருகிறது. இதனால் கிராமப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் குடி நீர்ப் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது.

(திரு க. இராசாராம்) [1987 மார்ச் 2

வடகிழக்குப் பருவ மழை கடந்த ஆண்டும் பொய்த்ததன் விளைவாக தமிழகத்தின் பல மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக குடிநீர்ப் பற்றாக் குறை தோன்றியுள்ளது.

பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்குவதற்கு முனைப்பான நடவடிக்கையைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளும்படி தமிழக அரசு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைப் பணித்துள்ளது. தமிழகம் முழுவதும் 8,591 ஆழ்துளை குழாய்க் கிணறுகளை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. மாவட்ட வாரியாக அதன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.—

| வரிசை எண். | மாவட்டம். | ஒதுக்கப்பட்ட எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அண்ணா | 265 |
| 2 | செங்கல்பட்டு | 821 |
| 3 | கோயம்புத்தூர் | 411 |
| 4 | சிதம்பரனார் | 325 |
| 5 | தர்மபுரி | 495 |
| 6 | கன்னியாகுமரி | 267 |
| 7 | காமராஜர் | 280 |
| 8 | மதுரை | 382 |
| 9 | வடாற்காடு | 764 |
| 10 | பெரியார் | 450 |
| 11 | புதுக்கோட்டை | 281 |
| 12 | தென்னாற்காடு | 980 |
| 13 | சேலம் | 622 |
| 14 | திருச்சிராப்பள்ளி | 533 |
| 15 | தஞ்சாவூர் | 638 |
| 16 | திருநெல்வேலி | 361 |
| 17 | இராமநாதபுரம் | 342 |
| 18 | பசும்பொன் முத்துராமலிங்கம் | 290 |
| 19 | நீலகிரி | 85 |
| | மொத்தம் | 8,591 |

இதில் 1987–88 ஆம் ஆண்டில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ள 4,200 குடியிருப்புகளும் அடங்கும். குடிநீர் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் முதல் கட்டமாக 1,875



1987 மார்ச் 2] (திரு. க. இராசாராம்)

ஆழ்துளை கிணறுகளை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. எந்தெந்த குடியிருப்புகளில் ஆழ்துளைக் கிணறு அமைக்க வேண்டுமென்ற பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அளித்துள்ளார்கள். இது வரை 283 ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 169 இடங்களில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 1,423 ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அனைத்தையும் இம்மாத இறுதிக்குள் அமைத்துவிட தீவிரமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இவற்றின் விவரங்கள் மாவட்ட வாரியாக கீழே தரப் பட்டுள்ளன.

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும் | | அமைக்கப்பட உள்ள குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை. | 28–2–1987 முடிய அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகள். | நடைபெற்று வரும் பணிகள். | மொத்தம் (3 பிளஸ் 4). |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| 1 | அண்ணா | 75 | 12 | 4 | 16 |
| 2 | செங்கற்பட்டு | 200 | 16 | 2 | 18 |
| 3 | கோயம்புத்தூர் | 200 | 43 | 11 | 54 |
| 4 | சிதம்பரனார் | 150 | 14 | 8 | 22 |
| 5 | தர்மபுரி | 50 | 20 | 4 | 24 |
| 6 | கன்னியாகுமரி | 150 | 33 | 15 | 48 |
| 7 | காமராஜர் | 100 | 9 | 6 | 15 |
| 8 | மதுரை | 150 | 19 | 13 | 32 |
| 9 | வடாற்காடு | 200 | 22 | 40 | 62 |
| 10 | புதுக்கோட்டை | 50 | .. | .. | .. |
| 11 | தென்னார்காடு | 100 | 4 | 4 | 9 |
| 12 | சேலம் | 50 | 35 | 8 | 43 |
| 13 | திருச்சிராப்பள்ளி | 150 | 33 | 33 | 66 |
| 14 | தஞ்சாவூர் | 50 | 2 | 7 | 9 |
| 15 | திருநெல்வேலி | 150 | 21 | 7 | 28 |
| 16 | இராமநாதபுரம் | 50 | .. | 6 | 6 |
| | மொத்தம் | 1,875 | 283 | 169 | 452 |

இக்குழாய்க் கிணறுகளை அமைப்பதற்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்குத் தக்க நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் அரசுத் துறைகளிடம் உள்ள ஆழ்துளை குழாய்க் கிணறுகள் தோண்டும் கருவிகள் போதுமானதாக இல்லாத காரணத்தினால் தனியார் ஆழ்துளை இயந்திரங்களை உபயோகித்துக்கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

[முற்பகல் 10–30)

இக்குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு முதல் கட்டமாக ரூபாய் 5 கோடியை அரசு அனுமதித்துள்ளது. (குறுக்கீடு)

1986–87 ஆம் ஆண்டில் கிராமக்குடிநீர் திட்டத்தின்கீழ் 7,609 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்துதர திட்டமிடப்பட்டு, 3,406 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை படிக்கும் நேரத்தில் உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்தில் அமர வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மேலும் இம்மாத இறுதிக்குள் சுமார் 250 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் கடந்த ஆண்டு வறட்சியின் போது 5,633 ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 1986–87 நிதியாண்டில் இதுவரை கிராம குடிநீர்த் திட்டங்களுக்காக, ரூ. 39.20 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களில் குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு லாரி மூலம் குடிநீர் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. அதுபோல கிராமப்புறங்களில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் தாய்மார்கள் பாதிக்கப்படாத வகையில் சிறிய நீர்த் தொட்டிகள் அமைத்து அருகிலுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து லாரி மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உலக வங்கி கடனுதவி திட்டத்தின்கீழ் ரூபாய் 149 கோடி செலவில் குடிநீர்த் திட்டப் பணிகளை மேற்கொண்டுள்ளது. அவற்றில் இவ்வாண்டு ஏப்ரல்



14 ஆம் தேதி கீழ்க்கண்ட 14 நடுத்தர மற்றும் சிறிய நகரங்களில் குடிநீர் வழங்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதனால் சுமார் 1,20,000 மக்கள் பயனடைவார்கள்.

1. பொன்னேரி
2. கும்மிடிப்பூண்டி
3. பள்ளிகொண்டா
4. அம்மூர்
5. பெண்ணாடம்
6. கிள்ளை
7. பெருமகளூர்
8. நீடாமங்கலம்
9. உடையார்பாளையம்
10. சென்னசமுத்திரம்
11. புதுவயல்
12. கண்டனூர்
13. கீரனூர்
14. வேடசந்தூர்.

மேலும் மே மாதம் இறுதிக்குள் மேற்கொண்டு 7 சிறு நகரங்களில் குடிநீர் வழங்கும் திட்டத்தினை முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சேலம் மற்றும் 13 சிறு நகரங்களுக்காக ரூ. 34.18 கோடி செலவில் குடிநீர் வசதி செய்து தர திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் பயனடைவார்கள்.

கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர் குடியிருப்புகளுக்கு நல்ல குடிநீர் நிலைகள் இல்லை. ஒரு குறிப்பிட்ட ஆழத்தில்தான் நல்ல நீர் கிடைக்கிறது. இப்பகுதிகளுக்கு நல்ல குடிநீர் வழங்க அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு உள்ளது. இதன் அடிப்படையில் தென்னாற்காடு மாவட்டம் மரக்காணம் பகுதியில் 38 இடங்களில் ஆழமில்லாத புதிய வகைக் கிணறுகளை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்புதிய முறைப்படி ஒரு குறிப்பிட்ட ஆழத்திற்குக் கிணறுகளை அமைத்து, கிணற்றின் அடி மட்டத்திற்குச் சற்று மேற்பகுதியில் வட்ட ஆர அமைப்புகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம் நல்ல நீரைச் சேகரித்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

நகரப் பகுதிகளில் மே மாத இறுதிக்குள் 24 நடுத்தர மற்றும் சிறிய நகரங்களில் நடைபெறும் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, மக்களுக்கு குடிநீர் வழங்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3. அறிவிப்புகள்.

#### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 9 (1) வது விதியின் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன் :—

1. திரு. மா. சின்னராசு.
2. டாக்டர் கே. சமரசம்
3. திரு. கே. குப்புசாமி
4. திரு. செ. செம்மலை
5. திரு. டி. ஆர். வேங்கடரமணன்.

### 4. தகவல் கோரல்.

#### (அ) கட்சியிலிருந்து நீக்கப்பெற்ற உறுப்பினர்கள் குறித்து

(சில உறுப்பினர்கள் எழுந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டரா? அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையின் மீதா? (குறுக்கீடு) அவை நடவடிக்கைகள் பற்றி வருமேயானால் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம். மற்றபடி முக்கியமானதாக இருந்தால் என்னுடைய அறையில் கேட்டு, அமைச்சரைக் கேட்டு எழுப்பலாமென்று சொன்னேன் (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்களிடம் காலையிலே சொன்னேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு எழுப்புங்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு) எதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கிறீர்கள் ?

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை நடவடிக்கை குறித்து என்றால் எழுப்பலாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சில மாதங்களுக்கு முன்பாக எனது சக சட்டமன்ற உறுப்பினர்களான திரு. இரா. தாமரைக்கனி அவர்களும், திருநெகமம் கந்தசாமி அவர்களும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாக.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பதில் சொல்லக் கூடிய விவரங்களை என்னுடைய அறைக்கு வந்து தெரிந்து கொள்ளுங்கள். (குறுக்கீடு) இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை.





திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைச் சபாநாயகர் அவர்களே, பாய்ண்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அறிவித்த அந்த அறிவிப்பிலிருந்து என்னுடைய கேள்வி எழுகிறது. கிராமப்புறங்களில் குழாய்க் கிணறுகள் போடுகின்றனர்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையின் மீது எந்தவிதமான விவாதமும் கூடாது. அது நடைமுறை அல்ல. (குறுக்கீடுகள்) பேசும்போது உறுப்பினர்கள் விவாதத்தில் பேசிக்கொள்ளலாம். அவை நடவடிக்கை குறித்ததாக இருக்கும் என்றுதான் நான் எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்களைப் பேச அனுமதித்தேன். வேறு வார்த்தைகளைப் பேசுவது சரியல்ல. (குறுக்கீடுகள்) பி.ஏ.சி.யிலே நேரம் பற்றிப் பேசலாம். அங்கே பேசலாம். அமைச்சர் அறிக்கையின் மீது பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது.

#### (ஆ) விவசாயக் கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் குறித்து.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது தமிழக அரசு விவசாயிகளுக்குக் கடன்களைத் திருப்பிச் செலுத்த 28-2-1987 வரையில் அனுமதி அளித்திருக்கின்றது. அதற்காக விவசாயிகள் சார்பாக நன்றி சொல்லிக் கொள்கிறேன். விவசாயிகள் இன்னும் கால அவகாசம் கேட்டிருக்கின்றார்கள். அரசு இன்னும் 15 தேதி வரைக்கும் அனுமதி அளித்தால் நிச்சயமாகக் கட்டிவிடுவார்கள். அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கொள்கை விவகாரமாக இருக்கின்றது. இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டாம்.

### 5. அறிக்கை அளித்தல்.

#### பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையினை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

''இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1970–71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள பொது நிறுவனங்கள் தொடர்பான பத்திகளின் மீதான குழுவின் (1980–81) பத்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் (சிவில் இனங்கள்) மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை.''

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

#### (ஆ) எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1987-ம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 6. அரசினர் சட்ட முன் வடிவுகள்

#### (அ) எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

#### (ஆ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல் ) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."







திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக கட்டத்திலேயே இச்சட்ட முன்வடிவை எதிர்த்துப் பேச விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : your objection is recorded உறுப்பினர் அவர்கள் விவாதத்திற்கு வரும்போது பேசலாம்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்ட்ரடொக்ஷனிலேயே கூட பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்தின் போது பேசலாம் ; I will give you more time

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

"1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ஆம் தேதியன்று சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

(முற்பகல் 10-40)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இத்தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

---

* 165—175ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

*176—189ம் பக்கங்களில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் படிக்கப்பெற்ற ஆளுநர் பேருரையின் தமிழாக்கம் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

*டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் 1987ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ஆம் தேதியன்று சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் என்னுடைய உணர்வு களை இம்மன்றத்தில் பகிர்ந்துகொள்வதில் பெருமைப்படு கிறேன். நம்மை எல்லாம் வளர்த்து ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு நல்ல கருத்தை நம்மிடத்தில் தந்து விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

Dear Brother,

G› to the reeple ; live am·ng them ; l·rn f· m them ; love them ; s.rve them , plan for them ! start with wh· t·h y kn·w ; b·il· ·n what they h·ve."

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அப்படிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்தக் கருத்தை நம்மிடத்தில் வலியுறுத்திவிட்டு சென்றிருக்கிறார்களோ அந்தக் கருத்துக்கு இலக்கணமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்த வழியிலே தன்னுடைய ஆட்சியை நடத்திக்கொண் டிருக்கிறது என்பதற்கு இலக்கணமாக மேதகு ஆளுநர் அவர்களுடைய பேருரை அமைந்திருந்தது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக பல்வேறு திட்டங்களை ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே சொல்லியிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் ஒவ்வொன்றாக பகுத்துப் பிரித்துப் பார்க்கின்றபோது ஒவ்வொன்றும் மக்கள் முன்னேற்றத்தின் அடிப்படையிலே சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்களாக அமைந்திருக்கின்றன என்பது நமக்கு மிகத் தெளிவாக தெரியும்.

கள் இறக்கும் தொழிலாளர்கள் 30 ஆயிரம் பே· வேலை வாய்ப்பை இழப்பார்கள் என்ற வகையிலே ஒரு கூக்குரல எழும்பியது. கள், சாராயம், தேவையா இல்லையா என்பது வேறு பிரச்சினை, அது தேவையா என்று வருகின்றபோது நடைமுறை எப்படி இருந்தாலும், நாட்டு நிலை எப்படி இருந்தாலும் பொதுவாக அது தேவையற்றது என்று பல முன்னோர்கள், ஆன்றோர்கள் எல்லாம் இங்கே எடுத்து வைத்துள்ள கருத்துக்களை எல்லாம் வரையறுத்துப் பார்த்து எவ்வளவு சங்கடம் ஏற்பட்டாலும், எவ்வளவு நஷ்டம் ஏற் பட்டாலும் அதனைத் தவிர்க்க வேண்டும் சொல்லப்பட்டுள்ள நல்ல கருத்துக்களை ஏற்க வேண்டுமென்ற புனித அடிப்படை யில் ஏற்று அதனை இந்த அரசு நடைமுறைப்படுத்துகிறது.





இந்தச் சூழ்நிலையில் 30 ஆயிரம் பேருக்கு மேல் சாதாரண பனை மரம் ஏறும் தொழிலாளர்களுடைய வாழ்க்கை போய் விட்டது என்கிற நிலை ஏற்பட்டது. அதன் அடிப்படையில் வணக்கத்திற்குரிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கள் இறக்கும் தொழிலாளர்கள் கள்ளை இறக்குவதற் கான வாய்ப்பு இல்லையென்ற நேரத்தில் அவர்கள் பதநீர் இறக்குவது, பனைவெல்லம் தயாரிப்பது பனை தொடர் புடைய பொருள்களைத் தயாரிப்பது போன்ற வேலைகளில் ஈடுபடலாம் என்றும், அப்படி ஈடுபடும் அந்தத் தொழிலாளர் களுக்கு ரூபாய் 2 ஆயிரம் கொடுக்கிறோம் என்றும் இந்த அரசு அறிவிப்பு செய்திருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. எந்தக் கட்சி ஆண்டாலும் மக்கள் உழைக்காவிட்டால் நாடு முன்னேறாது. இந்த நிலையில் மரம் ஏறும் தொழிலை மேற்கொண்டு இருக்கும் அவர்கள் வேறு தொழிலில் ஈடுபட்டால் தான் நாட்டின் நலன் சிறக்கும் என்ற அடிப்படையில் இத்திட் டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

இன்னும் அடுத்து வருகின்றபோது வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்த வரையில் 'ஆளுக்கு ஒரு வீடு கட்டுவோம், அதிலே ஆயக் கலைகளை சீராக பயில்வோம்' என்று ஒரு முறை சொன்னோம். அப்படி சொல்கின்ற நேரத்தில் கூட பலர், பல நேரங்களில், பல முறையில் விமர்சனம் செய்தார்கள். அதற்கெல்லாம் நான் இங்கே பதில் சொல்லாவிட்டாலும்கூட ஒன்றை எண்ணிப்பார்க்க வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 'கிளறாத சோறு, வேகாது, சீவாத தலை படியாது, துவைக்காத துணி வெளுக்காது, விளக்காத உண்மை வீணாகிப் போய்விடும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப் படையில் வீடுகள் கட்டும் திட்டத்தைப் பொறுத்த வரையில் சில விளக்கங்களை மன்ற உறுப்பினர்களுக்கும் நாட்டுக்கும் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இதைப்பற்றி பலர் பலவற்றைச் சொல்கிறார்கள். ஏற்கெனவே இங்கே ஆட்சி செய்தவர்கள், அப்படி ஆட்சி செய்து விட்டு ஆட்சி செய்கின்ற தகுதியை மக்களால் இழந்தவர்கள், இன்றைக்கு வெளியிலே பேசும்பொழுது கூட பல கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் சொல்லக்கூடிய இந்தத் திட்டங்களெல்லாம் உள்ளாட்சித் தேர்தலை மனத்தில் வைத்துத்தான் சொல்லப்பட்டது என்று சொன்னார்கள். வீடு கட்டுகின்ற திட்டம், ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கக் கூடிய திட்டம், நலிந்த பிரிவினர்களுக்கு வீடு கட்டும் திட்டங்க ளெல்லாம் உள்ளாட்சித் தேர்தலை மனதில் வைத்துத்தான்

சொல்லப்பட்டது என்று சொன்னார்கள். அப்படிச் சொன்ன திட்டங்கள் நிறைவேறவில்லை. இன்றைக்கு 'குன்றம் சிறுத்து குப்பை மேடாகி விட்டது' என்றெல்லாம் சொல்கிறார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் உள்ளாட்சித் தேர்தலையோ அல்லது பொதுத் தேர்தலையோ அல்லது அரசியலையோ பின்னணியாக வைத்து இந்தச் சமுதாய நலத் திட்டங்களைப் போடக் கூடியது அல்லது என்பதை மட்டும் மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இந்தத் தமிழகத்திலே இதுவரையிலேயும் கட்டியிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை, அதனால் பலன் பெற்றவர்களின் எண்ணிக்கை எந்த அளவிற்கு இருக்கிறது என்று பார்க்கின்றபொழுது, இந்தியத் துணைக் கண்டமே பிரமிக்கத்தக்க வகையிலே இருக்கிறது. 1947 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரையிலேயும் முப்பதாண்டு காலமாக பலபேர்கள் முயன்று செய்து முடிந்தவைகளைவிட, தேவைகளைவிட, அவர்களுடைய சேவைகளைவிட மிகச் சிறந்த சேவையை மிகச் சிறப்பாகச் செய்து காட்டியிருக்கிறது என்கின்ற உண்மை நாட்டுக்குத் தெரியும். அந்த அடிப்படையிலேதான் அவற்றை நாங்கள் செய்தோம். ஆனால் அதற்கும்கூட இங்கே ஏற்கனவே ஆண்டவர்கள் ஒரு விமர்சனத்தைச் சொன்னார்கள். இவர்கள் சொன்னது நலிவுற்ற பிரிவினருக்கு என்று, ஆனால் வீட்டு வசதித் திட்டத்தை எடுத்துக் கொண்டால் கூட மந்திரிக்குக்கூட கட்டப்பட்டிருக்கிறது என்று வெளியிலே சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்குச் சொல்வேன், வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக உயர்ந்தவர்களுக்கு, படித்தவர்களுக்கு, அதிகாரிகளுக்கு, வியாபாரிகளுக்கு என்று ஏற்படுத்திக் கொடுப்பதோடு, மட்டுமல்லாமல், எல்.ஐ.ஜி. என்ற வகையில், அதாவது லோ இன்கம் குருப் என்ற நிலையில் இருக்கக்கூடிய மிகக் கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்கும், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மிகக் கீழான நிலையிலே இருப்பவர்களுக்கும் நாம் பல்வேறு வகைகளிலேயும் வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

1986 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை அறிவித்தபிறகு, பல்வகைகளிலே நாம் இந்த வீடுகளைக் கட்டும் திட்டத்தை நிறைவேற்றி வந்திருக்கிறோம். உதாரணத்திற்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதி காவேரிப்பட்டினம். அதிலே ஒரு ஒன்றியம்-காவேரிப்பட்டினம் ஒன்றியம். அந்த ஒன்றியத்தின் மொத்த மக்கள் தொகை 36,591. இது காவேரிப்பட்டினம் ஒன்றியத்தில்-காவேரிப்பட்டினம் தொகுதி அல்ல. காவேரிப்பட்டினம் ஒன்றியம், அங்கே இருக்கின்ற ஆதிதிராவிட மக்கள் மட்டும் 11,204. இதுவரையிலேயும் அந்த யூனியனிலே



கட்டியிருக்கும் வீடுகள் 790. அது மட்டுமல்ல, 1986 ஆம் ஆண்டுக்குப் பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அளித்துள்ள புனிதத் திட்டத்தின் அடிப்படையிலே காலனிகளிலேயும் வீடுகள், ஒவ்வொரு கிராமத்திலேயும் 15 வீடுகள், 20 வீடுகள், 25 வீடுகள், 50 வீடுகள் என்று வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கே ரேடியோ, டெலிவிஷன் வைத்துக்கொள்ள அறை; கழிவு நீர்க் கால்வாய், கழிவறை; ஒவ்வொரு வீட்டுக்கும், குடிதண்ணீர் வசதி, பாதை வசதி, மின்னிணைப்பு வசதி ஆகியவை செய்யப்பட்டிருக்கின்றன. 1986 ஆம் ஆண்டுக்குப் பிறகு, இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதற்குப் பிறகு, சாதாரண ஆதி திராவிடர்களுக்கு என்னுடைய ஒரு ஒன்றியத்தில் மட்டும் இவ்வளவு பணிகள் நடைபெற்றிருக்கின்றன. நேற்றைக்கு இது பற்றிய கணக்கை, அதிகாரிகளிடமும், சேர்மனிடமும் வாங்கி வந்திருக்கிறேன், இதைப் பார்த்த பிறகு.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற சொல்லுக்கு இலக்கணமாக நாங்கள் எங்கள் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இதையெல்லாம் பார்த்து விட்டு, ''குன்றம் சிறுத்து குப்பை மேடானது'' என்று சொல்கிறார்கள். அவர்கள் நிலை அப்படி. குன்றத்திலே இருந்தவர்கள் குப்பை மேட்டிற்குப் போன பிறகு, இடத்திற்குத் தகுந்தாற்போல் சொற்களைக் கையாள வேண்டிய அவசியம் வந்து விட்டதற்காக நான்கூட வருந்துகிறேன்.

(முற்பகல் 10–50)

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கவர்னர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது பேசுகின்ற பொழுது, கிராமப் புறங்களில் வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆனால் அவர்கள் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் அனைத்தும் மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவியால்—ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் மூலம் சாலை அமைப்பு, கழிவு நீர்க் கால்வாய் வசதி போன்ற வசதிகள்—செய்து தரப்படுகின்றன. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநில அரசினுடைய திட்டம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*டாக்டர் கே. சமரசம்: துணைத் தலைவரவர்களே, குடும்பம் என்றால் புருஷன்-பெண்டாட்டி. அரசாங்கம் என்றால் மத்திய—மாநில அரசுகள்தான். தமிழக அரசு மட்டும் செய்தது என்று நான் சொல்லவில்லை. தமிழக அரசு அதை நிர்வகித்து

வருகிறது; செயல்படுத்தி வருகிறது; நாட்டு மக்களுக்குச்
செய்து கொண்டிருக்கிறது. இதிலே மத்திய அரசு மக்கள்,
மாநில அரசு மக்கள் என்று வித்தியாசம் இல்லை. மத்திய
அரசு செய்கிறது என்று சொல்கிறார்கள். அப்படியானால்
மத்திய அரசு மக்கள் வேறு இருக்கிறார்களா? மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் இதை முதலிலே புரிந்து கொள்ள
வேண்டும். இதற்கு வேறு, அதற்கு வேறு என்று ஏதாவது
இருந்தால் நான் அவர்களுடைய கேள்விக்குப் பொருத்தமாக
இன்னொன்றைச் சொல்ல முடியும். இப்போது அதற்கு அவசிய
மில்லை. மத்திய-மாநில அரசுகள் உறவுக்கு இது சிறப்பாக
இருக்கிறது; பெருமை கொள்ளக் கூடியதாக இருக்கிறது என்
பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப் பல்வேறு நல்ல திட்டங்களை நிறைவேற்றி, இந்
தியத் துணைக் கண்டத்திலே சீனியர் சீஃப் மினிஸ்டர் என்ற
வகையில் நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர்.
அவர்கள் இருக்கிறார்கள். வேறு எந்த மாநில முதலமைச்சரும்
நாட்டு நலனுக்காக, நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக மத்திய
அரசுடன் வாதாடி, போராடி பெறுவதைவிட அதிக அளவில்
மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கிற நம்முடைய முதல்வர்
எம்.ஜி.ஆர். அவர்கள் மத்திய நிர்வாகத்தை வற்புறுத்தி,
அதிகம் பெற்று காரியங்களைச் செய்கிறார்கள் என்பதை
எண்ணிப் பார்த்து நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டும்;
அந்த வகையில் இருக்க வேண்டுமென்று எங்களுடைய தோழ
மைக் கட்சி நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் மக்களுடைய நல் வாழ்விற்
காக நற்பணியாற்ற பல்வேறு வகைகளில், கிடைக்கின்ற உதவி
களை—உதவி எங்கே இருந்து வந்தாலும், மத்திய அரசாக
இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, வங்கியிட
மிருந்தாலும் சரி, தனியாரிடம் இருந்தாலும் சரி, உலகத்தில்
எந்த மூலை முடுக்குகளில் இருந்தாலும்—பயன்படுத்திக் கொள்
ளுகின்ற அந்தத்திறமையை, எண்ணத்தை மாண்புமிகு புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைத் தவிர, வேறு எவரும்
பெற்றிருக்கவில்லை என்ற கருத்தை முன்வைக்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. விலைவாசிப் பிரச்சினை இருக்கிறது.
பஞ்சத்தைப் பற்றி, பசியைப் பற்றி, பட்டினியைப் பற்றி எல்
லாம் பேசுகிறோம். முன்பு சிலர் ஆட்சி செய்கிறபோது ரேஷன்
கார்டு கொடுத்து, ரேஷன் அரிசி வாங்கச் சென்று தாய்மார்கள்
வரிசையில் நின்று, கடைசியில் குழந்தையைப் பெற்று கையிலே
எடுத்துச் சென்றார்கள் என்று பழங்கதை சொல்வார்கள்.
அந்தக் கதை இப்போது இல்லை. தொழிலாளர்கள், நலிந்த
வர்கள், ஆதி திராவிட மக்கள், மலைசாதி மக்கள் என்று இப்படி





சராசரி நிலையில் இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் அவர்களுடைய
வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்கின்ற
வகையில் ஒரு ரூபாய் நாற்பது பைசாவுக்கு ஒரு கிலோ அரிசி
என்ற வகையில் 38,000 குடும்பங்களுக்கு மேல் அரிசி, கோதுமை
வழங்குகிறோம். இதிலே கூட இரண்டு அரசுகளும் இருக்கலாம்.
இப்படி இருப்பதிலே தவறு என்ன? நாம் யாருக்குத் துணையாக
யாரோடு இணைந்திருக்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா
அவர்கள் சொன்னார்களோ அந்த அடிப்படையிலே இந்த
ஆளுநர் உரை அமைந்திருக்கிறது; மாண்புமிகு முதல்வர் புரட்
சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்
களுடைய தத்துவத்தின் அடிப்படையிலே ஒவ்வொரு திட்டத்
தையும் நிறைவேற்றி வருகிறார்கள் என்பதற்கு இவை எல்லாம்
எடுத்துக் காட்டு என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்பு
கிறேன்.

உணவுப் பங்கீடு முறையில் இல்லாதவர்களுக்கு, ஏழை எளிய
மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்
கக்கூடிய வகையில் இந்த அரசு செயலாற்றி வருகிறது. அந்த
அடிப்படையிலே இது ஒரு மக்கள் ஆட்சித் தத்துவத்தின் மகத்து
வமாக இருக்கிறது என்பதைப் பணிவன்போடு சொல்லிக்
கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, காலணித் திட்டம். அதாவது செருப்பு வழங்கும்
திட்டம். இது சிலருக்கு சிரிப்பாக இருக்கலாம். இந்தக் காலணி
வழங்கும் திட்டம் இருக்கிறதே, இதனால் பயன்படக் கூடியவர்
கள் எத்தனை பேர்? ஒரு கோடி பேர். ஒரு கோடி பேர் பயன்
படக்கூடிய ஒரு உயரிய திட்டம் இது. முதலில் புதிர், முடிவில்
புதுமை. அவரே புரட்சித் தலைவர். ஒரு நாட்டின் எதிர்கால
இளம் சிங்கங்களை உருவாக்க வேண்டுமென்று திட்டமிட்டு
செயல்படுத்தக் கூடிய வகையில் காரியங்களை நடைமுறைப்
படுத்தத் தெரிந்திருக்கிற ஒருவர் இருக்கிறார் என்றால் அவர்
நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.
ஆர். அவர்களைத் தவிர வேறு ஒருவர் இருக்க முடியாது. வசதி
யானவர்களாக இருந்தாலும், வசதியற்றவர்களாக இருந்தாலும்
அமெரிக்காவில் இருந்தாலும் சரி, ரஷ்யாவில் இருந்தாலும் சரி,
இந்தத் திட்டத்தை மதிப்பீடு செய்து, இந்தத் திட்டத்தில்
இருக்கிற உணர்வை எண்ணிப் பார்த்து— இந்த அரும்பெரும்
திட்டத்தை கம்யூனிஸ்ட் கட்சியினரும் வரவேற்பார்கள் என்று
நான் நம்புகிறேன்.

காரணம் இது ஒரு அடிப்படைத் திட்டம். 75 இலட்சம்
குழந்தைகள் இதனால் பயன் பெறுகிறார்கள். 25 இலட்சம்
தாய்மார்களுக்கு மேல் இதிலே பயன்பெற முடியும். ஒருவர்
சொன்னார்—பழக்கத்தை விதை, ஒழுக்கத்தை அறுவடை செய்
என்று. ஆகவே பழக்கத்தை விதைத்து, ஒழுக்கத்தை அறுவடை

செய்வதற்காக உருவாக்கப்பட்ட திட்டம் தான் இந்த பிஞ்சுக் குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் காலணி வழங்கும் திட்டம். சமுதாய வளர்ச்சிக்குப் பாடுபடுபவன்தான் சரித்திர நாயகன் என்று சொன்னார்கள். அந்த சமுதாய வளர்ச்சிக்காகப் பாடு படக்கூடிய ஒப்பற்ற தலைவராக இருக்கக்கூடிய காரணத் தால்தான் உடல்நலம் இல்லாமல் அமெரிக்காவில் இருந்தாலும் கூட அவரும், அவரைச் சார்ந்துள்ள கட்சியினரும் அமோக வெற்றி பெற முடிகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். A sound mind in a s und body என்று சொன்னார்கள். அந்த இலக்கணத்திற்கேற்ப உருவானதுதான் இந்தத் திட்டம் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

காந்தியடிகள் கூட ஒரு காலத்தில் சொன்னார்கள் : "Man is the best machines" என்று. இந்தியா போன்ற ஏராளமான ஜனத் தொகை கொண்ட நாட்டில் ஜனத்தொகை மிக அதிக அளவில் இருக்கிற இந்நிலையில் அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். கம்பியூட்டர் வந்தால் எதிர்ப்பு; டைப்ரைட்டர் வந்தாலே எதிர்ப்பு என்கின்ற நிலைமை இருக் கிறது. அப்படிப்பட்ட நிலைமையில் இவற்றை எல்லாம் உருவாக்கிவிட்ட நிலைமையில், வாழ்கிற அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிற திட்டங்களை உருவாக்கக்கூடியவர்கள் தான் நல்ல அரசியல்வாதியாக, நாட்டின் தலைமகனாக இருக்க முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாங்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல, மகாத்மா காந்தி எப்படி தன்னுடைய வாழ்க்கையை நடத்தினார்கள், இந்தியாவை எப்படிப் படம் பிடித்து உலகிற்குக் காட்டினார்கள் என்பதை எல்லாம் யாரும் மறந்துவிடக் கூடாது. அந்த அடிப்படையே இப்போது மீண்டும் தேவை என்ற அளவுக்குத்தான் நாட்டின் நிலை இருக் கிறது என்பதையும் யாரும் மறந்து விடக் கூடாது. இப்படிப் பட்ட சூழ்நிலையில் சாதாரணமாக நாம் பயன்படுத்தக்கூடிய பென்சில், பேனா, பூட்டு, சாவி இவைகளைப் பொறுத்தவரை யில் எல்லாம் கூட தோழர்களால், தொண்டர்களால், அடி மட்டத்தில் இருக்கக் கூடியவர்களால் தயாரிக்கப்படக் கூடிய பொருட்களைத்தான் பயன்படுத்த வேண்டும் என்ற நிலை வந் தால்தான் இவர்கள் எல்லோரும் வேலை வாய்ப்பு பெற முடியும். இல்லாவிட்டால் அது முடியாது.

லேபர் இன்டென்சிவ் என்பது வேறு. கேப்பிட்டல் இன் டென்சிவ் என்பது வேறு. இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் லேபர் இன்டென்சிவ் மிக மிகத் தேவை. ஒரு ஆள் வேலைக்குப்





போகவேண்டும் என்றால், அமெரிக்கா போன்ற நாடுகளில் — கேப்பிட்டல் இன்டென்சிவ் என்று வைத்துக் கொண்டால் 50 இலட்சம் ரூபாய் தேவை. ஆனால் குறைந்த முதலீடு, அதிகம் பேருக்கு வேலை வாய்ப்பு ஆகியவற்றை உருவாக்க வேண்டு மென்றால், இதைவிடச் சிறந்த திட்டத்தை யாரும் கொண்டு வந்துவிட முடியாது. இப்படிப்பட்ட திட்டத்தைப் பார்த்து சிலர் சங்கடப்படுகிறார்கள்; கிண்டல் செய்கிறார்கள்; கேலி செய்கிறார்கள் என்று சொன்னால்— காலையில் ஒரு சில்க் சட்டை மாலையில் ஒரு சில்க் சட்டை; அதற்கேற்றாற்போல் துண்டு, கண்ணாடி, பேனா, செருப்பு உட்பட அனைத்தும் ஒரே யூனி பாரமாக இருக்க வேண்டுமென்ற வகையில் போட்டுக் கொண் டிருப்பவர்களுக்கு இது விலா நோக சிரிக்கக்கூடியதாகக் கூட இருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட திட்டத்தைப் பார்த்து இதனால் பலன் பெறக்கூடிய தொழிலாளர்கள், ஏழைகள், பிஞ்சுக் குழந்தைகள் எப்போதோ புரட்சித் தலைவர் அவர்கள் பாடி வைத்த பாட்டை இன்று பாடுகிறார்கள். ''அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் அது ஆணவச் சிரிப்பு; இங்கே நாம் சிரிக்கும் புன்சிரிப்போ ஆனந்தச் சிரிப்பு '' என்று எதிர்காலத்தை நினைந்து அவர்கள் பாடிக் கொண்டிருப்பதை மனக்கண்ணால் இந்த மன்றமே பார்த்துக் கொண்டிருக்கிறது, என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உழைப்பும், உயர்ந்த கடமை நோக்கமும் உடையவன்தான் தலைவன். அதாவது தலைவன் என்பதற்கு இலக்கணம் என்ன என்று பார்த்தால், உழைப்பும், உயர்ந்த கடமை நோக்கமும் உடையவன்தான் தலைவன் என்று சொன்னார்கள். இன் னொன்றையும் இன்னொருவர் சொல்லிவிட்டுச் சென்றிருக் கிறார். அதாவது ''அன்பில்லாதவர்களிடத்தில் அறிவை எதிர் பார்க்காதே'' என்று. எனவே உழைப்பும், உயர்ந்த கடமை நோக்கமும் கொண்ட தலைவர் கொண்டு வரக்கூடிய திட்டத் தைப் பற்றி அன்பில்லாதவர்களிடத்தில் போய்க் கேட்டு அவர் களுடைய அறிவை எல்லாம் எதிர்பார்த்து காரியத்தில் இறங் காதே என்றும் ஒரு அறிஞர் சொல்லிவிட்டுப் போய் இருக்கிறார். செய்நன்றி மறப்பவர்கள் தன்னைத்தானே அநாதையாக்கிக் கொள்கிறார்கள். அப்படி செய்நன்றி மறந்து தன்னைத்தானே அநாதை ஆக்கிக் கொண்டிருப்பவர்கள் ஆயிரம் விமர்சனம் செய்தாலும் அதைப்பற்றி எல்லாம் கவலைப்படுவதில்லை நாங் கள். நெருப்பாற்றிலே நீந்தி வந்தவர்கள், வெய்யில் பட்டு கருகிவிட மாட்டோம்; வாடிவிட மாட்டோம், எங்களது பணி தொடரும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[டாக்டர் சே. சமரசம்] [1987 மார்ச் 2

இன்றைய தினம் வறட்சி மீட்புப் பணி மற்றும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற பணி ஆகிய வகையில் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு விரிவான அறிக்கையை இங்கே வைத்தார்கள். அந்த அறிக்கையைப் பார்த்த பிறகு இதிலே எந்த அளவுக்கு நாம் நம்முடைய கருத்தை, நம்முடைய செயலை, நம்முடைய உணர்வைப் பகிர்ந்து கொள்கிறோம். நாட்டு நலப் பணிகளில் நாம் எப்படி இருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். ஆனால் ''மந்திரி நமது மாநிலத்தில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா'' என்று கேட்கிற நிலை யாருக்கோ இருந்தது.

(முற்பகல் 11–00)

அதை உணர்ந்த காரணத்தினால், அப்படிப்பட்டவர்கள் செய்நன்றி மறந்து அநாதையாகிவிட்ட காரணத்தினால், அவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து அதை ஒரு படிப் பிணையாக, பாடமாக ஏற்று நாம் செயல்பட வேண்டும். வறட்சி வருவதற்கு முன்பாகவே அதை எதிர்த்துத் தடுக்கக் கூடிய முறையில் ஒரு புரட்சியை உருவாக்கக் கூடிய முறையில் அதை எதிர்த்துப் பேராடக் கூடிய வகையில் தேவையான திட்டங்களை இன்றையதினம் போட்டிருக்கிறோம் என்பதை நான் இங்கேச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டும் அல்ல, இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஒன்றைச் சொல்லலாம். பேராசிரியர் மு. வ. அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ''உலகம் திருந்த உள்ளம் திருந்த வேண்டும்'' என்று சொன்னார்கள். அப்படி ஒவ்வொரு பிரச்சினையும் வருகிறபோது அதை மனிதாபி மானத்தோடு எண்ணிப் பார்க்க வேண்டும். உதாரண மாகச் சொன்னால் கொசு ஒழிப்புத் திட்டம். கொசு ஒழிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் கொசு மருந்து அடித்து விட்டால் மட்டும் போதாது. கொசுவை ஒழிப்பதற்கு மருந்தும் அடிக்க வேண்டும், அதே நேரத்தில் சாக்கடை நீரும் தேங்கிக் கிடக்காமல் போக்கியாக வேண்டும். அப்படி இரண்டு நிலைகளிலேயும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால்தான் அந்தக் கொசு ஒழிப்புத் திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்ற முடியும். அந்த வகையில்தான் டாக்டர் மு. வ. அவர்களும் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை யில்தான் நாமும் செய்கிறோம்.

அதேபோல் இன்னொன்றைச் சொல்ல வேண்டும். சென் னையிலே இருக்கிற தமிழன் ரோட்டிலே எச்சில் துப்பு கிறானே என்று ஒருவர் சொன்னால் தமிழர்களே இப்படித்தான் என்று சிலர் சொல்வார்கள். சிங்கப்பூரிலே இருக்கிற தமிழன்



1987 மார்ச் 2] [டாக்டர் கே. சமரசம்]

எச்சில் ரோட்டிலே துப்புவதில்லையே. ஏன்? சென்னையிலே இருக் கிற தமிழன் மட்டும் துப்புகிறான் என்று சிலர் கேட்கிறார்கள். அது பழக்க தோஷம். அப்படிப் பழக்கத்திலே வரும் சில முறைகளை மாற்றி, நல்ல முறையில் அமைப்பதுதான் அரசாங் கத்தின் கடமை. அந்த வகையிலேதான் படிப்படியாக பல நல்ல திட்டங்களைப் போட்டுக் கொண்டு வருகிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, நம்முடைய ஆளுநர் உரையிலே பல் வேறு திட்டங்களைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலே, கொடைக்கானலிலே ஒலி—ஒளி பரப்பு நிலை யம், தொலைக்காட்சி நிலையம் அமைத்து, நிகழ்ச்சிகளை 'ரிலே' பண்ண முடியும் என்ற நிலையில் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தியாவிலே இருக்கிற மாநிலங்களில் இப்படித் தலைநகர் அல்லாத இன்னொரு மாவட்டத்தில் தொலைக்காட்சி நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நம் முடைய பாரதப் பிரதமருக்கும் இருக்கின்ற நல் உறவின் காரணமாகத்தான் சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் ஒளி பரப்புகளை கொடைக்கானல் தொலைக்காட்சி நிலை யத்திற்கு 'ரிலே' செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டி ருக்கிறது. அதனால் இந்த நாட்டிலே இருக்கிற அனைவரும் உலகச் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடிகிறது. காலையில் பிரதமர் அவர்கள் பட்ஜெட்டை சமர்ப்பிக்கிறார் என்று சொன்னால் தமிழகத்திலே இருக்கிற உழவன் கூட அதை உடனே தெரிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அப்போதே முழுவதுமாகத் தெரிந்து கொள்ள முடியாவிட்டாலும், அன்று மாலையே முழுச் செய்தியும் நேரிலேயே பார்த்து தெரிந்து கொள்ள முடிகி றது.

இந்தக் கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையத்தை ஆடம்பரம் என்று சிலர் சொல்லலாம். இன்றைய ஆடம் பரம் நாளைய அவசியத் தேவை என்ற அடிப்படையிலேதான் கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையம் அமைக்கப்பட்டி ருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்களின் வற்புறுத்தலால் தான் பொது மக்கள் மத்தியிலே ஒரு மகிழ்ச்சியை உண் டாக்கக் கூடிய வகையில் உலகச் செய்திகளை எல்லா மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டி ருக்கிறது. அதற்குக் காரணகர்த்தாவாக அவர்கள் விளங்கி யிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேறு சில பிரச்சினைகளைப் பற்றி நண்பர்கள் சொன்னார்கள். இங்கே எந்தத் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொன்னாலும் அது மத்திய அரசின் திட்டமா, மாநில அரசின் திட்டமா என்று சொல்லச் சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லவேண்டுமென்றால் அல்லது பிரதமரும், முதலமைச்சரும் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டுமென்றால், அந்த உறவு முறை பூனை தன் குட்டியை கவ்விச் செல்வது போன்று இருக்க வேண்டும். அப்படியில்லாமல் பூனை எலியைக் கடித்துக் குதறுவது போன்று இருக்குமானால் அது நல்ல நட்பாகாது. அது நாட்டுக்கே ஆபத்து. அந்த நிலையிலே எதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த ஆளுநர் உரையிலே ஊட்டியிலே 170 கோடி ருபாய் செலவில் எக்ஸ்-கதிர் படச்சுருள் தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவுவதற்கும், மணலியிலே ரூ. 600 கோடி செலவில் எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பதற்கும் அனுமதி அளித்து அதற்கு உலக வங்கியின் கடனைப் பெறுவதற்கும் வழிவகை செய்திருப்பது பற்றி நன்றி தெரிவித்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், மிகப் பெருமைபடக் கூடிய வகையில் இரு அரசுகளுக்கும் உறவு முறை இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து பெருமைப்பட வேண்டும். ஆனால் சிலர்—அவர்களை தேசிய சக்திகள் என்று சொல்ல மாட்டேன்—தேசியத்தில் சில தீங்கான சக்திகள். ஒரு கலெக்டரிடத்தில் போவது, ஒரு மனுவைக் கொடுப்பது, அந்த மனுவை நிறைவேற்றுவதற்கு முன்பாகவே கூறுவது, ''இப்போதுதான் பெரியவர் வந்தார். பார்த்துப் பேசி விட்டோம். நாங்கள் ரொம்ப நல்லாவே இருக்கிறோம். நாங்கள் சொன்னோம். 60, 40 வைத்துக் கொள்ளலாம் என்று. அப்புறம் சி-எம்மும், பி-எம்மும் பார்த்தார்கள். 50, 50 வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு கட்டிவிட்டார்கள். அதற்கு சரியென்று விட்டுவிட்டோம். அடுத்த வாரம் போய்விடும். அடுத்த மாதம் எலக்ஷன். இதைப் பேசி முடித்து விடலாமென்கிற நிலையில்'' சொல்கிற அளவிற்கு தேசியத்தில் சில தீங்கான சக்திகள் ஈடுபட்டு, வதந்திகளைக் கிளப்பி, வாதங்களை உருவாக்கி, நியாயங்களை எதிர்பார்க்கிறவர்களை நீங்கள் களையெடுக்கத் தவறினால், நிலைமை சரியாக இருக்காது என்பதை மட்டும் சம்பந்தப் பட்டவர்களுக்கு நான் இந்த மன்றத்தின் மூலம் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒரு அரசாங்கம் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு இலக்கணம் இருக்கிறது. இரண்டு ஆட்சி முறை இருக்கிற இந்தியாவில் எப்படி ஆட்சி முறையை வகுத்துக் கொள்ள





வேண்டும், எப்படி நட்பு முறையை வகுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு,

'' உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு ''

என்ற குறளுக்கு ஏற்ப அரசியலில் வாழ்ந்து காட்ட வேண்டுமென்பதற்கு ஏற்றவகையில் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற நேரத்தில் தேசிய சக்தியில் சில தீய சக்திகள் நுழைந்து அதைக் கெடுத்துக் கொண்டு இருப்பதை நீங்கள் தடுக்கத் தவறினால், அதுகுறித்து சரியான முறையில் அணுகத் தவறினால், செல்லரித்துப் போகிற நிலைமை வந்து விடும் என்பதற்காக நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நிலைமையை மாற்றியமைக்க முயற்சியெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து '' எனர்ஜி '', அதாவது மின்சாரம். மின்சாரம் மிக மிகத் தேவையான ஒன்று. இன்றையதினம் மின்சாரம் இல்லாமல் எதுவுமே இல்லை. எந்தப் பிரச்சினையானாலும் மின்சாரம் தேவைப்படுகிறது. மின்சாரம் இல்லாவிட்டால் எதுவுமே இல்லையென்கிற அளவிற்கு உலகம் போய்விட்டது. அந்த அளவிற்கு நம்முடைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை மத்திய அரசின் உதவியோடும், மாநில அரசே தனித்தும், பல்வேறு நிறுவனங்களைத் தொடர்பு கொண்டும் நிறைவேற்றி வருகிறது. இந்த ஆளுநர் உரையில் பல மின்திட்டங்களைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், ஒகேனக்கல் மின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த நேரத்தை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவிரிப் பிரச்சினையைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. அது காலப்போக்கில் நடுவர் மன்றம் போனாலும் சரி, உச்ச நீதிமன்றத்திற்குப் போனாலும் சரி, மத்திய அரசு தலையிட்டு நிறைவேற்ற வேண்டுமென்று இருந்தாலும் சரி, அல்லது மாநில பரிவர்த்தனைக்குள்ளே முடிந்தாலும் சரி; அதிலே தேசிய சக்திகளுக்கும், மாநில சக்திகளுக்கும் இடையே போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு சக்திகளும் இடத்திற்கு ஏற்ப பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டம் இரண்டு மாநிலங்களும் பரிவர்த்தனை செய்து கொள்ளக் கூடிய உயர்ந்த திட்டமாக இருக்கிறது. அந்த அடிப்படையில் ஒகேனக்கலில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாம் முன் வரவேண்டும். இந்தத் திட்டம் நிறைவேறினால் கர்நாடக அரசும், தமிழக அரசும் மிகச் சிறந்த உச்சநிலையை அடையும். அதனால் தொழில்

வளம் பெருகும். ஆகவே இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன் வரவேண்டும். அதற்கு முன்னுரிமை தரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மொழிப் பிரச்சினை. மொழி என்று வருகிறபோது நம்முடைய உணர்வுகளை நமக்கு ஏற்றாற்போல சொல்லி இருக்கிறோம். வேறு பலர் அவரவர்களுடைய உணர்வுகளுக்கு ஏற்ப சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எந்த இடத்திற்கு எப்படிப் போக வேண்டும் என்று நியதி இருக்கிறது. ஒரு அரசியல்வாதிக்கு அல்லது பொதுநல சேவையில் இருக்கக் கூடியவருக்கு ஒரே நேரத்தில் இரண்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிற நிலைமை வரலாம். ஒன்று கல்யாணம், மற்றொன்று கருமாதி. இரண்டும் இருக்கும். அப்படிக் கல்யாணத்திற்குப் போகிறபோது, துக்கத்தினால் ஏற்படுகிற கஷ்டம் இருந்தாலும்கூட, அதை வெளிக்காட்டாது பக்குவமும், நாம் எங்கே செல்கிறோம் என்பதை உணர்ந்து மணமக்களை வாழ்க, வளர்க என்று வாழ்த்துகிற பக்குவமும் தேவை. ஆனால் கல்யாணத்திற்குப் போய் வாழ்க, வளர்க என்று சொல்லிவிட்டு அடுத்து கருமாதிக்குப் போய் அந்த இடத்திலும் வாழ்க, வளர்க என்று சொன்னால் அவன் பைத்தியக்காரனாகத்தான் இருப்பான். அல்லது கருமாதிக்கு முன்னாலே போய்விட்டு அடுத்து கல்யாணத்திற்குப் போகக் கூடியவன் அங்கே சென்று துக்கத்தை அனுஷ்டிப்பானேயானால் அவன் இந்த நாட்டிற்கு உதவாதவனாக இருப்பான். அப்படிகூட சிலர் இருந்துகொண்டிருக்கிறார்கள். இடம் அறியாமல், பொருள் அறியாமல், காலம் அறியாமல், எங்கே வேண்டுமானாலும் எதையும் சொல்லிக் கொண்டிருப்போம், எதையும் செய்து கொண்டிருப்போம் என்கிற நிலையில்கூட சிலர் இருப்பார்கள். அது அவர்களுடைய மனப்பக்குவம். அதற்கு அவர்கள்தான் தீர்ப்பு சொல்லிக்கொள்ள வேண்டும். வேறு யாரும் எதுவும் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. ஆனால் ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் தெளிவாகச் சொல்வேன். தமிழ் இன்றையதினம் உடுக்கையின் இடது பக்கம் போல இருக்கிறது. உடுக்கைக்கு இரண்டு பக்கமும் அடி. உடுக்கை அடிப்பவர்கள் இடது கையில் பிடித்துக்கொண்டு ஒரு பக்கம் தான் அடிப்பார்கள். இந்தியாவில் தேசிய மொழிகளில் தமிழ் அப்படி தேவையற்ற நிலையில் இருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம். எதிர்க்கிறோம். அது நல்வாழ்வு பெறவேண்டும். அதற்கு ஏற்றவகையில் வழிவகை காணவேண்டுமென்று நாம் துடிக்கிறோம்.





அதற்கேற்ற நடைமுறையைக் கொண்டு வருவதற்கு எல்லா வகையிலும் முயற்சிக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் நாம் பின்வாங்கியவர்கள் அல்ல. அப்படிப்பட்ட நிலையில் ஒவ்வொன்றாக, மெதுவாக, எப்படி ஒரு ஈரத்துணியை முள் மீது போட்டுவிட்டால், காய்ந்து எடுப்பதற்கு முன்பாக அது கிழிந்து போகாமல் இருக்க வேண்டும், அதே நேரத்திலே அது காய்ந்தும் இருக்க வேண்டும் என்பதைப் போல், நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய வகையிலே நாம் இருக்கிறோம். அந்த அடிப்படையிலே இந்த மொழியைக் காக்கக் கூடிய வகையில், தமிழகத்தில் தமிழ் அறிந்தவர்களுக்குத் தான் எங்கும் வேலை என்று சொல்லக் கூடிய நிலையில், 'கொட்டடிக்குள் தமிழ் இருப்பதும், கொட்டமடிக்கக் கூடிய நிலையில் பிற மொழிகள் இருப்பதும்' தேசியத்திற்கு விரோத சக்தியாக அமைந்து விடும்.

(முற்பகல் 11–10).

நாம் இந்தியாவின் ஒருமைப்பாட்டை மிகப் பெரிய அளவிலே விரும்புகிறோம். தேசிய நீரோட்டம் என்பது ஆங்காங்கு இருக்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ப இருக்க வேண்டும். தலை எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ, அவ்வளவு பெரியதாக பெருவிரல் இருக்க வேண்டும் என்று யாரும் எண்ண முடியாது. எந்தெந்த அவயவங்கள் எப்படி எப்படி இருக்க வேண்டும், எந்தெந்த சைசில் இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணம் இருக்கிறது. அந்த இலக்கணத்திற்கு ஏற்ப இருக்க வேண்டும் என்பதிலே இரண்டு கருத்துக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்த அரசுக்கும் இல்லை. அந்த அடிப்படையிலேதான் நாம் சொல்கிறோம், ஒரு நாட்டின் பூரண சுதந்திரம் அந்த நாட்டினுடைய மக்களின் கல்வியை வளர்ப்பதாகும். கல்வி கெட்டால், கண்ணும் போச்சு, பொன்னும் போச்சு, எல்லாம் போச்சு, நாடும் போச்சு. எனவே கல்வியிலே நாம் அக்கறை செலுத்த வேண்டும். கல்வியைப் போதிப்பதிலே, ஒரு மொழி அடிமையாகிவிட்டால், அந்த மொழி இருக்குமிடம் தெரியாமல் போய் விட்டால், தெரியாத ஒரு மொழி அந்தக் கல்விக்கு தலைமையிடமாக வந்து விட்டால், நாம் இருப்போமா அல்லது இல்லாமல் போவோமா என்பது கேள்விக்குறியாகும். எனவே இந்தப் பிரச்சினையில், இதை வலியுறுத்தக் கூடிய வகையில், இன்றைய தினம் பல்வேறு வகையில் நடவடிக்கை எடுத்துரைக்கக் கூடிய இந்த அரசு பாராட்டுக்குரியது.

அது மட்டுமல்ல, சர்க்கரை ஆலை. தமிழகத்திற்கு முதன் முதலாக கரும்பைக் கொண்டு வந்தவனே அதியமான்தான். அதியமான், அவன் தர்மபுரி மாவட்டத்திற்குச் சொந்தக்

காரன். தர்மபுரி மாவட்டத்திற்குச் சொந்தக்காரனான அதியமான்தான் தமிழகத்திற்கு முதன் முதலாக கரும்பைக் கொண்டு வந்தவன். அந்த தர்மபுரி மாவட்டத்திலே இருக்கிற பாலக்கோடு சுகர்ஸ்தான் தமிழகத்திலே இருக்கிற சர்க்கரை ஆலைகளிலேயே அதிகச் சத்தை கொடுக்கக் கூடிய ஆலையாக இன்று விளங்கி வருகிறது. தர்மபுரி மாவட்டத்திலேயிருக்கிற அந்தச் சர்க்கரை ஆலையிலிருந்து சர்க்கரை முழுமையாக உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படிச் செய்தும் இன்னும் கரும்பு அதிக விளைச்சல் தரக்கூடிய நிலையில் தர்மபுரி மாவட்டம் இருக்கிறது. இந்த நிலையில் மேலும் சர்க்கரை ஆலைகளைத் துவக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு விரும்புகிற இந்த நேரத்தில், சர்க்கரை ஆலைகளிலே ஒன்றை, தர்மபுரி மாவட்டத்திலே நிறுவுவதற்கு உரிய சரியான வாய்ப்பு இருக்கிற காரணத்தால், நிறுவ வேண்டும் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொண்டு, இந்த ஆண்டே அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வழி வகைகளைக் கொண்டு வர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

வறட்சிப் பகுதியாக இருக்கிற அந்த மாவட்டம், புரட்சித் தலைவர் அவர்களால், வளர்ச்சிகள் பல பெற்று இருக்கிற அந்த மாவட்டம், புதிய திட்டங்களைப் பல்வேறு வகைகளிலே உருவாக்கியிருக்கிற அந்த மாவட்டம், புரட்சித் தலைவர் அந்த மாவட்டத்திற்கு வருகிறார் என்ற உடனே பல வருடங்களாக மத்திய அரசு, மாநில அரசு இரண்டுமே முயற்சித்து முடியாமல் போன கேளவரப்பள்ளி DAMஐக் கட்ட உடனடியாக நிறைவேற்ற முதல்வர் அவர்களால் தனி ஆணை பிறப்பிக்கப் பட்டு இன்றைக்குச் செயல்படுத்தக் கூடிய நிலையில் இருக்கிற மாவட்டம். மேலும் சிறக்கக் கூடிய வகையில், வறுமை நிலையிலிருந்து விலகக் கூடிய வகையில், வளர்ச்சியைப் பெறக் கூடிய வகையில், அந்த இனிப்பான செய்தியை சொல்லக் கூடிய வகையில், தர்மபுரி மாவட்டத்திற்குச் சர்க்கரை ஆலையைக்கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்கூட இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக இந்த அரசாங்கத்திற்கு இந்த வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், கிருஷ்ணகிரி அணை தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிறது. அந்த அணை பல்வேறு வகையிலே பிரசித்தி பெற்றது. அங்கேயிருந்து வரக்கூடிய தண்ணீர் இடது கால்வாய்ப் பக்கம் இருந்து வரக் கூடிய அந்தத் தண்ணீர் முகம்மது கவுஸ் ஏரி என்று சொல்லுகிற அந்த ஏரிக்கு வந்து பாசனத்திற்குச் செல்கிறது. அந்த ஏரி முழுவதும் உப்பு சக்தி



அதிகமாக இருக்கிறது. உப்பு சக்தியாக இருக்கிற காரணத்தால் அந்தத் தண்ணீர் பாசனத்திற்குச் செல்கிற காரணத்தால், அங்கே விளைச்சல் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. நிலங்கள் பாழடையக் கூடிய நிலைமை இருக்கிறது. 10 ஆண்டுக் காலத்தில் நெல் உற்பத்தியினுடைய நிலை என்ன என்று பார்த்தால், மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே இப்படி பாதிக்கப்பட்ட இடங்களுக்கு 'ஜிப்சம் டிரீட்மென்ட்' உடனடியாகத் தேவை. அப்படி இல்லை என்று சொன்னால், எதிர்காலத்தில் வளர்ச்சியே இல்லாத பகுதியாக அது மாறிவிடும் என்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அரசாங்கம் உடனடியாக இதிலே ஈடுபட்டு நல்லதொரு நிலையைக் கொண்டு வர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். சேலம், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் இருந்து பிரித்து அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் என்று உருவாக்க வேண்டும் என்று அந்த மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகள், சமூக நலத் தொண்டர்கள், பொது மக்கள் ஆகியோரால் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்தினை ஏற்று வணக்கத்திற்குரிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்துவதற்கு அனுமதியைக் கொடுத்து இருக்கிறார்கள். நான் அதற்கு நன்றி சொல்வதற்கு முன்பாக அந்த அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் தர்மபுரி மாவட்டத்திலே உருவாகி அதற்கு நடுநாயகமாக, தலைமை இடமாக வைக்க வேண்டிய ஒரு பகுதி கிருஷ்ணகிரி-காவேரிப்பட்டினம் பகுதியாகும். மாவட்டத்திலேயே அது மிகச் சிறந்த ஒரு மையப் பகுதி ஆகும். அந்தப் பகுதியில் அதை வைத்து நிறைவேற்றினால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, இங்கே வேறு சிலர் கூட, தேசிய கட்சியில் இருப்பவர்கள்கூட சொல்கிறார்கள், இந்த ஆளுநர் உரை எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்தால் நாங்கள் ஏமாற்றம் அடைகிறோம் என்று. காரணம் அவர்கள் மாற்றத்தை எதிர்பார்த்தார்கள். எதிர்பார்த்த மாற்றம் வராமல் ஆளுநர் உரை வந்து விட்ட காரணத்தால் ஏமாற்றத்தை அணைத்துக் கொண்டார்கள், அவ்வளவுதான். இப்படிப்பட்ட நிலையில் இந்த ஆளுநர் உரை என்பது மிகச் சிறந்த தேவையான, நியாயமான உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் இருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு கோடி மக்களுக்கு மேலாக பயன் பெறக் கூடிய இந்தத் திட்டங்களால்—சத்துணவுத் திட்டம், மருத்துவத் திட்டம், காலணி வழங்கும் திட்டம், இலவசமாக புத்தகங்கள் வழங்கும்

திட்டம், இப்படி எல்லாம் கொடுத்து வருகிற காரணத்தால் ஆக்கப்பட்ட சொத்துக்கள் அத்தனையும் ஆண்டவனுக்குச் சொந்தம் என்ற நிலை போய் அரசாங்கத்திற்குச் சொந்தம் என்ற நிலை வந்ததைப் போல, ஒரு கோடி மக்களுக்கு மேலாக, அவர்களது வாழ்க்கைப் பிரச்சினை முழுவதையும் அரசாங்கமே எடுத்துக் கொண்டு காரியங்களை ஆற்றுகின்ற காரணத்தால் புதிய ஒரு இனமே உருவாகின்ற நிலையிலே இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிலையில், இந்தியா இனிமேலும் நிலைத்த ஒருமைப் பாட்டோடு விளங்கக் கூடிய வகையில் இருக்க வேண்டுமானால், தேசிய மொழிகள் அத்தனையும் தீர்க்க சுமங்கிலியாக விளங்க வேண்டுமானால், நமக்குத் தேவை United States of India. தேசிய ஒருமைப்பாடு நிலைத்து இருக்க வேண்டுமானால் இந்த நாட்டுக்குத் தேவை United States of India. மத்திய மாநில உறவுகள் சிறந்து இது எப்போதும் நிலைத்து நிற்க வேண்டு மானால் இந்த நாட்டுக்குத் தேவை United States of India. கங்கை—காவேரி திட்டத்தை நிறைவேற்றுவதற்கு யாருடைய தயவு தாட்சண்யத்தையும் எதிர்பாராமல் இருக்க வேண்டு மானால் இன்றைக்குத் தேவை United States of India. தெலுங்கு கங்கை திட்டம் தீவிரமாக நிறைவேற தேவை United States of India. காவேரிப் பிரச்சினை கைவிடாமல் இருக்க, கை விரிக்காமல் இருக்க தேவை United States of India. காந்தி, நேரு, ஏன் இந்திய சுதந்திரத்திற்காக, சுதந்திரம் அடைவதற்கு முன்பாக பாடுபட்ட காங்கிரஸ் தலைவர்களுடைய கனவு நன வாக வேண்டுமானால் இந்த நாட்டுக்குத் தேவை United States of India. அப்படிப்பட்ட நிலைக்கு ஆட்சியில் இருக் கின்ற பல்வேறு உணர்வுகள் பல்வேறு திட்டங்கள் மத்திய மாநில அரசுகளில் இருக்கின்ற திட்டங்கள் ஆகியவற்றைப் பகுத்து, பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதை எண்ணிப் பார்த்து மத்திய மாநில அரசுகள் சர்க்காரியா கமிஷன் கொடுத்து இருக்கின்ற அறிக்கையை வைத்து பரி சிலனை செய்து எதிர்காலத்தில் நவ இந்தியாவை உருவாக்கு வதற்கு இந்த ஆளுநர் உரை ஒரு முதல் காரணமாக இருக்கட்டும் என்று சொல்லி அப்படிப்பட்ட ஒரு அமைப்பு உருவாக நாம் அனைவரும் பாடுபடுவோம் என்று சொல்லி ஆளுநர் உரையை வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

*திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவையின் மாற் றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக





எடுத்து வைக்க விரும்புகிறேன். இங்கே நம்முடைய ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கே. சமரசம் அவர்கள் தன்னு டைய வாதத்தில் உதகமண்டலத்தில் 170 கோடி ரூபாய் செலவில் எக்ஸ் கதிர் படச்சுருள் தயாரிக்கின்ற தொழிற்சாலை, சென்னை, எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை, மணலியில் ரூபாய் 600 கோடி செலவில் அமைக்கக் கருதியுள்ள " அரோ மாட்டிக் சேர்மங்கள் " தயாரிப்புத் தொழிற்சாலை என்று இப்படி அடுக்கடுக்காக இன்னும் 7 பெரிய திட்டங்களை எல்லாம் சொல்லி, கொடைக்கானலில் டி.வி. ஒளிபரப்புத் திட்டம் போன்ற மத்திய அரசு கொண்டு வந்துள்ள திட்டங்களை எல்லாம் இன்றைய தினம் மனதாரப் பாராட்டி வரவேற்றுப் பேசினார்கள். இதற்கு முன்னாலே அந்தத் தொழிற்சாலைகள் பற்றி எல்லாம் சொல்லுகின்றபோது மாற்றான் தாய் மனப்பான்மை என்ற வகை யிலே மத்திய சர்க்கார் நடக்கிறது என்று சொல்லி வந்தவர்கள் இன்றைய தினம் மனதார வரவேற்றுப் பாராட்டுகின்ற நிகழ்ச்சியை நான் வரவேற்கிறேன்.

[முற்பகல் 11-20]

இன்றையதினம் மத்திய சர்க்கார் பட்ஜெட்டிலே ரூபாய் 594 கோடி வரிச் சலுகையை அளித்திருக்கிறது. இன்றைய தினம் மத்திய நிதியமைச்சர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கின்ற பிரதமர் ராஜீவ் காந்தியை நான் பாராட்டுகிறேன், வரவேற் கிறேன். தமிழகத்திலே 1—1—1987 முதல் மதுவிலக்கை நாங்கள் பூரணமாகக் கொண்டுவந்து விட்டோம் என்று சொல்கிற நிலையில், தமிழகத்தில் இன்றைய தினம் பூரண மதுவிலக்கு நடக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். கள், சாராயக் கடைகளை எல்லாம் நிறுத்திவிட்டு, பிறகு ஒயின், பிராந்திக் கடைகளை ஒன்றாக இருந்ததை இன்றைய தினம் 5, 6 ஆக விஸ்தரித்து, அந்தக் கடைகளுக்கு அனுமதியைக் கொடுத் திருக்கிறார்களே, அப்படியென்றால், அது பூரண மதுவிலக்கா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

நம்முடைய முதலமைச்சரவர்கள் எத்தனையோ படங்களில் இரட்டை வேடம் போட்டு நடித்திருக்கின்ற காட்சிகள் நமக்கு நன்றாக ஞாபகம் வருகிறது. ஆகவே இதிலே கூட அவர் இரட்டை வேடம் போட்டு நடிக்கிறாரா என்று கேட்க ..............

(குறுக்கீடுகள்).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): தேவையில்லாத விமர்சனம். நீங்கள் கள், சாராயம் பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தீர்கள். யார் வைத்திருக்கிறார்கள் என்ற

விவரங்களைப் புற்றிச் சொல்லுங்கள். ஆனால் இரட்டை வேடம் போன்ற விமர்சனம் தேவையில்லை. அப்படிப்பட்ட விமர்சனத் திற்குள்ளே போக வேண்டாம்.

திரு. கே. எம். தங்கமணி : நான் அவா நடித்த படங் களைச் சொல்லி, இந்த ஆட்சி . . . (குறுக்கீடுகள்).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. [illegible]ன்னராஜ்) : மாண்புமிகு உறுப்பினர் இங்கே கள், சாராய நிலைமை பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எங்கே விற்கிறார்கள். அது அனுமதியோடு விற்கப்படுகிறதா இல்லையா என்று கேட்டால் நல்லது. தேவையில்லாத விமர்சனங்கள், முதலமைச்சர் இரட்டை வேடம் பற்றியெல்லாம் சொல்ல வேண்டிய தேவை யில்லை. அது அவசியமில்லை.

திரு. கே. எம். தங்கமணி : நான் இவற்றைச் சொல்கின்ற போது இன்றைய தினம் தமிழகத்திலே கள், சாராயக் கடைகளை மூடிவிட்டு, அதற்கு மாறாக பிராந்தி, ஒயின் கடைகளை எல்லாம் தமிழகத்திலே ஒன்றுக்கு, 5, 6 ஆக அனுமதித்திருப்பது எப்படியிருக்கிறது என்று சொன்னால், முதலமைச்சர் சில படங் களில் இரட்டை வேடம் போட்டு நடித்தது போல், இதிலும் இரட்டை வேடமா என்று கேட்க ஆசைப்படுகிறேன் என்று தான் சொல்ல வந்தேனே தவிர, தனிப்பட்ட முறையில் அவரைத் தாக்க வேண்டிய நோக்கம் எனக்கில்லை என்று சொல்ல ஆசைப் படுகிறேன்.

இன்றைய தினம் கள் சாராயக் கடைகளை மூடிவிட்டார்கள். அதனால், விஷ மதுக்களை அருந்தி எத்தனையோ பேர் கோவை யிலே, சென்னையிலே மாண்ட செய்திகள் பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைய தினம் மதுவிலக்கு, கலால் துறை, காவல் துறைகளை வைத்துக் கொண்டிருக்கின்ற நமது நிர்வாகத்தில் இப்படிப்பட்ட ஊழல் நடைபெறுவது சரிதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். (குறுக்கீடுகள்).

இன்றையதினம் தமிழகம் முழுவதும் வறட்சி நிலை. 12 மாவட்டங்களில் வறட்சி வந்திருப்பதாக ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம் காலை தினமணிப் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது, 11 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டம் திருச்சியிலே நடைபெற்றது என்று. அந்தச் செய்தியை நான் பார்த்தேன். அதிலே தென்னாற்காடு மாவட்டக் கலெக்டர் சார்பிலே யாரும் கலந்து கொள்ளவில்லை. எங்களுடைய மாவட்டம் ஒரு வேளை வறட்சி நிவாரணப் பணிகளிலிருந்து புறக்கணிக்கப்படுகிறதா



என்ற சந்தேகம் எனக்கு வருகிறது. எனவே, 12 மாவட்டங் களிலே தென்னாற்காடு மாவட்டத்தையும் சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். குறிப்பாக திண்டிவனம், செஞ்சி, வானூர் போன்ற தாலுக்காக்களில் வறட்சி என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. திண்டிவனத்தில் இருக்கிற 40 பெரிய ஏரிகள், 71 சிறிய ஏரிகள் எல்லாம் இன்றையதினம் நீர் இல்லாமல் காய்ந்து கிடக்கின்ற காட்சியினைப் பார்க்கிறோம். விளையாட்டு மைதானம் போன்று நீரின்றி காய்ந்து இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கிணற்று நீர்ப் பாசனத்தை வைத்து சில இடங்களிலே பயிர் செய்யப்படுகின்றது. அந்தப் பயிர் கருகிவிட்ட நிலையில் இருக் கின்றது. மணிலா விவசாயிகள்கூட, அவற்றையெல்லாம் இழந்துவிட்ட நிலையில் இருக்கின்ற நிலைமையைப் பார்க்கி றோம். திண்டிவனம், செஞ்சி, வானூர் தாலுக்காக்களை வறட்சிப் பகுதிகளாக அறிவித்து, உடனடியாக வரி விலக்கினைக்கொடுத்து நிவாரணப் பணிகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் தமிழக முழுவதிலும் குடிநீர்ப் பற்றாக்குறை வந்திருக்கிற நிலைமை—தமிழக முழுவதிலும் குடிநீரிலே ஒரு சோகமான நிலைமை வந்திருக்கின்றது. வருடா வருடம் பார்க்கின்ற இந்த வறட்சி எப்பொழுது வருகிறது, எப்படி வருகிறது என்பதைத் கண்டறிந்து முன்னதாகவே திட்டம் தயாரித்து அத்திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். வறட்சியினாலே எங்களுடைய திண்டிவனம் தொகுதியில் எத்தனையோ கிராமங் கள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். திண்டிவனம் தொகுதிக்கு நான் 1980-லே சட்ட மன்ற உறுப்பினராக வந்ததிலிருந்து நான் கேட்டுக் கொண்டிருக் கிறேன். எங்களுடைய ஊருக்கு தண்ணீர் வரவேண்டும். திரு வெண்ணைநல்லூர் ஆற்றுப் படுகையிலிருந்து செஞ்சி வழியாக திண்டிவனத்திற்கு உலக வங்கி உதவியோடு 12 கோடி ரூபாய் திட்டம் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக் கிறேன். மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், நம்முடைய மதிப்பிற் குரிய அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் என் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது, அந்தத் திட்டம் உடனடியாக எடுத்துக் கொள்ளப்படும், ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அவர்தான் பதவியில்லாமல் இருக்கிறாரே தவிர அந்தத் திட்டத்தின் ஆரம்ப கால நட வடிக்கை ஒன்றும் எடுக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்களுடைய திண்டிவனம் நகருக்கு இன்றைய தினம் போதுமான நீர் இல்லாத காரணத்தி னால், கிராமங்களிலே, மக்கள் எல்லாம், பெண்கள் எல்லாம்

குடத்தைத் தூக்கிக் கொண்டு தெருத் தெருவாக அலைகின்ற நிலை இருக்கிறது. அந்த நிலையைப் போக்குவதற்கு தற்காலிகமாக 20 இலட்சம் ரூபாய் திண்டிவனம் குடிநீர்த் திட்டத்திற்கு ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற இரட்டணை பாலத்தைக் கட்டவேண்டுமென்று பலதடவை கோரிக்கை விடுத்திருக்கிறேன். இரட்டணையில் வராக நதி ஓடுகின்றது. ஆனால் பருவ மழை வருகின்றபோது தண்ணீர் வந்துவிட்டால் மூன்று மாத காலம் பக்கத்தில் இருக்கின்ற 15-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள மக்கள் எல்லாம் திண்டிவனத்திற்கு வரமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அதிலே மேம்பாலம் கட்ட வேண்டுமென்று கோரிக்கை விட்டிருக்கிறேன். அதே போல ஓமந்தூர், தென்பசார் ஊரிலிருந்து மேம்பாலம் ஒன்றைக் கட்ட வேண்டுமென்று கோரிக்கை மனுக்களைக் கொடுத்திருக்கின்றேன். ஏற்கெனவே இந்தக் கோரிக்கைகளை எல்லாம் நான் முதல் அமைச்சருக்கு எழுதி மந்திரிகளிடம் கொடுத்து, சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளர்களிடத்தில் சொல்லி, அதற்குப் பின்னர் ஒரு தபால் கூட வந்தது. பார்ட் 2 ஸ்கிமிலே இதை நாங்கள் எடுத்துக் கொள்ள இருக்கிறோம் என்று எனக்குப் பதில் சொல்லிவிட்டார்கள். ஆனாலும் கூட இதுவரையில் அந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே, வர இருக்கின்ற பார்ட் 2 ஸ்கிமிலே அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் உழவர் கணக்கு பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்று சொல்லுகின்ற நிலையில் நம்முடைய தமிழக விவசாயிகள் எல்லாம் இருக்கிறார்கள். நாம் எண்ணிப் பார்க்கிறோம், தமிழ்நாட்டிலே உழவர் மக்களுடைய பிரச்சினைகளை. 1986 மார்ச் 31ஆம் தேதிக்குள்ளாக வட்டி, அபராத வட்டி, காலம் கடந்த நிலுவை ஆகியவற்றில் ரூபாய் 125 கோடிக்கு இந்தச் சர்க்கார் நீக்கியிருக்கிறது, தள்ளுபடி செய்திருக்கிறது. அதை மனதாரப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். ஆனால் இந்தச் சலுகைகள் எல்லாம் நாங்கள் தந்ததற்கு காரணம் என்ன என்று நம்முடைய தமிழகத்தினுடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியது என்னுடைய ஞாபகத்திற்கு வருகிறது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. பழனியாண்டி அவர்களும், தமிழக காங்கிரசினுடைய முன்னணித் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களும் கேட்டுக்கொண்டார்கள் என்று அவர் சொல்லியிருக்கிறார். அதை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். ஆனால் இப்போது என்ன நிலைமை என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்றைய தினம் நல்ல சூழ்நிலையில் 125 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்த இந்தத் தமிழக அரசு, தமிழகத்தின் முதலமைச்சர் இன்றைய



தினம் துர்ப்பாக்கியமான நிலையில் வந்திருக்கின்ற வறட்சிக்கு நிவாரணமாக விவசாயக் கடன்களை சற்று ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கரும்பு, நெல் பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு அரசு கொள்முதல் விலை என்று மத்திய சர்க்கார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு விலையைத் தமிழகத்திற்கு அறிவித்தது. எல்லா மாநிலங்களுக்கும் அறிவித்தது. இப்போது நம்முடைய சர்க்கார் என்ன கொள்கை வைத்திருக்கிறது என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் இன்றையதினம் டாக்டர்கள் ஸ்டிரைக் செய்து கொண்டிருக்கின்ற நிலையைப் பார்க்கிறோம். எங்கு பார்த்தாலும் இன்றையதினம் வேலை நிறுத்தம், போராட்டம், போராட்டம் என்று பல்வேறு துறைகளிலே வேலை நிறுத்தப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அதைப்போலவே டாக்டர்களும் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

20 வருடங்களாகப் பணியாற்றுகின்ற டாக்டர்களுக்கு உடனே பதவி உயர்வு வேண்டும்; காலியாக இருக்கின்ற பதவிகளுக்கு உடனடியாக டாக்டர்களை நியமிக்க வேண்டும் என்று சொல்கின்ற டாக்டர்களுடைய முக்கியமான கோரிக்கைகளை தமிழக சர்க்கார் ஏற்றுக்கொண்டு உடனடியாக அதை அமல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

15 ஆண்டுக் காலமாக தமிழகத்திலே நகராட்சிகள், உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் இல்லை என்ற நிலைமை இருந்தது. அந்த நிலைமை மாறி, மக்களுக்கு, மக்களால் நடத்தப்படுகின்ற மக்களாட்சி என்ற தத்துவத்தின் அடிப்படையில் மக்களாட்சியின் பிரகாரம் தேர்தலை வைத்து, இன்றைய தினம் நம்முடைய தமிழகத்தில் பஞ்சாயத்து யூனியன்கள், ஊராட்சி மன்றங்கள் எல்லாம் நடைமுறையில் செயல்பட்டு வருகின்றன. ஆனால், நிதி போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தினால், போதுமான அதிகாரம் இல்லாத காரணத்தினால், அப்படி வந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் அலங்கார பொம்மைகளாக இன்றைய தினம் இருந்து கொண்டு வருகிறார்கள் என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, இன்றைய தினம் தமிழகத்திலே உள்ள இந்த நிலைமையைப் போக்குவதற்கு நம்முடைய அண்டை மாநிலமான கர்நாடகத்திலே இருந்து நிகழ்ச்சி ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கே ஜில்லா பரிஷத் என்றும், தாலுகா பஞ்சாயத்து சமிதி

என்றும், நியாய பஞ்சாயத்து என்றும் 1983 ஆம் ஆண்டு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பின்னாலே, அங்கே 900 கோடி ரூபாயை ஒதுக்கி அந்த ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தை செவ்வனே நடத்துவதற்கு, சரியாக நடத்து வதற்கு அவர்கள் தந்து உதவினார்கள். அதைப்போல, தமிழ் நாட்டில் தமிழக சர்க்கார் ஏன் செய்யக்கூடாது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

தென்னாற்காடு மாவட்டம் இன்றைய தினம் இரண்டு ஜில்லாவாகப் பிரிக்கப்படும் என்று கொள்கை அறிவிப்பாக கொடுத்து இருக்கிறார்கள். நான் அப்போதே சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். அப்படிப் பிரிக்கப்படுகின்ற தென் னாற்காடு மாவட்டத்தினுடைய ஒரு பகுதிக்கு-திண்டிவனத்தைத் தலைநகரமாக வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறேன். அப்படி ஒரு வேளை என்னுடைய கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், தருமபுரி மாவட்டம் என்று பிரிக்கின்றபோது, அங்கே இருந்த கிருஷ்ணகிரி என்ற ஊருக்கு, கோட்ட அலுவலகங்கள், முக்கியமான அரசாங்க அதிகாரங் களைத் தருகின்ற ஆபீஸ்களை எல்லாம் உருவாக்கித் தந்தார் களே, அதைப்போல, எங்களுடைய திண்டிவனம் நகரில் அலு வலகங்களைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மிக முக்கியமான இன்னொரு பிரச்சினை. தமிழகத்திலே வன்னிய சமூகத்தினர் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. மாநிலத் திலே 20 சதவிகிதம், மத்தியிலே 2 சதவிகிதம் என்று கல்வி, வேலை வாய்ப்புக்களிலே இடம் கேட்டு, ஒதுக்கீடு கேட்டு தமி ழகத்திலே நெடிய போராட்டத்தை அவர்கள் நடத்திக் காட்டி னார்கள். அந்தப் போராட்டத்திற்குப் பின்னால், நியாயத்தை உணர்ந்து, அந்தப் போராட்டத்தை நடத்துகின்றவர்களை அழைத்து, தமிழக முதலமைச்சர், மத்திய துறையிலே இருக்கிற, பொறுப்பான இடத்திலே இருக்கிறவர்கள் எல்லாம் பேசவில்லை யே, அது ஏன் என்று கேட்க விரும்புகிறேன். உடனடியாக, அவர்களைக் கூப்பிட்டுப் பேசி அவர்களுடைய கோரிக்கைகளிலே இருக்கின்ற நியாயத்தை உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

சேத்தியாத்தோப்பு, கும்மிடிப்பூண்டி ஆகிய இரண்டு இடங்களில் போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தியிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கின்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரை நியமித்து, அந்த வழக்குகளை எல்லாம் நீதி விசாரணை செய்து அத்தனை பேர் மீதும் போட்டிருக்கின்ற அந்த வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





இன்றைய தினம், தமிழகத்திலே கிராமங்களிலே என்.ஆர். இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., என்று பல திட்டங்கள் போடப்பட்டுக் கொண்டு வருகின்றன. ஆனால், அந்தத் திட்டங்களிலே, டோபிகானா கட்டுவதற்கு பஞ்சாயத்துக்களிலே தீர்மானம் இல்லை. அவர்களுக்கான, அதற்குரிய சட்டத்தைக்கூட, விதி முறையைக் கூட எடுத்து விட்டார்கள் என்ற நிலைமை இன்றைய தினம் இருக்கிறது. எனவே, அந்த நிலைகளை மறுபடியும் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவும், உரிய நட வடிக்கை எடுக்கவும் வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

'கலப்படம், கலப்படம், எங்கும், எதிலும் கலப்படம்' என்று சொல்கின்ற நிலைமை தமிழகத்திலே இருந்து வருகிறது. அந்த நிலைமைக்கு நாம் ஆளாக்கப்பட்டிருக்கிறோம். திருச்சி - சென்னை நெடுஞ்சாலையில் எங்களுடைய திண்டிவனத்திற்குப் பக்கத்திலே இருக்கிற விளங்கம்பாடியிலே கலப்படக் கேஸ்கள் நிறைய வந்திருக்கின்ற நிலைமை இருக்கிறது. பல கேஸ்களில், பாமாயில் என்று சொல்லப்படுகின்ற எண்ணெயை இறக்கி, அதற்குப் பதிலாக விளக்கெண்ணெய் ஊற்றி வருகின்ற பல நிகழ்ச்சிகள் திண்டிவனம் பகுதியிலே நடந்திருக்கின்றன. அப்படி பிடிக்கப்பட்ட இடங்களுக்கு நேரடியாகப் போய் தாசில்தாரே பார்த்து, குற்றவாளிகள் மேல் கேஸ் போட்டு அவற்றின்மீது எல்லாம் நடவடிக்கை எடுத்து வந்தார்கள். அதற்குப் பின்னாலே ஆர்.டி.ஓ.-க்குப் போனது அந்த வழக்கு. அந்த வழக்கிலே அவர்கள் எல்லாம் குற்றவாளிகள் இல்லை, நிரபராதி கள் என்று சொல்கின்ற அளவுக்குத் தீர்ப்பளித்து விட்ட நிகழ்ச்சி நம்முடைய கவனத்திற்கு வருகிறது. இவற்றையெல்லாம் சிந் தித்துப் பார்த்து உண்மையிலேயே தமிழகத்திலே ஒரு நல்ல நிர்வாகம், தூய்மையான நிர்வாகம் நடக்க வேண்டுமென்று எண்ணுகின்ற நம்முடைய சர்க்கார் இது போன்ற சம்பவங் களுக்கெல்லாம் முன் மாதிரியாக நடந்து கொள்ளக் கூடாது என்று சொல்லி, நான் என்னுடைய உரையை நிறைவு செய் கிறேன், வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற விதத்திலே இந்த விவாதம் இங்கே நடை பெறுகிறது. நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆளுநருடைய விவாதத்திற்கு நன்றி தெரி விக்க முடியாமைக்காக வருந்துகிறேன். காரணம் நாட்டிலே வறட்சி எப்படி இருக்கிறதோ அதைப்போல ஆளுநரின் உரையும் வறட்சியாக இருப்பதை நான் பார்க்கிறேன். ஏதோ கச்சேரி முடிந்தவுடன் மங்களம் பாடுகின்ற பாகவதரைப் போல இது ஒரு சம்பிரதாய உரையாக இருக்கிறது. விளைச்சல் இல்லாத வயலாக, வெளிச்சம் தராத விளக்காக, மணம் இல்லாத மலராக

இன்றைக்கு எப்படி திட்டங்களையும், கொள்கைகளையும்
சுட்டிக் காட்டுகின்ற கண்ணாடியாக ஆளுநரின் உரை இருக்க
வேண்டுமோ அதைப்போல் இல்லை என்பதை வேதனையோடு
இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த
ஆளுநர் உரையிலே ஒரு கருத்தை, ஒரு திட்டத்தைச் சொல்லி
யிருக்கிறார்கள். என் பேச்சினுடைய முதற் பகுதியிலேயே அதை
நான் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக இங்கே சொல்லப்படுகிறபோது என்ன கருத்தை
வலியுறுத்தியிருக்கிறார்கள்? 1987-88 ஆம் ஆண்டிலிருந்து பள்ளி
செல்லும் சிறார்கள், ஏழைத் தாய்மார்களுக்கு இலவசமாக
காலணிகள், அதாவது செருப்புகள் வழங்கும் திட்டத்தை நிறை
வேற்ற அரசு கருதி இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.
இந்தத் திட்டம் வழக்கமான அறிவிப்பாக இருந்துவிடக் கூடாது;
இதற்கு எதிர்ப்பாக நான் பேசுவதாகக் கருதக் கூடாது. இந்த
அரசாங்கம், முடியுமானால், இன்றைக்கு இலவச காலணிகள்
கூட அல்ல, இளம் சிறார்களுக்கு இலவச காலணிகள் வழங்கு
வதைப்போல இளம் பெண்களுக்கு இலவச தாவணி வழங்கும்
ஒரு திட்டத்தைக் கூட கொண்டு வரட்டும். அதைப் போல
அரசாங்கமே ஹோட்டல் ஆரிய பவனாக மாறி எல்லோருக்கும்
இலவச இட்லி வழங்குகின்ற திட்டத்தை நிறைவேற்றுகின்ற
சர்க்காராகவும் இருக்கட்டும். ஆனால், நாம் கேட்பதெல்லாம்
இந்தத் திட்டங்களை நீங்கள் நடைமுறைப்படுத்துகிறீர்களா?
ஏற்கனவே இதுபோன்று நீங்கள் அறிவித்த பல்வேறு திட்டங்
களின் கதிதான் இதற்கும் ஏற்படுமா என்று நான் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே சொன்னீர்கள்; ஒரு
சிறிய உதாரணம்; மொழிப்போர் தியாகிகளுக்கு 150 ரூபாய்
வழங்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது; வீர வணக்க
நாள் கொண்டாடுகிறீர்கள்; 150 ரூபாய் தரப்பட்டதா? குடும்
பத்தில் ஒருவருக்கு வேலை, அறிவித்தீர்கள்; கேட்கிறேன்;
இன்றைக்கு, குடும்பத்திலே யாருக்காவது வேலை கொடுக்கப்
பட்டிருக்கிறதா? மாறாக, 315 பேருக்கு கொடுக்கப்பட்டிருக்
கிறது என்று ஒரு தகவலை எம்ப்ளாய்மெண்ட் டைரக்டரேட்
தெரிவித்திருக்கிறது.

அதைப் போலவே, எஸ்.எஸ்.எல்.சி., பி.யூ.சி., பட்டதாரி
இவர்களுக்கெல்லாம், எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு, வேலை
யில்லாமல், பி.யூ.சி. பிளஸ் டூ படித்துவிட்டு வேலையில்லாமல்
இருப்பவர்களுக்கெல்லாம் எஸ்.எஸ்.எல்.சி-க்கு 50 ரூபாய்;
பி.யூ.சி., பிளஸ் டூ-க்கு 75 ரூபாய்; பட்டதாரிக்கு 100 ரூபாய்
வழங்குவதாகச் சொன்னீர்கள்; இன்றைக்கு அந்தத் திட்டம்
அமல் நடத்தப்படுகிறதா? தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.





வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு 5 கிலோ
அரிசி வாங்கினால் 1 கிலோ அரிசி தருகிறோம் என்று சொன்
னீர்களே, தரப்படுகிறதா என்று தெரிந்துகொள்ள விரும்பு
கிறேன். பிரசவமான தாய்மார்களுக்கு, சத்துணவுக்கு 150
ரூபாய் தரப்படுகிறதா? பட்டினியால் வாடும் ஏழைகளுக்குச்
சாவு ஏற்பட்டால், அதிகாரியை அணுகினால் ரூபாய் 100 தரப்
படும் என்று அறிவிக்கப்பட்டதே; அந்தத் திட்டம் நடை
முறையில் இருக்கிறதா? ஏழைப் பெண்களுக்கு, அவர்கள் தாயார்
விதவையாக இருந்தால் தாலிக்குத் தங்கம் தரப்படும் என்று
அறிவித்து 10 ஆண்டுக் காலம் ஆகிறதே; நடைமுறையில்
இருக்கிறதா? இதுவும் ஆளுநர் உரையிலேதான் சொல்லப்
பட்டது.

மத்திய அரசு அனுமதித்தாலும், அனுமதி இல்லாவிட்டாலும்,
விவசாயக் கடன் அனைத்தையும், சுமார் 500 கோடி ரூபாயை
ரத்து செய்வோம் என்று சொன்னீர்களே, அது என்னவாயிற்று,
ரத்து செய்திருக்கிறீர்களா? இதில் சிறு விவசாயி, பெரிய விவ
சாயி என்று பேச்சுக்கோ இடமில்லை என்று சொன்னீர்களே,
அது என்ன ஆயிற்று?

மலிவு விலையிலே வீடுதேடி காய்கறி வழங்கும் திட்டம்
கொண்டு வரப்படும், நாடு முழுவதும் இத்திட்டம் விஸ்தரிக்கப்
படும், மூன்று சக்கர வண்டியிலே இது கொண்டு வரப்படும்,
இதனாலே நாடு முழுவதும் சக்கர வண்டி தயாரிக்கும் தொழிற்
சாலை ஏற்படும். ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கிடைக்
கும் என்று சொன்னீர்களே, அந்தத் திட்டம் என்னவாயிற்று?
விவசாயிகளுக்கு தினக் கூலிக்குப் பதிலாக மாதச் சம்பளம் தரப்
படும் என்று அறிவித்தீர்களே, என்னவாயிற்று? உள்ளூர் தபால்
நிலையங்களின் மூலம் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவோம்
என்று சொன்னீர்களே, என்ன ஆயிற்று? வேலையில்லாத
பெண்களுக்கும் ஆண்களுக்கும் தினசரி ஒரு ரூபாய் தரப்படும்
என்று சொன்னீர்களே, என்ன ஆயிற்று? அரிசி ஆலை தேசிய
மயமாக்கப்படும் என்று சொன்னீர்களே, என்ன ஆயிற்று?
கிராமப்புறங்களிலே பாம்புக் கடிக்கு வைத்தியம் செய்பவர்
களுக்கு மாதம் 100 ரூபாய் அளிக்கப்படும் என்று சொன்னீர்
களே, பாம்புக் கடிக்கு வைத்தியம் செய்பவர்கள் வேலைக்கு
அமர்த்தப்பட்டார்களா? எத்தனை பேர் அமர்த்தப்பட்டார்கள்?

(முற்பகல் 11–40)

மூன்று ஆண்டுகளிலே முப்பது லட்சம் வீடுகள் என்று
சொன்னீர்கள். ஆண்டுக்குப் பத்து லட்சம் வீடுகள் என்று
மூன்றாண்டுகளில் முப்பது லட்சம் வீடுகள் என்று சொன்னீர்கள்.
நலிந்தோர்க்கும் பிற்பட்டவர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும்,
நரிக்குறவர்களுக்கும் வீடுகள் என்று சொன்னீர்கள். ஆளுநர்

உரையிலேயே அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப்
பணிகள் நடைபெறுகின்றனவா ? அப்படியானால் மூவாயிரம்
கோடி ரூபாய் தேவையாயிற்றே—ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ
10 லட்சம் வீடுகள் கட்டுவதென்றால் ஆயிரம் கோடி ரூபாய்
தேவையாயிற்றே, ஒதுக்கியிருக்கிறீர்களா ? வேலைகள் நடந்து
வருகின்றனவா ? 3:1 என்ற அணுகுமுறை என்று சொல்லு
கிறீர்களே என்ன அர்த்தம் ? ஏற்கனவே ஆளுநர் உரையிலே
அறிவித்த திட்டமல்லவா ? அருள்கூர்ந்து பதில் சொல்லுங்கள்.
அதைப் போலவே இந்தத் திட்டமும் ஆகிவிடக் கூடாது என்று
தான் இதைச் சொல்லுகிறேன். நான் கேட்கிறேன்—எவ்வளவு
சிறார்கள் பயன் பெறப்போகிறார்கள் ? அறுபது லட்சம்
சிறார்கள். எவ்வளவு ஏழைத் தாய்மார்கள் இருக்கிறார்கள் ?
கிராமங்களில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று ஏதாவது
கணக்கு இருக்கிறதா ? இதற்கு எவ்வளவு தொகை ? எவ்வளவு
ஒதுக்கீடு செய்யப்போகிறீர்கள்? இதற்கெல்லாம் பட்ஜெட்டில்
நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா ? இது நடைமுறைக்கு வருமா
அல்லது கடைசியாக இதுவும் ஒரு கற்பனையாக, கல்லறைக்
குப் போகிற திட்டம்தானா ? மக்களைத் தொடர்ந்து ஏமாற்று
வதற்காகத் தேர்தல் தந்திரம் போடுகிறீர்களா என்று தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.
ஆளுநர் உரையில் பல பிரச்சினைகளைப்பற்றி சொல்லப்படாம
லேயே இருக்கின்றது. எல்லாவற்றையுமே சொல்ல முடியாது
தான், ஒப்புக் கொள்கிறேன். ஆனால் சொல்ல வேண்டிய
வற்றையாவது சொல்ல வேண்டாமா ? சென்னை, மதுரை
மற்றும் கோவை மாநகராட்சிகளுக்குத் தேர்தல் பற்றிய
அறிவிப்பு அதில் சொல்லப்பட வேண்டாமா ? எவ்வளவு
கொடுமைகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
சென்னை நகர மக்கள் எவ்வளவு அவதிப்பட்டுக் கொண்டிருக்
கிறார்கள். நளன் தமயந்தியைக் கைவிட்டதைப் போல
இந்த சர்க்கார் அவற்றிற்குத் தேர்தல் நடத்துவதையே
கைவிட்டுவிட்டதா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.
இன்றைய தினம் அங்கெல்லாம் மக்கள் பிரதிநிதிகள் இல்லை.
சென்னை மாநகராட்சியில் மாநகராட்சி தனியதிகாரியின்
தர்பார் நடந்து கொண்டிருக்கிறது. நான் கடந்த 5 ஆண்டுக
ளாகவே என்னுடைய தொகுதியில் சுற்றுப்பயணம் மேற்
கொண்டு பார்த்து வருகிறேன். அங்கே பல்வேறு பிரச்சினைகள்
தொடர்ந்து இருந்து கொண்டு வருகின்றன. சொல்லப் போனால்
பல இடங்களில் குழாய் இல்லை. குழாய் இருந்தால் அதிலே
தண்ணீர் வருவதில்லை. பல இடங்களில் விளக்குகள் இல்லை.
விளக்குகள் இருந்தால் பல இடங்களில் அவைகள் எரிவதில்லை.
குப்பைகள் கோபுரமாகிக் கொண்டிருக்கின்றன. கழிவு நீர்
பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. பாதைகள் சரியில்லை.





கொசுத் தொல்லை பெருகியிருக்கிறது. கொசுவை ஒழிப்
போம் என்று சொன்னவர்களை கொசு ஒழித்துக் கொண்டிருக்
கிறது. இதுபோன்ற நிலைமைகள்தான் இன்றைக்கு இருந்து
வருகின்றன.

ஏற்கனவே மின்வெட்டு அதிகமாகிவிட்டது. அதன் காரண
மாகப் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. பல
தொழிலாளர்கள் தெருக்களிலே நிற்கிறார்கள் என்பதைச்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாநகராட்சித் தேர்தலை நடத்துவதிலே என்ன தடை ?
என்ன தயக்கம் ? ஏன் நடத்த மறுக்கிறீர்கள் ? மாயவரத்திலும்
தேர்தலை நடத்தி முடித்துவிட்டீர்கள், ஒப்புக் கொள்கிறேன்.
பின் ஏன் இந்தத் தேர்தல்களை நடத்தக் கூடாது ? அதற்குக்
காரணம் வேடிக்கையாகச் சொல்லப்படுகிறது. கடைசியாக
சொல்லப்பட்ட காரணம்—மாண்புமிகு உள்ளாட்சித் துறை
அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ப. உ. ச. அவர்கள்—
அவருடைய பெயரைச் சொல்வதற்காக என்னை மன்னிக்க
வேண்டும் — மரியாதையாகத்தான் சொல்கிறேன் — அவர்
சொன்ன காரணம் என்ன தெரியுமா ? ஏற்கனவே 3 ஆண்டுகளாக
இருந்த உள்ளாட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களின்
பதவிக் காலத்தை கலைஞர் காலத்திலே 5 ஆண்டுகளாக
ஆக்கினோம். அதை 4 ஆண்டுகளாக ஆக்கி, பிறகு 3 ஆண்டுக
ளாக ஆக்கியபோது ஏன் என்று கேட்டதற்கு என்ன காரணம்
சொன்னார்கள் தெரியுமா ? குறுகிய காலத்திற்குப் பதவியில்
இருந்தால்தான் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றுவார்கள்
என்று காரணம் சொன்னார்கள். இப்போது அவர் அமைச்சராக
இருக்கிறார். அவருடைய பதவிக் காலம் குறைந்த காலமாக
இருந்தால் போதும் என்று திருப்தி அடைவாரா ? அது வேறு
விவகாரம். அவர் அப்போது அப்படி ஒரு காரணம் சொன்
னார். இப்போது மாநகராட்சிகளுக்கு ஏன் தேர்தல்களை
நடத்தவில்லை என்றால் அதற்கும் ஒரு காரணம் சொல்லு
கிறார்கள். அதாவது மேயருடைய பதவிக் காலம் தற்போது
குறுகிய காலமாக இருக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டும்
என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம் என்கிறார்கள். உங்க
ளுடைய கொள்கைதான் என்ன ? குறுகிய காலமா ? நீண்ட
காலமா ? என்ன கொள்கை ? ஏன் இந்தக் கொள்கைக்
குழப்பம் இந்தச் சர்க்காருக்கு இருக்கிறது? இன்னொன்றையும்
தெரிவித்தார்கள். வேறு மாநிலங்களில் உள்ள மாநகராட்சி
களின் சட்டங்களைப்பெற்று அவற்றைப் பரிசீலித்து சென்னை
மாநகராட்சிக்கும் மற்ற மாநகராட்சிகளுக்கும் தேர்தலை
நடத்தலாம் என்று இருக்கிறோம் என்றார்கள். எல்லா
மாநிலங்களிலும் உள்ள சட்டங்களையும் அணுகிப் பார்த்துதான்
நடத்துவது என்றால் மற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கும்
இது பொருந்தாதா ? எனவே உடனடியாக மாநகராட்சித்

தேர்தல்களை சென்னை, கோவை, மதுரை ஆகியவற்றிற்கு நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மக்கள் பிரதிநிதி என்ற முறையில் இதை அனைத்துக் கட்சிக்காரர்கள் சார்பிலும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே தெலுங்கு கங்கைத் திட்டம் பற்றி ஒன்றையும் காணோம். குடிநீர்பற்றி பல்வேறு இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் தெலுங்கு கங்கை பற்றி ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. இந்தத் திட்டம் என்னவானது? ஆந்திர முதல்வர் திரு. என். டி. இராமராவ் அவர்கள் நம்முடைய முதல்வர் அவர்களைப் பார்த்து பேச வந்தார். ஆனால் நம் முதல்வருக்குத் தலைவலி என்ற காரணத்தால் பேச முடியவில்லை என்று அப்போது கருத்து சொல்லப்பட்டது. இனி அவர் எப்போது வரப் போகிறார், எப்போது பேசப் போகிறார்? இதைக் குறித்து மத்திய சர்க்காரின் நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருக்கும் மாண்புமிகு திரு. சங்கரானந்த் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டார்.

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை இப்போது மத்திய சர்க்காரின் அனுமதி கிடையாது. இன்னும் சொல்லப்போனால் அவர் மிகத் தெளிவாகவே சொல்லிவிட்டார். நீர் ஒதுக்கீடு சம்பந்தமாக கருநாடகத்திற்கும், ஆந்திரத்திற்கும், மராட்டியத்திற்கும் பிரச்சினை இருக்கிறது. அந்தப் பிரச்சினை தீர்ந்தாலொழிய முடியாது என்று அடித்துச் சொல்லிவிட்டார். அதோடு இந்தத் திட்டத்தின் பொருளாதாரச் சூழ்நிலை, இதன் சுற்றுப்புறச் சூழ்நிலை ஆகியவற்றையும் ஆய்வில் எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் இதுவரை ஏறத்தாழ 47 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். இந்தத் திட்டத்தைத் தொடங்குகிற போது இதற்கு எதிர்பார்க்கப்பட்ட செலவுத் தொகை ரூ. 637 கோடி. இப்போது காலதாமதம் காரணத்தால் 843 கோடியாக ஆகியிருக்கிறது. எனவே சென்னை மாநகர மக்களுடைய நிரந்தரக் குடிநீர்ப் பிரச்சினை எப்போது தீரப் போகிறது?

தமிழ்நாடு முழுவதும் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. 'இந்து' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'தினமணி' ஆகிய பத்திரிகைகள், தாய்மார்கள் தண்ணீர் குடத்துடன் தவிக்கும் காட்சியைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஆடுமாடுகளுக்குக் தண்ணீர் வசதியில்லை. கோடைக்காலம் நெருங்கிவிட்டது. சென்னை நகரில் என்னுடைய தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. மழை பெய்யாமல் இருக்கிறது. அணைகள் வற்றியிருக்கின்றன. புழலேரி வற்றியிருக்கிறது. தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிரந்தரமாகக் கொண்டு வராமல் இருக்கிறீர்கள். மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் குன்னக்குடி வைத்தியநாதனை வைத்து பழையபடி மழை பெய்ய வைத்து சென்னை நகர மக்களைக் காப்பாற்றுவது என்பது இயலாத காரியம். தெலுங்கு கங்கைத் திட்டம் என்று சொல்லி மக்களுடைய வரிப்பணம் 47 கோடி ரூபாய் ஆந்திராவிடம் கொடுக்கப்பட்டு அது அங்கேயே முடங்கிப் போயிருக்கிறது. இந்தத் திட்டத்தைக் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இன்னுமொரு பிரச்சினை. நான் அதை இங்கே சொல்லுவது என்னுடைய முக்கியமான கடமையாகும். காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவான முடிவோடு இருக்கிறது. அன்றைக்கு அந்தத் துறைக்கு அமைச்சராகப் பொறுப்பேற்றவர்கள் இங்கே இருக்கிறார்கள். அன்றைக்கு நாங்கள் எடுத்த முடிவு திராவிட முன்னேற்றக் கழகத்தின் முடிவு. அதற்கு இவர்களும் கட்டுப்பட்டவர்கள். 1924 ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டோடு காலாவதியாகிவிட்டது என்று தி.மு.க. கருதவில்லை. இந்த அரசும் அப்படிக் கருதவில்லை என்று நம்புகிறேன். அரசியல் ஆதாயத்திற்காக வெளியே சில பேர் பொது மேடைகளில் அப்படிப் பேசுகிறார்கள். இன்றைக்குத் தஞ்சையில் காவிரியில் நீர் இல்லாமல் மேட்டூர் அணை வற்றிப் போய்விட்டது. அதன் காரணமாக தஞ்சை மாவட்டத்திலே குறுவைப் பயிர் முழுமையாக சேதாரத்திற்குட்பட்டுவிட்டது. இதனால் உணவு உற்பத்தி குறைந்துவிட்டது. சம்பாப் பயிருக்காக கருணை மனு போட்டு திரு. ஹெக்டே தயவால் 500 மில்லியன் கன அடி தண்ணீர் கிடைத்திருக்கிறது. ஆனால் அது நிரந்தரத் தீர்வு அல்ல. அவர்கள் தரும் தண்ணீருக்குப் பதிலாக நாம் மின்சாரம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இங்கே ஏற்கனவே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. இப்பிரச்சினையை டிரிபியூனலுக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 7 மாத காலம் ஆகியும் இதனுடைய முடிவு என்னவென்று தெரியவில்லை. இன்றைக்கு இந்தப் பிரச்சினையைக் குறித்து கர்நாடகமும், மற்ற மாநிலங்களும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. இதிலே நம்முடைய நிலை என்ன? காவிரி நீர்ப் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டுள்ளதா? அதற்கு அரசு என்ன முயற்சி எடுக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இன்னுமொரு முக்கியமான பிரச்சினை. பல மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றைத் திறப்பது குறித்து கவர்னர் உரையில் கருத்து ஏதும் சொல்லப்படவில்லை. சென்னையில் பின்னி எஞ்சினியரிங், திருச்சியில் ஜனார்தனா எஞ்சினியரிங்,

இராதாகிருஷ்ணா மில், அட்சயா மில், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், பத்மா மில் ஆகிய மில்கள் எல்லாம் மூடிக் கிடக்கின்றன. முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஆயிரம் ரூபாய் தொழிலாளர்களுக்குத் தரப்படவில்லை. குடும்பத்தில் ஒருவருக்கு வேலை தராவிட்டாலும், மூடியுள்ள மில்களையாவது திறக்கக் கூடாதா ?

விலைவாசியைப் பற்றி இந்த உரையிலே ஒன்றும் சொல்லவில்லை. குறைந்தபட்சம்—பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள்; முடி வெட்டுவதற்கு 10 ரூபாய் என்று ஆக்கிவிட்டார்கள். அதற்குக் காரணம் மற்ற பொருள்களின் விலைவாசி ஏறி விட்டது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். முடி வெட்டக் கூடிய சூழ்நிலையில் இங்கேயுள்ள உறுப்பினர்கள் பலர் இருப்பார்கள். இதனால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். முடி வெட்டாமல் இருப்பவர்கள் வேண்டுமானால் கவலைப் படாமல் இருக்க முடியும். இது குறித்து இந்தச் சர்க்கார் ஏதாவது கவனம் செலுத்த வேண்டாமா என்று கேட்கிறேன்.

அதைப் போலவே ஏற்கனவே மின் கட்டணம் உயர்ந்திருக்கிறது. மற்ற பொருள்களின் விலையும் உயர்த்தப் பட்டிருக்கின்றன. சர்க்கரை விலை உயர்ந்திருக்கிறது ; புளியின் விலை உயர்ந்திருக்கிறது. அவை மட்டுமல்லாமல் ஓட்டல் பண்டங்கள் விலை உயர்ந்திருக்கின்றன. மத்திய சர்க்காரைப் பாராட்டுகிறார்கள். நம்முடைய முதலமைச்சர் நேற்றுகூட மத்திய அரசின் பட்ஜெட் குறித்து பாராட்டுத் தெரிவித்தார். முன்னாள் அமைச்சர், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. குழந்தைவேலு குரூட் ஆயிலுக்காக போடப் பட்டுள்ள வரியினால் பொது மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று பாராளுமன்றத்திலே பேசியிருக்கிறார். பத்திரிகைகளில் வேறு விதமாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் முதலமைச்சர் அவசர அவசரமாக மக்களை வாழ வைக்கக் கூடிய பட்ஜெட் என்று கூறி பாராட்டுத் தெரிவித்திருக்கிறார். அந்த மத்திய சர்க்காரோடு கணவன், மனைவியாக வாழ்கிறோம் என்று டாக்டர் சமரசம் சொன்னார். அப்படி குடும்ப வாழ்க்கையில் உள்ள அந்த மத்திய அரசினர்தான் டெலிபோன் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள், தபால் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள் ; சரக்குக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள்:; இரயில்வே பயணிகள் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள், பீடி விலையை உயர்த்தியிருக்கிறார்கள், சிகரெட் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். சோடாவுக்கு வரி போட்டிருக்கிறார்கள். குரூட் ஆயிலுக்கு வரி, டி. வி.க்கு வரி, வெற்றிலைக்கு வரி என்று போட்டிருக்கிறார்கள். இவை எல்லாம் டைரக்ட் டாக்ஸஸ். மக்களைப் பாதிக்கக் கூடிய மறைமுகமான வேறு வரிகளையும் 80 சதவீதத்திற்கு மத்திய சர்க்கார் போட்டிருக்கிறது.





டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கனவில், கற்பனையில், கானல் நீரில் கற்பனையை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சரவர்கள் சொன்னது மொத்த பட்ஜெட் குறித்து. திரு. குழந்தைவேலு அவர்கள் சொன்னது குறிப்பிட்ட கருத்து. இரண்டும் உண்மை தான். இரண்டும் சொல்லக்கூடியதுதான்

(முற்பகல் 10-50)

திரு. அ. ரகுமான்கான் : நான் கவனமாக இரண்டையும் படித்துப் பார்த்தேன் முதலமைச்சரவர்களுடைய கருத்தில், மத்திய சர்க்காரின் பட்ஜெட் பற்றி ஒரு வரிகூட குறைத்தோ அல்லது இது தவறானது, நன்மை பயக்காது என்றோ சொல்லவில்லை. முழுமையாக அப்படியே ஒப்பளிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் திரு. குழந்தைவேலு அவர்கள் இது மக்களை பாதிக்கக்கூடிய பட்ஜெட் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இது என்ன கொள்கை என்பது எனக்குத் தெரியாது. ஆக நான் சொல்ல விரும்புவது எல்லாம், இன்றைக்கு மிக முக்கியமான பிரச்சினை. . . .

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். சிகரெட் விலை உயர்வாலும், லாகிரி வஸ்துக்கள் விலை உயர்வதாலும் ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்களா ? வரி இல்லாமல் சர்க்கார் நடத்த முடியுமா ? அல்லது நீங்கள் வரி இல்லாமல் ஆட்சியை நடத்தினீர்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சென்ட்ரல் கவர்மென்ட் பட்ஜெட் பற்றி இங்கே டிஸ்கஸ் பண்ணக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் கவர்னர் உரையின்மீது பேச வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விலைவாசி உயர்வு பற்றிப் பேசும்போது மத்திய அரசு போடும் பட்ஜெட்டால் ஏற்படுகின்ற பாதிப்புகள் என்ன என்பதும், மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கைதான் மாநிலங்களில் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமாக இருக்கிறது என்பதும் பொருளாதார அடிப்படை தெரிந்தவர்களுக்குக் கூடத் தெரியும். ஆகவே நான் சொல்ல விரும்புவது, இன்றைக்கு இந்த விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை இந்த சர்க்கார் எடுக்க வேண்டும். இதற்கெல்லாம் மாறாக நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் பஸ் கட்டணத்தை ஏற்றுகிறார். இது தேவைதானா ? உலக வங்கி, பம்பாய், கல்கத்தாவுக்குக் கடன் கொடுக்கிறது. அங்கே பஸ்

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மார்ச் 2

கட்டணம் உயர்த்தப்படவில்லை. உலக வங்கி நிர்ப்பந்தப்
படுத்தினாலும் பஸ் கட்டணத்தை உயர்த்தமாட்டேன் என்று
நம்முடைய முதலமைச்சரவர்கள் தேர்தலிலே ஓட்டு வாங்குவதற்
காகச் சொன்னார்கள். இப்போது சட்டசபை நடக்கிறது. இப்
போது பஸ் கட்டணத்தை உயர்த்துவது நியாயம்தானா என்று
நான் கேட்க விரும்புகிறேன். இன்னொன்றை தெரிவித்துக்
கொள்கிறேன். இன்றைக்கு அழகிரி போக்குவரத்துக் கழகம்,
பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஆகியவைதான் நஷ்டத்தில்
இயங்குகின்றன மற்ற போக்குவரத்துக் கழகங்கள் இன்றைக்கு
இலாபத்தில்தான் நடக்கின்றன. இதை ஒரு கமர்சியல் பாயின்ட்
ஆஃப் வியூவில் சர்க்கார் பார்க்கக்கூடாது. பஸ்ஸிலே பயணம்
செய்யக்கூடியவர்கள் டாட்டாக்கள், பிர்லாக்கள் அல்ல. மண்
குடிசைக்காரர்கள், மத்திய தர வகுப்பினர், என்.ஜி.ஓ.வினர்
ஆகியோர்தான். ஆகவே பஸ் கட்டணத்தை உயர்த்தக்கூடாது
என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மது விலக்குக் கொள்கையை மகிழ்ச்சிகரமான செய்தி
யாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் நிதி அமைச்சர் அவர்
களை ஒன்று கேட்கிறேன். 1-1-1987-க்குப் பிறகு இங்கே
கள், சாராயம் தயாரிப்பது, விற்பது, அருந்துவது தடை செய்யப்
படுகிறது. ஆனால் 1-1-1987-க்குப் பிறகு பிராந்தி, விஸ்கி,
ரம், பீர் இவை எல்லாம் தயாரிப்பது, வாங்குவது, விற்பது
அனுமதிக்கப்படுகிறது நான் தமிழ் கற்ற நாவலர் அவர்களைக்
கேட்கிறேன். இதற்குப் பெயர் மதுவிலக்கா? கள், சாராயக்
கடைகளை மூடினால் மட்டும் மதுவிலக்குக் கொடுமை தீர்ந்து
விடுமா? ஆகையால் இது அர்த்தமில்லாத கொள்கையாக
இருக்கிறது. இது மதுவிலக்குக் கொள்கை என்பதற்குப்
பொருளல்ல. இரண்டாவதாக, அரசியல் சட்டத்தில் 'டை ரக்
டிவ் பிரின்சிபிள்ஸ்'படி கொண்டு வருகிறோமென்று சொல்
கிறார்கள் அதைப் படித்தவர்கள், அரசியல் சட்டத்தின் 14-வது
பிரிவைப் படிக்க வேண்டும். சட்டத்தின் முன்னால் எல்லோரும்
சமம். ஒருவருக்குக் கள் குடிப்பதற்கு உரிமையுண்டு,
சாராயம் குடிப்பதற்கு உரிமையுண்டு. ஆனால் அந்த உரிமையை
சர்க்கார் சட்டத்தின் மூலம் தடுக்கிறது. ஆனால் பிராந்தி
குடிக்கலாம், மது குடிக்கலாம் என்று அவர்களுக்கு உரிமை
இருந்தால், இது ஒரு டிஸ்கிரிமினேஷன், வேறுபாடு என்று
ஆகிறது. குடிமக்களிடையே இரண்டு உரிமை. இது அடிப்படை
உரிமைகளிலிருந்து வேறுபட்டிருக்கிறது. இதற்காக நான் அதை
ஆதரிக்கவில்லை. பரிபூரணமான மதுவிலக்கை அமுல்படுத்துங்
கள் என்று வலியுறுத்துவதற்காகத்தான் நான் இதைச் சொன்
னேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
உறுப்பினர் சீக்கிரம் முடிக்க வேண்டும் 20 நிமிடங்கள் ஆகி
விட்டன.



987 மார்ச் 2]

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, நான் சொல்வது, குடிப்பழக்கம் கொண்டவர்களைப்
பொறுத்தமட்டில் வேறுபாடு சட்ட ரீதியாக இருக்கக்கூடாது
என்பதுதான். மொத்தத்தில் முழு மதுவிலக்கு இருக்க வேண்டும்.
பகுதி மதுவிலக்கு இருக்கக்கூடாது என்பதைத்தான் வலியுறுத்து
கிறேன்.

இன்னொன்று, சாராயக் கடை, கள்ளுக் கடை ஆகியவற்றின்
பெயர்ப் பலகைகள்தான் எடுக்கப்பட்டிருக்கின்றனவே தவிர,
அங்கே விற்பனை நடைபெறுகின்றன என்ற குற்றச்சாட்டை
வெளியிலே உங்களுடைய கூட்டணிக் கட்சியினர்—அதாவது
கணவன்-மனைவி— சொன்னார்கள். அதற்கு நாவலர் அவர்கள்
கூட பதில் சொன்னார்கள். சிரங்கு பிடித்தவனுக்கு அரித்துக்
கொண்டேதான் இருக்கும் எனவே அதைப் பற்றி கவலைப்பட
வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் இதற்குப்
பல்வேறு பத்திரிகைகளில், பல்வேறு ஆதாரங்கள் வெளியிடப்
பட்டிருக்கின்றன.

இன்னொன்றையும், தெரிவிக்க விரும்புகிறேன். எனக்குக்
கிடைத்த தகவல்களைச் சொல்கிறேன். (subject to corrections)
தவறாக இருந்தால் அமைச்சரவர்கள் சரியான தகவல்
தரலாம். தமிழ்நாடு முழுவதும் 2,650 ஒயின் ஷாப்ஸ் இருக்
கின்றன என்று கேள்விப்படுகிறேன். சென்னையிலே மட்டும்
442 ஷாப்ஸ் இருப்பதாகவும், அண்ணா நகர் தொகுதியில்
மட்டும் 40 ஷாப்ஸ் இருப்பதாகவும் கேள்விப்படுகிறேன்.
அப்படியானால், எவ்வளவு பேர்களுக்கு பெர்மிட் கொடுத்திருக்
கிறீர்கள்? அந்தப் பட்டியலை மாண்புமிகு டாக்டர் நாவலர்
அவர்கள் பதில் உரையிலே சொல்வார்கள் என்று நம்புகிறேன்.
அதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் தனது உரையில், பொங்கல் திருநாள்
நன்னாள் என்று சொல்லியிருக்கிறார்கள். அன்று கோவைக்
காலையிலே தொலைக் காட்சி ஒளிபரப்பு தொடங்கப்பட்டிருக்
கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் தொலைக்
காட்சி பெட்டிக்கு வரி போடப்பட்டிருக்கின்றதே, எப்படி என்று
கேட்டால் பிளாக் அண்டு ஒயிட் டி.விக்கு எக்சைஸ் டியூட்டி
ரூ. 150 என்று இருக்கின்றது. அது எப்படி மகிழ்ச்சியாக
இருக்க முடியும்? சரி மகிழ்ச்சியாகவே இருக்கட்டும், அதிலே
இந்தி திணிக்கப்படுகிறது. தொலைக் காட்சியிலே இரவு நேரத்
திலே திணிக்கப்படுகிறது. இப்போது காலையிலே திணிக்க
ஆரம்பித்திருக்கிறார்கள். இதையெல்லாம் நாங்களும் எதிர்த்துப்
பேசியிருக்கிறோம் நீங்களும் இங்கே தீர்மானத்தைக் கொண்டு
வந்திருக்கிறீர்கள. டி.வி. ஸ்டேஷனிலே, ரெயில்வே ஸ்டேஷனிலே,
பாங்க்-லே எல்லாம் வேலை பார்ப்பவர்களுக்கு புரோமோஷன்
இருக்கிறது. அதுபோலவே சம்பள உயர்வு இருக்கின்றது.

இந்தியிலே பரிட்சை எழுதலாம் என்று இருக்கின்றது.
அண்ணாவினுடைய பெயரிலேதான் உங்களுடைய கட்சி (ருக்
கின்றது. அண்ணாவின் படத்தைத்தான் கொடியிலே போட்
டிருக்கின்றீர்கள். அண்ணா நாமம் வாழ்க என்று சொல்கின்
றீர்கள். அண்ணா சர்க்கார் என்று சொல்கின்றீர்கள். ஆனால்
அண்ணா அவர்கள் 'இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாக
இருக்கும்' என்ற கருத்தை ஒரு துண்டுக் காகிதத்திலே எழுதி
கொளுத்தச் சொன்னர்கள். மதுரை முத்து அவர்கள் அப்படித்
தான் கொளுத்தினார். காதர்ஷா அவர்கள் அப்படித்தான்
கொளுத்தினார்கள். கழகத்தின் ஆயிரக்கணக்கான தொழிலாளர்
கள் இந்தக் காரியத்தை செய்வதற்காக அண்ணா அவர்கள் வழி
வகுத்துத் தந்தார்கள். அப்போது அண்ணா அவர்கள் நாடாளு
மன்ற உறுப்பினராக இருந்தார்கள். அப்போது பதவிப் பிர
மாணம் எடுத்திருந்தார்கள். அப்போது தேசிய அவமதிப்பு
தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார். நான் "குற்ற
வாளி அல்ல" என்று அண்ணா அவர்கள் வாதாடினார்கள்.
நாவலர் அவர்கள் நினைவுக்குக் கொண்டுவருகிறேன். 'நான்
குற்றவாளி அல்ல' என்றுதான் அண்ணார் அவர்கள் வாதாடி
னார்கள். "அரசியல் சட்டத்தை மதிக்கவில்லை. பெரிய
அவமதிப்பை ஏற்படுத்தினாய்" என்று கோர்ட்டிலே சொன்ன
போது, 'இல்லை, இல்லை, இந்தி திணித்ததனாலேதான் அவ
மதித்தேன்' என்று வாதாடினார். 6 மாதம் ஜெயில், சென்ட்ரல்
ஜெயிலிலே 6 மாதம் இருந்தார்கள். அதே காரியத்தைத்
தான் நாங்கள் செய்தோம். ஆனால் அண்ணாவைப் பாராட்டு
கின்ற நீங்கள், இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களை வீட்டுக்குப்
போகவேண்டும் என்று சொல்லிவிட்டீர்கள். கவலையில்லை.
அது நீதிமன்றத்திலே இருக்கின்ற வேறு விவகாரம். நான்
இங்கே கேட்க விரும்புவது, இங்கே தீர்மானம் போட்டீர்களே,
"நேருஜியின் வாக்குறுதியை உறுதி மொழியாக்க வேண்டும்"
என்று, அது என்னவாயிற்று. அந்தத் தீர்மானத்திற்கு என்ன
Follow up Action? எது எதற்கோ Follow up Action.
இந்தச் சர்க்கார் இது குறித்து என்ன எடுத்திருக்கின்றது?
நேருஜியின் வாக்குறுதியை உறுதிமொழியாக ஆக்கவேண்டும்
என்பதற்கு இளம் பிரதமர் திரு ராஜீவ் அவர்களிடமிருந்து
பதில் வந்திருக்கின்றதா? மத்திய சர்க்காரிடமிருந்து பதில்
வந்திருக்கின்றதா? இன்றைக்கு டி.வி.யிலே இந்தி திணிக்கப்
படுகிறதே, அதை எதிர்த்து இந்தச் சர்க்கார் என்ன செய்யப்
போகிறது என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.**

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.





நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் "என்னைப் போலீஸ் பின் தொடருகிறது. இது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, எங்கோ போக வேண்டிய போலீஸ் என் பின் வருகின்றதே" என்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெளியிலே சொல்வதை எல்லாம் இங்கே வந்து பேசுவது சரியல்ல. அதிலே பிரச்சினைகள் வரும் என்று நினைக்கிறேன். அவர்கள் சொல்கிறார்கள், இவர்கள் சொல்கிறார்கள் என்று சொல்லி இங்கே அதைப் பற்றி வாதாட முடியாது.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே அரசியல் உள் நோக்கத்தோடு பலவிதமான பொய் வழக்குகள் போடப்படுகின்றன. என்னுடைய தொகுதியிலே வீட்டிலே தூங்கிக் கொண்டிருந்தவர்கள் பல பேர்களை, கலைஞரை கோர்ட்டுக்குக் கொண்டு வருகின்றார்கள் என்று சொல்லி கைது செய்தார்கள். ஏன் என்று விசாரித்ததில், 144 தடை உத்தரவை மீறி விட்டார்கள் என்று சொன்னார்கள். எப்படி ஐயா என்று கேட்டதற்கு, இரவு 2 மணிக்கு என்று சொன்னார்கள். நான் திருப்பிக் கேட்டேன். 2 மணிக்கு அவர்கள் எப்படி ஐயா அவர்கள் வீட்டிலே தூங்கும் போது மீறுவார்கள்? 144 தடை உத்தரவை எப்படி மீற முடியும் என்று கேட்டேன். * * நான் கேட்க விரும்புகிறேன். இது பொய் வழக்கு அல்லவா? வீட்டிலே தூங்கிக் கொண்டிருக்கும் போது பிடிக்கிறார்கள். தூங்கிக் கொண்டிருந்த ஆட்கள் மீது வழக்கு போடுகின்றார்கள்.

மதுரை ஆதீனம் சிங்கப்பூருக்குப் போகக் கூடாதா? திருஞான சம்பந்தர் வழியில் தமிழ் வாழ்க என்று சொல்லக் கூடாதா? அப்படிச் சொல்லியது குற்றமா? இந்தி ஆதிக்கம் வருகிறது என்று சொல்லியது குற்றமா? அவரை ஏர்போர்ட்டிலே விமானத்திலே போகக்கூடாது என்று திரும்ப அழைத்துக் கொண்டு வருகின்றார்களே. கோர்ட்டிலே கிரிமினல் கேஸ் இருக்கிறது என்று சொல்லுகின்றார்களே. கிரிமினல் கேஸ் இருக்கிறதா? கோர்ட்டுக்குப் போனார்களே. நீதிபதி சொன்னாரே, இந்த சர்க்காருக்கு வெளிநாட்டிற்குப் போகின்றவர்களைத் தடுக்க அதிகாரமே இல்லை என்று சொன்னாரே. இது பொய் வழக்கு அல்லவா? ஒருவர் புகார் சொன்னார் என்று எங்கள் கட்சி டைரக்டர் ராஜேந்தர் அவர்களைக் கைது செய்ய முயற்சி செய்கின்றீர்களே. நான் கேட்கிறேன். பல்வேறு புகார்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவே அவை மீது நடவடிக்கை எடுத்திருக்கின்றீர்களா? ஆகவே எல்லாம் பொய் வழக்குகளாக இருக்கின்றன. **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மார்ச் 2
[நண்பகல் 12-00].

அது மட்டுமல்ல, இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரே குற்றத்திற்காகவும், அண்ணாவின் கொள்கையை பின்பற்றிய ஒரே குற்றத்திற்காகவும் இவை எல்லாம் தேவையா?** இவற்றை எல்லாம் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர காரணம், தயவு செய்து அண்ணா வழியில் நடக்கிற செயலில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறபோது இது போன்ற அணுகுமுறை இந்தச் சர்க்காருக்கு தேவையா என்று சுட்டிக் காட்டுவதற்காகத் தான்.

இன்னொன்றையும் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இன்றைக்கு நாடு முழுவதும் வறட்சி இருக்கிறது. அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். உடனடி யாக அனுப்பப்பட வேண்டும். விழாக்களில் அமைச்சர்கள் கலந்து கொள்ளட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் வறட்சி அறிக்கையை உடனடியாக மத்திய சர்க்காருக்கு அனுப்ப வேண்டும். மத்திய சர்க்காரிடமிருந்து உடனடியாக நிதியுதவி பெற்று வறட்சி நிவாரணப் பணிகளை இந்த அரசு தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த பாயிண்டு டன் முடித்து விடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: முடித்து விடுகிறேன். என்னுடைய நேரத்தில் குறுக்கிட்டதால் 10 நிமிடம் போய்விட்டது.

கடைசியாக இன்னொன்றையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினையில் மத்திய சர்க்காரின் துணை கொண்டு அந்த இனத்தையே அழிக் கின்ற காரியம் நடைபெறுகிறது. தென்னாப்பிரிக்கா மற்றும்- அராபட்-பாலஸ்தீனிய விவகாரங்களில் எப்படி மத்திய சர்க் காரின் அணுகுமுறை உள்ளதோ, ஈடுபாடு காட்டப்படுகிறதோ அது போல் இவர்கள் விஷயத்தில் காட்டப்படவில்லை. மாநில சர்க்கார் மத்திய சர்க்காரை நம்பியிருப்பது தவறானது. இலங் கைப் போராளிகளின் ஆயுதங்களைப் பறித்தார்கள். கேட்டால் மத்திய சர்க்கார் எனக்குத் தெரியாது என்கிறது, மாநில சர்க்கா ரும் எனக்குத் தெரியாது என்கிறது.** (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வழக்குக்குப் போய் இருக்கிற ஒரு பிரச்சனை சம்பந்தமாக நீங்களே ஒரு முடிவுக்கு வந்து விடுகிறீர்கள். * * சிக்க வைக்கவில்லை. சிக்க வைத் திருப்பதாகச் சொல்கிறீர்கள். அப்படி இல்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



1987 மார்ச் 2] [பேரவைத் துணைத் தலைவர்]

அதுபோல் ** இந்த நிலையில் இங்கே ஒரு காரணம் சொன்னால் அது எப்படிச் சரியாகும். இதை முதலில் உறுப்பினர் தவிர்க்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: அடுத்து, முதல்வர் அவர்கள் கதை எழுதுவது குறித்து மகிழ்ச்சி. நம்முடைய அமைச்சர் பண்ருட்டி யார் அவர்கள் ஓர் இடத்தில் அதை அறிவித்தார்கள். கலைஞர் அவர்கள் ''பிள்ளையோ பிள்ளை'' திரைக்கதை வசனம் எழுதிய போது அரசாங்க அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதற்குத் தான் அது வழி வகுக்கும் என்று சொல்லிவிட்டு அதே தப்பை நீங்கள் செய்யலாமா?

போக்குவரத்துக் கழகத்திற்கு தர்மபுரி மாவட்டத்திலே முதலமைச்சருடைய தாயார் பெயராலே, சத்தியா அம்மையார் பெயராலே போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். மாதாவின் காலடியில் சுவர்க்கம் இருக்கிறது என்பதை உணர்ந்தவன் நான். எனவே அது குறித்து நான் தவ றாகச் சொல்லவில்லை. ஆனால் கருணா என்று பெயர் வைக்க லாமா? அஞ்சுகம் என்று பெயர் வைக்கலாமா? விளம்பரப் பிரியர் கருணாநிதி என்று எல்லாம் சொல்லிவிட்டு இன்றைக்கு அதே காரியத்தை இந்த அரசு செய்வது நியாயமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

தொலைக்காட்சி விளம்பரத்திலே அண்ணா பெயராலே ஆட்சி நடத்துகிற சர்க்கார்—ஒரு புறத்திலே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், இருக்கட்டும், அவர் முதலமைச்சர்-இன் னொரு புறத்திலே பிரதமர் ராஜீவ் இருக்கட்டும், அவர் பிரதமர்- நடுவிலே இந்திரா அம்மையார் அவர்கள், முன்னாள் பிரதமர், மரியாதைக்குரியவர், இருக்கட்டும். அவரை கவுரவிக்க வேண்டு மென்றால் எங்கே வேண்டுமானாலும் கவுரவிக்கலாம். ஆனால் அண்ணாவைத் தூக்கி எறிந்து விட்டுத்தான் மறைந்த பிரதமரை வைக்க வேண்டுமா? நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்களைப் பொறுத்த வரையில்- கிறிஸ்தவர்களுக்கு எப்படி ஒரு போப் ஆண்டவரோ அது போல் அண்ணா தான் இன்றைக்கு எங்களுக்கு பிரதானம் என்று கருதக் கூடிய நிலையில்—இப்படிப் பேசுவதால் மரியாதைக்குரிய மாஜி பிரதமரை குறைத்துப் பேசுவதாக பொருள் இல்லை, அர்த்தம் இல்லை—அந்த அம்மையாரை கவுரவியுங்கள்—அதற்காக அண்ணாவின் பெயரை நடுவிலேயிருந்து எடுத்து விட்டு இப்படிச் செய்யலாமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இவற்றை எல்லாம் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ** (மணி அடிக்கப்பெற்றது).

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கோர்ட்டில் இருக்கிற பிரச்சினை குறித்து குறிப்பிட்டதை நீக்குகிறேன். கோர்ட்டுக்குப் போனதை குறித்து நீங்களே பேசி முடிவு செய் கிறீர்கள். அதை எக்ஸ்பஞ்ச் பண்ணுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : **

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : **

This is also a subject matter before the court in the pending case.

திரு. அ. ரகுமான்கான் **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைத்தான் அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ** தயவு செய்து வேறு சப்ஜெக்டைப் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : **

திரு. அ. ரகுமான்கான் : **

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே ; நீங்கள் நேரம் ஒதுக்கி உறுப்பினர் அவர்களைப் பேச வைக்கிறீர்கள். அவர்கள் பேசிக்கொண்டே வருகிறார்கள். நேரம் முடிகிறது. முடியும் தருவாயில் வேண்டுமென்றே ஒரு சிக்கலான பிரச்சினையை எடுத்துப் பேசி நேரத்தை வீணாக்கு வது என்பதை ஒரு முறையாகவே வைத்துக்கொள்வது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். இரண்டாவது விஷயம், கோர்ட்டிலே இருக்கின்ற விஷயம். சட்ட அமைச்சர் விளக்கம் சொல்லி விட்டார். லா டிமாண்டிலே வேண்டுமானால் சொல்லலாம். அதுவும் கோர்ட்டிலே இருக்கின்ற விஷயத்தைப்பற்றிப் பேச முடியாது இங்கே. கவர்னர் அட்ரசிலே இந்த சப்ஜெக்டைப் பற்றி எல்லோரும் பேசினால் என்னவாகும் ? இப்பொழுதே பாருங்கள், எல்லாவற்றையும்விட நேரம் உங்களுக்கு அதிகமாக ஆகிவிட்டது. இனிஷியேட் பண்ணியவர் எடுத்துக் கொண்ட நேரம் வந்துவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க, அகற்றப்பெற்றது.



திரு. அ. ரகுமான்கான் : முடித்து விடுகிறேன். மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இதுபோன்ற கேள்விகளை எழுப்பி நேரத்தை வீணாக்குவதை வாடிக்கையாக வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லாவற்றிற்கும் நியாயம் சொல்ல வேண்டும் அல்லவா ?

திரு. அ. ரகுமான்கான் : சொல்லி விடுகிறேன். நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய விஷயத்தை இங்கே பேசக் கூடாது என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை முதலிலேயே பேச வேண்டுமல்லவா ? கடைசிக்கு வருவது, அப்பொழுதுதான் நேரத்தை கெயின் பண்ணலாம் என்று. மற்ற உறுப்பினர்களைப் பாதிக்கின்ற வகையிலே இது அமைகிறது என்பதைத் தங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரே ஒரு பாயிண்டோடு முடித்து விடுகிறேன் என்று உறுப்பினரவர்கள் சொன்னார்கள். பிறகு அதை முடித்து, இரண்டாவது, மூன்றாவது பாயிண்ட் என்று வந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இதோடு முடித்து விட வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : என்னுடைய உரையை எப்படி அரேன்ஜ் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆலோசனை சொல்ல வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, எந்த அரேன்ஜ்மெண்டியே வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். கடைசியில் குழப்பத்தை விளைவித்து நேரத்தை அதிகம் ஆக்குகின்ற அரேன்ஜ்மெண்ட் மட்டும் வேண்டாமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, கேள்வி கேட்க விட்டு பதில் சொல்வது ஒரு மரபு. குழப்பத்தை உருவாக்குகிறார்கள் என்று ஓடி ஒளிவது ஒரு மரபு. ஆனால், உங்களைப் பார்த்து நான் கோட்டுக் கொள்ள விரும்புவது, உங்களிடத்திலே ஒரு ரூலிங்கை நான் கேட்க விரும்புகிறேன். வேறொன்றுமில்லை. ஒன்றரை மாதம் பேச இருக்கிறோம். அது வேறு விவகாரம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேச்சில் குறுக்கிடுவதற்காக நான் வருந்துகிறேன். நல்ல

வேகத்தோடு பேசுகின்ற நேரத்தில் குறுக்கிட வேண்டாமென்று தான் உட்கார்ந்திருந்தேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் நீதி மன்றத்தில் இருப்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். நீங்களும் அதைப் பற்றிச் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். அவர் விடமாட்டேன் என்கிறார். நான் தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்வது, நீதிமன்றத் திற்கு முன்பாக இருக்கின்ற வழக்கு பற்றி இந்த அவையிலே எடுத்துப் பேசுவது, விவாதிப்பது முறை அல்ல, சரியல்ல. அப்படிப் பத்திரிகையிலே வருவதுகூடச் சரியாக அமையாது. தங்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீக்கியாகி விட்டது.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் தீர்ப்பு சொல்வதை நான் ஒத்துக் கொள்கிறேன். அதைப் பற்றி ஒன்றும் வருத்தமே இல்லை. நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருக்கிறது. * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது டிஸ்கஷனுக்கு வரவில்லை. வந்த தகவல்.

திரு. அ. ரகுமான்கான் : * *

(பிற்பகல் 12-10)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * இந்தப் பிரச்சினை நீதிமன்றத்தில் இருக்கிறது. ஆகவே, வழக்கு இருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்லலாம்; அதனுடைய மெரிட்ஸ், டிமெரிட்ஸ் பற்றி டிஸ்கஸ் பண்ணக்கூடாது.

திரு. அ. ரகுமான்கான் : நான் மெரிட்ஸ் டிமெரிட்ஸ் பற்றி சொல்லவில்லை, அதற்கு ....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை இங்கே விவாதிக்க முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, நான் அந்தப் பிரச்சனைக்குள் போகவில்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க, அகற்றப் பெற்றது.





தங்கள் அனுமதியோடு இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அது மிக முக்கியமான பிரச்சினை, கல்வித் துறை சம்பந்தமானது. (குறுக்கீடுகள்)

திரு. மா. சின்னராசு : துணைத் தலைவரவர்களே, வழக்குமன்றத்திலே வழக்கு இருக்கிறது. * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவிக் கொண்டே போகிற சூழ்நிலையில் அவர் எதை எதையோ சொல்கிறார். ஆகவே, நீங்கள் எதை எதை நீக்கியிருக்கிறீர்கள்; எது எது குறிப்பேட்டில் இருக்கிறது; அவர் என்ன பேசுகிறார் என்பதெல்லாம் எங்களுக்குப் புரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது இந்த மன்றம் எடுத்த நடவடிக்கைக்கும் வெளியிலே அவர்களுடைய பேச்சுக்கும் முடிச்சுப் போட்டு பேசுகிறார். இதைத்தான் நான் முதலிலே குறிப்பிட்டேன். அவர் பேச வேண்டியதை எல்லாம் பேசிவிட்டு, கடைசி நேரத்தில் சம்பந்தம் இல்லாத ஒன்றைப் பேசி நேரத்தை வீணாக்குகின்ற தந்திரத்தைக் கையாளுகிறார். நாங்கள் அதைச் சொன்னால் ஓடி ஒளிகிறோம் என்று சொல்கிறார். ஆகவே, அவர் இப்படி ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவுவதை நிறுத்திக் கொண்டால் நல்லது.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, உயிர் போனாலும் தாவுகின்ற பரம்பரை என் பரம்பரை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, வேறு என்ன பரம்பரை என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : அது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நல்லவர்களை வெளியேற்றுகின்ற பரம்பரைதான் அவர்களுடைய பரம்பரை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது

**திரு. அ. ரகுமான்கான் :** பாலிலே கலந்த விஷம் போன்றவர்களை கூடவே வைத்துக் கொண்டிருக்க முடியாது. பாலிலே விஷம் கலந்து விட்டது. பால் சரியில்லை என்றவுடன் அதை கொட்டுவதுதான் முறை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவரவர்களே, நாங்கள் போன பிறகு விஷம்தான் அங்கே மிஞ்சியிருக்கிறது ! பால் இங்கே வந்துவிட்டது.

**திரு. அ. ரகுமான்கான் :** பால் என்று முதலிலே கருதுகிறோம். விஷம் என்று பின்னால்தான் தெரிகிறது. ஒரு துளி விஷமாக இருந்தாலும் பால் முழுவதும் கெட்டுவிடும். எனவேதான் கொட்டிவிட வேண்டிய அவசியம் வருகிறது. அந்த விஷம் இன்னொரு புறத்திலே போனாலும் அங்கேயும் விஷம் பரவிவிடும்.

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :** எது பால், எது விஷம் என்று மக்கள் தீர்மானித்து, பாலை எங்கே வைக்க வேண்டுமோ அங்கே வைத்திருக்கிறார்கள்; விஷத்தை எப்படி அப்புறப்படுத்த வேண்டுமோ அப்படி அப்புறப்படுத்தியிருக்கிறார்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவரவர்களே, அப்படித் தெரிந்துதான் மாயவரம் தேர்தலிலே மக்கள் தீர்ப்பளித்தார்களா? அதைப்போலவே நாடாளுமன்றத் தேர்தலிலும் இரண்டுமுறை வாக்களித்தார்களா?.......

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துணைத் தலைவரவர்களே, மாயவரம் தேர்தலைப்பற்றிச் சொன்னார்கள். மாயவரம் தேர்தல் மட்டுமல்ல; மேலும் தொடரும். மாயவரம் என்பது மாயவரம்தான். அதுபற்றி கவலையில்லை. எந்தத் தேர்தல் வந்தாலும் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவரவர்களே, (குறுக்கீடுகள்) என்னுடைய பேச்சில் குறுக்கீடுகள் அதிகமாகி விட்டன. மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். Last but not the least, with your kind permission மிக முக்கியமான பிரச்சினை, நம்முடைய பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் இங்கே பேசக்கூடாது. ஆனால் மருத்துவக் கல்லூரி சம்பந்தமாக ஓரே ஒரு கருத்து. ஒரு மாணவர் பரீட்சையே எழுதவில்லை. 2 பரீட்சை எழுதவில்லை. ஆனால் 30-க்கு ஒரு மார்க் வாங்குகிறார். உடனே மறுபரிசீலனைக்கு அனுப்பப் படுகிறது. (குறுக்கீடுகள்) வழக்கு முடிந்துவிட்டது; அப்பீல் பண்ணவில்லை. நான் விசாரித்துவிட்டேன்.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை அவைக்குத் தரக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். பரீட்சை எழுதவில்லை என்ற தவறான தகவலைத் தரக்கூடாது. முழு விவரமும் தெரிந்து பேசவேண்டும். தெரியவில்லை என்றால் சும்மா இருந்துவிட வேண்டும். பேசக்கூடாது.

**திரு. அ. ரகுமான்கான் :** சிண்டிகேட் உறுப்பினர் நான். (குறுக்கீடு) எனக்கு விவரம் தெரியாது என்கிறார்கள். (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது).

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்தில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின் மீது நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த விவாதத்தில் கலந்து கொண்டு நானும் ஒருசில கருத்துக்களை இங்கே எடுத்துச்சொல்ல அனுமதித்த தங்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆண்டின் துவக்கத்தில் ஆற்றிய ஒரு சம்பிரதாய உரையாக இந்த உரை இல்லாமல் லட்சியங்களின் விளக்கமாக இந்த விளக்க உரை இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். போரில் ஏற்படும் வெற்றிக்கு முன்னால் போர் முழக்கம் செய்வது போல், சோதனைகளின் வெற்றிக்கு முன்னால் கொள்கை முழக்கம் செய்வது போல் இந்த ஆண்டு ஆளுநர் உரை இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சீன யுத்தத்தினுடைய அபாயத்தின்போது பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டு நாட்டின் ஒற்றுமைக்காக மத்திய அரசோடு துணை நின்று மாநில, மைய அரசுகளுக்கு உறுதுணையாக இருந்தார்கள். பேரறிஞர் அண்ணா வழியில் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அவர் வழியில் நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்கும், மாநில வளர்ச்சிக்கும் மைய அரசோடு துணை நின்று இன்றைக்குக் காரியங்களை ஆற்றிக் கொண்டு வருகிறார்கள் ! என்பதை இந்த மன்றத்திற்கு நான் முதலில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகம் பூஜை அறை என்று சொன்னால், இந்தியா வீடு என்று அர்த்தம். எனவே பூஜை அறையினுடைய புனிதத்தைக் காக்கவும், வீட்டைக் காக்கவும் மைய அரசோடு அவர்கள் துணை நிற்கிறார்களே தவிர வேறு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே உள்நோக்கம் கற்பிப்பது போன்ற காரணத்திற்காக அல்ல என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். ஏதோ உறவாக இருக்கிறோமே என்பதற்காக, உறவோடு இருக்கிறார்களே என்று வயிற்றெரிச்சல்பட்டு திரு. ரகுமான்கான்

போன்றவர்கள் சிண்டு முடிந்துவிட்டு சண்டை போட வைக்கலாம் என்று எண்ணினாலோ அல்லது காங்கிரஸ் கட்சி யிலே இருப்பவர்கள் உறவு வைத்துக் கொண்டிருப்பதாலேயே உறவாடிக் கெடுத்துவிடலாம் என்ற எண்ணத்தோடு இருந்தா லோ அந்த சூழ்ச்சி எல்லாம் பலிக்காது இதயதெய்வம் புரட்சித் தலைவரிடம் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் பணி வோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர்கள் எல்லாம் பேசினார்கள். இங்கே பேசிய இரண்டு உறுப்பினர்களும் இந்த நாட்டை ஆண்ட பரம்பரையிலே வந்த வர்கள்; நாட்டை ஆண்ட கட்சியைச் சேர்ந்தவர்கள். எனவே மாநில ஆட்சியினுடைய அதிகாரத்தைத் தெரிந்துகொண்டு பேசியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். மத்தியிலே அதிகாரங்கள் குவிக்கப்பட்டு பாதுகாப்பு; போக்குவரத்து; இன்னும் சொல்லப்போனால் விலை நிர்ணயம் போன்றவற்றைக் கூட வைத்துக் கொண்டிருக்கிற வகையில் அதிகப்படியான அதிகாரங்களை மைய அரசு வைத்துக்கொண்டு இருக்கிறது. இந்நிலையில் மாநில அரசுக்கு இருக்கிற எஞ்சிய அதிகாரம் அதிகபட்சம் போனால் வெல்பேர் மெஷராக, மக்களுக்கான நல்ல திட்டங்களைத் தீட்டுகிற அந்த அதிகாரத்தை மட்டும் வைத்துக்கொண்டு இருக்கிற நிலைமையில் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் எந்த அளவுக்குச் சிறப் பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

நலிந்த நிலையில் உள்ள ஏழை எளிய மக்களுடைய நாடித் துடிப்பை அறிந்து அதற்கேற்றப்படி திட்டம் தீட்டிச் செயலாற்றிக் கொண்டிருக்கிற ஒரே முதலமைச்சர் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு முன்னால் இருந்த பல ஆட்சிக் காலங்களில் பல திட்டங்கள் போட்டார்கள். ஆனால் அந்தத் திட்டங்களின் பலன் சிலபேர் வாய்க்குத்தான் எட்டியதே தவிர மக்களுக்கு எட்டவில்லை. ஆனால் இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் போட்டிருக்கிற திட்டங்களின் பலன் ஏழை, எளிய குழந்தை களின் வாய்க்குச் சோறாகவும், குடிசைகளுக்கு இலவச மின் விளக்காகவும், மானத்தை மறைக்க இலவச ஆடையாகவும், காலுக்குச் செருப்பாகவும் மக்களிடம் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். செருப்பு என்றதும் சிரிப்பு வருகிறது. மூத்த தலைவர்களுக்குக் கூட விலா நோகச் சிரிப்பு வருகிறது என்று சொல்கிறார்கள். இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் எடுத்துச் சொன்னது போல்





அப்படிப் பேசுகிறவர்களின் சிரிப்பு ஆணவச் சிரிப்பாக இருக்குமே தவிர வேறல்ல. ஆனால் இப்படிப்பட்ட திட்டங்களினுடைய பலனைப் பெறுகிறவர்களின் சிரிப்பு ஆனந்தச் சிரிப்பாகத்தான் நிச்சயம் இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமை யோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-20)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கூட எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும் வரையில் காலுக்கு செருப்புப் போட்டு பழக்கப்படாதவன். அதை அனுபவித்தவர்களுக்குத் தான் தெரியும். இன்னும் சொல்லப்போனால் கிராமங்களிலே சொல்வார்கள். 'வெய்யிலிலே இருப்பவர்களுக்குத்தான் நிழலின் அருமை தெரியும்' என்று.

கிராமத்துப் பெண்கள் கூலி வேலைக்குப் போகிறபோது குதித்து குதித்து ஓட்டமும் நடையுமாகத்தான் நடப்பார்கள். அவர்கள் அப்படி நடக்கிறபோது சினிமாவுக்கு கதை வசனம் எழுதிக் கொண்டிருக்கிற அரசியல் தலைவர்களின் கண்ணுக்கு எப்படித் தெரியும் என்றால், அவர்கள் 'ஆஹா அந்தப் பெண் எப்படி புள்ளி மானைப் போல குதித்து குதித்து ஓடுகிறாள் பாருங்கள்' என்று வர்ணிப்பார். ஆனால் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கிற கருணைத் தெய் வம் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய கண்ணுக்கு அந்த ஏழைப் பெண் குதித்து ஓடுவது எப்படித் தெரிகிறது? சுடு மணலிலே கால் பட்டு அந்தச் சூட்டை தாங்க முடியாத வேதனையோடு குதித்து ஓடுகிறாள் என்று புரட்சித் தலைவரின் கண்ணுக்குத் தெரிகிறது. அந்தக் கஷ்டத்தை எப்படிப் போக்க வேண்டும் என்று எண்ணு கிறார்கள். அவர்களின் அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் இந்தத் திட்டம் உருவாகிறது. எனவே வாழ்ந்து கொண் டிருக்கிற இந்தத் தலைமுறையின் பாரி வள்ளல்—எப்படி முல்லைக்குத் தேர் ஈந்தானோ பாரி, அது போன்று இன்றைக்கு ஏழை எளிய தாய்மார்களுக்கும், இளம் சிறார்களுக்கும் காலுக்குச் செருப்பு கொடுத்து அந்தச் சுடு மணலின் சூட்டை தணிக்கிற பணியிலே ஈடுபட்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும் ஒரு திட் டத்தைக் கொண்டு வந்தார்கள். நான் அந்தத் திட்டத்தைக் குறை சொல்வதற்காகவோ அல்லது அந்தத் திட்டத்தைக் கேவலமாக சொல்வதற்காகவோ சொல்ல முன் வரவில்லை. அப்பொழுதும் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதை ஒப்பிட்டுப் பார்த்தால்தான், எந்தத் திட்டம் மக்களுக்குப்

[திரு. செ. செம்மலை] [1987 மார்ச் 2

பலன் அளிக்கக் கூடிய திட்டம் என்பது இந்த மன்றத்தில் இருப்பவர்களுக்குப் புரியும். அதை ஒரு தலைசிறந்த திட்டமாக அன்றைக்குச் சொன்னார்கள். நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய திட்டமாகச் சொன்னார்கள். மக்களை வாழ வைக்கக் கூடிய திட்டமாகச் சொன்னார்கள். மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்கள் கூட அந்தத் திட்டத்தை அறிவித்தபோது ஆச்சரியப்பட்டிருக்கலாம்.

அது என்ன திட்டம் என்றால் தமிழ்நாட்டிலே இருக்கிற அத்துணை லாரிகளுக்கும் மஞ்சள் பெயின்ட் அடிக்கிற திட்டம். அந்தத் திட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்டது. இதை நான் சொல்வதற்குக் காரணம் இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கிற மரியாதைக்குரிய நாஞ்சிலார் அவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி 'அரசாங்கம் யாருடனோ ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. கான்டிராக்டர்களை வாழ வைக்கக் கூடிய திட்டம்' என்று சொன்னார்கள். அவரை நான் கேட்கிறேன், இன்றைக்கு இந்தக் காலணிகள் அணிவிக்கும் திட்டத்தின் மூலமாக மக்களுக்கு எந்த அளவுக்குப் பயன் கிடைக்கும் என்பதை அவர் எண்ணிப் பார்க்க வேண்டும். எந்தத் திட்டம் கான்டிராக்டர்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய திட்டம், எந்தத் திட்டம் மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய திட்டம் என்பதைத் தயவுசெய்து அவர் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் திட்டத்தின் மூலமாக காலணிகள் செய்கிற எத்தனை தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது என்பதையும் அவர் எண்ணிப் பார்க்க வேண்டும். கிராமத்திலே தொழில் வளர்ச்சியோடு ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு இந்தத் திட்டம் எதிர்காலத்திலே நன்மை பயக்கும் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மத்திய அரசோடு நல் உறவு வைத்துக் கொண்டிருப்பதை இங்கே சில பேர் உள் நோக்கத்தோடு சுட்டிக் காட்டினார்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப் போல மைய அரசோடு இருக்கிற தொடர்பு என்பது நமது இதய தெய்வம்புரட்சித் தலைவர் அவர்களைப்பொறுத்த வரையில் Non-confrontation but co-operation ஆக இருக்கிறது. ஆக மைய அரசை மாநில அரசு ஆதரித்து நடக்க வேண்டும் அல்லது ஒத்துப் போக வேண்டும் என்பது நிச்சயமாக அரசியல் சட்டப்படியோ அல்லது நடைமுறைப்படியோ ஒரு வழிப் பாதையாக, One way traffic ஆக இருந்து விடக் கூடாது என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். மாநில அரசின் திட்டங்களுக்கு மைய அரசு நிச்சயமாக செவி சாய்க்க வேண்டும் என்பதோடு மாநில அரசின் உணர்வுகளுக்கும் நிச்சயமாக மத்திய அரசு செவி சாய்க்க வேண்டும்.



1987 மார்ச் 2] [திரு. செ. செம்மலை]

இன்றைக்குப் பிரதமராக இருந்து கொண்டிருக்கிற நம்முடைய மரியாதைக்குரிய இராஜீவ் காந்தி அவர்கள் மாநில அரசின் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்துத்தான் பஞ்சாப், மிசோரம், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களோடு உடன்பாடு கூட செய்து கொண்டார்கள். அவரைப் பொறுத்த வரையில் நான் அவருடைய எண்ணத்தின் உறுதியை மதிக்கிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் சொன்னதைப் போல மைய, மாநில அரசின் உறவுகள் கணவன் மனைவி போல இருக்க வேண்டும். காரணம் கணவன் மனைவியைப் பற்றி சந்தேகிக்க கூடாது, மனைவி கணவனைப் பற்றி சந்தேகிக்கக் கூடாது. அப்படிச் சந்தேகம் எங்காவது வருமேயானால், மைய அரசு மாநில அரசுகளுடைய சந்தேகத்தை நிச்சயமாகப் போக்கியாக வேண்டும். அந்தக் கடமை மைய அரசுக்கு இருக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கிற மிகப் பெரிய பிரச்னை இங்கே நண்பர்கள் எல்லாம் சுட்டிக் காட்டியதைப் போல மொழிப் பிரச்னை. மைய அரசினுடைய தவறான மொழிக் கொள்கை காரணமாக 'இந்தித் திணிப்பு' என்ற ஒரு அபாயம் இருக்கிறது என்ற சந்தேகம் நமக்கெல்லாம் காலில் குத்திய முள்ளாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் இதே மன்றத்தில் ஒரு தீர்மானம் போட்டு, மறைந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய உறுதி மொழியைச் சட்டமாக்க வேண்டும், அது அரசியல் சட்டத்திலே இடம் பெறவேண்டுமென்று. இந்த மன்றமே ஏகோபித்து அனுப்பி வைத்தார்கள். அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அந்த உறுதி மொழி அரசியல் சட்டத்தில் இடம் பெற வேண்டும் என்பதுதான் இன்றைக்கு நமக்கு இருக்கிற விருப்பம்.

இங்கே பேசுகிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் மரியாதைக்குரிய இராஜீவ் காந்தி அவர்களை மதிக்கிறீர்கள், அவர்களுடைய உறுதி மொழி போதாதா என்று கூட கேட்டார்கள். உள்ளபடியே நாங்கள் அதை மதிக்கிறோம். பாரம்பரியம் மிக்க பரம்பரையில் வந்த நேரு அவர்கள் பிரதமராக இருந்தாலும், இந்திரா அம்மையார் அவர்கள் பிரதமராக இருந்தாலும், அதற்குப் பிறகு இராஜீவ் காந்தி அவர்கள் இருப்பதாலும் அந்த உறுதி மொழி காப்பாற்றப்படும் என்று நம்புகிறோம். இன்றைக்கு நமக்கு அபாயம் இல்லை. காரணம் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மரியாதைக்குரிய ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருக்கிறார்கள். அதனால் அந்த உறுதி மொழி காப்பாற்றப்படும். ஆனால் அவருக்குப் பிறகு யாராவது ஒருவர் உத்தரப் பிரதேசத்திலிருந்து பிரதமராக

[திரு. செ. செம்மலை] [1987 மார்ச் 2

வருவாரானால் அந்த உறுதி மொழி காப்பாற்றப்படுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே இந்தச் சந்தேகத்தை நீக்கியாக வேண்டும்.

இன்னும் ஒரு செய்தியைச் சொல்கிறேன். அந்தச் செய்தி சில பேருக்கு புதிய செய்தியாகக் கூட இருக்கலாம். மாண்புமிகு திருமதி யசோதா அம்மையார் போன்றவர்கள் தெரிந்தும் தெரியாமல் இருப்பார்கள். மறைந்த மரியாதைக்குரிய லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் பிரதமராக இருந்த காலத்தில் இந்த உறுதி மொழிக்கு சட்ட வடிவம் கொடுக்க வேண்டுமென்று, Draft Bill போட்டு நம்முடைய மாநிலத்திற்கு அனுப்பினார்கள். அப்போது நம்முடைய மாநில முதல்வராக இருந்த மறைந்த மாண்புமிகு திரு. பக்தவத்சலம் அவர்கள் அதற்கு Amendment எல்லாம் கொடுத்து, உறுதி மொழி சட்டத்திலே இடம் பெற வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் தவிர்க்க முடியாத சூழ்நிலையில், 1965 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். பாகிஸ்தான் 'கச்' பகுதியில் ஆக்கிரமிப்பு செய்த நேரத்தில் அந்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாத ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டு விட்டது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இது உறுதி மொழி, நம்புங்கள் என்று சொல்வதை விட, அந்த உறுதி மொழியை அரசியல் சட்டத்திலே சேர்க்க வேண்டுமென்ற முடிவை அன்றைக்கே நீங்கள் எடுத்து விட்டீர்கள். எனவே நீங்கள் ஒப்புக்கொண்ட அந்த முடிவை, ஏற்றுக் கொண்ட அந்த முடிவை, இன்றைக்குச் செயலாக்குங்கள் என்று தான் கேட்கிறோம். ஏதோ மறைந்த பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் மந்திரி சபைக் கூட்டத்திலே எடுத்த ஒரு முடிவல்ல. அது காங்கிரஸ் ஒர்கிங் கமிட்டி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவாகும்.

1965 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22 ஆம் தேதி டெல்லியில் நடைபெற்ற காங்கிரஸ் ஒர்கிங் கமிட்டி கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

"The Working Committee would like to reiterate the firm resolve of the Congress to adhere to the assurances given by the late Prime Minister Pandit Jawaharlal Nehru. The Congress stands by these assurances. The Working Committee recommended to the Government of India and the Governments of the States to examine the steps that should be taken, including the amendments to the Official Language Act of 1963 to give effect to the assurances given by Pandit Jawaharlal Nehru and all the recommendations made in this resolution."



1987 மார்ச் 2] [திரு. செ. செம்மலை]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

என்று ஒரு தீர்மானம் காங்கிரஸ் ஒர்கிங் கமிட்டியால் போடப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே, ஏற்கனவே உங்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட சட்டத்தை அரசியல் சட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று வாதாடிக் கொண்டிருக்கிறோம். அதற்காக இங்கே சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கிறோம். ஆகவே இதிலே எந்த யோசனையும் செய்யாமல், உடனடியாக நாட்டு மக்களுடைய நலன் கருதி, மாநிலங்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற மரியாதைக்குரிய இராஜீவ் காந்தி அவர்கள் இந்த உறுதிமொழியை அரசியல் சட்டத்திலே இடம் பெறச் செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே வற்புறுத்திக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்ற ஒரு போக்கிலே இருக்க வேண்டுமே தவிர, அதுவே பிரச்சினையை உருவாக்குகிற அரசாக இருந்து விடக்கூடாது. எத்தனையோ பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். தெலுங்கு கங்கை பிரச்சினை காவிரி நதிநீர்ப் பிரச்சினை போன்றவற்றை தீர்ப்பதை விட்டுவிட்டு இன்றைக்கு நம்முடைய மத்திய அரசாங்கம் மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியைப் பொதுப் பட்டியலுக்குக் கொண்டு சென்று விட்டார்கள். இதிலே ஒரு அபாயம் உருவாகிறது. என்ன அபாயம் என்றால் மாதிரிப் பள்ளிகளை இங்கே வைக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள், இது மாநிலத்திற்குத் தேவையில்லாத ஒரு சங்கடத்தை, தேவையில்லாத ஒரு சர்ச்சையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

சென்ற வாரம் சென்னைக்கு வந்த மத்திய அமைச்சர் மரியாதைக்குரிய திரு. நரசிம்மராவ் அவர்கள் மாதிரிப் பள்ளிகளை ஆரம்பிப்பது குறித்து தமிழ் நாடு அரசோடு நாங்கள் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம், நல்ல முடிவு ஏற்பட்டவுடன் அந்த மாதிரிப் பள்ளிகள் இங்கே ஆரம்பிக்கப்படுமென்று சொன்னார்கள். நான் இதனை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எப்படியும் நிச்சயமாக தமிழ் பயிற்று மொழியாக இருக்குமென்ற நிலை வருகிற வரையில் அப்படிப்பட்ட மாதிரிப் பள்ளிகளை ஏற்பதற்கு நம்முடைய அரசாங்கம் ஒப்புக் கொள்ளக்கூடாது என்று இந்த நேரத்தில் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

[திரு. செ. செம்மலை] [1987 மார்ச் 2
(பிற்பகல் 12–30).

அதைப்போல இன்னொரு சந்தேகம் இருக்கிறது. தொலைக்காட்சியிலே இன்றைக்கு ஒரே ஒரு சானல்தான் இருக்கிறது. டெல்லியிலிருந்து ஒளிபரப்பக் கூடிய நிகழ்ச்சிகளில்—அதிக நேரம்—இந்திக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதனால் மாநிலங்களில் உள்ள மக்களுக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. இதை மத்திய அரசாங்கம் நிச்சயமாகப் போக்கியாகவேண்டும். காரணம் தற்போது ஒரே ஒரு சானலை ஆரம்பித்து தொலைக்காட்சி மூலம் நிகழ்ச்சிகளை நாடு முழுவதும் அறிமுகப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இன்னொரு சானலைத் துவக்குவதற்கு 12 கோடி ரூபாய் தான் தேவைப்படும் என்று சொல்லப்படுகிறது. இந்த 12 கோடி ரூபாய் என்பது மத்திய அரசுக்கு ஒரு பெரிய தொகை அல்ல. மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்று சொல்வார்கள். இதிலே ஏன் தயங்குகிறார்கள் என்று தெரியவில்லை. தயங்கத் தயங்கத்தான் மாநில மக்களுக்குச் சந்தேகங்கள் வலுத்துக்கொண்டு இருக்கின்றன. எனவே 12 கோடி ரூபாயில் இரண்டாவது சானலை ஆரம்பித்து, இந்த மக்களுடைய சந்தேகத்தைப் போக்க வேண்டும். நம்முடைய மாநில தொலைக்காட்சி நிலையத்தினுடைய ஒளிபரப்புகளைத் தனியாகக் காட்டுவதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாநிலத்தினுடைய பங்கு நிச்சயமாக இருக்க வேண்டும். மாநில அரசு மைய அரசோடு ஒத்துப் போக வேண்டும், மாநிலத்தினுடைய கான்ட்ரிபியூசன் மத்திய அரசினுடைய நிதிக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்கள். நாம் எல்லாம் சட்டங்களை நிறைவேற்றுகிறோம். ஆனால் அந்தச் சட்டங்களை அமுலாக்க நடைமுறைப்படுத்தக்கூடிய நிலையில் இருப்பவர்கள் உயர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான். அந்த ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் எந்த அளவிற்கு தமிழ்நாட்டிலேயிருந்து வருகிறார்கள் என்று பார்த்தால் ஒன்றிரண்டு பேர்கள்தான். ஆனால் வட மாநிலங்களிலேயிருந்து இன்றைக்கு அதிகமான பேர்கள் வருகிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது, திரு. மலர் மன்னன், திரு. எல். கணேசன் மீது வழக்கு, வெடிகுண்டு வழக்கு, உயர்நீதிமன்ற வழக்கு என்றெல்லாம் வழக்குகளைப் பற்றி பேசியதை நீக்க உத்தரவிடப்பட்டது. அதேபோல் 144 தடை உத்தரவைப் பற்றிச் சொல்கிறபோது, அருவருக்கத்தக்க வார்த்தையைச் சொன்னார்கள். அதையும் நீக்கி இருக்கிறோம். ஆகவே இவற்றையெல்லாம் பத்திரிகையாளர்கள் பிரசுரிக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 மார்ச் 2]

**திரு. செ. செம்மலை :** இன்றைக்கு ஐ.ஏ.எஸ். என்று சொல்கிறபோது, நம்முடைய மாநிலங்களிலிருந்து வருகிற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ஒன்றிரண்டு பேர்கள்தான். எனவே நான் தெரிவித்து கொள்ள விரும்புவது, மாநிலங்களுடைய அதிகாரிகள் ஒட்டு மொத்தமாக நாட்டினுடைய திட்டங்களை அமுல்படுத்துகிற போது, ஒவ்வொரு மாநிலத்தினுடைய பங்கும் அதிலே இருக்க வேண்டும் என்று சொன்னால், ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஐ.ஏ. எஸ். அதிகாரிகளுடைய எண்ணிக்கை சமமான அளவிலே இருக்க வேண்டும். எனவே மாநிலங்களுக்கு இவ்வளவு என்று விகிதா சார அடிப்படையிலே ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுடைய எண்ணிக்கை இருக்கிற வகையில் மத்திய அரசாங்கம் தற்போது உள்ள நிலையை மாற்ற வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மத்திய அரசும் மாநில அரசும் பல திட்டங்களிலே, பல நோக்கங்களிலே ஒன்றியிருப்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் இருப்பவர்களுக்கு வீடு கட்டுகிற திட்டம். இன்றைக்கு மத்திய அரசும் அதைச் சொல்கிறது. மாநில அரசும் அதைச் சொல்கிறது. 1987 ஆம் ஆண்டை, நிலையற்றோர் குடியிருப்பு ஆண்டாக ஐ. நா. மன்றம் அறிவித்து இருக்கிறது. அதேபோல் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களும் — இந்த ஆண்டு சொல்லவில்லை — இதற்கு முன்னாலேயே சொல்லியிருக்கிறார்கள். 'வரும் பொருள் உரைக்கும் எம் தலைவன்' அன்றைக்கே சொன்னார்கள். ஆளுக்கு ஒரு வீடு என்று. அதைத்தான் இன்றைக்கு மத்திய அரசினுடைய பிரதமர் தன்னுடைய பட்ஜெட் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது, இதைச் செயல்படுத்துகிறபோது, எப்படி இதைச் செயல்படுத்துகிறார்கள், எப்படி செயல்படுத்தப்படுகிறது, எந்தெந்த வகையிலே கிராம மக்களுக்கு இது பயனை அளிக்கிறது என்பதைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, ஒட்டு மொத்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னதைப் போல என்ன இருக்கிறது, என்ன இருக்கிறது, எவ்வளவு பலன் என்பதைக் கேள்வியாகக் கேட்டுக் கொண்டிருப்பதாலே பயனில்லை. எனவே இந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

காங்கிரஸ் நண்பர்கள் சொன்னதைப் போல, இந்தத் திட்டத்தை இணைந்து செய்தாலும் சரி, யார் செய்தாலும் சரி, இந்தத் திட்டத்தினுடைய பலன் நாட்டு மக்களுக்குப் போய்ச் சேருகிற வகையிலே ஒரு தீர்க்கதரிசனமான முடிவை புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்குச் சொல்லி, இன்றைக்கு அதை அமுல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே இந்தத் திட்டத்தை நான் முழுமையாக வரவேற்கிறேன்.

அதைப்போல மத்தியிலே நம்முடைய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் தன்னுடைய பட்ஜெட் உரையிலே ஒரு நல்ல திட்டத்தை சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கச் செலவுகளை சோதனை செய்வதற்காக மந்திரி சபைக் குழு அமைக்கப்பட இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். உள்ள படியே வவேற்கக்ககூடிய திட்டம் இது. எப்போதுமே திட்டப் பணிகளை நிறைவேற்றுவதில் காலதாமதம் செய்யக்கூடாது. திட்டப் பணிகளை குறிப்பிட்ட காலத்திலே முடித்தால்தான் அந் தத் திட்டத்தினுடைய பலன்கள் மக்களுக்குப் போய்ச் சேரும். திட்டங்களினுடைய பணிகளை காலதாமதப்படுத்துவதன் மூலம் செலவினம் அதிகரிக்கிறது. எனவே அப்படிப்பட்ட திட்டப் பணிகளை நிறைவேற்ற எப்போதும் நாம் உன்னிப்பாக இருக்க வேண்டும். காலாகாலத்தில் செய்கிற அந்த நடைமுறையை நாம் வகுத்துக்கொள்ளவேண்டும்.

இதற்கு நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நாம் தான் இங்கே சட்டத்தை உரு வாக்கி நிறைவேற்றித் தருகிறோம். அவற்றை நிறைவேற்று கிறவர்கள் அதிகாரிகள். ஆனால் அதிகாரிகள் நிறைவேற்றுகிற அந்தத் திட்டத்தை ஆய்வு செய்வதற்கோ, கண்காணிப்பதற்கோ, மேலதிகாரிகள் இருப்பது அவ்வளவு நன்றாக இருக்காது. நம் மால் திட்டம் உருவாக்கப் பட்டு அதை அதிகாரிகளிடம் கொடுத்து அதைக் கண்காணிக்கின்ற பொறுப்பு சட்டமன்ற உறுப்பினர் களுக்குத்தான் இருக்க வேண்டும். எனவே, நான் சொல்ல விரும் புவது மாவட்ட அளவில் நம்முடைய அரசு திட்டங்களைப் போட்டு செயலாற்றிக் கொண்டு வருகிறபோது அந்தத் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்படுகிறதா, அந்தத் திட்டம் காலா காலத்தில் முடிக்கப்படுகிறதா, அந்தத் திட்டத்தின் பலன் மக்க ளுக்குப் போய் சேருகிறதா என்று ஆய்கின்ற, கண்காணிக்கின்ற அந்த அதிகாரத்தை அந்த அந்த மாவட்டத்தில் இருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கே வழங்கவேண்டும் என்ற அந்த ஆலோசனையை இந்த நேரத்தில் நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னும் ஒரு நல்ல கருத்தை இந்த ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். பொதுமக்களின் குறைகளைக் கவனிப்பதற்கு ஒரு பிரிவை அமைக்க திட்டமிட்டு இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது உள்ளபடியே வரவேற்கக் கூடிய ஒரு திட்டம். அந்தத் திட்டத்தின் மூலம் வீண் காலதாம தம் தவிர்க்கப்படும். அதுபோலவே குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும். இதில் அந்தத் திட்டம் பற்றிய முழு விளக்கம் இல்லை என்று சொன்னாலும் ஏதோ ஒரு செல் போல அமைத்து புகார்களைப் பெற்று துறைக்கு அனுப்பி அதோடு முடிவதாக இருக்கக்கூடாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. காரணம் மக்களுடைய பிரச்சினைகள் நிறைவேற்றப்படாத சூழ் நிலையில் பல்வேறு பிரச்சினைகள் ஒரே காரியத்திற்காக, ஒரே





காரணத்திற்காக தடைப்பட்டு நிற்கும். எனவே, அப்படிப் பட்ட பிரச்சினைக்கு மூல காரணம் என்ன என்பதை ஆய்ந்து அறிந்து அந்தப் பிரச்சினையைத் தீர்த்தால் தவிர, நிச்சயமாக எதிர்பார்க்கிற பலன் கிடைக்காது. எனவே, அந்தப் பிரச்சி னையைத் தீர்ப்பதற்கு நான் சொல்ல விரும்புவது ஒரு Data Bank என்ற அளவில் ஏதாவது ஒரு அமைப்பை அங்கே உருவாக்க வேண்டும்.

அதைப்போலவே பொதுமக்களின் குறைபாடுகளை- Public grievances should be computerised கம்ப்யூட்டர் மூலமாக இப் படிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்தால் நாம் எதிர்பார்க்கிற அந்தக் காலதாமதம், எதிர்பார்க்கிற அந்தக் குறைபாடுகள் நீங்கும் நிலை நிச்சயமாக இருக்கும். எனவே, அந்த வகையில் நாம் அந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்களும், நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும் மது விலக்கைப் பற்றி பேசினார்கள். நான் உள்ளபடியே சொல்கிறேன். அவர்கள் பேசிய பிறகுதான் நான் கவர்னர் உரையைப் படித்துப் பார்த் தேன். அதில் எங்கேயும் பூரண மதுவிலக்கு என்று சொல்ல வில்லை. நாம் இந்த மதுவிலக்கை இன்றைக்கு மூன்று கட்டங்களில் ஆய்ந்துப் பார்த்தோம். பூரண மதுவிலக்கை அமல்படுத்தியும் பார்த்தோம். அந்த அனுபவத்தையும் பெற்று இருக்கிறோம். மதுவிலக்கைத் தளர்த்தியும் பார்த்தோம். அந்த அனுபவத்தையும் பெற்று இருக்கிறோம். இன்றைக்கு Partial Prohibition என்ற இந்த மூன்றாவது முறையை நாம் பார்க்கிறோம். இதை நான் சொல்வதற்குக் காரணம் இந்த 3 முறையிலே இருந்து பெறுகிற அனுபவத்தைப் பார்த்து கட்சிக்கு அப்பாற்பட்டு அரசியல் பிரச்சினை ஆக்காமல் நாட்டு மக்களுக்கு எது நலம் பயக்குமோ அந்தத் திட்டத்தை எதிர்காலத்தில் உருவாக்குகிற அளவுக்கு நண்பர்கள் நிச்சயமாகக் கருத்துக்களைச் சொல்லவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். காரணம் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள், நீங்கள் எல்லாம் கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் மட்டும் மூடிவிட்டு மதுபான கடைகளை மட்டும் திறந்து வைத்துக்கொண்டு பூரண மது விலக்கு என்று சொல்கிறீர்களே என்ற ஒரு கேள்வியைக் கேட் டார்கள். நான் அவரைத் திருப்பிக் கேட்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பூரண மதுவிலக்கு இருந்தது என்று தம்பட்டம் அடித்துக் கொண்டீர்கள். ஆனால் குடிப்பவர்களுக்கு பர்மிட் கொடுத்தீர்கள். அது மட்டும் எப்படிப் பூரண மதுவிலக்கு ஆகும். எனவே இதை எல்லாம் யோசித்துப் பார்க்கவேண்டும். இதில் நாம் அரசியல் கருத்துக்களைச் சொல்லக்கூடாது. எனவே

இப்படிப்பட்ட நிலைமையில் நான் சொன்ன 3 கருத்துக்களையும்
முறையாக வரிசைப்படுத்தி 3 முறைகளில் எது சிறந்த முறையோ
அதை எதிர்காலத்தில் நாம் அனைவரும் உருவாக்க வேண்டும்
என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்லு
கிறபோது மதுவிலக்கைக் கிண்டல் செய்து பேசினார்கள். நான்
சொல்கிறேன், அவருக்குத் தெரியுமோ தெரியாதோ, நான்
சொல்லுகிற இந்தப் பதில் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும்
பொருந்தும், திரு. ரகுமான்கான் அவர்களுக்கும் பொருந்தும்
படியாக இருக்கும். 1953 ஆம் ஆண்டு அவருடைய கட்சித்
தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் '6 மாத கடுங்காவல்' என்ற
புத்தகத்தில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்பு
மிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அதை
நான் படித்துக் காட்ட ஆசைப்படுகிறேன். அந்தக் கருத்தே தேசிய
இயக்கத்திற்கும் பதிலாக அமைந்துவிடும், திரு. ரகுமான்கான்
வாதத்திற்கும் பதிலாக அமைந்துவிடும். கலைஞர் கருணாநிதி
அவர்கள் 1953 ஆம் ஆண்டு எழுதிய '6 மாத கடுங்காவல்' என்ற
புத்தகத்திலே சொல்லியிருக்கிறார்கள்: ''மதுவிலக்கினால் 17
கோடி ரூபாய் வரி நஷ்டம் மட்டும் அல்லாமல்—இது அந்த காலத்
துக் கணக்கு—மதுவிலக்கு போலீசாருக்கு சம்பள விரயமும்,
கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைப் பிடிக்க செலவழிக்கும்
தொகையும், பிடிபட்ட கைதிகளுக்கு உணவு அளிக்க ஏற்
படும் செலவும், எங்கு போய் நிற்கும் என்பது தெரியவில்லை.
இவ்வளவு செலவழித்தும் சட்டம் உடையாமல் இருக்கிறதா

[பிற்பகல் 12-40]

என்று பார்த்தால் அதுவும் இல்லை. ஐயோ பாவம், துண்டு
துண்டாக, செதில் செதிலாக, அணு அணுவாக மதுவிலக்குச்
சட்டம் மரணப்படுகொலையில் பிய்த்து எரியப்பட்டுக் கொண்
டிருக்கிறது. மதுவிலக்கை வாபஸ் பெறாதீர்கள், கள், சாராயம்
காய்ச்சும் புதிய குடிசைத் தொழில் கெட்டுவிடும் என்று புரட்சிக்
கொடி ஏந்துகின்ற அளவிற்கு ஒரு பெரிய வர்க்கம் உற்பத்தியாகி
யிருக்கிறது'' என்று 1953 ஆம் ஆண்டு கலைஞர் கருணாநிதி
அவர்கள் அவர் எழுதிய புத்தகத்திலே தன்னுடைய கருத்தாகவும்
சொல்லியிருக்கிறார்கள். நான் இதையெல்லாம் சுட்டிக்காட்டு
வதற்குக் காரணம், ஏதோ புரட்சித் தலைவர் ஆட்சியில்தான்
இப்படிப்பட்ட நிலைமையிருக்கிறது என்பது அல்ல. அன்
றைக்கே அந்தக் கள், சாராயம் காய்ச்சுகிற வர்க்கம் உற்பத்தியாகி
யிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 1953-ல் உற்பத்தி
யாகிய அந்த வர்க்கம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்
வளர்ந்து, பிறகு அந்த வர்க்கத்தை அழிப்பதற்குத்தான் இன்றைக்கு
புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கி
றார்கள். எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று





நீங்கள் ஆலோசனையாகச் சொன்னால், அது நல்ல நடவடிக்கை என்று சொன்னால், நிச்சயமாக இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தக் கொள்கையைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் பேரியக்கத்திற்கு என்ன கொள்கை இருக்கிறதோ, அதைவிட உறுதியாக இந்தக் கொள்கையிலே இருக்கிறார்கள். எனவே மதுவிலக்குத் திட்டத்தைப் பொறுத்தவரையில், கொள்கைகள் என்று சொல்லுகிறபோது, ஏதோ அரசைச் சாடுவதற்கு என்று சொல்லாமல் மக்களுக்கு எது நலம் பயக்குமோ, அந்தக் கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் அவர்களே, இறுதியாக என்னுடைய தொகுதியைப் பற்றி, நான் ஒரு கருத்தை மட்டும் சொல்லலாம் என்று கருதுகிறேன். காரணம், அனுமதித்தால், இன்னும் சில பிரச்சினைகளை...... (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): இன்னும் ஆறு உறுப்பினர்கள் பேச வேண்டும்.

திரு. செ. செம்மலை: எனவே, மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இறுதியாக ஆளுநர் உரையின் மீது பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய தொகுதியைப் பற்றி இரண்டே இரண்டு கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். பவர் லூம்ஸ் காம்ப்ளக்ஸ், ஒரு தொழிற்கூடம் ஆரம்பிக்கவேண்டுமென்ற நீண்டகால கோரிக்கை இருந்துவருகிறது. அதை உடனடியாக ஆரம்பிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதைப்போலவே, மேச்சேரி யூனியனைப் பொறுத்தவரையில், ஒரு மிகப் பெரிய யூனியன். அதிலே ஒரேயொரு ஆரம்ப சுகாதார நிலையம்தான் இருக்கிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் இந்தப் பிரச்சினை பற்றி சொல்லி ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கேட்டிருக்கிறேன். அதற்கும் அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ஆம் தேதியன்று சட்டப் பேரவைக் கூட்டத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசீய காங்கிரசின் சார்பில் ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது மேதகு ஆளுநர் உரையில் எவ்விதமான மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களும், வளர்ச்சிப் பணிகளும், ஆக்கபூர்வமான செயல்களும், குறிப்பிடப்படவில்லையென்று நான் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசின் நீண்டநாளைய உறுதிமொழிகளில் ஒன்றான கள், சாராயக் கடைகள் 1–1–1987 முதல் மூடுவதை அடுத்து 1987ஆம் ஆண்டு உன்னதமான ஆண்டு என்று ஆளுநர் அவர்கள் வாயிலாக இந்த அரசு கோடிட்டுக் காட்டியுள்ளது. எனவேதான், நான் 1947 முதல் 1967 வரை காங்கிரஸ் பேரியக்கம் ஆட்சிக் கட்டிலில் இருந்தபோது முழு மதுவிலக்கு அமலில் இருந்ததை நினைவு படுத்த விரும்புகிறேன்.

மேலும் 1987 துவக்கத்திலிருந்து தமிழகத்திலே உள்ள பத்திரிகைகள் எல்லாம் விரைவில் தமிழகத்தில் திடீர் தேர்தல் வரலாம் என்று ஆருடம் கணித்து வருகின்றன. அந்த வகையில் கூட இந்த ஆண்டு உன்னதமான ஆண்டுதானா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

தமிழகமெங்கும் கள், சாராயம் பெருக்கெடுத்து ஓடுகிறது. தினசரிப் பத்திரிகைகளைப் பார்க்கும்போது கள், சாராயம் அருந்தி சாகும் ஏழை எளிய மக்களுடைய எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது. போலீஸ் காட்டு தர்பார் நடத்துகிறது. எனவே கள், சாராயத்தை அறவே ஒடுக்கவும், தடுக்கவும், ஏழை எளிய மக்களைப் பாதுகாக்கவும் தகுந்த நடவடிக்கைகளை இந்த அரசு உடனே மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு இந்த அரசின் சார்பில் அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் திருவுருவப் படம் இந்த மாமன்றத்தில் திறந்து வைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் அதற்கான முயற்சிகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே இந்த ஆண்டாவது மறைந்த பிரதமர், இந்திரா அம்மையார் அவர்களின் திருவுருவப் படத்தை இந்த மாமன்றத்தில் திறந்து வைக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சென்னை மெரினா கடற்கரையில் காந்தி சிலைக்கு அருகே அனைவரையும் கவருகின்ற வகையில் இந்திய கலாச்சாரம், தமிழர் பண்பாடு முதலியவைகளை வெளிப்படுத்துகின்ற வகையில், அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்ப முன்வரவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்வதோடு, மறைந்த முன்னாள் முதலமைச்சர்





பெரியவர் திரு. பக்தவச்சலனார் அவர்களுடைய திருவுருவப் படத்தினை இந்த அவையில் வைக்க முன்வரவேண்டுமென்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பெரியவர் திரு. பக்தவச்சலம் அவர்களுக்கு அரசு செலவில் நினைவு மண்டபம் எழுப்ப முன் வந்த இந்த அரசை, தமிழக முதல்வரை, நான் சார்ந்து இருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் பாராட்டுகிறேன்.

வடகிழக்குப் பருவ மழை பெய்யத் தவறியதன் காரணமாக இந்த ஆண்டு தமிழகம் கடும் வறட்சியைச் சந்தித்தாக வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறது. மற்ற வளர்ச்சித் திட்டங்கள் பாதிக்கப்படாமல் வறட்சியைப் போக்க இந்த அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுகிறேன். குறிப்பாக என்னுடைய லால்குடி தொகுதியில் தச்சங்குறிச்சி, பல்லாபுரம், குமுளூர், நம்புக்குறிச்சி, தெரணிபாளையம், கருடமங்கலம், எம். கண்ணனூர், ஊட்டத்தூர், சாதூர்பாகம், மால்வாய், சாத்தப்பாடி, சிலுவைப்பட்டி போன்ற பல கிராமங்களில் இப்பொழுது மக்கள் குடிக்க குடிதண்ணீர் இன்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலைமை நீடித்தால், ஏப்ரல், மே மாதங்கள் மிகவும் சோதனையான மாதங்களாக, கடுமையான வறட்சியாக இருக்கும். எனவே, திருச்சி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிப்பதோடு லால்குடி, புள்ளம்பாடி ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிராமங்களையும் வறட்சிப் பகுதிகளாக அறிவித்து, நிவாரண நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வதோடு, வரிவசூலையும் நிறுத்தி வைத்து தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன். மேலும் தற்பொழுது ஒன்றியத்திற்கு ஐந்து துளைக் கிணறுகள் (Bore-wells) மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். ஆகவே, இதை அதிகப்படுத்தி சுமார் 75 துளைக் கிணறுகளாவது என்னுடைய தொகுதிக்குத் தரவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைய வேண்டும் என்று சொன்னால், மின்துறையில் தன்னிறைவு பெற்றாக வேண்டும். எனவே குறைந்தபட்சம் ஒரு ஐந்து ஆண்டுக்காவது மின்துறைக்கு என்று தனியே நிதி ஒதுக்கீடு செய்து, மின் உற்பத்தியை அதிகப்படுத்த இந்த அரசு முன்வர வேண்டும்.

150 மில்லியன் டாலர் செலவில், வட சென்னையில், புலிக்காடு என்னுமிடத்தில் அனல் மின் நிலையம் அமைக்க மாநில அரசு, ஆசிய வளர்ச்சி வங்கியுடன் ஒப்பந்தம் செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன். கடலூரில் அமைக்க இருக்கும், 210 மெகாவாட் உற்பத்தித் திறன் உள்ள ஐந்து பிரிவுகளைக் கொண்ட அனல் மின் நிலையத்தை திருச்சியில் அமைக்க இந்த அரசு

முன்வர வேண்டும். காரணம் தமிழகத்தில் உயர் அழுத்த மின் திறனை அதிகமாகப் பயன்படுத்துவது திருச்சியில் உள்ள பெல் (BHEL) நிறுவனமாகும். இதற்குத் தற்பொழுது நெய்வேலியில் இருந்துதான் மின்சாரம் வரவேண்டியிருக்கிறது. திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் பெல் மற்றும் அதனைச் சார்ந்த உபதொழில்களும் ஏனைய பிற தொழில்களும் பெருகியுள்ள இந்த வேளையில் இந்த அனல்மின் நிலையம் திருச்சியில் அமையுமேயானால் சிறப்புடையதாக இருக்கும். இதனால் லைன் லாஸ் தவிர்க்கப்படுவதோடு, கடலூர் நெய்வேலி அருகாமையில் இருப்பதால் வேறு பிரச்சினைகளும் எழ வாய்ப்பில்லை என்று கருதுகின்றேன்.

தற்பொழுது ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலைமையினைக் கருத்தில் கொண்டும், காய்ந்து கொண்டிருக்கிற நெல் பயிர்களைக் காப்பாற்றும் பொருட்டும், மின் வாரியம் டெல்டா பகுதிகளில் குறிப்பாக லால்குடி பகுதிகளில் Pol. Service-க்கு உடன் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுமார் ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த அரசு கொடுத்த உறுதிமொழியினை நம்பி, என் தொகுதியில் கல்லகம், கீழரசூர்-சாத்தப்பாடி ஒரத்தூர், சிலுவைப்பட்டி, மால்வாய், சரடமங்கலம், எம். கண்ணனூர், கருடமங்கலம், அழுந்தலைப்பூர், குமுளூர், தச்சங்குறிச்சி, சிறுகளப்பூர், பெருவளர்ப்பூர், பு. சங்கேந்தி ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் 1,000-க்கும் மேற்பட்ட மக்கள் சொத்துக்களை விற்று, கையிலே இருந்த பணத்தைப் போட்டு, வட்டிக்கு நகை முதலியனவற்றை வைத்து பணம் வாங்கி, மின் மோட்டார்களை வாங்கி, திண்ணையில் வைத்துக்கொண்டு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் கையில் இருந்த நகையும் போய், முகத்தில் இருந்த புன்னகையும் போய் மீளாத் துயரத்துக்கு ஆளாகி இருக்கிறார்கள். எனவே இவர்கள் மீது கருணைகொண்டு, இந்த அரசு இவர்கள் அனைவருக்கும் மின் இணைப்பு கிடைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். மேலும் ஆங்காங்கே இருக்கிற மின்சக்தியைப் பயன்படுத்தும் அளவுக்கேற்ப, டிரான்ஸ்பார்மர்களை மாற்றி அமைக்க தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) சுமார் 52 கிளைகளைத் தமிழகத்தில் ஒரு காலத்தில் பெற்றிருந்தது. அது சீரமைக்கப்பட்டிருப்பதாக ஆளுநர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருந்தாலும், நடைமுறையில் டான்சி நிறுவனம் சிறப்பாக, லாபகரமாக நடைபெறாமல் இருக்கிறது என்பதுதான்





(பிற்பகல் 12-50)

உண்மை. எனவே, பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட டான்சியை இலாபகரமாக நடத் திட, இந்த அரசு தகுந்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புதியதாக சர்க்கரை ஆலைகள் தொடங்க மத்திய அரசின் ஆதரவை நாடுகிற தமிழக அரசுக்கு, தமிழகத்திலுள்ள ஒருசில தனியார் சர்க்கரை ஆலைகளைப் பற்றி நினைவுபடுத்தவேண் டிய அவசியம் எனக்கு இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே காட்டூரிலே உள்ள கோத்தாரி சர்க்கரை ஆலை கடந்த ஆண்டு விவசாயிக்கு டன் ஒன்றுக்கு ரூ. 231 கொடுத்தது. இந்த ஆண்டு, ரெக்கவரி குறைந்துவிட்டது என்று சொல்லி ரூ. 214-க்கு மேல் தரமாட்டோம் என்று கோத்தாரி நிர்வாகம் மறுத்தது. பின்பு பலத்த போராட்டங்களுக்குப் பின்னால் ரூபாய் 220 கொடுக்க தனியார் நிர்வாகமான கோத்தாரி நிர்வாகம் முன்வந்தது. இத னைச் சொல்வதற்குக் காரணம், பெரம்பலூர் போன்ற அருகில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் எல்லாம் ரெக்கவரி கூடுதலாக வருகிறபோது, கோத்தாரி போன்ற தனியார் சர்க்கரை ஆலையிலே மட்டும் ரெக்கவரி குறைவது மர்மமாக உள்ளது. இவை கண்காணிக்கப்படவேண்டும்.

மேலும், இதிலிருந்து வருகிற கழிவுநீர் அருகிலுள்ள பங்குனி வாய்க்காலில் கலப்பதால், சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்டு, மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. இதற்கும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

மேலும், எனது தொகுதியில் கல்லக்குடி அருகிலுள்ள முதுவத் தூர் அரசு பிலி சிமென்ட் ஆலை பல்லாண்டுக் காலமாக மூடிக் கிடக்கிறது. அதனைத் திறந்து, பாதிக்கப்பட்ட வேலை இழந்த 250 தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்க இந்த அரசு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுகிறேன். டால் மியா சிமென்ட் ஆலையிலிருந்து வருகிற புகை அந்தப் பகுதிகளில் இருக்கிற சுற்றுப்புறச் சூழலை பெரிதும் பாதிக்கிறது. அந்தப் பகுதி யிலே இருக்கிற மக்கள் அந்தப் புகையினால் பல சுகாதாரக் கேடு களுக்கு ஆளாகிறார்கள். டி.பி. போன்ற கடுமையான நோய்கள் அவர்களைத் தாக்குகிறது. அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு முன்வரவேண்டும். அங்கு தயாரிக்கப்படும் சிமென்ட் தற்போது தரம் குறைந்து காணப்படுகிறது. இந்த சிமென்டின் குவாலிட்டியை செக் செய்து நல்ல தரமான சிமென்ட் மக்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்

[திரு. கி. வெங்கடாசலம்] [1987 மார்ச் 2

சென்னை மாநகரில் குடிநீருக்காக ரூ. 15 கோடி செலவில் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்ற செய்தியோடு, கிருஷ்ணா நீர்த் திட்டம் பற்றி ஆளுநர் அவர்களுடைய உரையிலே குறிப்பிடாதது இது அடுத்த வீராணமோ என்று மக்கள் நினைக்கத் தோன்றுகிறது என்று இங்கே என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

விவசாயிகள் கடன் சுமையைக் குறைக்க, வேளாண்மைக் கடன்கள் குறித்த வட்டி, அபராத வட்டி, காலம் கடந்த நிலுவைகள் குறித்த வட்டி முதலியவற்றை தள்ளுபடி செய்ததன் வாயிலாக விவசாயிகளுக்கு ரூபாய் 125 கோடி அளவுக்கு நிவாரணம் கிடைக்கப் பெற்றது. அதற்காக இந்த அரசைப் பாராட்டினாலும், முறையாக, அவ்வப்போது அசல், வட்டி, அபராத வட்டி முதலியவற்றை கட்டிய முறையான, ஒழுங்கான விவசாயிகளின் நலன் புறக்கணிக்கப்பட்டிருப்பது சற்று வருத்தத்திற்குரியது. எனவே, அவர்களைக் கருத்தில்கொண்டு, அவர்கள் கட்டிய வட்டி, அபராத வட்டி முதலியவற்றை திருப்பித் தர இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

மேலும், வட்டி கட்டுவதற்கு கடைசி நாளான 28-2-1987 அன்று பல சொசைட்டி செயலாளர்கள் ஊரில் இல்லாமல் இருந்து இருக்கிறார்கள். அதனைக் கருத்தில்கொண்டு, மேலும் 15 நாட்களுக்கு வட்டி கட்டுவதற்கு அவகாசம் தந்து நீட்டித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாணவ, மாணவியருக்கு இலவச பாடப் புத்தகங்கள், சீருடைகள் வழங்குவதை கல்வியாண்டின் துவக்கத்திலேயே வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதோடு, என்னுடைய தொகுதியில் பல இடங்களில் இன்னும் இலவச பாடப் புத்தகங்கள், சீருடைகள் வழங்கப்பெறவில்லை என்பதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்றைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் நாடாளுமன்றத்தில் முதன் முறையாக உரையாற்றுகிறபோது இந்த நாட்டு மக்களை 21 ஆம் நூற்றாண்டுக்கு நான் அழைத்துச் செல்ல விரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்கள். அந்த மக்கள் நல்ல கல்வியறிவைப் பெறவேண்டி, புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். அதனை ஏற்று புதிய கல்விக் கொள்கை தமிழகத்தில் சிறப்புற நடைபெற தகுந்த நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1987 மார்ச் 2] (திரு. கி. வெங்கடாசலம்)

என்னுடைய தொகுதியில், லால்குடி, புள்ளம்பாடி, செங்கரையூர், ஆகிய இடங்களில் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பில் அல்லது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு விடுதிகள் அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1987-88 ஆம் ஆண்டிலிருந்து பள்ளிக்குச் செல்லும் மாணவர்களுக்கும், கிராமங்களில் உள்ள ஏழைத் தாய்மார்களுக்கும் இலவசமாக செருப்பு வழங்கும் திட்டம் பாராட்டுக்குரியது. இதனால் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் செருப்பு தைப்போர் பயன் பெறுவர். அவர்களது சொசைட்டி, போன்றவை முறையாக நடைபெற இந்த அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்று ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்று கடந்த ஆண்டு குறிப்பிட்டாலும் இந்த ஆண்டு அதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் என்பது தெளிவாக இல்லை. மேலும், எல். ஆர்.இ.பி., ஆர். எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களின் வாயிலாகக் கட்டப்படும் தொகுதி வீடுகள் தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவ மக்களுக்கும் கிடைக்கச் செய்வதற்கு தகுந்த ஏற்பாடுகளை இந்த அரசு செய்யவேண்டும்.

வீடுகள் கட்டுவதற்கு ரூ. 6,000 கழிப்பிடம், சாலை போன்ற வசதிகளைச்செய்து கொடுக்க ரூ. 3,500 என்று இருப்பதால் நிறைய முறைகேடுகள். தவறுகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. இன்ஃப்ராஸ்ட்ரக்சருக்கு என்று தனியாக ஒதுக்கப்படும் அந்தப் பணத்தினை முழுமையாக செலவழிப்பதே இல்லை. எனவே இந்த ரூ. 3,500ஐயும் சேர்த்து ஓட்டுக் கட்டிடமாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கட்டித் தருவதற்கு தகுந்த நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்.

கடந்த ஆண்டு ஆளுநர் அவர்களுடைய உரையில் திருநெல்வேலி, வட ஆற்காடு, தென் ஆற்காடு முதலிய மாவட்டங்கள் நிர்வாக நலன் கருதி பிரிக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் திருநெல்வேலி மாவட்டம் மட்டும்தான் பிரிக்கப்பட்டது. மற்ற மாவட்டங்கள் பிரிக்கப்படாதது கண்டு ஆளுநர் அவர்களுடைய உரை பொருளற்றதோ என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே இந்த ஆண்டாவது, திருச்சி மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, ஏற்கனவே அறிவித்துள்ளவாறு பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் என்றும், திருச்சி இந்திரா மாவட்டம் என்றும், கரூர் பக்தவச்சலம் மாவட்டம் என்றும் உருவாக்கித் தந்திட வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வரைக் கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கை இனப் பிரச்னைக்கு முடிவாகவும், இருசாராரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலும் தீர்வு காண இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மைய அரசு எடுக்கும அனைத்து நல்ல முயற்சிகளும் வெற்றியடையவும், அதற்குத் துணை நிற்க வேண்டுமாய் மாநில அரசை வேண்டியும் விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(3) அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(இ) பேரவைக் கூட்ட நேரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில், பேரவைக் கூட்டங்களை காலை 10 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 2 மணிக்கு முடிக்கலாம் என்றும், காலை 10 மணி முதல் 11 மணி வரை வினாக்கள்— விடைகள் நேரமாக இருக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவு 3–3–1987, நாளை முதல் அமலுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(7) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்— விவாதம்—(தொடர்ச்சி)

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பிப்ரவரி 27 ஆம் நாள் மேதகு ஆளுநர் அவர்களால் ஆற்றப்பட்ட உரையைப் பாராட்டி, வரவேற்று என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே சொல்ல விழைகிறேன்.

மொத்தத்தில், இந்த ஆளுநர் உரை வருங்காலத்தை எதிர் நோக்கி வருங்கால தமிழகம் வளமோடு சிறக்க வேண்டுமென்று மக்களுக்குப் பிரச்சினை இல்லாமல் பொருளாதாரத்திலே உயர்வு காணவேண்டுமென்ற நோக்கத்தோடு நல்லமுறையிலே கொண்டுவரப்பட்டிருக்கிற, பல்வேறு கொள்கைகளை அடிப்படையாகச் சொல்லி கொண்டுவரப்பட்டிருக்கிற உரையாகும். தொழில் துறை, பொதுவாகவே இயற்கையின் பிடியிலே இருக்கின்ற இரும்பு, மின்சாரம், நீர்வளம் என்ற மூன்று முக்கிய பொருள்களை அடிப்படையாகக் கொண்டுதான் வளர முடியும். இயற்கையிலேயே, தமிழகத்தில் இந்த மூன்று— இரும்பு, மின்சாரம், நீர்வளம்— மற்ற மாநிலங்களைவிட குறைந்த அளவிலே கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருந்தாலும், இவற்றை வைத்து, குறைந்த அளவிலே இருக்கிற இயற்கை வளங்களை வைத்துக்கொண்டு நல்ல நிர்வாக அமைப்பின் காரணமாகவும், திறமையான கொள்கைகளின் காரணமாகவும், நல்ல அடிப்படையான நிர்வாகத்தைக் கொண்டுவருவதன் காரணமாகவும் தொழில் வளர்ச்சியிலே ஓரளவிற்கு நல்ல முன்னேற்றத்தை தமிழகம் பெற்றிருக்கிறது.





சில பெரியவர்கள், மையத்திலே ஆட்சியிலே இருக்கிற பெரியவர்கள்கூட, கடந்த காலங்களில் எல்லாம் தமிழகம் மூன்றாவது இடத்திலே இருந்தது, இப்போது பதின்மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் அப்படிச் சொல்பவர்கள் குஜராத்திற்கும், பஞ்சாபுக்கும் அடுத்து தமிழகம்தான் இருக்கிறது என்பதை அறிவார்கள். இதற்கு முன்னாலே வேறு எந்த மாநிலம் இருக்கிறது என்பதை அவர்களால் இதுவரை அறுதியிட்டுக்கூற முடியவில்லை. ஆனால் உண்மையிலேயே மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சியை எப்படிக் கணக்கிட வேண்டும்? 'டிக்' மூலமாகவும் 'சிப்காட்' மூலமாகவும் நாட்டிலே தொழில் தொடங்குபவர்களுக்கு எந்த அளவிற்கு மூலதனத்தை அரசு தருகிறது என்பதை வைத்தும் அதில் எவ்வளவு முதலீட்டைத் தமிழக அரசு போட்டிருக்கிறது என்பதைவைத்தும் அதைப் போலவே தனியார்கள் எவ்வளவு முதலீட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்கி இருக்கிறார்கள் என்பதைவைத்தும் அதைப்போலவே தமிழகத்தில் கடந்த ஆண்டுகளில் எவ்வளவு சிறு தொழில்கள் பதிவாகி இருக்கின்றன என்பதை வைத்தும் இந்த மாநிலத்திலே தொழில் வளர்ச்சி எப்படி ஏற்பட்டிருக்கிறது, எப்படி வளர்ந்திருக்கிறது என்பதைக் கணக்கிட வேண்டும். ஆனால் கணக்கையெல்லாம் விட்டுவிட்டு மேலெழுந்தவாரியாக ஏதோ சொல்கிறோம் என்று கணக்கிட்டு, தமிழகம் பின்தங்கி விட்டது, பின் தங்கி விட்டது என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே முன்னேறி இருக்கிற பஞ்சாப் மாநிலத்திலேகூட இன்றைக்கு அமைதியின்மை காரணமாக, தொழில் ஓரளவிற்கு முடக்கப்பட்டுத்தான் இருக்கிறது. ஆனால் தமிழகத்திலே தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற புரட்சித் தலைவரின் காலத்திலேதான் தொழில் அமைதியை உருவாக்கி, தொழிலாளர் நண்பர்களுள் ஒற்றுமையை உருவாக்கி இங்கே தொழில் வளர்ச்சியிலே மிக அதிகமான ஒரு முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 1–00)

அதற்கு வாய்ப்பாக அமைகிற வகையில்தான் ஆளுநர் உரையில் இது குறித்துக் குறிப்பிட்டு உள்ளார்கள். இனி வரும் நிதிநிலை அறிக்கைக்கு ஒரு அடித்தளமாகத் தொழில் துறைக்கு இந்த அரசு அதிக முக்கியத்துவம் அளித்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருப்பதைக் குறித்து நான் பாராட்டு தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் உறு துணையாக இருப்பது மின்சாரமாகும். மின் உற்பத்தியைப் பொறுத்த வரையில் 1970 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் இருந்த அரசு உற்பத்தியில் அதிக நாட்டம் செலுத்தாமலேயே

விட்டு விட்டதால் ஒரு மந்த நிலை, ஒரு தேக்க நிலை இங்கே ஏற்பட்டு விட்டது. அதன் காரணமாகத்தான் பின்னாலே வருகிற அரசுகூட கஷ்டப்பட வேண்டியிருந்தது. அது மட்டுமல்ல, 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னாலே இங்கே வளர்ச்சியே கூட தடைப்பட்டது என்றால் அது மிகையாகாது. இது அனைவரும் அறிந்த உண்மையாகும். 1977ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் மின் உற்பத்தியில் அதிக நாட்டம் கொள்ளாத காரணத்தால் இங்கே பொருளாதாரத்திலும் சரி, வளர்ச்சியிலும் சரி மிகப் பெரிய பாதிப்பே ஏற்பட்டது. ஆனால் அதைப் போக்குகிற விதத்தில் 1977 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்புக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வந்து தமிழக அரசும், தமிழக முதல்வர் அவர்களும் சீரிய முறையில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

பருவமழை பொய்த்ததன் காரணமாகப் புனல் திட்டங்களின் மின் உற்பத்தி குறைந்த நிலை ஏற்பட்டாலும் அனல் மின் நிலையங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது கடந்த 10 ஆண்டுகளில்தான் என்பதை நாம் அறிவோம். இப்போது புதிதாக அண்மையில் மேட்டூர் அனல் மின் நிலையத்தை மத்திய அரசின் உதவியோடு தொடங்க இருக்கிறோம் என்பதையும் நாம் அறிவோம். இப்படிப் பல்வேறு திட்டங்களைத் திறமையோடு இங்கே உருவாக்கி மத்திய அரசின் உதவியோடு அவற்றையெல்லாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

உலகத்திலேயே மிகச் சிறந்த திட்டம் காடாம்பாறை மின் திட்டம். அதைத் தமிழக முதல்வர் அவர்கள் தான் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இதனால் தமிழ்நாட்டில் ஒரு சீரான மின் விநியோகம் நடக்க இருக்கிறது. இதன் காரணமாகத்தான் வருங் காலத்தில் மின் உற்பத்திக்குத் தமிழகத்தில் இன்னும் அதிக கவனமும், அதிக நிதி ஒதுக்கீடும் இந்த அரசு செய்ய இருக்கிறது என்று கோடிட்டுக் காட்டப்பட்டிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எவ்வளவோ குறைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப் போலவே வெளியேயும் குற்றங்களைப் பற்றிச் சொல்கிறார்கள். ஆனால் எந்தக் கட்சியானாலும் சரி—அது எதிர்க் கட்சியானாலும் சரி, எதிரிக் கட்சியானாலும் சரி— தமிழகத்தில் அரிசியின் விலை ஏறிவிட்டது என்று இதுவரை பேசியதில்லை. உணவுப் பொருள்களுக்கு இங்கே தட்டுப்பாடு வந்துவிட்டது என்று இதுவரை யாரும் குற்றஞ்சாட்டிப் பேசியதில்லை. இப்படிப் பட்டதோர் நிலை இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில் மட்டும் தான் இருக்கிறது. இங்கேதான் எல்லாப் பொருள்களும்— அத்தியாவசியப் பொருள்கள் அனைத்துமே எல்லோருக்கும்





குறைந்த விலையில் கிடைக்கின்றன. இதைத் தமிழக அரசும், தமிழக முதல்வர் அவர்களும் உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லி அதற்காகப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இயற்கை சீற்றங்கள் காரணமாக, அல்லது பருவ மழை தவறினாலும் உணவு உற்பத்தி தமிழகத்தில் குறைந்து போனாலும் அதைப்பற்றிக் கவலைப் படாமல் வேறு மாநிலங்களிலிருந்து உணவுப் பொருள்களை வாங்கி வந்து நியாய விலைக் கடைகள் மூலமாக மக்களுக்குச் சீராக விநியோகம் செய்வதில் தனியான கவனம் செலுத்தி நாட்டிலேயே நல்லதோர் ஆட்சியை தமிழக முதல்வர் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான் உணவு உற்பத்தியில் குறைவு ஏற்பட்டாலும் கூட மக்களுக்கு வழங்கப்படுகிற உணவுப் பொருள்கள் எந்தவித விலை ஏற்றமுமில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன. எந்தவிதமான விலை ஏற்றமுமில்லாமல் கடந்த 10 ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து ஒரே சீரான விலையில் ஏழை எளிய மக்களுக்கு உணவுப் பொருள்களைத் தமிழக அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. உணவுப் பிரச்சினை என்பதற்கே இங்கே இடமில்லாமல் தமிழக அரசு செய்திருக்கிறது. எனவே இவ்வளவு பெரிய உணவுப் பிரச்சினையைச் சமாளிக்கிற தன்மையும் பாங்கும் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழக முதல்வருக்கு மட்டும்தான் இருக்கிறது. அந்த வகையில் 10 ஆண்டுகளாக அவர் இங்கே பீடுநடை போட்டு வருகிறார். எனவேதான் வருகிற காலத்திலும் அப்படிப்பட்ட முயற்சிகள் தொடர்ந்து மேற் கொள்ளப்படும் என்றும் உணவு உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தப்படும் என்றும் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது.

தொலைக்காட்சி நிலையத்தைப் பொறுத்த வரையில் கொடைக்கானலில் புதிதாக தொலைக் காட்சி நிலையம் உருவாகியதன் காரணமாகத் தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு மத்திய அரசு உதவியிருக்கிறது. இந்த மையத்தை மத்திய அரசு மாநிலத்திற்கு வழங்கியிருந்தாலும் கூட அதன் மூலம் ஒளி பரப்பப்படும் பல்வேறு நிகழ்ச்சிகள் நாட்டு மக்களுக்கு விஞ்ஞான பூர்வமான வளர்ச்சியைப் பற்றியும், அகில உலக வளர்ச்சியைப் பற்றியும் தெரிந்து கொள்ள வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருந்தாலும் ஒன்றை நான் குறிப்பிட்டாக வேண்டும். அதில் பெரும்பாலான நிகழ்ச்சிகள்—தற்போது காலையிலும் நிகழ்ச்சிகளைத் தொடங்கி இருக்கிறார்கள்—வேறு மொழியில், தமிழ்நாட்டு மக்களுக்குப் புரியாத மொழியில் அவர்கள் அறியாத மொழியில் ஒளிபரப்பப்படுவது எப்படி நியாயமாகும்? மாண்புமிகு உறுப்பினர் திரு. சமரசம் அவர்கள் கூட இதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். காலையில் ஒளிபரப்பப்படுவது முழுவதும் இந்தி

மொழியில் மட்டும் ஒளிபரப்பப்படுகிறது. அதனால் தமிழ்
நாட்டில் உள்ள மக்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லை
என்பதை நிச்சயமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
அதனால் 1 சதவீதம் கூட பிரயோசனம் இல்லை, பயனில்லை.
வீணாக அந்தக் காலை ஒளிபரப்பை மைய அரசு முழுக்க முழுக்க
இந்தியிலேயே பரப்பிக் கொண்டிருக்கிறது. அதை நிறுத்திவிட
வேண்டும். அல்லது ஆளுக்குப் பாதியாக நடத்த வேண்டும்.
இன்றைக்கு நாம் கேட்டுப் பெற வேண்டிய நிலையிலே இருக்
கிறோம். அதனாலேதான் சொல்லுகிறேன். கொஞ்ச நேரம்
தமிழிலும், கொஞ்ச நேரம் இந்தியிலும் என்று வைத்துக் கொள்
ளுங்கள். இந்தியில் நடக்கும் நிகழ்ச்சியைத் தமிழில் மொழி
பெயர்த்து, தமிழில் ஒரு நிகழ்ச்சியை ஒளிபரப்புவதற்கான
முயற்சிகளில் மைய அரசு ஈடுபட வேண்டும். மைய அரசுக்காக
வக்காலத்து வாங்கும் நண்பர்கள் இதற்காகச் சொல்ல வேண்டும்.
காரணம் நாம் தமிழர்களாகப் பிறந்திருக்கிறோம். தமிழ்நாட்டு
மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கிறோம். அப்படிப்
பிரதிபலித்தால்தான் அது காந்தீய உணர்வாக இருக்க முடியும்.
ஆகவே இந்த உணர்வுகளை அவர்கள் பிரதிபலிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். இதையே இந்த மன்றமும்
வலியுறுத்த வேண்டும்.

கள், சாராயக் கடைகளை மூடியதன் மூலமாக இன்றைக்கு
அரசுக்கு பெரிய நஷ்டம் ஏற்பட்டாலும், மக்களின் நலன் கருதி,
ஏழை மக்கள் கெட்டு விடக் கூடாது என்பதற்காக, மக்கள்
உடல்நலம் கருதி காந்தியின் கொள்கையை நல்ல முறையில்
நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு இன்றைக்கு இந்தத்
திட்டத்தை தமிழக அரசு கொண்டு வந்திருக்கிறது. ஒரு
திட்டத்தைக் கொண்டு வரும்போது அதனாலே ஏற்படுகிற
பாதிப்புகளிலிருந்து நிவாரணம் காண வேண்டும் என்பதுதான்
மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலையாய கொள்கை
யாகும். அந்த அடிப்படையிலே, கள் இறக்குகிற தொழிலாளர்
களுடைய குடும்பங்கள் நஷ்டத்திலே அழிந்து விடக் கூடாது
என்பதற்காக குடும்பத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் தந்து
வேறு தொழில் செய்ய உதவிகரமாக இருக்க வேண்டுமென்று
கருதி, தாராள மனப்பான்மையோடு மாண்புமிகு முதல்வர்
அவர்கள் இதை அறிவித்திருக்கிறார்கள். இதை வரவேற்கக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கொள்கையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு.
தங்கமணி ஒன்றைச் சொன்னார். இந்த மாநில அரசு, மாண்புமிகு
முதல்வர் சினிமாவில் நடிப்பதைப் போல, இரட்டை வேடம்
போடுகிறது என்று குறிப்பிட்டார். இந்த மாநிலத்தில்
இரண்டு விதமான மதுவிலக்குக் கொள்கை இருக்கிறது என்று
குறிப்பிட்டு அப்படிச் சொன்னார். ஒரு இயக்கம் பல்வேறு
மாநிலங்களில் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. அவர் இந்





மாநிலத்தில் பூரண மதுவிலக்கு வேண்டும் என்று கேட்கிறார். மதுவிலக்கை ரத்து செய்து விட்டு பூரணமாக அருந்துங்கள். எப்படி வேண்டுமானாலும் இருங்கள் என்று காந்திய கொள்கை யைக் கடைப் பிடிப்பவர்கள் சொல்லுகிறார்கள். வேடம் போடுவதற்கு என்றாலும் முகம் அழகாக இருக்க வேண்டும். அதுவும் இரண்டு விதமான வேடம் போடுவதற்கு திரு. தங்கமணி போன்றவர்களுக்கு அழகான முகம் கிடையாது. அது புரட்சித் தலைவருக்கு மட்டும்தான் உண்டு. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் கட்சி பல மாநிலங்களை ஆள்கிற ஒரு கட்சி. மாநிலத்திற்கு ஒரு கொள்கை என்றும், ஆளும் கட்சியாக உள்ள மாநிலத்தில் ஒரு கொள்கை என்றும், எதிர்க்கட்சியாக உள்ள மாநிலத்தில் வேறு ஒரு கொள்கை என்றும் நிர்ணயிப்பது தவறாகும். அது கூடாது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அதைப் போலவே மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ரகுமான் கான் பேசுகின்றபோது பல்வேறு குற்றச்சாட்டுக்களை அடுக்கடுக்காகச் சொன்னார். அப்போதெல்லாம் நான் தலையிட்ட நேரத்தில் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள், "வேண்டாம், கடைசியில் சொல்லுங்கள்" என்று சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்கள், ஏழைக் குழந்தைகளுக்கு, ஏழைத்தாய்மார்களுக்கு இலவசமாக காலணி தருகிற திட்டத்தைப் பார்த்து கேலி பேசுகிறார்கள். கேலி இன்றைக்கு மட்டும் அவர்கள் பேசவில்லை. நாட்டு மக்களின் நலனுக்காக தமிழக முதல்வர் ஒவ்வொரு திட்டத்தையும் அறிமுகப்படுத்திய காலத்திலே இப்படித்தான் பேசினார்கள். அன்றைக்கு முதியவர் பேசினார், இன்றைக்கு இளையவர் பேசுகிறார் சத்துணவுத் திட்டத்தை அறிவித்த நேரத்தில் இதே அவையில் கேலி பேசினார்கள். சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்தபோது அதைத் தொடர்ந்து நடத்த முடியுமா என்று கேட்டவர்கள், பின்னாலே தேர்தலைச் சந்திக்கும்போது, இன்னும் சிறப்பாக இந்தச் சத்துணவுத் திட்டத்தை நாங்கள் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள்.

அதைப்போலவே இன்றைக்குக் காலணி தருகிற திட்டத்தை மிகக் கேவலமாகப் பேசுகின்ற உறுப்பினர் சார்ந்துள்ள அந்த இயக்கம் பிற்காலத்திலே "பூட்ஸ்" தருவோம் என்று சொல்லக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள். அதிலே நியாயம் இருக்கும் என்று கருதுகிறேன். ஒன்று மட்டும் நிச்சயம். யார் யார் பார்வைக்கு எது எது படுகிறதோ அது அது அவர்கள் பார்வைக்கு படக்கூடும். நாட்டில் ஏழைக் குழந்தைகள், ஏழைத் தாய்மார்கள் வெய்யிலில் நடக்கிறார்கள். பாவம் அவர்கள் கால்கள் வெந்துவிடக் கூடாது, அவர்கள் காலணி வாங்கக் கூட வசதியில்லாமல் வெற்றுக் காலோடு நடக்கக் கூடிய நிலையிலே இருக்கிறார்களே என்று கருதி அந்த ஏழைக் குழந்தைகளுக்கும், ஏழைத் தாய்மார்களுக்கும் காலணி தரவேண்டும் என்ற சிறப்

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1987 மார்ச் 2

பான திட்டத்தை தமிழக முதல்வர் அறிவித்தால், '' தாவணியைக்கூட தாருங்கள் '' என்று இவர் கேட்கிறார் என்றால், புரட்சித் தலைவர் ஏழைகளின் காலைப் பார்க்கிறார், இவர் எங்கே பார்க்கிறார் என்பதை நீங்களே புரிந்துகொள்ளுங்கள். தாவணி கேட்கிறார் என்றால் இவர் எங்கே பார்க்கிறார் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு அரசின் திட்டங்களை, ஆட்சியாளர்களின் கொள்கைகளை கேலி பேசுகின்றபோது. எச்சரிக்கையாகப் பேச வேண்டும். எதையெதைச் சொல்ல வேண்டும், எதையெதை விட வேண்டும் என்பதை யோசித்துப் பேச வேண்டும். இவர் பேசுகிறபோது, புரட்சித் தலைவர் அவர்களைக் கேலி பேச வேண்டுமென்பதற்காக எதை வேண்டுமானாலும் பேசிவிட்டு சென்றுவிடக்கூடாது.

(பிற்பகல் 1—10)

இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். பாலில் விஷம் கலந்துவிட்டது, அதனாலேதான் தூக்கி எறிந்து விட்டோம், கொட்டி விட்டோமென்று சொன்னார்கள். ஆனால், ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். எந்தப் பறவைக்கும் இல்லாத ஒரு சிறப்பு அம்சம், எந்த விலங்குக்கும் இல்லாத ஒரு சிறப்பு அம்சம் அன்னப் பறவைக்கு உண்டு. அன்னப் பறவை மட்டும்தான் பாலோடு விஷம் கலந்தாலும், பாலை அருந்திவிட்டு, விஷத்தை விட்டு விட்டு வரும். அதைப் போலத் தான், எந்த மனிதருக்கும் இல்லாதச் சிறப்புக் குணம், எந்த உலகத்திலும் எந்த மனிதருக்கும் இல்லாத மிகப் பெரிய ஆற்றல் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு மட்டும் உண்டு. அதனாலேதான் பாலை மட்டும் அருந்திவிட்டு, விஷத்தை அங்கேயே விட்டுவிட்டார். இன்னும் சொல்லப்போனால், யார் விஷத்தைக் கொட்டினார்களோ, அவர்களுக்கு அந்த விஷத்தை அனுப்பியிருக்கிறார். அதிலே அவர் எச்சரிக்கையாக இருக்கிறார். அதைப் புரிந்து கொள்ள வேண்டும். பேசுகிறபோது எதையெதை, எப்படி எப்படி, எங்கே பேச வேண்டுமோ அங்கே யோசித்துப் பேச வேண்டும்.

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே பெரும்பான்மையான மாவட்டங்கள் இன்றைக்கு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் எல்லாம் வருமுன் காக்கும் அரசாக இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் மாண்புமிகு முதல்வரவர்கள், கடந்த காலத்திலும் சரி, இன்றைக்கும் சரி, எந்தக் கிராமத்திலும் குடிநீருக்காகப் பெரிய தட்டுப்பாட்டை உருவாக்காமல், அதிக வரு



1987 மார்ச் 2] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

வாய் இல்லாமல் போனாலும், ஏழை மக்களுக்குக் குடிநீர் கிடைக்க வேண்டுமென்று அனைத்து கிராமங்களிலும் ஓரளவுக்குத் திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். அது குறித்து நீண்டதொரு அறிக்கையை மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் இன்றைக்கு சமர்ப்பித்தார்கள்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஆத்தூர் தாலுக்கா மட்டும்தான் வறட்சியால் பீடிக்கப்பட்டிருப்பதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை கொடுத்ததாகவும் அதனால் ஆத்தூர் தாலுக்காவுக்கு மட்டும்தான் இப்போது திட்டங்கள் வருவதாகவும் சொன்னார்கள். அது தவறான நடவடிக்கையாகும். சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஓமலூர் தாலுக்கா, ராசிபுரம் தாலுக்கா, திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் தாலுக்கா எல்லாம் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஆத்தூர் தாலுக்காவுக்குத் தரப்படும் சலுகை அனைத்து தாலுக்காக்களுக்கும் தரப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தத்திலே மக்களுடைய நலன்களுக்காகவும், மக்களுடைய ஏற்றத்திற்காகவும் நல்ல கொள்கைகளைக் கொண்டு வந்துள்ள இந்த அரசாங்கத்தைப் பாராட்டுவதை விட்டு, தங்கள் ஆசைகள் நிறைவேறாத காரணத்தால், எந்தக் குற்றம் செய்தாலும் அண்ணாவின் பெயரால் தப்பித்துக்கொள்ளலாம் என்ற உணர்வோடு, அண்ணாவின் பெயரை இழுத்து, குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ள முயலக்கூடாது. அண்ணாவுக்காக நாங்கள் செய்தோம், அண்ணா சொன்னதைச் செய்தோம் என்று சொல்லி, அதனாலே தப்ப வேண்டுமென்று நினைத்து, வெடி குண்டைத் தூக்கிக்கொண்டு திரியக்கூடாது. குற்றவாளி என்று கைது செய்யப்பட்டவர்களுக்கெல்லாம் அண்ணாவின் பெயராலே வக்காலத்து வாங்கக் கூடாது. போட்டோ ஸ்டூடியோ முதலாளியை அடிக்கப் போனவர்களுக்கெல்லாம் அண்ணாவின் பெயராலே வக்காலத்து வாங்கக் கூடாது. அண்ணாவைத் தெரியாதவர்கள் எல்லாம், அண்ணாவைப் பற்றிப் புரிந்துகொள்ளாதவர்கள் எல்லாம், அவர் பெயரைச் சொல்லி தப்பிப்பதற்கு முயலக்கூடாது.

இராஜேந்திரன் என்ற டைரக்டருக்காக இங்கே வக்காலத்து வாங்கினார்கள். அவர் தெருச் சண்டைக்குப் போயிருக்கிறார். ஒரு போட்டோ ஸ்டூடியோவுக்குப் போய், தகராறு செய்து, அங்கே கண்ணாடியை எல்லாம் அடித்து நொறுக்கி இருக்கிறார். அப்படிப் பட்டவர்களுக்கெல்லாம் வக்காலத்து வாங்கி இருக்கிறார் கள். அண்ணாவின் பெயராலே கேட்கிறோம், எப்படி நீங்கள் கைது செய்யலாம் என்று கேட்கிறார்கள். எப்படி வழக்குத் தொடரலாம் என்று கேட்கிறார்கள். குற்றவாளிகள் அண்ணா வின் பெயராலே தப்ப முடியாது. ஒரு தவறு செய்தால்,

[டாக்டர். சே. பி. இராமலிங்கம்] [1987 மார்ச்

அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன் என்பதுதான் புரட்சித் தலைவர் அவர்களின் கொள்கை. அந்தக் கொள்கையை நிலைநாட்டத்தான், நாட் டிலே எப்படிப்பட்டவர்கள் என்ன தவறு செய்தாலும், அதை நீக்குவதற்குத் தயாராக இன்றைக்கு அவர்கள் பீடு நடை போட் டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த ஆளுநர் உரையை மொத்தத்தில் வரவேற்று, விடை பெறுகிறேன்.

திரு. அ. ஆறுமுகம் : பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாநில ஆளுநர், மேன்மை தங்கிய திரு. எஸ். எல். குரானா அவர்கள் இந்த மன்றத்திலே ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்கின்றேன். அவ ருடைய உரையிலே, நமக்கெல்லாம் புத்தாண்டு வாழ்த்து சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நான் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே மது விலக்கைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 1–1–1987-லே இருந்து கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் எடுத்து விட்டார்கள். அதற்காக நான் முதலமைச்சர் அவர்களுக்கும், சர்க்காருக்கும் என்னுடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்திலே, கள்ளையும், சாராயத்தையும் குடித்துப் பழகிவிட்டவர்கள், அந்தப் பழக்கத் திற்கு அடிமையாகிவிட்டவர்கள் இன்றைக்குப் பிராந்திக் கடை களையும், பீர் கடைகளையும் தேடி, ஓடி கும்பலாகக் குடித்து தங்களுடைய வாழ்க்கையை நாசமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனாலே அவர்களுடைய குடும்பத்திலே குறிப்பாக மனைவி மார்கள் எத்தனையோ பேர்கள் தங்களுடைய இன்னுயிரை ஈந்திருக்கின்றார்கள். ஆகவே, நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்வதெல்லாம், தயவு கூர்ந்து கள்ளுக்கடை, சாராயக்கடை களை எடுத்ததைப் போல, இந்த பீர், பிராந்தி கடைகளையும் எடுத்துவிடவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது உதவி ஜனாதிபதியாக இருக்கின்ற திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் தமிழ் நாட்டிலே தொழில் அமைச்ச ராக இருந்தபோது ஒரு நாளைக்கு ஒரு தொழிற்சாலை என்ற நிலையிலே ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதுபோலவே, தற்போதுள்ள சர்க்காரிலே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலே ஏராளமான பெரிய தொழிற்சாலைகளையும், குடிசைத் தொழில்களையும், நடுத்தர தொழிற்சாலைகளையும் கொண்டு வரவேண்டும். கோடானுகோடி பேர்கள், ஏழைகள், படித்தவர்கள் இன்றைக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் துன்பத் திலே ஆழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக் கெல்லாம் மறுவாழ்வு கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



1987 மார்ச் 2] [திரு. அ. ஆறுமுகம்]

என்னுடைய வந்தவாசிப் பகுதியிலே, சர்க்கரை ஆலை வர இருந்ததாகவும், அதை நம்முடைய மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அவர்களுடைய செல்வாக்கிலே திருவண்ணாமலைக்குப் பக்கத்திலே கொண்டுபோய்விட்டார்கள் என்றும் வந்தவாசி மக்கள் பேசிக்கொள்கின்றார்கள். அதைப் போலவே, நூற்பாலை ஒன்று வந்தவாசிக்கு வர இருந்ததாகவும், நம்முடைய மதிப்பிற்குரிய திரு. ப. ஜீவரத்தின முதலியார் அவர் கள் அந்த நூற்பாலையை வேறு இடத்தில் வைக்க செய்திருக் கின்றார்கள் என்றும் மக்கள் என்னிடத்திலே சொல்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வந்தவாசியில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய வந்தவாசி மிகமிக பின்தங்கிய தொகுதியாக இருக்கின்றது. அங்கே விவசாயத்தைத் தவிர வேறு எந்த தொழிலும் கிடையாது. ஆகவே அப்படிப்பட்ட இடத்திலே ஒரு பெரிய சர்க்கரை தொழிற்சாலை அல்லது நூற்பாலை கொண்டுவர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சிப் பணி பற்றி சொல்கிறேன். இன்றைக்கும் பத்திரிகை களிலே பார்ப்போமேயானால், தமிழ்நாடு முழுவதும் வறட்சியி னாலே பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதுபோலவே என்னுடைய வட ஆற்காடு மாவட்டமும் வறட்சியாலே பாதிக்கப்பட்டு, இன்றைக்கு விவசாயிகள் பயிர் செய்வதற்குத் தண்ணீர் இல்லாமல் இருக்கின்றது. குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லா மல் அங்குள்ள மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அதுபோலவே ஆடுமாடுகளுக்குக் கூட குளம் குட்டையிலே தண்ணீர் கிடைக்கவில்லை. அப்படிப் பட்ட கடுமையான வறட்சி நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. நம்முடைய சர்க்கார், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காரிலே மிகவும் செல்வாக்கு கொண்டவர்கள். அங்கே இருக்கின்ற பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களிடத்தி லேயும் அவர்களுக்கு நல்ல செல்வாக்கு உண்டு. ஆகவே எவ்வளவு அதிகமான பணத்தை மத்திய சர்க்காரிடமிருந்து பெற முடியுமோ அவற்றையெல்லாம் உடனடியாகப் பெற்று, நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் குடிநீர் குறை யில்லாமல் விவசாயத் தொழிலுக்கும் குந்தகம் இல்லாமல் இருப்பதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய வந்தவாசிப் பகுதியிலே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. போன வருடம் வெள்ளத்தால் ஏரிகள் எல்லாம் உடைந்து பாதிப்பு ஏற்பட்டது. பழுதடைந்த கால்வாய்களும்,

[திரு. அ. ஆறுமுகம்] [1987 மார்ச் 2

ஏரிகளும், நிலங்களும் அப்படியே இருக்கின்றன. ஆனால் இந்த ஆண்டு வறட்சியினால் நிலைமைகள் மேலும் மோசமாகி இருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட பகுதிகளுக்கெல்லாம் கொஞ்சம் சலுகை காட்டி பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற சத்துணவுத் திட்டத்தை நான் மனமார வரவேற்கிறேன். ஆனால் அந்தத் திட்டத்தை எந்த குறிக்கோளோடு கொண்டு வந்தோமோ அந்தத் திட்டம் நடைமுறையிலே சரியாக இல்லாமல் இருக்கின்றது.

(பிற்பகல் 1-20)

அரிசி, பருப்பு கொடுக்கின்றவர்களிலிருந்து வாங்குகிறவர்கள், சமைக்கிறவர்கள் எல்லோருமே சரியான முறையிலே செயல்படாமல் இருக்கிறார்கள். அதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்து நல்ல அதிகாரிகளைப் போட்டு, மேற்பார்வையிட்டு இந்தத் திட்டம் நல்ல முறையில் பலனளிக்க வகை செய்ய வேண்டும்.

அடுத்து, பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை போன்றவற்றின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற மாணவர் இல்லங்களில் தங்கியிருக்கின்ற மாணவர்களுக்காக உணவுக் கட்டணம் கணிசமாக அதிகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அத்தகைய மாணவர் இல்லங்களில் தங்கி பயிலும் சுமார் 80 ஆயிரம் ஏழையெளிய மாணவர்கள் பயனடைவார்கள். இதற்காக மாண்புமிகு முதலமைச்சருக்கும் குறிப்பிட்ட இலாகா அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து தாய்மார்களுக்கும், இளம் சிறார்களுக்கும், இலவசமாக காலணிகள் கொடுக்கின்ற முக்கியமான, புதிய, புரட்சிகரமான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடைமுறைக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில் இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலேயும் இப்படிப்பட்ட ஒரு திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தியாவிலேயே எங்கேயும் இல்லையென்றால் உலகத்திலே எங்கேயும் இல்லையென்று பொருள். ஆகவே, இப்படிப்பட்ட புரட்சிகரமான ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். கிராமப்புறங்களில் வாழ்கின்ற ஏழையெளிய தாழ்த்தப்பட்ட மக்கள், தொழிலாளர்கள், பின்தங்கிய மக்கள், ஆதிவாசிகள், இப்படிப்பட்டவர்களுடைய குடும்பத்திலுள்ள தாய்மார்களும், பிள்ளைகளும், சர்க்கார் இலவசமாக கொடுக்கின்ற செருப்பை போடுவதிலே இருக்கின்ற சந்தோசமும், மகிழ்ச்சியும்,



1987 மார்ச் 2] [திரு. அ. ஆறுமுகம்]

ஆனந்தமும் இருக்கிறதே—அதை அனுபவித்தால் தான்
தெரியும். அதனால் இத்திட்டத்தை நான் முழு மனதுடன்
வரவேற்கிறேன். மேலும் இந்தக் காலணிகளை தயார்
செய்கிறவர்கள், சம்பந்தப்பட்ட சங்கத்தைச் சேர்ந்தவர்கள்,
கூட்டுறவு முறையிலே இத்தொழிலை செய்துகொண்டிருப்பவர்
கள்— இவர்களுக்கெல்லாம் நல்ல முறையில் வேலைவாய்ப்பும்,
நல்ல வருமானமும் கிடைக்கும். இன்னும் புதிதாக சங்கங்களும்
கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்பட செய்யலாம். அந்த வகையில்
இத்தொழிலை நல்ல முறையிலே விரிவுபடுத்தலாம். மேலும்
அவர்களே பலன் அடையும் வகையில் இத்திட்டம் இருப்பதால்
நான் மீண்டும் அரசைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, வட ஆர்க்காடு மாவட்டத்தை இரண்டாகப்
பிரிக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதில் திருவண்ணா
மலையைத் தலைநகராகக் கொண்ட மாவட்டம் ஏற்பட
இருக்கிறது. அதற்கு ஒரு பெயர் வைத்திருக்கிறார்கள். படித்த
வர்களுக்கும் கூட அந்த மாவட்டத்தின் பெயர் சுலபமாக
வராது. சம்புவராயர் என்கிற பெயர் கொண்ட மாவட்டம்
நமக்கு வேண்டாம். எங்களுடைய திருவண்ணாமலை அண்ணா
மலைப் பிள்ளை என்றால் எல்லோரும் தெரிந்துகொள்வார்
கள். தலைவர் காமராஜர் அவர்கள 10 ஆண்டுக்காலம் சிறையில்
இருந்தார்கள். அதுபோல் அண்ணாமலைப் பிள்ளை அவர்களும்
10 வருடம் ஜெயிலில் இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய
பெயரை நினைவு கூரும் வகையில் சம்புவராயர் மாவட்டம்
என்பதற்குப் பதிலாக அண்ணாமலைப் பிள்ளை மாவட்டம்
என்று வைத்துக்கொள்ளலாம். மேலும் திருவண்ணாமலைக்கு
அண்ணாமலை என்கிற ஒரு பெயரும் உண்டு. அதுவும் உங்க
ளுக்குப் பிடிக்கவில்லை என்றால் முதலில் திராவிடர் கழகத்திலும்
பின்பு திராவிட முன்னேற்றக் கழகத்திலும் இருந்து இன்றைக்கு
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசில் அமைச்சராக
இருக்கின்ற திரு. ப.உ. ச. அவர்களுடைய பெயரை வைக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சினையையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.
நீங்கள் எதற்காக மாவட்டங்களைப் பிரிக்கிறீர்களோ அத
னுடைய தத்துவம், தத்துவத்தினுடைய பலன்கள் ஜனநாயகத்
துக்கு உள்ளபடியே சென்றடைய வேண்டுமானால் செங்கற்பட்டு
மாவட்டம், வட ஆர்க்காடு மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம்
என்ற மூன்று மாவட்டங்களையும் சேர்த்து தயவு செய்து
ஒரு கணக்கிலே அனைத்தையும் எடுத்துக்கொண்டு பிறகு
மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்
கிறேன்.

வந்தவாசி தாலுக்காவை செங்கல்பட்டு மாவட்டத்தோடு சேர்க்க வேண்டுமென்று கோருகிறார்கள். அது காஞ்சிபுரத்திற்குப் பக்கத்திலே இருக்கிறது. திருவண்ணாமலைக்கு 70 மைல் தொலைவில் இருக்கிறது; காஞ்சிபுரம் 25 மைல் தொலைவில்தான் இருக்கிறது. செய்யாறுக்கும் அதே மாதிரி; அரக்கோணத்திற்கும் அதே மாதிரி. இந்த மூன்று தாலுக்காக்களையும் செங்கல்பட்டு ஜில்லாவிலே சேர்த்து அந்த மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்திலே, செஞ்சி தாலுக்கா, திருக்கோயிலூர் தாலுக்கா, கள்ளக்குறிச்சி தாலுக்கா ஆகியவற்றைச் சேர்த்து விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கையிலே இப்பொழுது ஒரு உள்நாட்டுப் போர் நடந்துகொண்டே இருக்கிறது. அதை எதற்காக உள்நாட்டுப் போர் என்று சொல்கிறேன் என்று சொன்னால், அந்த நாட்டிலே இருக்கின்றவர்கள் மத்தியிலே சண்டை நடக்கின்றது. ஆனால் அங்கே சர்க்காரை எதிர்த்துப் போராடிக்கொண்டிருப்பவர்கள் நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்; தமிழ்நாட்டிலேயிருந்து அங்கே சென்றவர்கள். அவர்களை அந்த அரசாங்கம் கொடுங்கோல் ஆட்சி செய்து பல்லாயிரம் உயிர்களைப் பலி கொண்டிருக்கிறது. இதை நம்முடைய முதலமைச்சரவர்கள் நம்முடைய பிரதம அமைச்சருக்குச் சொல்லி, இப்பொழுது எடுத்திருக்கும் நடவடிக்கைகளைவிட வேறு எந்த நடவடிக்கை எடுத்தால் அந்தப் பிரச்சினை தீருமோ அதை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

திருவொற்றியூர் என்னுடைய நண்பர் திரு. பாரதி அவர்களின் தொகுதி. அந்தத் தொகுதியில் கள்ளச்சாராயம் குடித்து அறுபது பேர் இறந்திருக்கிறார்கள். இறந்தவர்கள் எல்லாம் மிகவும் ஏழைகள். அந்த எம்.எல்.ஏ. அவர்கள் முதலமைச்சரோடு பேசி அந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைச் சர்க்கார் மிகவும் கருணையோடு கருதி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நேருவினுடைய உறுதிமொழி காக்கப்பட வேண்டுமென்ற ஆர்வம் அனைவருக்கும் இருக்கிறது. இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகின்ற காலம் வரை ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கும் என்றார். ஆனால் இன்றைய நிலை இந்தி பேசாத தமிழக மக்கள் இந்தி பேச வேண்டும், அதற்கு வாய்ப்பு எங்களுக்கு வேண்டும், அதை உருவாக்கிக் கொடுங்கள் என்று





கேட்டாலும்கூட சர்வாதிகார முறையில், முடியாது, இந்தி படிக்கக் கூடாது, ஆங்கிலம்தான் படிக்க வசதி செய்து தர முடியும் என்ற கடுமையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் கட்சி நடிகர்கள்கூட இந்திப்படங்களை இயக்குகிறார்கள். பல நடிகர், நடிகைகள் இன்று தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். இந்திப்படங்களில் நடித்து பெரிய அகில இந்திய நடிகர், நடிகைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் புகழும் செல்வமும் கிடைக்கிறது. அதைப்போல தமிழைப் பயிற்று மொழியாக ஏற்று உடன் நவோதயா பள்ளிகளைத் திறக்க வேண்டும். எந்த மாநிலத்திலும் நவோதயா பள்ளிகளை வேண்டாமென்று எந்த மாநில சர்க்காரும் சொல்லவில்லை. அதைப்போலவே நம்முடைய தமிழக சர்க்காரும், இப்பொழுது கல்வியமைச்சரவர்களும் மத்திய சர்க்காரோடு நல்லமுறையிலே விவாதித்துக் கொண்டு வருவதாக நம்முடைய கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தலைசிறந்து ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்'' என்பதைப்போல, இந்தியாவிலே எல்லோரும் இந்தி படித்து இந்தி மொழியைத் தெரிந்து கொண்டிருப்பதைப்போல தமிழகத்திலே உள்ள நாம் அனைவரும் இந்தியைக் கற்று, இந்தியா முழுவதும் நாம் செல்லக்கூடிய வகையிலே, நாம் உண்மையிலேயே இந்தியனாக இருப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். **வணக்கம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (3—3—1987) காலை 10 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

22. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போ-V) துறையின் 21—11—1986 ஆம் நாளிட்ட 3217 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

5. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1970–71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள பொது நிறுவனங்கள் தொடர்பான பத்திகளின் மீதான குழுவின் (1980–81) பத்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் (சிவில் இனங்கள்) மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை.

6. 1987 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 27 ஆம் மதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறை.





இணைப்பு—I.

(....87 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

*Honourable Members of the Legislative Assembly,*

I wish you all a very Happy New Year. I also wish a year of prosperity for the people of Tamil Nadu.

2. The year 1987 should be an important landmark in the history of the State. The new year began with a note of fulfilment of one of the long-standing assurances of the State Government. In order to alleviate the sufferings of the poor and keeping in mind the Directive Principles of the State Policy contained in the Constitution of India, the Government have prohibited the manufacture, sale and consumption of arrack and toddy from 1st January 1987 onwards. When the new year began, all the toddy and arrack shops throughout the State were closed. Besides as a step towards the rehabilitation of about 30,000 toddy tappers, Government have formulated a scheme in which a cash assistance of Rs. 2,000 each is being given to the erstwhile toddy tappers to enable them to purchase the tools and equipments for tapping of neera and manufacture of palmgur. The new year thus began on a promising note.

3. The day of Pongal this year was also of considerable importance for the people of Tamil Nadu. Most parts of the State were brought together into a communication network by the launching of Kodaikanal T. V. Relay Station. Regional programmes are now available to a large segment of the State's population.

4. The second year of the Seventh Five-Year Plan is coming to a close shortly and I am happy to announce that the plan performance of the State Government has been commendable as in the past. As against an approved outlay of Rs. 1,153 crores for 1986-87, the actual expenditure is expected to be about Rs. 1,200 crores. In order to maintain a similar tempo of economic development, the State will enter into the third year with an outlay of Rs. 1,250 crores. However, the Union Planning Commission has assessed a resource gap of Rs. 86 crores for the State Government to reach this outlay. This has been due to various factors like consecutive droughts, failure of north-east monsoon, revenue depletion owing to the introduction of prohibition, sanction of ex-gratia payment to Government servants and payment of Dearness Allowance on par with the decisions of Government of India. The State Government have already requested the Government of India to

release Rs. 86 crores either in the form of Special Central Assistance or Advance Plan Assistance to enable the State Government to overcome the resource constraints next year and maintain the momentum already generated in plan performance.

5. The major thrust in the plan investment during 1987-88 will be in the power sector which forms the basis for the growth of the economy. In my last address to the State Legislature in January 1986, I had pointed out that the Government are considering steps for augmenting generation capacity through external aid. I am now happy to announce that the Government have finalised an agreement with the Asian Development Bank for the provision of assistance of 150 million dollars to the State Government for setting up the North Madras Thermal Project. In the meantime, power generation capacity in the State is being augmented through various new projects. The first unit of the Mettur Thermal Power Project-I Stage has already been synchronised while the second unit will be commissioned shortly. These two units will have a generation capacity of 420 MW. Similarly, work has also commenced on the Tuticorin Power Project—Third Extension Scheme, which will create a generation capacity of 420 MW. In order to ensure adequate supply of coal to the thermal power stations in Tuticorin, the State-owned Poompuhar Shipping Corporation has deployed its ships for transporting coal from Haldia to Tuticorin. All the three newly acquired ships have been put into operation by the Corporation. It is also proposed to set up a thermal project at Cuddalore with five units, each having a generation capacity of 210 MW in a phased manner. A project report has been sent to the Central Electricity Authority for technical clearance and coal linkage.

6. The Government are aware that the strategy of lignite-based power generation will play a crucial role in Tamil Nadu in the future years. The State Government will therefore render necessary assistance to the Neyveli Lignite Corporation Limited in its new projects like second expansion of the first mine and excavation of third mine of 11 M. T. per annum which will have matching thermal power generation The State Government appeal to the Central Government to make this lignite-based power available to Tamil Nadu. Similarly, with a view to harnessing the non-conventional source of energy, the Tamil Nadu Electricity Board has installed 16 Nos. of 55 KW Wind Generators at Mullaikadu in Tuticorin. Four more Wind Generators of the same capacity are under installation in the same place.



7. In my last address to the Legislature, I had pointed out that our endeavour will be to focus our attention on increasing the productivity of the State-owned public sector undertakings. The Government have already initiated several steps in this direction. Honourable Members are aware that the Tamil Nadu Small Industries Corporation (TANSI) has already been restructured. As a further step in the same direction, the Government have decided to restructure the Tamil Nadu Ceramics Limited. The Government are fully aware that public sector undertakings while being economically viable, have a promotional role to play. The Government will therefore continue taking steps to combine the twin objectives of economic viability and promotional commitments of the public sector undertakings. .

8. In the industrial sector, important developments have taken place. A programme for modernisation and expansion of Ariyalur Cement Works is already under consideration of the Government. A 100 per cent export-oriented unit, viz., the TAMIN Granites of Tamil Nadu Minerals Limited has been inaugurated at Manali. A scheme for setting up a graphite beneficiation plant at Sivaganga with foreign technology is in the offing. A plant at an estimated cost of Rs. 52 crores is proposed to be set up by Tamil Nadu Magnesite Limited for the manufacture of Special Refractory Brick by using Dead Burnt Magnesite from the Rotary Kiln and high quality Sintered Magnesia from the chemical benefici-ation plant. In recent years, non-resident Indians have been showing interest in making investments in Tamil Nadu. The Government will continue to welcome and encourage such investments.

9. As a result of the measures initiated by the State Government, there has also been an impressive growth in small industries sector. The number of small units which have been granted permanent registration has risen to 77,382 by the middle of 1986-87. The investment generated by them has already reached the figure of about Rs. 950 crores by the beginning of the current financial year.

10. The State Government have taken note of the new sugar policy announced by Government of India and efforts are being taken to get maximum number of additional sugar mills in the State. We are optimistic that the response from the Government of India will be positive as it has been in the past. In my last address to the Legislature, I had pointed out that the State Government are pressing the Government of India to set up the X-Ray Film Plant at Udhagamandalam at a cost of Rs. 170 crores. Honourable Members of the Legislative Assembly will be happy to know that the scheme has since been cleared by Govern-

ment of India. I also take this opportunity to thank the Union Government for having cleared the Rs. 600 crores Aromatics Project proposed by the Madras Refineries Limited at Manali. This Project will also facilitate the setting up of a large number of downstream projects. Government of India have also been requested to clear the proposal of Madras Fertilisers Limited to double its capacity and also set up one of the 15 new fertiliser plants in Tamil Nadu during the Seventh Five-Year Plan period.

11. The State Government are also providing major thrust to the Handloom and Textile sectors. Rehabilitation of closed sick mills has been engaging the attention of the Government for quite some time. The State Government nationalised the Somasundaram Spinning Mills in Pasumpon Muthuramalingam district in August 1986. The Government then declared the Bhavani Mills at Coimbatore as a relief undertaking and ensured its reopening in October 1986. The Sri Hari Mills Private Limited was also reopened in October 1986 on a joint management basis with Government assistance. Measures to rehabilitate other closed mills are also under consideration of the Government. As a part of the new textile policy of the Government of India, the State Government have also taken steps to issue registration certificates to all the power looms in the State.

12. The policy of the Government is to protect handloom industry and uplift the socio-economic conditions of the handloom weavers through handloom co-operatives. Out of 5.56 lakh handlooms functioning in the State, as many as 3.84 lakhs have already been brought under the co-operative fold by the end of November 1986. Tamil Nadu has, in fact, already exceeded the national target of 60 per cent coverage of looms set by the Government of India.

13. Agriculture forms a very vital part of our economy. In spite of the unfavourable seasonal conditions prevailing during the last two years, the sustained efforts taken by the Government made it possible to achieve a reasonable level of production and productivity. A "5 Step Approach" is being followed in the current year for achieving the target of minimum increase of 750 kgs. of paddy per hectare over and above the normal production in the samba season. Efforts are being taken for modernising the entire agricultural sector. Increased attention will be paid to attract the farm youths by providing essential training in handling agricultural equipments. A new scheme, viz., Tamil Nadu Women in Agriculture is also being initiated to provide necessary agricultural skills to the women working in agriculture.



14. It is quite distressing to note that the actual rainfall in the State in the past few years has been far below normal. Consequently, the irrigation potential and the availability of drinking water in the State are on the decline and urgent steps have to be taken to retrieve the situation. The Government are alive to this emerging problem and are continuing their efforts to mitigate the drinking water problem as well as to counter the declining irrigation potential. Substantial allocations for drinking water supply schemes are thus being made as in the past. Under the Minimum Needs Programme, an allocation of Rs. 30 crores has been made in 1986-87 and the same level of allocation will be continued in the coming year also. During each of the years 1986-87 and 1987-88, it has been programmed to complete 2,225 habitations under the Accelerated Rural Water Supply Programme and the Minimum Needs Programme. In addition, 5,339 bore-wells have also been sunk up to December 1986 in order to mitigate the hardship caused by the drought. Besides, it has been planned to complete 14 water supply schemes in the urban areas during each of the years 1986-87 and 1987-88. In order to augment the drinking water supply in Madras City, the Phase II study of the UNDP is also being undertaken. The construction of 90 mld. treatment plant and the enlargement of pumping capacity at Kilpauk Water Works as well as the scheme for extraction of 55 mld. of ground water from Poondi, Kortaliar and Kannigaiper at an estimated cost of Rs. 15 crores are under progress.

15. To overcome the problems arising out of the poor rainfall in the past few years, Government are considering an Integrated Crop Development Scheme with emphasis on sprinkler and drip irrigation, which will facilitate economy in water use. Pilot efforts in introduction of these systems in our State have met with great success. Farmers are willing to accept these modern systems and instal them to increase crop intensity and enhance profitability. To enthuse them further and to maximise the productivity of water, a precious input, Government propose to implement a massive programme of popularising sprinkler and drip irrigation systems. External assistance to the extent required will be sought for implementing this scheme. To enable the small and marginal farmers to get the benefits of this scheme, subsidy and loan assistance will be provided to them. As a further step to streamline the water delivery system at the field level, the Government of India have formulated a scheme called "National Water Management Project" to be implemented with World Bank assistance. It is proposed to include a number of irrigation systems in Tamil Nadu under this scheme to benefit approximately 1,09,149 hectares at an estimated cost of Rs. 58.87 crores.

16. The Government are also providing substantial relief to the agriculturists in the State. In order to reduce their debt burden, aggravated by the successive years of floods and droughts, Government have written off the interest and the penal interest and interest on overdues on agricultural loans as on 31st March 1986. The Government have also granted extension of time for repayment of 50 percent of the outstanding principal from 31st December 1986 to 28th February 1987, in order to enable maximum number of agriculturists to avail of this relief. The relief to the agriculturists under this write off procedure will be of the order of the Rs. 125 crores. This measure will also strengthen the Co-operative structure which was facing heavy incidence of overdues especially at the level of primary agricultural credit societies and primary land development banks. The co-operative movement is also being geared up to benefit the tribal population through LAMP co-operative societies with the objective of providing integrated credit, marketing and other services under one roof. As against 13 societies in 1986, it is expected that at the end of 1987, there will be 17 LAMP co-operative societies. Another step to benefit the agriculturists has been the comprehensive crop insurance scheme which has been under implementation in the State since 1st April 1985. The scope of this scheme has now been extended to cumbu, cholam, ragi and gingelly crops in the current financial year.

17. Tamil Nadu has been in the forefront in the realm of welfare schemes. The Chief Minister's Nutritious Meal Programme continues to make positive impact on additional enrolment and in reducing drop-outs in schools. The rate of drop-outs at the primary level has come down from 40 per cent in 1977-78 to 23 per cent in 1984-85. During 1986-87, additional enrolment of students in the age-group 6 to 14 years in schools has been 2.84 lakhs. The State has exceeded the target set under the 20 point programme. The Government have also opened as many as 100 high schools and 79 higher secondary schools during 1986-87. The scheme of free supply of uniforms has given employment to about 40,000 women who have enrolled as members of the tailoring societies, Magalir Mandrams and voluntary institutions. The Government are also encouraging the voluntary agencies to take up income generating schemes with initial minimum financial support from the Government. The rate of food charges for the inmates of the hostels run by the Departments of Adi-Dravidar and Tribal Welfare and Backward Classes has been increased substantially. This will benefit about 80,000 inmates of such hostels.

18. In order to improve the working conditions of child and provide them with nutrition, education and health protection and to abolish child labour gradually, the Government have started a 3 year pilot project



for Sivakasi area commencing from 1986-87 with Central financial assistance. Another scheme for the benefit of children in the State has been the Integrated Child Development Service Scheme. During the current year, 13 more rural Integrated Child Development Service Projects have started functioning in Pudukkottai district. It is proposed to start 13 more such projects. In order to help the physically-handicapped children and adults, District Rehabilitation Centres have started functioning in Chingleput district covering 2 blocks. This is a pilot project for a period of 5 years and would be extended to other areas based upon its experience and success. For the tribal population, the Integrated Tribal Development Project is being implemented with vigour. While implementing the central scheme to supply subsidised foodgrains in the integrated tribal development blocks, the State Government are also giving additional subsidy on rice and are distributing it at Rs. 1.40 per kg. The distribution of rice and wheat under this scheme benefits 38,000 families.

19. I have already mentioned the positive impact of the Chief Ministers Nutritious Meal Programme in areas like nutrition, education, employment, etc. It is now proposed by the Government to launch an exemplary scheme viz., an Integrated Child Health and Nutrition Programme by integrating the benefits of the on-going Chief Minister's Nutritious Meal Programme and the Tamil Nadu Integrated Nutrition Project which is coming to a close in 1988. The Nutrition and Health services offered under both these programmes will be integrated in the form of a package and will be made available throughout the State to children below 5 years and pregnant mothers. The cost of this project may be approximately Rs. 400 crores. It has already been posed to the concerned Ministries of Government of India and the Union Planning Commission and their response has been found to be quite encouraging. The prospects of soft loan from World Bank and I.D.A. are quite bright for this project.

20. *Foot wear for working mothers and children.*—Honourable Members are aware that this Government have been supplying free text-books and uniforms to school-going children. **I am happy to announce that the Government propose to introduce a scheme in 1987-88 of free supply of foot-wear to the school-going children and poor working mothers in rural areas. Apart from the poor who are direct beneficiaries under this scheme, it would provide large scale employment opportunities through the revitalisation of the Foot Wear Co-operative Societies employing leather workers and the creation of new societies to cater to the needs of the very large number of beneficiaries.**

21. In my last address to the Legislature, I had announced the intention of the Government to implement the massive housing programme in the State. A beginning in its implementation has already been made. However, a novel approach is now crystallising. The State Government had commissioned a pilot socio-economic and housing survey in Anna district. On the basis of this survey, an innovative scheme has been formulated. The basic thrust under this new approach will be to ensure that the benefits of the investments flow directly to the rural areas, particularly to the poor in these areas. It is now proposed that the financial allocation under the budget for this programme need not be used only for house construction directly, but for financing a large number of co-operative societies decentralised at the taluk and village level which in turn will undertake the production of necessary building materials like bricks, tiles, slaked lime, etc. It is also proposed that the requirement of structural steel may be manufactured either by State-owned units or by various small structural steel shops available in various taluks. A large number of building materials co-operative societies will be formed under this new approach. The financial allocation available in the budget will be used as equity capital for these co-operative societies, which will enable them to borrow from financial institutions and commercial banks on the basis of debt equity ratio of 3 : 1. Thus, against the budget allocation, it would be possible to mobilise substantial resources. The building materials manufactured by these societies will be supplied to the beneficiaries and the individual beneficiaries would be required to contribute their labour in order to put up their new houses or to upgrade the shelter.

22. This scheme will be taken up with cluster approach so that whole villages are covered and improved. It also envisages that there will be co-ordination with other rural development programmes so that simultaneous steps for water-supply, sanitation, environmental improvement and social forestry can be taken up in these areas. This new approach of implementing the massive housing programme will ensure coverage of shelterless population in a specified time frame, generation of large volume of employment in the rural areas, usage of locally available materials and participation of beneficiaries in the construction programme. This new approach has already been taken up with Government of India who have been requested to permit the State Government to utilise the funds allotted under NREP and RLEGP in the manner now envisaged. The Government of India have also been requested to ensure sufficient mobilisation of credit from financial institutions and commercial banks and also to allow concessional rate of interest of 4 per cent on these loans with a moratorium of three years. With this approach, it will be possible to enlarge the coverage of this housing programme substantially in order to achieve our objectives.



23. While the thrust of the massive housing programme will be in rural areas, the State Government are equally concerned about the problem of housing and development in the urban areas. A new scheme viz., the Tamil Nadu Urban Development Project at a cost of Rs. 428 crores has been sent to Government of India for obtaining World Bank assistance for the implementation of sites and services scheme, slum improvement, transportation, municipal services and technical assistance in Madras, Madurai, Coimbatore, Salem and Tiruchirappalli. Apart from these the existing thrust in housing and urban development will also be continued.

24. For the successful implementation of these programmes, a certain level of popular participation is essential. The democratically elected Local bodies have an important role to play in this venture. As already pointed out in my last address to the Legislature elections to the Municipalities, Panchayat Unions and Panchayats have been held and elected Local self-Government institutions have once again been established in the State. The Government are committed to the ethos of grass root level democracy and rationalisation of the administrative set up.

25. A number of steps have been taken by the Government to make the administration more responsive to the needs of the changing times. The programme of bifurcation of districts is being implemented as already announced by me in my last address to the Legislature. The bifurcation of Tirunelveli district has already taken place and steps are under way for the bifurcation of the North Arcot district. A special thrust has been given to the development of modern management information system at the Government level in order to effectively monitor and supervise the implementation of various developmental programmes. At the Secretariat level, information has been codified and a permanent data base has been created to facilitate this procedure. It is proposed to avail of the facilities offered by the National Informatics Centre to set up a Computer Net Work for storage, retrieval and speedy transmission of essential information relating to the developmental activities in the various sectors of the economy. This will facilitate better monitoring and follow-up action of plan projects.

26. Redress of public grievances is also an important function of a responsive administration. The procedures for redress of public grievances and the monitoring of such redress are being simplified. A cell to attend to the public grievances is proposed to be formed. A pensioners Grievances Cell has already been constituted at the Secretariat. Similar efforts are also being taken up at the district level.

27. All these efforts can yield the desired results in an atmosphere of peace and tranquility. The Government have been maintaining law and order effectively. There is, however, one basic problem which may come in the way of the efforts of this Government to implement its various developmental programmes. The State has been suffering from successive years of natural calamities in the recent past and according to the present trend the State may face a severe drought in the coming year also. However, the State Government are geared up to meet the challenge. In the current year, the drought situation in the State was tackled with earnest vigour. In twelve districts which had distress conditions relief measures were undertaken. A memorandum for drought assistance of Rs. 310 crores was submitted to Government of India. Although the Government of India approved a ceiling of expenditure at Rs. 31.77 crores for drought relief works during 1986-87, the State Government have in fact spent much more i.e., Rs. 105.40 crores on drinking water-supply, employment generation and other drought relief schemes.

28. Anticipating severe drought in the next year the State Government have drawn up an immediate contingency plan to the tune of Rs. 28 crores. The Government have also approved the sinking of 8,625 bore-wells to tide over the situation. For Madras City, several contingency measures are also being initiated to face the declining water storage in Poondi, Sholavaram and Red Hills lakes. Action is being taken to conserve the available surface water and increase the drawal of ground water by sinking more borewells in the aquifers outside Madras. The Government have sanctioned special measures costing Rs. 163 lakhs for Madras City which include pumping out the dead storage water from Sholavaram and Red Hills lakes, rejuvenation of 14 borewells and sinking 16 new borewells and providing them with new pumpsets, renovation of over 600 filter point tubewells and 226 India Mark II hand pumps, sinking 1,500 new filter point tubewells, drilling 120 borew lls and fixing India Mark II hand pumps. In addition, the scheme for pumping additional 12 mgd. of ground water for Madras City at a cost of Rs. 15 crores is also being accelerated.

29. The State Government will take all possible steps not only to face the drought situation but also to ensure that it does not affect the other development programmes. As a further step in the same direction, this Government have already appealed to the Union Government to sanction various projects costing Rs. 2,000 crores. In addition to the World Bank assistance so ght for Nutrition-*cum*-Health programme and the Government of India assistance for the massive housing scheme, the State Government are drawing up a Rs. 800 crores scheme for metropolitan improvement, Rs. 400 crores scheme for modernisation of Irrigation tanks and restoring them to the original standards and a Rs. 140 crores scheme for environmental improvemnet through developing the city water ways. The Government of India have also been requested to step up their allocation for various central projects in Tamil Nadu like the Mass Rapid Transit System, Karur-Dindigul-Tuticorin Broadgauge Project, Third Mine cut at Neyveli, Sethu Samuthram project and development of Cuddalore Port. It is also expected that the Government of India will clear many of these projects and programmes in order to give a fillip to the economy of the State in the form of additionality to the total investment in the State.



30. Last but not the least, the State Government continue to be concerned about the ethnic problem in Sri Lanka. The reported massacres and killing s taking place in Sri Lanka are causing acute agony to the State Government. It is a matter of great concern that an amicable settlement to the ethnic problem of Sri Lanka has not yet been found. The State Government have been associating themselves with the Government of India in their efforts to find a lasting and acceptable solution for the Sri Lanka problem and hope that the 1.25 lakh Sri Lanka refugees will be able to return to their country in safety and with honour.

31. Despite these problems, I am confident that the State is poised for an era of prosperity and growth, thanks to the sincere efforts of the State Government. I take this opportunity to seek your co-operation in all these efforts. Vanakkam.

[1987 மார்ச் 2

## இணைப்பு II.

(87-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

மதிப்பிற்குறிய சட்டப் பேரவை உறுப்பினர்களே !

உங்கள் அனைவருக்கும் என் இதயங்கனிந்த புத்தாண்டு
நல்வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக் கொள்வதில்
மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆண்டு, தமிழ்நாட்டிற்கும் தமிழ
மக்களுக்கும் மேலும் வளம் சேர்க்கும் ஆண்டாக அமையும் என
நான் நம்புகிறேன்.

2. 1987 ஆம் ஆண்டு, மாநிலத்தின் வரலாற்றிலேயே உன்னத
மான ஆண்டாகத் திகழ வேண்டும். இப்புத்தாண்டின் தொடக்
கத்தில் மாநில அரசின் நெடுநாளைய உறுதிமொழிகளில் ஒன்று
நிறைவேறியது. ஏழைமக்களின் துயர் துடைக்கவும், அரசியல
மைப்பில் மாநிலத்திற்குள்ள நெறிமுறைக் கோட்பாடுகளைக்
கருத்திற் கொண்டும் 1—1—1987 முதல், கள், சாராயம் ஆகியன
வற்றைத் தயாரிப்பதையும், விற்பனை செய்வதையும், அருந்து
வதையும் அரசு தடை செய்துள்ளது. புத்தாண்டு மலர்ந்த
போது மாநிலத்தில் உள்ள கள், சாராயக் கடைகள் அனைத்தும்
மூடப்பட்டன. அதே சமயம், கள் இறக்குவோர் சுமார் 30,000
பேருக்கு புதுவாழ்வு அளிக்கும் வகையில் அரசு ஒரு திட்டத்தை
வகுத்துள்ளது. அதன்படி, முன்பு கள் இறக்கியவர்கள் இப்
பொழுது பதநீர் இறக்கவும், பனைவெல்லம் தயாரிக்கவும்
வேண்டிய கருவிகளையும் சாதனங்களையும் வாங்கிக்கொள்ள
அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 ரொக்க உதவி அளிக்கப்
படுகிறது. இவ்வாறாக, இப்புத்தாண்டு மக்களின் மனதில் நம்
பிக்கையை மிளிரச் செய்யும் வகையில் நல்ல ஆண்டாக
மலர்ந்தது.

3. இந்த ஆண்டு பொங்கல் திருநாள் ஒரு வகையில் தமிழக
மக்களுக்கு முக்கியமான நன்னாளாகும். அன்றுதான்
கொடைக்கானலில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம்
தொடங்கி வைக்கப்பட்டு, மாநிலத்தின் பல பகுதிகளில் உள்ள
மக்கள் தொலைக் காட்சியினைக் காண வழி வகுக்கப்பட்டது.
மாநிலத்தில் பெரும் பகுதியினர் இப்பொழுது வட்டாரத்
தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கின்றனர்.

4. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாம் ஆண்டு,
விரைவில் நிறைவடையப் போகிறது. முன்பிருந்ததைப்போலவே
மாநில அரசின் திட்டச் சாதனைகள் பாராட்டும் படியாக
உள்ளன என்பதை உங்களிடத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். 1986–87 ஆம் ஆண்டிற்கு ஒப்புதல்



1987 மார்ச் 2]

அளிக்கப்பட்டுள்ள ரூ. 1,153 கோடிக்கு மாறாக, எய்தும் திட்டச்
செலவு ரூ. 1,200 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்
படுகிறது. இதே வேகத்தில் பொருளாதார நிலையை வளர்ச்சி
யடையச் செய்ய மாநில அரசு மூன்றாம் ஆண்டில் ரூ. 1,250
கோடி ஒதுக்கக் கருதியுள்ளது. ஆயினும், இந்த அளவிற்குச் செல
விட நிதி ஆதாரத்தில் ரூ. 86 கோடி அளவிற்குப் பற்றாக்குறை
இருப்பதாக மையத் திட்டக் குழு கணித்துள்ளது. தொடர்ந்து
வறட்சி நிலையும் வடகிழக்குப் பருவ மழை பெய்யத் தவறியதும்
மதுவிலக்கைக் கொண்டு வந்ததன் காரணமாக வருவாய் இழப்பும்
அரசுப் பணியாளர்களுக்குக் கருணைக் கொடை வழங்கியதும்
அவர்களுக்கு மத்திய அரசு அறிவித்ததற்கு ஏற்ப அகவிலைப்படி
வழங்குவது குறித்த நடைமுறையைத் திருத்தியமைத்தது
போன்றவற்றால் மாநில அரசின் வருவாய் வெகுவாகப் பாதிக்
கப்பட்டதும் இதற்கு முக்கியக் காரணங்களாகும். அடுத்த
ஆண்டு நிதிபற்றாக்குறையை ஈடுசெய்யவும், திட்டச் சாதனை
யில் நமக்கு ஏற்கெனவே கிடைத்துள்ள வெற்றியைத் தொடர்ந்து
நிலைநாட்டவும் மாநில அரசுக்கு இயலும் பொருட்டு ரூ. 86
கோடியை மத்திய சிறப்பு நிதியுதவியாகவோ, திட்டப் பணிக்கு
முன்கூட்டியே அளிக்கப்படும் உதவியாகவோ வழங்கும்படி
மத்திய அரசை நாம் ஏற்கனவே கேட்டுக் கொண்டுள்ளோம்.

5. பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரமான மின்சக்தித்
துறை 1987–88 ஆம் ஆண்டில் திட்டப் பணிக்கான முதலீட்டில்
முக்கிய அங்கம் வகிக்கிறது. 1986 ஆம் ஆண்டு ஜனவரித்
திங்களில் இச்சட்டமன்றத்தில் நான் உரையாற்றியபோது,
வெளி அமைப்பு உதவியுடன் மின் உற்பத்தித் திறனைப் பெருக்க
அரசு பரிசீலித்து வருவதாகக் குறிப்பிட்டேன். வடசென்னை
யில் அனல் மின் நிலையம் அமைக்க மாநில அரசுக்கு 150 மில்லி
யன் டாலர் நிதியுதவி வழங்க அரசு, ஆசியா வளர்ச்சி வங்கி
யுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளதை உங்களிடத்
தில் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். இதற்கிடையில் பல புதிய
மின் திட்டங்களை மேற்கொள்வதன் வாயிலாக மாநிலத்தின்
மின் உற்பத்தித் திறனையும் நாம் பெருக்கி வருகிறோம். மேட்
டூர் அனல் மின் நிலையத்தின் முதல் கட்டப் பிரிவு ஏற்கெனவே
செயல்படத் தொடங்கிவிட்டது. இரண்டாவது பிரிவு விரைவில்
செயல்படத் தொடங்கும். இவ்விரு பிரிவுகளும் 420 மெகாவாட்
மின் சக்தியை உற்பத்தி செய்யும். இதுபோலவே, தூத்துக்குடி
அனல் மின் நிலையத்தில் மூன்றாவது விரிவாக்கத் திட்டப்பணி
யும் தொடங்கியுள்ளது. இதிலிருந்து 420 மெகாவாட் மின்
சக்தி உற்பத்தியாகும். தூத்துக்குடியில் உள்ள அனல் மின்
நிலையங்களுக்குப் போதுமான அளவிற்கு நிலக்கரி வழங்கச்
செய்ய மாநில அரசுக்குச் சொந்தமான பூம்புகார் கப்பல்
போக்குவரத்துக் கழகம் ஹால்டியாவிலிருந்து தூத்துக்குடிக்கு
நிலக்கரியை ஏற்றிவர தன்னுடைய கப்பல்களைப் பயன்படுத்தி

வருகிறது. புதிதாக வாங்கியுள்ள மூன்று கப்பல்களும் இக் கழகத்தினால் இப்பணிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் 210 மெகாவாட் உற்பத்தித் திறன் உள்ள ஐந்து பிரிவுகளைக் கொண்ட அனல் மின்நிலையத்தைக் கடலூரில் படிப்படியாக அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இது குறித்த தொழில் நுட்ப ரீதியிலான அனுமதிக்கும், நிலக்கரி தேவைக்கும் திட்ட அறிக்கை ஒன்று மத்திய மின்சக்தி அதிகார மன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

6. பழுப்பு நிலக்கரியைக் கொண்டு மின் உற்பத்தி செய்யும் நிலையங்கள் வருங்காலத்தில் தமிழ்நாட்டில் முக்கியப் பங்காற்றும் என்பதை அரசு நன்கு அறியும். எனவேதான், மின் உற்பத்தித் திறனை அதிகரிக்க நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் முதலாவது சுரங்கத்தின் இரண்டாவது விரிவாக்கத் திட்டத்தை மேற் கொள்ளவும், ஆண்டுக்கு 11 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்க மூன்றாவது சுரங்கத்தைத் தோண்டவும் மாநில அரசு தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்கும். பழுப்பு நிலக்கரியைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் இந்த மின் சக்தியைத் தமிழ்நாட்டிற்கு அளிக்கும்படி நாம் மத்திய அரசை கேட்டுக் கொள்கிறோம். இது போலவே, நவீன எரிசக்தி வாயில்களைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டி தமிழ்நாடு மின்சார வாரியம், தூத்துக்குடியில் உள்ள முல்லைக் காட்டில் 55 கிலோ வாட் திறன் கொண்ட 16 காற்றாலை மின் உற்பத்தி இயந்திரங்களை நிறுவியுள்ளது. அங்கு இதே திறனுள்ள மேலும் நான்கு காற்றாலை மின் உற்பத்தி இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

7. சட்டமன்றத்தில் கடந்த ஆண்டு நான் உரையாற்றிய போது, மாநில அரசு நிறுவனங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதில் நம்முடைய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்டேன். இந்த வகையில் அரசு ஏற்கெனவே பல நடவடிக்கைகள் எடுத்துள்ளது. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) சீரமைக்கப்பட்டிருப்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர். இதே வழியில் தமிழ்நாடு மண்பாண்டத் தொழில் நிறுவனத்தையும் (டாசெல்) சீரமைக்க அரசு முடிவு செய்துள்ளது. அரசுத் துறை நிறுவனங்கள் பொருளாதார வகையில் தனித்து இயங்குவதோடு மட்டுமல்லாமல், தொழில் வளர்ச்சிப் பணியிலும் ஈடுபட வேண்டுமென்பதை அரசு நன்கு அறியும். ஆகவே, அரசுத் துறை நிறுவனங்கள் இவ்விரு நோக்கங்களையும் இணைத்து செயல்பட அனைத்து நடவடிக்கைகளையும் அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

8. தொழில் துறையில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அரியலூர் சிமிட்டித் தொழிற்சாலையை நவீனமயமாக்கவும் விரிவுபடுத்தவும் ஒரு திட்டம் அரசின் பரிசீலனை



யில் உள்ளது. 100 சதவீதம் ஏற்றுமதியையே நோக்கமாகக் கொண்ட ''டாமின் கிரானைட்ஸ்' என்கிற தமிழ்நாடு கனிம நிறுவனத் தொழிற் சாலை மணலியில் தொடங்கப்பட்டுள்ளது. கிரானைட் தாதுப் பொருளைச் செய்முறைப் படுத்தும் தொழிற் சாலை ஒன்று, சிவகங்கையில், வெளிநாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன் நிறுவப்பட உள்ளது. சுழல் பொறி சூளையி லிருந்து கிடைக்கிற எரியுண்ட மாக்னசைட், இரசாயன செய் முறைப் படுத்துத் தொழிற்சாலையிலிருந்து கிடைக்கிற உயர்ரக மெக்னீசியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி தனி உயர் வெப்ப செங்கற்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ரூ. 52 கோடி மதிப்பீட்டுச் செலவில் தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் நிறுவக் கருதியுள்ளது. அண்மை ஆண்டுகளில் அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழகத்தில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அவ்வாறு முதலீடு செய்வதை இந்த அரசு தொடர்ந்து வரவேற்பதுடன் அவர்களுக்குத் தகுந்த ஊக்கமும் அளிக்கும்.

9. இம் மாநில அரசு மேற்கொண்ட முயற்சியின் பயனாக சிறு தொழில் துறையும் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. நிலையாக பதிவு வழங்கப்பட்டுள்ள சிறு தொழிற் சாலைகளின் எண்ணிக்கை, 1986–87 மத்தியிலேயே 77,382 ஆக உயர்ந்துள்ளது. இவை திரட்டியுள்ள மூலதனம், நடப்பு நிதியாண்டுத் தொடக்கத்திலேயே சுமார் ரூ 950 கோடியை எட்டி விட்டது.

10. மத்திய அரசு அறிவித்துள்ள புதிய சர்க்கரைக் கொள்கையை இம் மாநில அரசு கருத்திற்கொண்டு, மாநிலத்தில் இயன்ற அளவுக்குப் புதிதாக சர்க்கரை ஆலைகள் தொடங்க முயன்று வருகிறது. இவ்வகையில் மத்திய அரசு முன்பு ஆதரவு அளித்தது போல தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்று நம்பிக்கை கொண்டுள்ளோம். சட்டமன்றத்தில் கடந்த ஆண்டு நான் உரையாற்றியபோது, உதகமண்டலத்தில் ரூ. 17 கோடி செலவில் 'எக்ஸ்' கதிர் படச் சுருள் தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவ வேண்டுமென மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தி வருவதாகக் குறிப்பிட்டேன். இத் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கிவிட்டதென்பது மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும். சென்னை. எண்ணெய் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலை, மணலியில் ரூ. 600 கோடி செலவில் அமைக்கக் கருதியுள்ள 'அரோமாட்டிக்' சேர்மங்கள்' தயாரிப்புத் தொழிற் சாலைக்கு மத்திய அரசு இசைவளித்தமைக்கு இத் தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இத் தொழிற்சாலை சார்ந்த தொழில்கள் ஏராளமாக உருவாக இதனால் ஏதுவாகும். சென்னை உர நிறுவனத்தின் உற்பத்தித் திறனை இரு மடங்காக்கும் திட்டத்திற்கு அனுமதி அளிக்கும்படியும், ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்

அமைக்க உத்தேசித்துள்ள 15 உரத் தொழிற்சாலைகளில் ஒன்றினைத் தமிழ்நாட்டில் அமைக்கும்படியும் மத்திய அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளோம்.

11. கைத்தறி, துணித் தொழில் துறைகளுக்கும் மாநில அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. மூடப்பட்ட நலிந்த ஆலைகளுக்குப் புத்துயிரளிப்பது பற்றி சில காலமாகவே அரசு தீவிரமாகச் சிந்தித்து வருகிறது. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலுள்ள சோமசுந்தரம் நூற்பாலையை 1986 ஆகஸ்டில் மாநில அரசு அரசுடைமையாக்கியது. பிறகு கோயம்புத்தூரிலுள்ள பவானி ஆலையை உதவி பெறும் நிறுவனமாக அரசு அறிவித்து 1986 அக்டோபரில் அதை மீண்டும் திறக்க ஏற்பாடு செய்தது. ஸ்ரீ அரி ஆலையும் கூட்டு நிர்வாக அடிப்படையில் அரசின் உதவியுடன் 1986 அக்டோபரில் மீண்டும் திறக்கப்பட்டது. மூடப்பட்ட ஏனைய சாத்தியமான ஆலைகளுக்கும் புத்துயிர் அளிப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. மத்திய அரசின் புதிய துணி ஆலைக் கொள்கையின் ஒரு பகுதியாக இம் மாநிலத்திலுள்ள விசைத் தறிகள் அனைத்திற்கும் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கவும் மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

12. கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கைத்தறித் தொழிலைப் பாதுகாப்பதும், கைத்தறி நெசவாளர்கள் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதும் அரசின் கொள்கையாகும். இம் மாநிலத்தில் இயங்கி வருகின்ற 5.56 இலட்சம் கைத்தறிகளில் 3.84 இலட்சம் கைத்தறிகள் 1986 நவம்பர் திங்களுக்குள் கூட்டுறவு ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 60 சதவீத தறிகளைக் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று மத்திய அரசு வரையறுத்துள்ள தேசிய இலக்கினை தமிழகம் ஏற்கெனவே தாண்டிவிட்டது.

13. நம்முடைய பொருளாதாரத்தில் வேளாண்மை மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் பாதகமான பருவநிலை இருந்த போதிலும் அரசு இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் இடையறாது மேற்கொண்டதன் பயனாக உரிய அளவுக்கு உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் எட்ட முடிந்தது. சம்பா பருவத்தில் இயல்பான உற்பத்திக்கு மேலாக எக்டேர் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 750 கிலோ கிராம் நெல்லைக் கூடுதலாக உற்பத்தி செய்வதெனும் இலக்கை எய்த, நடப்பாண்டில் '5 முனை அணுகு முறை', பின்பற்றப்பட்டு வருகிறது. வேளாண்மைத் துறை முழுவதையும் நவீன மயமாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உழவுக் கருவிகளைக் கையாளுவதில் தேவையான பயிற்சியளித்து பண்ணை இளைஞர்களை இத் தொழிலில் ஆர்வத்துடன் ஈடு





படுத்தச் செய்ய அதிக நாட்டம் செலுத்தப்படும். உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிருக்குத் தேவையான உழவுத் தொழில் நுட்ப உத்திகளைக் கற்றுக் கொடுக்க 'உழவுத் தொழிலில் தமிழ்நாட்டு மகளிர்' என்னும் புதியதொரு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

14. இம் மாநிலத்தில் கடந்த சில ஆண்டுகளாகப் பெய்த மழையளவு, இயல்பான மழை அளவைவிட மிகவும் குறைவாக இருந்து வருவது நமக்கு ஆழ்ந்த கவலை தருவதாக உள்ளது. இதனால், மாநிலத்தில் பாசன நீர் வளமும், குடிநீர் வளமும் குறைந்து வருகின்றன. இந் நிலைமையைச் சமாளிக்க அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பிரச்சினையை அரசு எதிர்கொண்டு குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கவும், குறைந்துவரும் பாசன வளத்தை ஈடு செய்யவும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. எனவேதான், கடந்த ஆண்டுகளில் செய்ததைப் போலவே குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு இப்பொழுதும் கணிசமான நிதி ஒதுக்கப்படுகிறது. குறைந்த அளவு தேவைகள் திட்டத்தின்கீழ் 1986–87-ல் ரூ. 30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டிலும் இதே அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். 1986–87 ஆம் ஆண்டிலும் 1987–88 ஆம் ஆண்டிலும் விரைவுபடுத்தப்பட்ட கிராமப்புற குடிநீர் வழங்குத் திட்டம், குறைந்த அளவு தேவைகள் திட்டம் ஆகியவற்றை 2,225 குடியிருப்புப் பகுதிகளில் செயல்படுத்தி முடிப்பது என்று திட்டமிடப்பட்டுள்ளது. இத்துடன் வறட்சித் துயர் தணிக்க 1986 டிசம்பர் வரை 5,339 துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 1986-87, 1987-88 ஆம் ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு நகர்ப் பகுதிகளில் 14 குடிநீர் வழங்கு திட்டங்களைச் செயல்படுத்தி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் குடிநீர் வழங்கலை அதிகரிக்க அனைத்து நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் ( UNDP ) II ஆம் நிலை ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் நீரைத் தூய்மைப்படுத்தும் நிலையத்தைக் கட்டுதல், கீழ்ப்பாக்கம் நீர் வழங்கு பணிகளில் நீரேற்றும் திறனை அதிகப் படுத்துதல், பூண்டி, கொற்றலையாறு, கன்னிகைப் பேறு ஆகிய இடங்களில் நிலத்தடியிலிருந்து நாள் ஒன்றுக்கு 55 மில்லியன் லிட்டர் நீர் எடுக்கும் திட்டம் ஆகியவை ரூ. 15 கோடி மதிப்பீட்டுச் செலவில் நிறைவேறி வருகின்றன.

15. கடந்த சில ஆண்டுகளாகக் குறைந்த அளவு மழை பெய்ததனால் தெளிப்பு மற்றும் சொட்டு நீர் பாசன முறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, ஒருங்கிணைந்த பயிர் வளர்ப்புத் திட்டமொன்றை அரசு பரிசீலித்து வருகிறது. இதன் மூலம் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த இயலும். நம்முடைய மாநிலத்தில் இம்முறைகளைக் கொண்டு வருவதற்கு மேற்கொண்ட முன்னோடி முயற்சிக்கு நல்ல பலன் கிட்டியுள்ளது.

உழவர்கள் இந்த நவீன முறைகளைக் கையாண்டு, பயிர்
விளைச்சலைப் பெருக்கி, அதிக ஆதாயத்தை ஈட்ட விரும்பு
கின்றனர். இந்த வகையில் அவர்களுக்கு மேலும் ஊக்கமளித்து
அடிப்படைத் தேவையாக உள்ள நீர் வளத்தைப் பெருக்க,
தெளிப்பு மற்றும் சொட்டு நீர் பாசன முறைகளை மக்களிடையே
பிரபலபடுத்தும் பெருந்திட்டம் ஒன்றைச் செயற்படுத்த அரசு
கருதுகிறது. இத்திட்டத்தைச் செயற்படுத்த, தேவைப்படும்
அளவிற்கு வெளி அமைப்பு உதவியும் கேட்கப்படும். சிறு உழவர்
களும், சொற்ப நில உழவர்களும் இத்திட்டத்தினால் பயனடைய
வேண்டி, அவர்களுக்கு உதவித் தொகையும் கடன் உதவியும்
அளிக்கப்படும். பாசன நிலையில் நீர் வழங்கும் முறையைச்
சீரமைக்கும்' மேலும் ஒரு நடவடிக்கையாக தேசிய நீர் நிர்வாகத்
திட்டம் எனப்படும் திட்டப் பணி ஒன்றை மத்திய அரசு தயாரித்
துள்ளது. இது உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும்.
ரூ. 58.87 கோடி மதிப்பீட்டுச் செலவில் தமிழ் நாட்டில் பாசன
ஏற்பாடுகள் பலவற்றை இத் திட்டத்தின் கீழ் கொண்டுவரக்
கருதப்பட்டுள்ளது. 1,09,149 எக்டேர் பரப்பளவு நிலம் இத்
திட்டத்தினால் பயனடையும்.

16. மாநிலத்திலுள்ள விவசாயிகளுக்கு அரசு கணிசமான
அளவிற்கு நிவாரணமும் அளித்து வருகிறது. அடுத்தடுத்த
ஆண்டுகளில் வெள்ளமும் வறட்சியும் ஏற்பட்டதையடுத்து,
விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்க, அரசு, 1986 ஆம்
ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் நிலவரப்படி இருந்த
வேளாண்மைக் கடன்கள் குறித்த வட்டி, அபராத வட்டி, காலங்
கடந்த நிலுவைகள் குறித்த வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி
செய்தது. பெருவாரியான உழவர்கள் இந்த நிவாரணத்தைப்
பெறவேண்டி நிலுவையாக உள்ள கடன் தொகையில் 50 சத
வீதத்தைத் திருப்பிச் செலுத்த அரசு 1986 ஆம் ஆண்டு டிசம்பர்
திங்கள் 31 ஆம் நாளிலிருந்து 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள்
28 ஆம் நாள் வரை கால நீட்டிப்பு அளித்துள்ளது. இவ்வாறு
தள்ளுபடி செய்ததனால் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் நிவா
ரணம் ரூ. 125 கோடி அளவிற்கு இருக்கும். காலங்கடந்த
நிலுவைத் தொகையால் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி
யிருந்த கூட்டுறவு அமைப்புகள் குறிப்பாக வேளாண்மைக் கடன்
வழங்கு தொடக்கச் சங்கங்கள், தொடக்க நிலவள வங்கிகள்
இந்த நடவடிக்கையால் வலுப்பெறும். ஒரே இடத்தில் ஒருங்
கிணைந்த முறையில் கடன் வசதி, விற்பனை வசதி, ஏனைய
பணிகள் ஆகியவற்றை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தில்,
பெரிய அளவிலான பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்
பழங்குடியினருக்கு வசதிகள் செய்து கொடுக்க, கூட்டுறவு இயக்
கமும் முடுக்கி விடப்பட்டு வருகிறது. 1986 ஆம் ஆண்டில் 13
சங்கங்கள் இருந்ததற்கு மாறாக, 1987 ஆம் ஆண்டு இறுதிக்குள்
பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 17

இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் இம் மாநிலத்தில் செயற்படுத்தப்பட்டுவரும் விரிவான பயிர் காப்புறுதித் திட்டம், விவசாயிகளுக்குப் பயன் தரும் மற்றொரு நடவடிக்கையாகும். இத்திட்டம் நடப்பு நிதியாண்டில், கம்பு, சோளம், கேழ்வரகு, எள் ஆகிய பயிர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

17. மக்களுக்கு நலம் தரும் பணித்திட்டங்களைச் செயற்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத்திட்டம், பாடப் புத்தகங்களையும் சீருடைகளையும் இலவசமாக வழங்கும் திட்டம் ஆகியவற்றின் பயனாக அதிகமான குழந்தைகள் பள்ளிக்கு வருவதுடன் படிப்பைப் பாதியில் விட்டுவிடுபவர்களின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. தொடக்கப் பள்ளி அளவில் படிப்பைப் பாதியில் விட்டுவிடுபவர்களின் எண்ணிக்கை விதம் 1977–78 ஆம் ஆண்டில் 40 சதவீதமாக இருந்தது. 1984–85 ஆம் ஆண்டில் 23 சதவீதமாகக் குறைந்து உள்ளது. 1986–87 ஆம் ஆண்டில் கூடுதலாகப் பள்ளியில் சேர்ந்த 6 முதல் 14 வயது தொகுதியிலான மாணவர்களின் எண்ணிக்கை 2.84 இலட்சமாகும். 20 அம்சத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை இம்மாநிலம் மிஞ்சிவிட்டது. 1986–87 ஆம் ஆண்டில் அரசு 100 உயர் நிலைப்பள்ளிகளையும், 79 மேல்நிலைப் பள்ளிகளையும் திறந்துள்ளது. இலவசமாகச் சீருடை வழங்கும் திட்டத்தினால் தையல் சங்கங்களிலும், மகளிர் மன்றங்களிலும், தொண்டு நிறுவனங்களிலும் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள சுமார் 40,000 மகளிருக்கு வேலைவாய்ப்புகிட்டியுள்ளது. ஆரம்பக் கட்டத்தில் அரசிடமிருந்து கிடைக்கும் உரிய நிதியுதவியுடன் வருவாய் திரட்டும் திட்டங்களை மேற்கொள்ள தொண்டு நிறுவனங்களுக்கு அரசு ஊக்கம் அளித்துவருகிறது. ஆதி திராவிடர்–பழங்குடியினர் நலத்துறையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத்துறையும் நடத்தும் மாணவரில்லங்களில் தங்கியிருப்பவர்களுக்கான உணவுக்கட்டண விதம் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், அத்தகைய மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் சுமார் 80,000 மாணவர்கள் பயனடைவர்.

18. சிறார்களின் பணி நிலைமைகளை மேம்படுத்தவும் அவர்களுக்குச் சத்துணவு, கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு அளிக்கவும், சிறாரை வேலைக்கமர்த்தும் முறையைப் படிப்படியாக ஒழிக்கவும், மாநில அரசு மத்திய அரசின் நிதி உதவியுடன் 1986–87 ஆம் ஆண்டு முதல் சிவகாசி பகுதியில் 3 ஆண்டு முன்னோடித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இம் மாநிலத்தில் சிறார்க்குப் பயன் அளிக்கக் கூடிய மற்றொரு திட்டம், ஒருங்கிணைந்த சிறார் நல மேபாட்டுப் பணித்திட்டமாகும். நடப்பாண்டில், புதுக்கோட்டை மாவட்டத்தில், மேலும் 13 கிராமப்

புற ஒருங்கிணைந்த சிறார் நல மேம்பாட்டுப் பணித்திட்டங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன. மேலும், இதுபோன்று 13 திட்டங்களைத் தொடங்கக் கருதப்படுகிறது. உடல் ஊனமுற்ற சிறார்களுக்கும் வயது வந்தோருக்கும் உதவவேண்டுமென்ற நோக்கத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் 2 வளர்ச்சி வட்டாரங்களில் மாவட்ட மறு வாழ்வு நிலையங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன. இது 5 ஆண்டுகளில் செயற்படுத்தக்கூடிய முன்னோடித் திட்டமாகும். இத் திட்டம் நன்கு பலனளிப்பதைப் பொறுத்தும் அனுபவத்தின் அடிப்படையிலும் ஏனைய பகுதிகளுக்கும் நீட்டிக்கப்படும். பழங்குடியினருக்காக ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் முழுவீச்சுடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு வளர்ச்சி வட்டாரத்தில், மலிவு விலையில் உணவு தானியங்கள் வழங்கும் மத்திய திட்டத்தைச் செயற்படுத்துகையில் மாநில அரசும் அரிசிக்கு கூடுதலாக உதவித் தொகை வழங்கி, ஒரு கிலோ அரிசியை ரூ. 1.40-க்கு வழங்கி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் அரிசியும் கோதுமையும் வழங்குவதால் 38,000 குடும்பங்கள் பயனடைகின்றன.

19. சத்துணவு, கல்வி, வேலை வாய்ப்பு போன்ற துறைகளில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தினால் ஏற்பட்டுள்ள ஆக்கப்பூர்வமான வளர்ச்சியை நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டில் முடிவடையக்கூடிய தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தினாலும் கிடைக்கும் பயனை ஒருங்கு சேர்த்து, முன்மாதிரியான ஒரு திட்டத்தை அதாவது, ஒருங்கிணைந்த குழந்தை நல சத்துணவுத் திட்டத்தைத் தொடங்க அரசு இப்போது திட்டமிட்டு வருகிறது. இவ்விரு திட்டங்களின்கீழ் அளிக்கப்பட்டு வரும் சத்துணவும் சுகாதாரப் பணிகளும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு, மாநிலம் முழுவதிலும் உள்ள 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும் அளிக்க இத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. இதற்கான செலவு ரூ. 400 கோடியாக இருக்கலாம். இத்திட்டம் பற்றி ஏற்கெனவே, மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களிடமும், மத்தியத் திட்டக் குழுவிடமும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவர்கள் இத்திட்டத்தின்பால் காட்டும் ஆர்வம் ஊக்கமளிப்பதாக இருக்கிறது. இத் திட்டத்திற்கு, அனைத்து நாட்டு வளர்ச்சி அமைப்பிடமிருந்தும் உலக வங்கியிடமிருந்தும் எளிய நிபந்தனைக் கடன்பெறும் வாய்ப்பு ஒளிமயமாக உள்ளது.

20. தாய்மார்களுக்கும் இளஞ்சிறார்களுக்கும் காலணிகள்:— பள்ளி செல்லும் சிறார்களுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்களையும் சீருடைகளையும் இந்த அரசு வழங்கி வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். 1987-88 ஆம் ஆண்டிலிருந்து, பள்ளி செல்லும் சிறார்களுக்கும் கிராமங்களி



லுள்ள ஏழைத் தாய்மார்களுக்கும் இலவசமாகக் காலணிகளையும் வழங்கும் திட்டம் ஒன்றினை நிறைவேற்ற அரசு கருதியிருப்பதை உங்களிடத்தில் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். இத்திட்டத்தினால் நேரடியாகப் பயனடையும் மிக ஏழை எளியோர் தவிர தோல் தொழிலாளர்களைக் கொண்ட காலணிகள் தைப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிர் அளிப்பதன் மூலமாகப் பலருக்கு வேலை வாய்ப்பும் கிட்டும். மேலும் இத்திட்டத்தினால் மிக ஏராளமானவர்கள் பயனடைய உள்ளதால், இத்தேவையை நிறைவு செய்ய புதிய சங்கங்களும் உருவாகும்.

21. சட்டமன்றத்தில் கடந்த ஆண்டு நான் உரையாற்றிய போது, இம்மாநிலத்தில் பெருமளவில் வீடு கட்டும் திட்டத்தைச் செயற்படுத்த அரசு திட்டமிட்டிருப்பதாக அறிவித்தேன். இதனைச் செயற்படுத்தும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. எனினும், தற்போது ஒரு புதிய அணுகுமுறை உருவாக்கப்பட்டு வருகிறது. அண்ணா மாவட்டத்தில் சமூகப் பொருளாதார வீட்டு வசதி குறித்த முன்னோடி ஆய்வு ஒன்றை மாநில அரசு மேற்கொண்டது. இந்த ஆய்வின் அடிப்படையில் புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இந்த புதிய அணுகுமுறையின் அடிப்படை நோக்கம், இத்திட்டத்தினால் கிராமப் பகுதிகள் குறிப்பாக அப்பகுதியிலுள்ள ஏழை மக்கள் நேரடியாகப் பயன் பெற வேண்டுமென்பதேயாகும். இத்திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்படும் நிதி ஒதுக்கத்தை நேரடியாக வீடு கட்டுவதற்கு மட்டும் பயன்படுத்தாமல், வட்ட, கிராம அளவில் பரவலாக்கப்பட்ட பெருவாரியான கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி செய்யவும், அவை, செங்கல், ஓடுகள், நீர்த்த சுண்ணாம்பு போன்ற கட்டுமானப்பொருள்கள் உற்பத்தி செய்யும் பணியை மேற்கொள்ளச் செய்யவும் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. மாநில அரசுக்குச் சொந்தமான தொழில் பிரிவுகளோ வெவ்வேறு வட்டங்களில் அமைந்துள்ள சிறு அளவிலான கட்டுமான இரும்புக் கடைகளோ வீடுகட்டத் தேவைப்படும் இரும்புப் பொருள்களைத் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப் புதிய திட்டத்தின்கீழ், கட்டுமானப் பொருள்கள் தயாரிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் பல ஏற்படுத்தப்படும். வரவு-செலவுத் திட்டத்திலுள்ள நிதி ஒதுக்கம், இக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனமாகப் பயன்படுத்தப்படும். இதனால், இச் சங்கங்கள் நிதியுதவி நிறுவனங்களிடமிருந்தும் வணிக வங்கிகளிடமிருந்தும் 3 : 1 என்ற கடன்-மூலதன விதாச்சார அடிப்படையில் கடன் பெற உதவும். இவ்வாறாக வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்தைக் கொண்டு கணிசமான நிதி ஆதாரங்களைத் திரட்ட முடியும். இச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் கட்டுமானப் பொருள்கள் பயனடைவோருக்கு வழங்கப்படும். இவற்றைக் கொண்டு அவர்கள் தம் சொந்த உழைப்புடன் புதிய வீட்டைக் கட்டவோ அவர்களுடைய வீட்டை மேம்படுத்தவோ வேண்டும்.

22. கிராமம் முழுவதையும் உள்ளடக்கி, மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள இயலும் வகையில் தொகுப்பு அடிப்படையில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். ஏனைய கிராம வளர்ச்சித் திட்டங்களான குடிநீர் வழங்கல், துப்புரவு, சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு, சமூகக் காடு வளர்ப்பு போன்றவற்றுடன் இத்திட்டத்தையும் ஒருங்கிணைந்து செயற்படுத்த வகை செய்யப்படும். பெருமளவில் வீடு கட்டும் இத்திட்டத்தைச் செயற்படுத்தும் இப்புதிய அணுகுமுறையால், வீடின்றி வானமே கூரையாக நினைத்து வாழ்ந்து வருவோர்க்குக் குறிப்பிட்ட கால அளவிற்குள் வீடு கட்டித்தரவும் கிராமப் பகுதிகளில் பெருமளவில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும், உள்ளூரில் கிடைக்கக்கூடிய கட்டிடப் பொருள்களைப் பயன்படுத்தி, கட்டுமானப் பணியில் பயனடைவோரையும் ஈடுபடச் செய்யவும் கருதப்படுகிறது. இப்புதிய அணுகுமுறை பற்றி மத்திய அரசிடம் ஏற்கெனவே எடுத்துக்கூறி, கிராமப்புற வேலைவாய்ப்புத் தேசியத் திட்டம், நிலமற்ற கிராமப்புற தொழிலாளர்களுக்கு பிரதமரின் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் ஆகியவற்றின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியை இப்போது வகை செய்யப்பட்டுள்ள முறையில் பயன்படுத்திக்கொள்ள மாநில அரசுக்கு அனுமதி அளிக்குமாறு மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. நிதியுதவி நிறுவனங்களிடமிருந்தும், வணிக வங்கிகளிடமிருந்தும் போதிய அளவு கடன் பெறுவதற்கு வகை செய்யுமாறும், இக்கடனுக்கு 4 சதவீத சலுகை வட்டி வீதமும் 3 ஆண்டுகளுக்குப் பிறகு இக் கடனைத் திருப்பிச் செலுத்தவும் அனுமதி வழங்குமாறும் மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையின் மூலம் இத்திட்டத்தினை விரிவுபடுத்தி வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் பயனடைவோரின் எண்ணிக்கையைப் பெருக்குவதால் நமது குறிக்கோளை எட்ட முடியும்.

23. கிராமப் பகுதிகளில், பெருமளவில் வீட்டு வசதித் திட்டத்தைச் செயற்படுத்தும் அதே சமயம், நகர்ப்பகுதிகளிலுள்ள வீட்டுவசதிப் பிரச்சினை குறித்தும், நகர்ப்பகுதிகளை மேம்படுத்துவது குறித்தும் அரசு ஆழ்ந்து சிந்தித்து வருகிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் மனைகள்-பணிகள் திட்டம், குடிசைப்பகுதி மேம்பாடு, போக்குவரத்து வசதி, நகராட்சிப் பணிகள், தொழில்நுட்ப உதவி போன்றவற்றைச் செயற்படுத்துவதற்கு உலகவங்கியின் நிதி உதவியைப் பெற, ரூ. 428 கோடி செலவிலான தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாடு குறித்த புதிய திட்டம் ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வீட்டு வசதி, நகர்ப் பகுதி வளர்ச்சிக்குத் தற்போது அளிக்கப்பட்டுவரும் முக்கியத்துவம் தொடர்ந்து அளிக்கப்படும்.



24. இத் திட்டங்களைச் சிறந்த முறையில் செயற்படுத்துவதற்குப் பொதுமக்களும் இதில் பங்குகொள்ள வேண்டியது அவசியமாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்கள் இப் பணியில் முக்கியப் பங்காற்ற வேண்டும். சென்ற ஆண்டு சட்ட மன்றத்தில் நான் உரையாற்றியபோது குறிப்பிட்டிருந்தபடி, நகராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள். ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் நடைபெற்று, மாநிலத்தில் உள்ளாட்சி மன்றங்கள் மீண்டும் பொறுப்பேற்றுள்ளன. இந்த அரசு மக்களாட்சி மரபுகளைக் கட்டிக் காப்பதுடன், நிருவாக அமைப்பைச் சீர் செய்யவும் பொறுப்பேற்றுள்ளது.

25. மாறி வரும் காலத்தின் தேவைக்கு நிருவாகத்தினர் அதிக முக்கியத்துவம் கொடுக்க அரசு பல நடவடிக்கைகள் எடுத்துள்ளது. சட்ட மன்றத்தில் கடந்த ஆண்டு நான் உரையாற்றிய போது ஏற்கனவே அறிவித்தபடி மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டம் ஏற்கனவே இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு வளர்ச் சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதைத் திறம்படக் கண் காணித்து மேற்பார்வையிட வேண்டி அரசு நிலையில் நவீன நிருவாகத் தகவல்முறையை உருவாக்க சிறப்பான முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலக அளவில் தகவல் தொகுக்கப்பட்டு நடைமுறைக்கு ஏதுவாக நிலையான தகவல் தொகுப்பு அடிப்படை உருவாக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் பல்வேறு துறைகளின் வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக முக்கியமான தகவலைச் சேகரித்து வைத்து, விரைந்து அனுப்புவதற்கு கணக்கீட்டுப் பொறியை அமைக்க தேசிய தகவல் மையக் கணக்கீட்டுப் பொறி அமைப்பின் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் கருதப்பட்டுள்ளது. திட்டப் பணிகளைத் திறம்பட கண்காணித்துத் தொடர் நடவடிக்கை எடுக்க இதனால் ஏதுவாகும்.

26. பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பது பொறுப்புள்ள நிருவாகத்தினரின் முக்கிய பணியாகும். பொதுமக்கள் குறை தீர்க்கப்படுவதையும், அதனைக் கண்காணிப்பதற்குமான நடைமுறைகள் எளிதாக்கப்பட்டு வருகின்றன. பொது மக்களின் குறைகளைக் கவனிக்க ஒரு பிரிவை அமைக்க கருதப்படுகிறது. ஓய்வூதியம் பெறுவோர் குறை தீர்க்கும் பிரிவும் தலைமைச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலும், இதுபோன்று அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

27. இம்முயற்சிகள் அனைத்தும் அமைதியான சூழ்நிலையில் தான் விரும்பிய பலனை அளிக்கும். இவ்வகையில் சட்டம்-ஒழுங்கினை அரசு திறம்பட நிலைநாட்டி வருகிறது. ஆயினும்,

[1987 மார்ச்

இந்த அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் முயற்சியில் அடிப்படைப் பிரச்சினை ஒன்று எழக்கூடும். அண்மை யில் சில ஆண்டுகளாக இயற்கைச் சீற்றங்களினால் இம் மாநில அரசு தொடர்ந்து அல்லலுற்று வந்துள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையில், வரும் ஆண்டிலும் இம்மாநில அரசு கடும் வறட்சியை எதிர்நோக்கக்கூடும். எனினும், அதனை எதிர் கொள்ளவும் அரசு தயாராகவுள்ளது. நடப்பாண்டில் இம் மாநிலத்தின் வறட்சி நிலைமை மிகத் திறமையாகச் சமாளிக்கப் பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களில் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வறட்சி நிவாரண உதவியாக ரூ. 310 கோடி வழங்கக் கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. 1986 87-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மத்திய அரசு ரூ. 31.77 கோடி செலவு உச்சவரம்புக்கு ஏற்பளித்திருந்தபோதிலும், மாநில அரசு, குடிநீர் வழங்கல், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தல், ஏனைய வறட்சி நிவாரணத் திட்டங்களுக்கு ரூ. 105.40 கோடிக்கு மேல் செலவிட்டுள்ளது.

28. அடுத்த ஆண்டில் கடும் வறட்சி நிலை ஏற்படக் கூடும் என்பதை எதிர்பார்த்து மாநில அரசு ரூ. 28 கோடி அளவில் உடனடி எதிர்பாராச் செலவுத் திட்டத்தை வகுத்துள்ளது. இந்நிலையைச் சமாளிக்க 8,625 துளைக் கிணறுகள் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சென்னை மாநகருக்கு நீர் வழங்கும் பூண்டி, சோழவரம், புழலேரிகளில் நீர்மட்டம் குறைந்து வருவதைச் சமாளிக்க, அவசர கால நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டு வருகின்றன. இருக்கின்ற மேற்பரப்பு நீரைச் சேமித்து வைக்கவும், சென்னை நகருக்குப் புறத்தே நீர்வளம் உள்ள பகுதிகளில் மேலும் துளைக் கிணறுகளை அமைத்து அதிக அளவில் நிலத்தடி நீர் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்க ரூ. 163 இலட்சம் செலவில் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில், சோழவரம், புழலேரி களில் குறைந்த அளவில் தேங்கியிருக்கும் நீரை மேலேற்றுதல், 14 துளைக் கிணறுகளைப் புதுப்பித்தல், 16 புதிய துளைக் கிணறுகளை அமைத்து அவற்றில் விசையேற்றங்களை நிறுவுதல், 600-க்கு மேலாக வடிமுனைக் குழாய்க் கிணறுகளையும், 226 இந்தியா மார்க் II கைப் பம்புகளையும் புதுப்பித்தல், புதிதாக 1,500 வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைத்தல், 120 துளைக் கிணறுகளைத் தோண்டி அவற்றில் இந்தியா மார்க் II கைப்பம்புகளை நிறுவுதல் ஆகியவை அடங்கும். இவற்றுடன் ரூ. 15 கோடி செலவில் சென்னை மாநகருக்கு நாளொன்றுக்குக் கூடுதலாக 12 மில்லியன் காலன் நிலத்தடி நீர் பெறும் திட்டமும் விரைவுபடுத்தப்பட்டு வருகிறது



1987 மார்ச் 2]

29. வறட்சி நிலைமையை எதிர்நோக்குவதுடன் மட்டுமின்றி அதனால் ஏனைய வளர்ச்சித் திட்டங்கள் பாதிக்கப்படாம லிருக்கவும் மாநில அரசு இயன்ற அனைத்து நடவடிக்கை களையும் மேற்கொள்ளும். இவ்வகையில் மற்றொரு நட வடிக்கையாக, இவ்வரசு, ரூ. 2,000 கோடி செலவு ஆகக்கூடிய பல்வேறு திட்டங்களுக்கு அனுமதி வழங்குமாறு மத்திய அரசிடம் ஏற்கனவே கேட்டுள்ளது. சத்துணவு சுகாதாரத் திட்டத்திற்கு உலக வங்கியின் உதவியும், பெருமளவில் வீடு கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசின் உதவியும் கேட்கப்பட் டுள்ளதோடு, மாநில அரசு ரூ. 800 கோடி செலவிலான பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தையும், ரூ. 400 கோடி செலவிலான பாசன ஏரிகளை நவீனப்படுத்தி முதலில் இருந்த நிலைக்குக் கொண்டு வரும் திட்டத்தையும் ரூ. 140 கோடி செலவிலான மாநகர நீர்வழிகளை மேம்படுத்துவதன் மூலம் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தும் திட்டத்தையும் வகுத்து வருகிறது. தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு மத்தியத் திட்டங்களுக்கு அதாவது, விரைவுப் போக்குவரத்துத் திட்டம் கரூர் திண்டுக்கல்-தூத்துக்குடிக்கு அகல இருப்புப்பாதைஅமைக்கும் திட்டம், நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டும் திட்டம், சேதுசமுத்திரத் திட்டம், கடலூர் துறைமுக மேம் பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டங்கள், பணித் திட்டங்கள் பலவற்றிற்கு மத்திய அரசு இசைவளிக்கும் என்றும், இதனால், இம்மாநிலத்தில் மொத்த முதலீடு அதிகரித்து, பொருளாதார நிலை உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

30. முடிவாக, ஆனால் மிகவும் முக்கியமாக, ஸ்ரீலங்காவி லுள்ள இனப் பிரச்சினை குறித்து மாநில அரசு தொடர்ந்து கவலை கொண்டு வருகிறது. ஸ்ரீலங்காவில் பெருவாரியான படுகொலைகள் நிகழ்வதாகத் தெரிவித்திருப்பது மாநில அரசுக்கு பெரிதும் வேதனை அளிக்கிறது. இனப் பிரச்சினைக்கு சுமுக மான முறையில் இன்னும் தீர்வு காணப்படாததும் மாநில அரசுக்கு கவலை தருவதாக உள்ளது. இப்பிரச்சினைக்கு முடி வாகவும் இரு சாராரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலும் தீர்வு காண மத்திய அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் மாநில அரசு உதவி வருகிறது. ஸ்ரீலங்காவிலிருந்து இங்கு வந் துள்ள 1.25 இலட்சம் அகதிகள் பாதுகாப்புடனும் கண்ணியத் துடனும் அவர்கள் நாட்டிற்கு திரும்புவர் என்று நம்புகிறோம்.

31. இவ்வளவு இன்னல்கள் இருந்தபோதிலும் அரசு எடுத்த பெரு முயற்சிகளின் பலனாக தமிழகம் வளர்ச்சிப் பாதையில் வளமான எதிர்காலத்தை நோக்கி பீடுநடை போடும் என நான் உறுதியாக நம்புகிறேன். இதற்கு நீங்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென இந்தஅவையில் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

136502

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar. Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 [illegible]aghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

---

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.